# தமிழ்ப் பேராய்வு
# ஆய்விதழ்

தொகுதி - 9 (பகுதி 2)
Volume - 9 (Issue 2)

டிசெம்பர் / December 2020

# JOURNAL OF TAMIL PERAIVU

Published by
**Department of Indian Studies**
**Faculty of Arts and Social Sciences**
**University of Malaya**

Indexed by MyJurnal
Malaysian Citation Centre

UNIVERSITY OF MALAYA
*The Leader in Research & Innovation*

Malaysian Citation Centre
Pusat Sitasi Malaysia

**ISSN 2289- 8379**
**eISSN 2636-946X**

# Journal of Tamil Peraivu Editorial office


## Office of the Editor – in – Chief

No. 132, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences,
University of Malaya, 50603 Kuala Lumpur, Malaysia
Tel: +60379675670
Email: rajanmun@um.edu.my / rajantheran@gmail.com
**Website:** https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/index



## Publisher

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675510

## Sponsored by

Almaa Herbal Nature Pvt ltd
No.1/8, Pinjala Subramanian street,
T. Nagar, Chennai – 600 017
Tamilnadu, India
mglv@rediffmail.com/ www. Almaaherbal.com


---


The publisher of Tamil Peraivu Aivithal (Journal of Tamil Peraivu), will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

# Editorial Board
2020-2023

**Editor–in–Chief**

**Professor Dr. M. Rajantheran, Malaysia**

Indian civilization, Tamil culture and literature, early cultural relations between India and Southeast Asia & culture and life of the Malaysian Indians

**Chief Executive Editor**

**Assistant Professor Dr. Silllalee S. Kandasamy**

Media, Tamil literature and culture, Malaysian Indians & sociology

**Journal's Web Design and Technical Support**

**Dr.Kanmani Munusamy**

Software Engineering, ontology, Data Mediation - Information Technology, Centre of Information Technology, University of Malaya, Kuala Lumpur, Malaysia.

&

**Ms.Vijaya Laxmi Maruthaveeran**

Librarian, Indian Studies Library University of Malaya, Kuala Lumpur, Malaysia.

**Associate-Editing & Ideating**

**Dr.U.Narendranath**

English Education, Risk, Strategy, Leadership & Marketing.
Director-Putra Intelek International College, Malaysia.

**Bharathi Mutty**

English Education. Lecturer-Universiti Tunku Abdul Rahman, Kampar, Perak, Malaysia.

**Aghalya Darmalingam**

PhD research Scholar, Department of Indian Studies,
Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

# Editorial Board Members

**Era. Kamarasu,** Professor Dr – Tamil Language, Classical literature, modern literature & culture, Department of Tamil Literature. Tamil University, Tanjavur, Tamil Nadu, India.

**G. Singaravelu,** Professor Dr- Primary Education, Teacher Education, English Education, Head, Department of Education, Syndicate member of the university, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.

**Ira. Kurinji Vendan,** Professor Dr- Tamil literature, Culture & Diaspora. Post graduate section, Arinyar Anna College, University of Pondicherry.

**Jeevendiran Chemen,** Associate Professor Dr- Ethic identity of Mauritian Tamils, Tamil language and Linguistic & Sociology. Mahatma Gandhi Institute, University of Maurititus.

**Kizhambur S. Sankara Subramanian,** Tamil journalism, Tamil Literature and Culture & Tamil Civilization, India.

**K. Chidamparam**, Assistant Professor Dr. - Linguistics, English, Human rights, International Institute of Tamil Studies,CPT Campus,Taramani, Chennai, Tamil Nadu.

**K.Shubashini,** Dr. – Lead IT architect, DXC Technology and President of Tamil Heritage Foundation International (International Organisation for Preserving Tamil Heritage).

**Krishnan Maniam,** Associate Professor, Dr, Modern Literature, Malaysian Tamil Literature, Comparative Literature. Head Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**Mohanadass Ramasamy**, Senior Lecturer Dr- Language and linguistics, Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**P. Sivakumar,** Professor Dr – Educational Technology, Environmental Education & Biology Education, Dean, Faculty of Education, Alagappa University, Tamil Nadu, India.

**Paramasivam Muthusamy,** Associate Professor Dr- Tamil language and literature, socio- linguistics, pedagogy and Tamil culture. Department of Foreign Languages. Faculty of Modern Languages and Communication, University Putra Malaysia.

**Ponsamy Tiroumalechetty,** (Retired) Associate Professor Dr – Socio- linguistics, Socio Culture of Tamils. Head, School of Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius.

**Rakkappan Velmurugan,** Senior Lecturer Dr- Linguistics, Pedagogy, Tamil language, Literature & Grammar. Asian Languages and Cultures Academic group, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

**Samikkanu Jabamoney Ishak Samuel,** Associate Professor Dr – Malaysian Tamil Literature, Modern Tamil Literature, Tamil Language and Pedagogy. Tamil unit Coordinator, Sultan Idris Educational University.

**Seethalakshmi,** Associate Professor Dr- Tamil lexicography, teaching Tail as a second language, Tamil Pedagogy, Sociolinguistics & Literature through Mass Media. Department of Asian Languages & Cultures (ALC), Nanyang Technological University, Singapore.

**V. Maheswaran,** Professor Dr- Epigraphy, Tamil culture, folklore, literature. Department of Tamil, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

**Vasu Aranganathan,** Dr- History of Tamil language, literature, religion, inscriptions & Teaching and learning of Tamil language. South Asia Studies, University of Pennsylvania, USA.

# PREFACE

This second part of the ninth edition of the *Tamil Peraivu* journal, which contains 15 articles, is published by the Department of Indian Studies of the University of Malaya. This biannual journal includes research articles from authors around the globe.

The first article in this edition is entitled "The 17th Century Historical References to Thootokudi by Fr. Philippus Baldaus", written by Dr. K. Subashini from German. This article explains the observations recorded and maps illustrate by Fr. Philippus Baldaeus, a Hollander who traveled to Sri Lanka and stayed there for a few years before moving on to Tamil Nadu to serve as a minister to East India Company (VOC) in the 17th century.

"The writing techniques employed in selected short stories in Malaysia and Singapore from years 2000 to 2009: A Review" by Veeramohan Veeraputhran and Manimangai Mani is the second article of this edition. This work identifies the writers from Singapore and Malaysia and investigates the different writing styles like the flashback, a stream of consciousness, and letter techniques these writers employed in crafting their short stories.

The next paper is from Dr. V. Vignesh entitled "A Testament to the Literary Richness of Dr. Mu. Varatarācaṉār". Dr. Mu. Varadarasanar's research on '*Ovacceyti*', which describes the fifth song of *Akanāṉūṟu*, and his research skills in analyzing the song are scrutinized in this paper. This is followed B. Uma's "The Appropriateness Theory: *Tholkappiyam* and Sanskrit Rhetoric Texts", which discusses the importance of principles of *Auchityam* as portrayed in *Tholkappiyam* and *Sanskrit* literature.

"Niche Thinking in *Caṅkam* Literature" by Dr R.Seiva Subramaniam is the fourth article in this edition. It examines how the songs in *Caṅkam* literature depict higher-order thinking skills (niche thinking) in children's brain development. This article is followed by another entitled "Is *Chola* Period Tamil Society a *Manu Dahrma* Society" by M.Kayalvizhy, which looks at how *Manu Dahrma* principles were enforced during *Chola's* reign.

The proceeding article is written by Vickneshwaran Parthiban and Kaviarasi Ramespran, which explores the compilation of short stories by M. Shanmuga Siva entitled *Veedhum Vizhutugalum.* The researchers critically analyze a few aspects within the compilation: the social problems, the causes, and the solutions provided within the studied work.

The eighth article in this edition is "Physics Concepts in *Sangam* Literature" by Dr.T.Geethanjali, highlighting how Sangam literature elucidates the scientific prowess of ancient Tamils in the fields of physics and astronomy. This article is followed by the work of P. Poologanathan, which focuses on two aspects within the Indian philosophy: excavating the concept of materialism embedded within the philosophy while emphasizing the portrayal of spiritual lifestyle and eudaimonia found in the philosophy.

Dr. R. Anandhakumar's "Differences in the number of names of Nattrinai Poets and related issues" is the ninth article in this edition. The paper explores the differences in the number of Nattrinai poets and the reasons that contributed to the differences. It also analyses the works of Pinnathoor A. Narayanasamy Iyer, S. Vaiyapuripillai, *Avvai* Su. Thuraisamy Pillai and Eva Vilthan to identify the various names assigned to the Nattrinai poets and the problems that arise due to this variety.

The following article by M.Vijayalatchumy and M.Navin entitled "The History of Tamil Short Stories in Malaysia and its Chronological Analysis" attempts to complete Balabaskaran's 6-part publication by replenishing the missing information in that work and subsequently classifies the growth of short story literature after 1979.

The eleventh article in this edition is "Nannan's part in the politics of ancient Tamilnadu" by S .Kanmani Ganesan. The article focuses on the focal role of King Nannan on the wars in ancient Tamilnadu and the causes, the results, as well as the conflicts and confusions that arose due to those wars. The next article by Thilakavathy Rajagopal and Saravanan Muthuramalingam details the importance of *Guru*, *Lingga*, and *Sanggama* prayers as conveyed in *Thirumanthiram*.

The following article by Dr.T.Balasubramanian, Dr.M.Pitchaimari, Dr.M.Sundar, and Dr.M.Manikandan discusses the life history of Dr. Ambedkar and his social services. This edition is concluded with the article by Aghalya Darmalingam and Dr.Darmalingam Nadarajan that explains the devotional norms found in *Periyapuranam*, which are rooted in the principles of *Guru*, *Lingga,* and *Sanggama*.

*Tamil Peraivu* has been vigorously recording the works of many researchers and has been continuously establishing its credibility. The editorial board would like to take this opportunity to sincerely thank the writers and editors, whose aid has provided vital support for this publication. The board would also like to thank honorable MGL Velayutham, the founder and CEO of Almaa Herbal Nature Pvt Ltd, who has generously borne the expenses of this publication.

**Professor Dr.M.Rajantheran**
**Chief Editor**
**10.12.2020**

# முகவுரை

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழின் ஒன்பதாவது தொகுப்பின் இரண்டாவது பகுதியாகிய இவ்விதழை மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. அறையாண்டிதழாக வெளியீடு காணும் இவ்விதழில் பன்னாட்டு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இந்தத் தொகுப்பில் மொத்தம் பதினைந்து ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

ஜெர்மனைச் சேர்ந்த முனைவர்.க.சுபாஷிணி அவர்களின் படைப்பாக அமையும், 'பிலிப்புஸ் பால்டியூஸ் ஆவணங்கள் வழங்கும் கி.பி 17ம் நூற்றாண்டு தூத்துக்குடி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்' இந்த இதழின் முதல் கட்டுரையாக அமைகின்றது. இக்கட்டுரை, கி.பி. 17ம் நூற்றாண்டில் ஹாலந்து நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து அங்கு சில ஆண்டுகள் தங்கியிருந்து, பின்னர் தமிழகம் வந்து அங்கு டச்சு கிழக்கிந்திய நிறுவனத்தின் அமைச்சராகப் பணிபுரிந்த பாதிரியார் பிலிப்புஸ் பால்டியுஸ் எழுதி வைத்த ஆவணங்களையும் அவர் உருவாக்கிய வரைபடங்களையும் ஆய்வு செய்வதாக அமைகின்றது.

2000-2009 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த மலேசிய சிங்கப்பூர் சிறுகதைகளில் கையாளப்பட்ட பின்னோக்கு, நனவோடை, கடித உத்திகள்: ஒரு பார்வை எனும் தலைப்பிலான வீரமோகன் வீரபுத்திரன் - மணிமங்கை மணி ஆகியோரின் இக்கட்டுரை சிங்கப்பூர், மலேசிய ஆகிய இரு நாடுகளில் உள்ள எழுத்தாளர்களை அடையாளம் காட்டுவதோடு அவர்கள் கையாண்ட பின்னோக்கு, நனவோடை, கடித உத்திமுறைகளையும் ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது.

அடுத்து வருவது டாக்டர் வே. விக்னேசு அவர்களின் பெருந்தகை மு.வ.வின் இலக்கிய வளத்திற்கு ஒரு சான்று எனும் தலைப்பிலான கட்டுரை. டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் அகநானூற்றின் ஐந்தாம் பாடலின் விளக்கமாக அமைந்த 'ஓவச்செய்தி' என்னும் நூலில் வெளிப்படும் ஆராய்ச்சி திறனைக் இக்கட்டுரை விளக்குகிறது. தொடரும் பா.உமா அவர்களின் கட்டுரை ஔசித்யம் என்ற கோட்பாட்டின் முக்கியத்துவம் தொல்காப்பியம் மற்றும் சமஸ்கிருத இலக்கியங்களில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதனை ஆய்வதாக அமைகின்றது.

உயரியச் சிந்தனையும் சங்க இலக்கியமும் எனும் முனைவர் ரா.செல்வ சுப்ரமணியம் அவர்களின் கட்டுரை உயரியச் சிந்தனை எனப்படும் ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சி சங்க இலக்கிய பாடல்களின் வழி எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை ஆராய்கிறது. அடுத்து மு.கயல்விழி சோழர் காலத்தில் மனுதர்மக் கோட்பாடு எவ்வாறு எல்லாம் சோழர் ஆட்சியில் ஆதிக்கம் செலுத்தியிருந்தது என்பதனை எடுத்துக் காட்டுவதாக எழுதப்பட்டுள்ளது.

தொடரும் கட்டுரையில் விக்னேஸ்வரன் பார்த்திபன் - கவியரசி ரமேஸ்வரன் ஆகியோர் மலேசியா எழுத்தாளர் மா.சண்முக சிவா அவர்களின் "வீடும் விழுதுகளும்" எனும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் காணப்படும் சமுதாயச் சிக்கல்கள், அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகளை ஆராய்கின்றனர்.

இத்தொகுப்பில் எட்டாவது கட்டுரையாக இடம்பெறும் முனைவர் த.கீதாஞ்சலி அவர்களின் கட்டுரையானது, சங்க இலக்கியத்தில் இயற்பியல், வானியல் எனப் பல்வேறு துறைகளில் பண்டைய தமிழர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்தும் நோக்கில் அமைகின்றது. இக்கட்டுரையின் வாயிலாகப் பழந்தமிழரின் அறிவியற் புலமையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து வரும் பொ. பூலோகநாதன் அவர்களின் ஆய்வுக்கட்டுரையானது, இந்தியச் சிந்தனைகளில் மறைமுகமாக காணப்படுகின்ற சடவாத கருத்துக்களை வெளிக்கொணர்வதுடன் ஆன்மீக வாழ்வு மட்டுமின்றி இன்பநல வாழ்க்கையையும் இந்திய மெய்யியல் வற்புறுத்துகின்றது என்பதை தெளிவுபடுத்துவதுமாக அமைகிறது.

தொடர்ந்து முனைவர் இர. ஆனந்தகுமார் அவர்களின் நற்றிணைப் புலவர் பெயர் எண்ணிக்கை வேறுபாடுகளும் சிக்கல்களும் எனும் தலைப்பிலான கட்டுரை, நற்றிணை புலவர்களின் எண்ணிக்கை வேறுபாடுகளுக்கான காரணங்களையும் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், எஸ். வையாபுரிப்பிள்ளை, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, ஏவா வில்தன் ஆகியோரின் பதிப்புகளில் காணப்படும் புலவர் பெயர்களின் சிக்கல்களையும் ஆராய்வதாக அமைகிறது.

அதனை அடுத்து ம.விஜயலட்சுமி - ம.நவீன் ஆகியோரின் "மலேசியாவில் தமிழ் சிறுகதை வரலாறும் அதன் காலவரிசை பகுப்பும்" எனும் கட்டுரையானது, பாலபாஸ்கரன் வகுத்திருக்கும் ஆறு பகுப்புகளில் விடுபட்ட செய்திகளைத் தொகுத்து முழுமைப்படுத்த முயன்றுள்ளதோடு 1979க்குப் பிறகான சிறுகதை இலக்கிய வளர்ச்சியை வகைப்படுத்தியுள்ளது.

"தொல்தமிழகத்து அரசியலில் நன்னன்" எனும் ச.கண்மணி கணேசன் அவர்களின் கட்டுரையானது நன்னனை மையப்படுத்தி நிகழும் போர்கள், அதற்கான காரணங்கள், அதன் முடிபுகள், அதனால் விளைந்த குழப்பங்கள் ஆகியவற்றை ஆராய்கிறது. அடுத்து திலகவதி இராஜகோபால் - சரவணன் முத்துராமலிங்கம் ஆகியோரின் கட்டுரை குரு, லிங்க, சங்கம வழிபாட்டின் முக்கியத்துவம் திருமந்திரத்தில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை விளக்குகிறது.

தொடர்ந்து வரும் முனைவர்.தி.பாலசுப்பிரமணியன், முனைவர்.ம.பிட்சை மாரி, முனைவர்.மு..சுந்தர், முனைவர். மா. மணிகண்டன் ஆகியோரின் கட்டுரையானது டாக்டர் அம்பேத்காரின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதோடு அவரின் சமுதாயப் பாணிகள் குறித்து ஆராய்வதாகவும் படைக்கப்பட்டுள்ளது. இறுதியாக அகல்யா தர்மலிங்கம் - முனைவர் தர்மலிங்கம் நடராஜன் அகியோரின் கட்டுரையானது குரு, லிங்க, சங்கமக் கோட்பாட்டின் அடிப்படையில் பெரியபுராணத்தில் வெளிப்படும் பக்தி நெறியை விளக்குவதாக அமைந்துள்ளது.

'தமிழ்ப் பேராய்வு', பல அறிஞர்களின் சிறந்த ஆய்வுகளைப் பதிவு செய்வதன் மூலம் தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறது. பதிப்பாசிரியர் குழு இவ்வேளையில் இந்த ஒன்பதாவது தமிழ்ப் பேராய்வின் இரண்டாவது பகுதியின் வெளியீட்டிற்கு துணை புரிந்த கட்டுரையாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றது. இத்தொகுப்பின் பதிப்புச் செலவை மனமுவந்து ஏற்றுக் கொண்ட அல்மா ஹெர்பல் நேச்சர் நிறுவணத்தில் தோற்றுனரும் தலைமை நிர்வாகியுமாகிய திருமிகு MGL. வேலாயுதம் அவர்களின் தாராள மனதை இவ்விடம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**தலைமைப் பதிப்பாசிரியர்**
**10.12.2020**

# தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் / Journal of Tamil Peraivu
Vol 9 (Issue 2), December 2020

பொருளடக்கம் / Contents — பக்கம் / Page


| | | |
|---|---|---|
| 1 | பிலிப்புஸ் பால்டியூஸ் ஆவணங்கள் வழங்கும் கி.பி 17ம் நூற்றாண்டு தூத்துக்குடி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்<br>The 17th century Historical References to Thoothukudi by Fr.Philippus Baldaeus<br>முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini | 11 |
| 2 | 2000-2009ஆம் ஆண்டுகளில் வெளிவந்த மலேசிய சிங்கப்பூர் சிறுகதைகளில் கையாளப்பட்ட பின்னோக்கு, நனவோடை, கடித உத்திகள்: ஒரு பார்வை.<br>The writing techniques employed in selected short stories in Malaysia and Singapore from years 2000 to 2009: A Review<br>வீரமோகன் வீரபுத்திரன் / Veeramohan Veeraputhran<br>மணிமங்கை மணி / Manimangai Mani | 24 |
| 3 | பெருந்தகை மு.வ.வின் இலக்கிய வளத்திற்கு ஒரு சான்று<br>A Testament to the Literary Richness of Dr. Mu. Varatarācaṉār<br>டாக்டர் வே. விக்னேசு / Dr. V.Vignesh | 31 |
| 4 | ஔசித்யக்கோட்பாடு: தொல்காப்பியமும் சமஸ்கிருத அலங்கார நூல்களும்<br>The Appropriateness Theory: Tholkappiyam and Sanskrit Rhetoric Texts<br>பா.உமா / B.Uma | 37 |
| 5 | உயரியச் சிந்தனையும் சங்க இலக்கியமும்<br>Niche Thinking in Caṅkam Literature<br>முனைவர் ரா.செல்வ சுப்ரமணியம் / Dr R.Seiva Subramaniam | 44 |
| 6 | சோழர் காலத் தமிழ்ச் சமுதாயம் மனுதர்மச் சமுதாயமா?<br>Is Chola Period Tamil Society a Manu Dahrma Society?<br>மு.கயல்விழி / M.Kayalvizhy | 57 |
| 7 | வீடும் விழுதுகளும் எனும் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் சமூகவியல் கோட்பாடு ஓர் ஆய்வு<br>Veedhum Vizhutugalum: A Sociological Analysis<br>விக்னேஸ்வரன் பார்த்திபன் / Vickneshwaran Parthiban<br>கவியரசி ரமேஸ்வரன் / Kaviarasi Ramespran | 68 |
| 8 | சங்க இலக்கியத்தில் இயற்பியல் துறைசார் கருத்தாக்கங்கள்<br>Physics Concepts in Sangam Literature<br>முனைவர் த.கீதாஞ்சலி / Dr.T.Geethanjali | 75 |
| 9 | இந்திய மெய்யியலில் பிரதிபலிக்கப்படும் சடவாத சிந்தனைகள்<br>Reflection of Materialism in Indian Philosophy<br>பொ. பூலோகநாதன்/ P. Poologanathan | 82 |

| | | |
|---|---|---|
| 10 | **நற்றிணைப் புலவர் பெயர் எண்ணிக்கை வேறுபாடுகளும் சிக்கல்களும்**<br>Variance of Poet counts of the text Natrinai and Related Issues<br>**முனைவர் இர. ஆனந்தகுமார்** / Dr. R. Anandhakumar | 88 |
| 11 | **மலேசியாவில் தமிழ் சிறுகதை வரலாறும் அதன் காலவரிசை பகுப்பும்**<br>History of Malaysian Tamil Short Stories and its Chronology<br>**ம.விஜயலட்சுமி** / M.Vijayalatchumy<br>**ம.நவீன்** / M.Navin | 104 |
| 12 | **தொல்தமிழகத்து அரசியலில் நன்னன்**<br>Nannan's part in the politics of ancient Tamilnadu<br>**ச.கண்மணி கணேசன்** / S .Kanmani Ganesan | 119 |
| 13 | **பெரிய புராணம் உணர்த்தும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டில் திருமந்திரம் காட்டும் சான்றுகள்**<br>The Importants of Guru, Linga, Sangama Worship in Periya Puranam Evidences Derived From Tirumantiram<br>**திலகவதி இராஜகோபால்** / Thilakavathy Rajagopal<br>**சரவணன் முத்துராமலிங்கம்** / Saravanan Muthuramalingam | 126 |
| 14 | **டாக்டர் அம்போத்கர் அவர்களின் சமூகப்பணி பற்றி - ஒரு பார்வை**<br>Dr. Ambedkr Political and social work - An Analysis<br>**முனைவர்.தி.பாலசுப்பிரமணியன்** / Dr.T.Balasubramanian<br>**முனைவர்.ம.பிட்சை மாரி** / Dr.M.Pitchaimari<br>**முனைவர்.மு..சுந்தர்** / Dr.M.Sundar<br>**முனைவர். மா. மணிகண்டன்** / Dr.M.Manikandan | 141 |
| 15 | **பெரிய புராணத்தில் பக்தி**<br>Devotional Norms (Bakthi) Depicted In Periyapuranam Text<br>**அகல்யா தர்மலிங்கம்** / Aghalya Darmalingam<br>**முனைவர் தர்மலிங்கம் நடராஜன்** / Dr.Darmalingam Nadarajan | 148 |

# பிலிப்புஸ் பால்டியூஸ் ஆவணங்கள் வழங்கும் கி.பி 17ம் நூற்றாண்டு தூத்துக்குடி பற்றிய வரலாற்றுக் குறிப்புகள்

# The 17th century Historical References to Thoothukudi by Fr.Philippus Baldaeus

முனைவர்.க.சுபாஷிணி / Dr.K.Subashini[1]


## Abstract

This article sheds light on the records of historical events that happened in the 17th century CE in the city and the surroundings of *Thoothukudi* inTamilNadu (India) as observed by the Dutch missionary Fr.PhilippusBaldaeus. For researchers interested in exploring the past five hundred years of history of Tamil Nadu, particularly of those cities along the Coromandel Coast, the documents written by the European travellers who visited Asia have played a significant role. These researchers, especially Tamil historians, are less likely to scrutinize the records written by the Dutch, Germans, or Danish travellers; they instead tend to limit the focus mostly to Tamil sources and, to a certain extent, to the records from the English colonial period within India. This article addresses this concern with a particular focus given to the Dutch records. The current work also introduces the documented records and maps crafted by the cartographer and priest, Fr. PhilippusBaldeaus, a Hollander who came to Sri Lanka in the 17th century CE and lived there for a few years before travelling to Tamil Nadu on a government assignment and serving as Minister in the Dutch East India Company (VOC). Fr. Baldaeus's accounts of his 17th-century travels in South India described the trade activities in *Thoothukudi* of Tamil Nadu, various efforts taken by the VOC to concur trade along the Coromandel Coast, information about the neighbouring city of *Rameswaram*, and the challenging business ventures by the Portuguese within that century. Fr.Baldeus focused exclusively on publishing copper-engraved maps of various geography he visited and lived during his service in Asia. Among the maps created by him are those that depicted*Thoothukudi, Nagapattinam*, and *Jaffna.* These maps are considered outstanding historical recordsthat demonstrated the life, language, and culture of Tamil people of the 17th century.This article also emphasises that special attention should be given to the records of 17th-century historians and service memberswho lived in Tamil Nadu, especially on the documents and maps, when one wants to undertake research investigating in great detail about the life and history of Tamil people in Tamil Nadu during the abovementioned time frame.



Date of submission: 2020-08-31
Date of acceptance: 2020-10-30
Date of Publication: 2020-12-10


Corresponding author's Name: Dr.K.Subashini
Email: ksubashini@gmail.com


**Key Words:** Dutch, Ducth East India Company, Philippus Baldaeus, Cartography, Tuticorin, Thoothukudi, Korkai, Sangam Literature, Trade, Coromandel Coast

[1] The author is a Lead IT Architect, DXC Technology, President of Tamil Heritage Foundation International (International Organization for Preserving Tamil Heritage) and the Director of 'Kadigai' – THFi Virtual Academy of Excellence. email: ksubashini@gmail.com

## முன்னுரை

கிபி 16ம் நூற்றாண்டு முதல், நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அரேபிய வணிகர்கள் ஆளுமைசெலுத்திக்கொண்டிருந்த ஆசிய நாடுகளின் துறைமுகப் பகுதிகளுக்குப் போர்த்துக்கீசிய வணிகர்களின் வருகை நிகழ்ந்தது. குறிப்பாக இந்தியா, இலங்கை ஆகிய பகுதிகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். வணிகத்திற்காக வந்த போர்த்துக்கீசியர்கள் இந்திய கடற்கரை நகரான கோவாவைக் கைப்பற்றி அங்கு தங்கள் தலைமையகத்தை அமைத்தனர். போர்த்துக்கீசிய வணிகர்கள் ஆசியாவிலிருந்து திரும்பிய போது கொண்டு வந்த வணிகப்பொருட்கள் ஐரோப்பாவின் பிற நாடுகளில் ஆசிய நாடுகளுக்கான வணிகத்தை தாங்களும் இடைத்தரகர்களான அரேபியர்கள் மற்றும் போர்த்துக்கீசியர்கள் இன்றி தாமே சுயமாக ஆசிய நாடுகளுடனான வணிகத் தொடர்பை முயற்சிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தீவிரப்படுத்தின.

கடந்த அறுநூறு ஆண்டு கால வரலாற்றில், நமக்கு இன்று கிடைக்கின்ற ஆவணங்களின் அடிப்படையில், 1595ம் ஆண்டு ஆசிய நாடுகளுக்கான முதல் டச்சு வணிகக் கடற்பயணம் நிகழ்ந்தது. இதன் தொடர்ச்சியாக நெதர்லாந்தின் பல நகரங்களில் வணிக நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன; கப்பல் கட்டும் பணிகள் விரிவாகின (Parthesius, 2010, p.11). இந்த வகையில் 1602ம் ஆண்டு வரை, மிகக் குறுகிய காலத்திலேயே அறுபத்தைந்து வணிகக்கப்பல்கள் ஆசிய நாடுகளுக்குச் சென்றன. 1602ம் ஆண்டு டச்சு கிழக்கிந்திய நிறுவனம் Dutch East India Company / United East Indian Company (Verenigde Ostindische Compagnie (VOC)டச்சு) ஏற்படுத்தப்பட்டது (Meilink-Roelofsz 1988, p.444).

தமிழகக் கடற்கரை பகுதி நகரங்களில் பருத்தி நெசவுத்தொழில் ஐரோப்பிய வணிகர்களின் கவனத்தை ஈர்த்த வணிகப்பொருட்களில் முக்கியமானது. டச்சு வணிகர்கள் 1605ம் ஆண்டு சோழமண்டலக் கடற்கரை பகுதியில் அமைந்திருக்கும் மசூலிப்பட்டிணம் பகுதியில் தங்கள் கைத்தறி தொழிற்சாலையை நிறுவினர். டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுநர் தனது ஆளுநர் மாளிகையைப் பழவேற்காட்டில் அமைத்து அங்கேயே தங்கியிருந்து சோழமண்டல கடற்கரை சார்ந்த டச்சு வணிகத்தை மேற்பார்வையிட்டு வந்தார். இந்த நிலை 1690 வரை தொடர்ந்தது. வர்த்தக ஆளுமையை நிலைநிறுத்த டச்சு வணிக நிறுவனம் பலத்த போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. குறிப்பாக, அரேபிய வணிகர்களும் போர்த்துக்கீசிய வணிகர்களும் ஏற்கனவே இப்பகுதியில் தங்கள் ஆளுமையை விரிவாக்கியிருந்தமையால், டச்சு வணிகர்கள் இந்தச் சவாலை எதிர்கொண்டு வணிகம் நடத்துவது மிகப் பெரிய சவாலாகவே அமைந்தது (Parthesius, 2010, p.45).

## ஆய்வுப் பின்புலம்

தமிழகத்தில் ஐரோப்பியர்களின் வருகை ஏற்படுத்திய தாக்கம் தொடர்பாக ஆராய்பவர்கள் பெரும்பாலும் ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த காலத்தை கவனத்தில் கொள்வது இயல்பாக இருக்கின்றது. இன்றைக்கு நானூறு ஆண்டு காலகட்டத்தில் இன்றைய நெதர்லாந்திலிருந்து தமிழகத்தின் பல்வேறு கடற்கரை பகுதிகளில் வணிகம் செய்து பொருள் ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்து தமிழகத்தின் முக்கிய கடற்கரைப்பகுதி நகரங்களில் தங்கள் ஆளுமையை விரிவாக்கிக் கொண்டு செயல்பட்ட டச்சு கிழக்கிந்திய கம்பெனி பற்றி பெருவாரியாக ஆய்வுலகில் கவனம் செலுத்தப்படுவதில்லை.

தமிழகத்தின் தூத்துக்குடி, நாகப்பட்டினம், பழவேற்காடு, மெட்ராஸ், சதுரங்கப்பட்டினம் ஆகிய பகுதிகள் இன்றளவும் டச்சுக்காரர்களின் வணிக செயல்பாடுகள் பற்றிய வரலாற்றுச் செய்திகளைப் பிரதிபலிக்கக்கூடிய சின்னங்கள் நிறைந்திருக்கின்ற பகுதிகளாக அறியப்படுகின்றன. (கட்டுரை ஆசிரியரின் நேரடி களப்பயணம்) இந்த வரலாற்று சின்னங்களை ஆராய முற்படும் போது டச்சுக்காரர்களின் தமிழக வருகை மற்றும் வணிக விரிவாக்கம் தொடர்பான செய்திகள் அடங்கிய ஆவணங்களை ஆராய்வது

இன்றியமையாத தேவையாகின்றது.

டச்சுக்காரர்களின் வணிக விரிவாக்கத்தை நுணுக்கமாக அறிந்து கொள்ள அக்காலத்தைய டச்சு அரசு அதிகாரிகள் மற்றும் மதபோதகர்கள், வணிகர்கள் ஆகியோரது ஆவணக் குறிப்புகள் என்று நமக்கு மிக முக்கிய சான்றுகளாக அமைகின்றன.

இன்று நமக்குக் கிடைக்கின்ற ஆவணங்கள் கூறுகின்ற செய்திகள் இந்த நகர்களைப் பற்றியும் அங்கு செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் விவரிக்கின்றன. பொதுவாக இந்த கடற்கரை பகுதிகளை ஆராய்கின்ற தமிழக ஆய்வாளர்கள் பார்வையில் தென்படாத பல்வேறு ஆவணக் குறிப்புகள் ஐரோப்பிய ஆவண பாதுகாப்பகங்களில் கடந்த நானூறு ஆண்டுகளுக்கு மேலாக சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. இணையம் ஏற்படுத்தி இருக்கின்ற அளவற்ற வாய்ப்புகளில் ஒரு பயனாக இன்று நமக்கு ஏராளமான மின்னாக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் கிடைக்கின்றன. இவற்றைத் தேடி ஆராயும்போது மறக்கப்பட்ட அல்லது அதிகம் பேசப்படாத வரலாற்றுச் செய்திகள் உலகத்திற்கு வெளிச்சப்படுகின்றன. அந்த நோக்கத்தின் அடிப்படையில் இக்கட்டுரை மேற்கத்திய ஆய்வாளர்கள் ஐரோப்பாவிலிருந்து தமிழகத்திற்கு வந்து செயல்பட்ட செய்திகளைக் குறிப்பாக பிலிப்பூஸ் பால்டியூஸ் அவர்கள் வழங்குகின்ற நெதர்லாந்து தொடர்புடைய ஆய்வு குறிப்புகளின் வழி இன்றைக்கு முன்னூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னதான தமிழகத்தை அறிந்து கொள்ளும் ஒரு முயற்சியாக அமைகின்றது.

## ஆய்வுமுறை

மேற்குறிப்பிட்ட நோக்கத்தை ஆராயும் பொறுட்டு பாதிரியார் பிலிப்பஸ் பால்டியுஸ் அவர்களது ‘A True and Exact Description of the Most Celebrated East-India Coasts of Malabar and Coromandel, As Also of the isle of Ceylon‘ என்ற நூலில் தூத்துக்குடி பற்றிய செய்திகள் வழங்கப்பட்டுள்ள பகுதிகள் இந்த ஆய்வில் முக்கிய கவனம் பெற்றுள்ளன. கிபி.16ம் நூற்றாண்டு தொடங்கி தமிழகத்திற்கு வந்து வணிகம் மற்றும் சமயம் சார்ந்த துறைகளில் பணியாற்றிய ஆய்வாளர்களது ஆவணங்களும் நூல்களும் இந்த ஆய்வில் துணைநூல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளின் அருங்காட்சியகங்களில் கட்டுரை ஆசிரியர் நேரடியாக மேற்கொண்ட ஆய்வுப் பயணங்களில் பதிந்த குறிப்புக்கள் மட்டுமன்றி தமிழகத்தின் தூத்துக்குடி, சாயர்புரம், சதுரங்கப்பட்டினம், பழவேற்காடு ஆகிய பகுதிகளில் கட்டுரை ஆசிரியர் மேற்கொண்ட நேரடி கள ஆய்வுகளில் சேகரித்த தகவல்கள் இந்தக் கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்கத்திய ஆய்வாளர்களின் ஆய்வறிக்கைகளும், நூல்களும், ஆவணங்களும், ஆய்வுக் கட்டுரைகளும் இவ்வாய்விற்குத் துணை நூல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## நில வரைப்படக் கலைஞர் பிலிப்புஸ் பால்டியூஸ்

பாதிரியார் பிலிப்புஸ் பால்டியூஸ் (Fr. Philippus Baldaeus, 1632-1672) ஹாலந்து (இன்றைய நெதர்லாந்து) நாட்டைச் சேர்ந்த சீர்திருத்துவ கிறித்துவ (Dutch Reformed Church) மத போதகர். இந்த வகை சீர்திருத்த கிருத்துவம் என்பது கத்தோலிக்க கிருத்துவத்தில் மேலும் புதிய சீர்திருத்தச் சிந்தனைகளை உருவாக்கி வளர்ந்த ஒரு கிளைச்சமயமாகும். இவர் தத்துவம், கீழைதேச மொழிகள், சமயம் ஆகிய துறைகளில் கல்விகற்று தேர்ச்சி பெற்று பின்னர் தனது சமயப் பணியை மேற்கொள்ள டச்சு கிழக்கிந்திய கம்பெனியில் பணியில் சேர்ந்தவர். தனது பணி காலத்தில், கிழக்காசிய நாடுகள் பலவற்றில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர் என்றாலும் தனது பெரும்பாலான காலத்தை அன்றைய சிலோனிலும் (இலங்கை), இந்தியாவிலும், அன்றைய மலாயா, இந்தோனிசியாவிலும் கழித்தவர். அதிலும் குறிப்பாக, தமிழ் மொழியை நன்கு கற்று தமிழ் பண்பாட்டினையும் சமூகம் சார்ந்த செய்திகளையும் டச்சு, ஜெர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதியவர் என்ற

பெருமை இவருக்குண்டு. மரியா வோன் காசல் என்பவரையும் பின்னர் அவரது இறப்புக்குப் பின் எலிசபெத் ட்ரிபொலெட் என்பவரையும் இவர் திருமணம் செய்ததாக இவரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆப்ரஹாம் ரொகேரியசை (Abraham Rogerius) அடுத்து வட இலங்கைத் தமிழ் மக்களைப் பற்றிய சமூக, மொழி, பண்பாட்டுச் செய்திகளை மிக விரிவாக ஆவணப்படுத்தியவர் என்ற பெருமை இவரைச் சாரும் (<https://www.zebregsroell.com/philippus-baldaeus-malabar-coromand>).

1654ம் ஆண்டு டச்சு கிழக்கிந்திய கம்பெனியில் அமைச்சராக இவர் பதவியேற்றுக் கொண்டார். இலங்கையில் யாழ்ப்பாணத்திலும் ஏனைய வட கிழக்குப் பகுதிகளிலும் ஒன்பது ஆண்டுகள் தங்கியிருந்து டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் சமய போதகராகப் பணியாற்றினார். அதன் பின்னர் டச்சு ஆதிக்கத்திக்குட்பட்ட தென்னிந்தியக் கடற்கையோர நகரங்களில் தனது பணிகளைத் தொடர்ந்தார் (Luba Zubkova, 2004).

இலங்கையிலிருந்து தமிழகம் வந்தபோது தூத்துக்குடியில் தனது அனுபவங்களை அவர் விவரிக்கும் செய்திகள் நமக்கு அக்காலத்தைய சூழலை விளக்கும் சான்றுகளாக அமைகின்றன. பாதிரியார் பால்டியூஸ் அவர்களது நேரடி பயண அனுபங்களும், செல்கின்ற மற்றும் அவர் தங்கி வாழ்ந்த பகுதிகளில் அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் அக்காலத்தைய அரசியல் செய்திகள், சமூகவியல் தொடர்பான அவரது பார்வை, உள்ளூர் மக்களின் மத நம்பிக்கை மற்றும் அவை தொடர்பான குறிப்புகள் ஆகியவற்றை தொகுத்து 1672ம் ஆண்டு அவர் ஒரு நூலை வெளியிட்டார். இது நெதர்லாந்தின் தலைநகரான ஆம்ஸ்டர்டாம் நகரில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதே ஆண்டு, 1672, ஜெர்மானிய மொழியில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டது. 1703ம் ஆண்டில் இதே நூல் ஆங்கில மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. A Description of the East india Coasts of Malabar and Cormandel with their adjacent Kingdoms & Provinces & of the Empire of Ceylon and of the Idolatry of the Pagans in the East indies - (Luba Zubkova,2004).

இந்த நூலில் அவர் குறிப்பிடும் தூத்துக்குடியிலிருந்து தொண்டி, நாகபட்டினம், தரங்கம்பாடி, பழவேற்காடு, என இவரது பயணம் மிக விரிவானது.

இந்த நூல் குறிப்பிடும் செய்திகளின் அடிப்படையில் தூத்துக்குடியில் அவரது அனுபவச் செய்திகளை விரிவாகக் காண்போம். தூத்துக்குடியில் முதலில் அவர் சந்தித்த உள்ளூர் மக்கள் தமிழக பரதவ சமூகத்தவர்கள். மீன்பிடித்தல் மற்றும் முத்துக்குளித்தல் ஆகிய கடல் சார்ந்த தொழில் ஈடுபாடு கொண்ட மக்கள். இவர்கள் இப்பகுதியில் முன்னரே காலோச்சியிருந்த போர்த்துக்கீசியர்களின் தாக்கத்தினால் கத்தோலிக்க கிருத்துவ சமயத்தை ஏற்றிருந்தனர். ஓரிரு கத்தோலிக்க தேவாலயங்களும் அக்காலகட்டத்தில் அங்கே உருவாக்கப்படிருந்தன.

மதம் மாறிய தமிழர்கள் தங்கள் கத்தோலிக்க மத நம்பிக்கையில் "வெறித்தனமாக கண்மூடித்தனமாக" நம்பிக்கை கொண்டிருந்தனர் என்றும், தனது புதிய சீர்திருத்த சமயத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி தனது பக்கம் அவர்களை ஈர்ப்பது எளிமையான காரியமாக இல்லை என்றும் தனது நூலில் இவர் குறிப்பிடுகின்றார். `அவர்களுக்கு முத்துக்களைக் கோர்த்து அணிகலன்கள் செய்வதற்கும், சிலுவைகளைச் செய்வதற்கும் மட்டும் தான் தெரிகிறதே தவிர கிருத்துவ சமயத்தின் அடிப்படை தத்துவ விசயங்கள் தெரியவில்லை`, என்றும் குறிப்பிடுகின்றார் (Philippus Baldeaus, 1703, p.648).

1661ம் ஆண்டு இவரை டச்சு கிழக்கிந்திய அரசு தூத்துக்குடியிலிருந்து கோவளம் பகுதி வரை பயணித்து இங்கு கடற்கரை பகுதிகளிலுள்ள கிருத்துவ தேவாலயங்கள் எவ்வகையில் இயங்குகின்றன என ஆய்வு செய்து தங்கள் புதிய சமயக் கொள்கையை எவ்வாறு இவர்களிடையே புகுத்தலாம் என அறிந்து வர பணித்தது என்றும், புதிய சமயத்தை

அவர்களிடையே அறிமுகப்படுத்துவது எளிதல்ல என்று தாம் உணர்ந்ததாகவும் இவர் குறிப்பிடுகின்றார். ஏனெனில் பரதவ மக்கள் போர்த்துக்கீசியர் அறிமுகப்படுத்திய கத்தோலிக்க கிருத்துவத்தில் மிகத் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்றும் இவர் குறிப்பிடுகின்றார் (Philippus Baldeaus, 1703, p.647).

1658ம் ஆண்டு தூத்துக்குடி கடற்கறை பகுதி டச்சுக்காரர்கள் வசம் வந்தது. இதன் அடிப்படையில் இங்கு இயங்கிய தேவாலயங்களில் மாற்று சித்தாந்தத்தைப் போதிக்கும் முயற்சிகள் இக்கால கட்டத்தில் நிகழ்ந்ததைப் பாதிரியார் பால்டியூஸ் குறிப்புக்கள் வெளிப்படுத்துகின்றன. பாதிரியார் பால்டியூஸ் இம்மக்களை ஈர்க்க போர்த்துக்கீசிய மொழியிலேயே வழிபாடுகளைத் தொடங்கினார். அந்த முயற்சியும் பலனளிக்கவில்லை (Philippus Baldeaus,1703,p. 648).

1658ல் இலங்கையில் நிகம்புவிலிருந்து வந்த டச்சுப் படைகள் தூத்துக்குடி பகுதியைத் தாக்கி தமது ஆளுமைக்குள் கொண்டு வந்தன. அந்த சமயத்தில் தூத்துக்குடியில் பல நூறு கிராமங்கள் மட்டுமே இருந்ததாகவும், ஆனால் அவற்றிற்குப் பாதுகாப்பாக மதில் சுவர் இல்லையென்றும், சாக்கடைகள் இல்லையென்றும் வாயிற்கதவுகள் அல்லது கோட்டைக்கதவுகள் இருக்கவில்லை என்றும், மூன்று மிகப்பெரிய அளவிலான தேவாலயங்கள் மட்டுமே இருந்ததாகவும், பெரிய வீடுகள் சில வரிசையாக இருந்ததாகவும் இவரது குறிப்புக்கள் சொல்கின்றன.

டச்சு கிழக்கிந்திய கம்பெனி இப்பகுதியில் ஒரு கோட்டை ஒன்றை கட்ட பல முறை முயற்சித்தும் இது சாத்தியப்படவில்லை. இதற்குக் காரணம் அப்பகுதியை ஆண்ட நாயக்க மன்னர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை என்றும், இதன் காரணத்தால் டச்சு கிழக்கிந்திய கம்பெனி போர்த்துக்கீசியர்கள் முன்னர் கட்டிய மூன்று தேவாலயங்களில் ஒன்றில் தமது தொழிற்சாலை ஒன்றை நிறுவியது என்பதும் இந்த நூலின் வழி அறிய முடிகின்றது (Philippus Baldeaus,1703,p. 647).

## தூத்துக்குடியில் டச்சு கிழக்கிந்திய கம்பெனி செயலாக்கமும் வரலாற்று ஆய்வின் தேவைகளும்

கி.பி. 1658 முதல் 1661 வரையிலான பாதிரியார் பிலிப் பால்டியூஸ் அவர்களது குறிப்புக்கள் தூத்துக்குடி பரதவ மக்களின் சமூக நிலையைப் பற்றிய முக்கியத் தரவுகளை வழங்குகின்றன. டச்சுக்காரர்கள் போர்த்துக்கீசியர்களிடமிருந்து தூத்துக்குடி துறைமுகப் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் அங்கிருந்த தேவாலயங்களில் இருந்த கிருத்துவ தெய்வ வடிவங்களை அகற்றி தேவாலயத்திற்குள் கிருத்துவக் கோட்பாட்டின் பத்து கட்டளைகளைப் பிரதானமாக வைத்து கிருத்துவ நெறிகளை வளர்க்கும் முயற்சிகளை மேற்கொள்ள முயன்றிருக்கின்றனர். அதுமட்டுமன்றி இரு தரப்புக்கும் இடையிலான போரின் போது தேவாலயம் ஓரளவு சேதம் அடைந்திருந்தது. இது தூத்துக்குடி பரதவ தமிழ் மக்களுக்கு டச்சுக்காரர்கள் மேல் பெரும் கோபத்தை ஏற்படுத்தியது என்றும், ஒரு முறை தேவாலயத்தை மணியை அடித்து மக்களை ஒன்று திரட்டி தேவாலயத்திற்கு வந்து டச்சுக்காரர்கள் அறிமுகப்படுத்திய புதிய முறையில் வழிபாடு செய்ய அழைத்த போது அவர்கள் டச்சுக்காரர்களைத் தமது எதிரிகளாகப் பார்ப்பதாகக் கூறியதைப் பாதிரியார் பால்டியூஸ் பதிகின்றார் (Philippus Baldeaus,1703,p. 648).

தனது சமய முயற்சி தூத்துக்குடியில் தோல்வியடைந்ததை ஏற்றுக்கொண்டு அங்கிருந்து பாதிரியார் பால்டியுஸ் வேறு பகுதிக்குச் சென்ற பின்னர் ரெவரண்ட் ஜோன் ஃபெரைரா அல்மெய்டா (Rev. John Fereira Almeyda) என்ற லிஸ்பன் போர்த்துகல் நாட்டைச் சேர்ந்த போர்த்துக்கீசியர் அங்கு சமய போதனை செய்ய வந்ததாகவும், ஆனால் அவரும் தனது முயற்சியில் தோல்வியடைந்ததாகவும் குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றி அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுக்கப்பட்டு தனது சமயத்திலிருந்து விலகியவர் எனக் குற்றம் சுமத்தப்பட்டதாகவும், அது மட்டுமன்றி அவரது உருவ

பொம்மை கொடும்பாவி கோவாவில் எரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார் (Philippus Baldeaus,1703,p. 648). ஆக, இக்காலகட்டத்தில் போர்த்துக்கீசியர் அறிமுகப்படுத்திய கத்தோலிக்க கிருத்துவமே இப்பகுதியில் ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதை அறியமுடிகின்றது.

தூத்துக்குடி பரதவ மக்களின் முக்கியத் தொழிலாக அன்றைய நிலையில் முத்துக்குளித்தலும் மீன் பிடித்தலும், கைத்தறி நெய்யும் தொழிலும் இருந்தன. இன்று முத்துக்குளித்தல் பெருமளவில் குறைந்து விட்டது என்றாலும் ஆழ்கடலில் மூழ்கி சங்கெடுக்கும் தொழில் இன்றும் நடைபெறுகின்றது.

முத்துக்களைப் பற்றி பாதிரியார் பால்டியூஸ் இப்படி விவரிக்கின்றார். `முத்துக்கள் ஒரு வகை சிப்பி ஓட்டுக்குள் இருக்கும். இவ்வகை சிப்பிகளைச் சாப்பிட முடியாது. ஓரளவு ஆழ்கடலுக்குள் மூழ்கிச் சென்று தான் இந்த சிப்பிகளைப் பொறுக்கி எடுத்து வர வேண்டும். முத்து எடுத்தல் தொழில் என்பது, ஆண்டில் எல்லா நாட்களிலும் அனுமதிக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட சில மாதங்களில் தான் இவை நடைபெறும். சில நேரங்களில் சிப்பிக்குள் மணல் மட்டுமே நிறைந்திருக்கும். முழுமையாகத் தயாராகாத நிலையிலேயே எடுக்கப்பட்ட சிப்பிகள் இவை. இவற்றினால் பலனில்லை. முத்துக்குளிக்கும் பரதவர்கள் திறமையானவர்கள். அவர்கள் ஒரு சில சிப்பிகளை மட்டும் முதலில் கொண்டு வந்து சோதித்து பின்னர் எப்பகுதியில் சிப்பிகளைப் பொறுக்கி எடுக்கலாம் என முடிவு செய்து கொள்வார்கள். அப்படி முத்துக்கள் தயாரான சிப்பிகள் இருப்பது தெரிந்து விட்டால் அவர்கள் குடும்பம் குடும்பமாக வந்து கடற்கரை பகுதிகளில் கூடாரம் அமைத்துத் தங்கி விடுவார்கள். முத்துக்குளித்தல் காலகட்டம் முடிவுக்கு வரும் வரை அவர்கள் அங்கேயே தங்கியிருப்பார்கள்' (Philippus Baldeaus,1703,p. 648).

டச்சு கிழக்கிந்திய கம்பெனி இவர்களது ஆழ்கடல் முத்துக்குளித்தல் தொழிலுக்குச் சில பாதுகாப்பு முயற்சிகளை அச்சமயத்தில் ஏற்படுத்தித் தந்ததாகவும், இதனால் முத்துக்குளித்தல் வியாபாரத்தில் வரும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அவர்களுக்கு மக்கள் வழங்கினர் என்றும் அவரது குறிப்புக்கள் சொல்கின்றன. ஆக, டச்சு கிழக்கிந்திய கம்பெனிக்கு வருமானம் ஈட்டும் ஒரு பகுதியாக இப்பகுதி இருந்துள்ளதை நாம் மறுக்க முடியாது.

இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தின் பண்டைய துறைமுக நகரங்களில் கொற்கையும் ஒன்று. இன்று அதன் சிறப்புக்களை இழந்து சிறு கிராமமாகத் திகழும் இந்த நகரம் சங்ககாலத்தில் புகழ்மிக்க வணிகப் போக்குவரத்துகள் நிகழ்ந்த ஒரு நகரமாக, பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகத் திகழ்ந்தது. கொற்கை நகரின் சிறப்பு பற்றியும், அதன் வணிகப் புகழ் பற்றியும், அங்கு எடுக்கப்படும் முத்துக்கள் பற்றியும் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் இரண்டு பாடல்களைக் காண்போம்.

*"இவர்திரை தந்த ஈரங்கதிர் முத்தம்*
*கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்*
*நற்றோர் வழுதிக் கொற்கை முன்றுறை*
*(அகநானூறு ; 130)*

விளக்கம்: கொற்கை பகுதியைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டிருந்த பாண்டிய மன்னர்கள் கொற்கைப்பகுதியில் எடுக்கப்பட்ட முத்துக்களைப் போல மக்களை அறத்துடன் காப்பவர்கள்.

*"இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி*
*வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்*
*ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்*
*கலிகெழு கொற்கை " (அகநானூறு 350)*

விளக்கம்: பாண்டிய மன்னர்கள் ஆட்சிக்குட்பட்ட கொற்கை துறைமுகமானது வளம் மிக்க பாண்டிய நாட்டிற்கு ஓர் அடையாளமாகத் திகழ்ந்தது. கடற்கரையில் வசிக்கும் நெய்தல் நிலமக்களான பரதவர்களுக்குக் கடலில் கப்பலைச் செலுத்துவது, முத்துக்களையும் சங்குகளையும், வலம்புரிச் சங்குகளையும்

கடலில் மூழ்கி எடுப்பது என்பவை தொழிலாகும்.

பொதுவாகவே பரதவ மக்கள் தூத்துக்குடி சந்தையிலேயே தங்கள் முத்துக்களை அன்று வியாபாரம் செய்தனர். இது சங்ககாலத்திலிருந்து தொடரும் ஒரு மரபாகவே இருந்திக்கலாம் என ஊக்கிக்க முடிகிறது. பல நாட்டு வணிகர்களும் அப்பகுதிக்கு வந்து முத்துக்களை வாங்கிச் செல்வது இயல்பாக நடந்திருக்கின்றது. முத்துக்களை நீக்கிய உடைந்த சிப்பிகளின் துகள் ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இவை ஒருவித மருந்து தயாரிப்பிற்குப் பயன்பட்டதாகத் தெரிகின்றது (Philippus Baldeaus, 1703, p.648).

தூத்துக்குடியில் மேலும் ஒரு முக்கியத் தொழிலாக நீண்ட காலம் கைத்தறி தொழில் இருந்தது. இதன் சான்றாக சாயர்புரம் பகுதியில் இன்றும் தறிகள் இயங்கும் ஒலியை நாம் கேட்கின்றோம். சாயர்புரத்தில் உள்ள தனித்தனி வீடுகளில் ஒரு கைத்தறி இயந்திரம் பொருத்தப்பட்ட வகையிலான அமைப்பைக் கான முடிகின்றது. இந்தத் தறி அமைப்பு பெரும்பாலான வீடுகளில் அமைக்கப்பட்டுள்ளன. வீட்டில் உள்ள பெண்களும் ஆண்களும் ஒரு நாளில் அல்லது இரண்டு நாட்களில் ஒரு கைத்தறி சேலையை நெசவு செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். தூத்துக்குடி பகுதியில் இன்று ஓரளவு கைத்தறி நெசவு என்பது குறைந்து விசைத்தறி பயன்படுத்தி துணிகள் தயாரிக்கப்படுவது தொடர்கின்றது. தூத்துக்குடி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களில் பருத்தித் துண்டுகள், பருத்தியினால் உருவாக்கப்படும் கைலிகள், பருத்தி சேலைகள் ஆகியவை அடங்கும். சாயர்புரத்தில் தமிழக அரசாங்கம் கோ ஆப்டெக்ஸ் (Cooptex) வழியாக அரசு விழாக்களிலும் நலன் திட்டங்களிலும் இலவசமாக விநியோகிக்கத் தேவைப்படும் சேலைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இதே போல தமிழகத்தின் வேறு பிற பகுதிகளிலும் அரசின் இலவசத் திட்டங்களுக்கு சேலைகள் தறிபோடப்பட்டு நெய்யப்படுகின்றன. (கட்டுரையாசிரியரின் தூத்துக்குடி மற்றும் சாயர்புரம் ஆகிய பகுதிகளுக்கு மேற்கொண்ட நேரடி கள ஆய்வின் போது பதியப்பட்ட காணொளிப் பதிவு: <https://youtu.be/rV_hmYr4J1A> - THF: நெசவுத்தொழிலும் கைத்தறியும்)

விவசாய நிலங்களில் அரிசி மற்றும் காய்கறி உற்பத்தியும் தூத்துக்குடி பகுதியில் மக்களின் தொழிலாக இருந்தது என்று பாதிரியார் பிலிப்புஸ் பால்டியூஸ் சுட்டிக்காட்டுகின்றார் (Philippus Baldeaus, 1703, p.648).

### தூத்துக்குடி கி.பி.1672

### பின்னிணைப்பு 1

இந்த வரைப்படம் காட்டுவது தமிழகத்தின் தென்கோடி துறைமுக நகரமான தூத்துக்குடி. இது 1672ம் ஆண்டு தூத்துக்குடி நகரம் அமைக்கப்பட்டிருந்த தன்மையை வெளிப்படுத்தும் ஒரு நில வரைப்பட ஆவணம். இந்த வரைப்படத்தின் அளவு 35.5 செ.மீ. x 29 செ.மீ.

இந்த நிலவரைப்படம் பாதிரியார் பிலிப்புஸ் பால்டியூஸ் அவர்களால் உருவாக்கப்பட்டது. மதபோதகர், டச்சு அரசின் அமைச்சர் என்பதோடு நில வரைப்படங்களை உருவாக்கும் கலைஞராகவும் இவர் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் நில வரைப்படங்களை உருவாக்கியிருக்கின்றார். இவை இன்று கி.பி. 17 மற்றும் 18ம் நூற்றாண்டு ஆய்வுகளுக்குப் பெருமளவில் உதவும் வரலாற்றுத் தரவுகளாக அமைகின்றன.

இந்த வரைப்படத்தில் தூத்துக்குடி பனிமயமாதா ஆலயம் கடலை நோக்கியபடி அமைக்கப்பட்டிருப்பதையும், வீடுகள் வரிசை வரிசையாக அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இங்குக் காட்டப்படும் பனிமயமாதா ஆலயம் இன்றும் தூத்துக்குடி கடற்கரை பகுதியில் பிரமாண்டமாகக் காட்சியளுக்கும் போர்த்துக்கீசியர் கால வரலாற்றின் ஒரு அடையாளமாகும். இது போர்த்துக்கீசியர்களால் அமைக்கப்பட்ட தேவாலயம். இங்கிருக்கும் கடற்கரையில் நிறைய படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதையும், சில படகுகள் கடலில் பயணத்தில்

இருப்பதையும் காணமுடிகின்றது. கடலில் இருக்கும் படகுகள் மீனவர்களின் மீன்பிடி படகுகள் என்பதற்குச் சான்றாகப் படகுகளில் இருப்போர் வலை வீசுவதை இந்த வரைப்படம் காட்டுகின்றது. இவை மட்டுமன்றி, அயலக வணிகர்களின் படகுகள் வேற்று நாட்டு கொடியுடன் உள்ளதையும் காணலாம். இதில் போர்த்துக்கீசியர்களின் அரசு அலுவலகம் போன்ற ஒரு கட்டிடம் கடற்கரையை நோக்கியவாறு இருப்பதையும் அதில் ஒரு கொடி பறப்பதையும் காணலாம்.

ஐரோப்பியர்களால் இந்த நகரம் அன்றைய காலகட்டத்தில் தூத்துக்கோரின் (Tutecoryn or Tuticorin) என அழைக்கப்பட்டது. ஐரோப்பியர்களும் அரேபியர்களும் வணிகம் செய்ய வந்த அன்றைய இந்தியாவின் மிக முக்கியத் துறைமுகப்பகுதிகளில் இந்த நகரமும் முக்கிய நகரமாக அறியப்படுகின்றது. பண்டைய ரோமானியப் பேரரசு ஆட்சி காலத்திலும் வணிகர்கள் தூத்துக்குடிக்கு வந்து சென்றமை பற்றிய ஆவணக்குறிப்புகள் கிடைக்கின்றன. இது மிக நீண்ட காலமாக இப்பகுதி வணிகர்களை ஈர்த்த ஒரு பகுதியாக இருந்தமைக்குச் சான்றாக அமைகின்றது. வளமான இப்பகுதியில் தான் முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல் போன்ற தொழில்கள் விரிவாக நடைபெற்றன.

முத்துக்கள் கோர்த்து செய்யப்பட்ட ஆபரணங்கள் பண்டைய ரோமானிய வணிகச் சந்தையில் புகழ் பெற்றிருந்தன. சங்கினை அறுத்து ஆபரணங்கள் செய்வது தமிழகத்தின் நீண்ட பண்பாடாக இருந்தது. இதற்குச் சான்றாக தமிழகத்தில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் நமக்குக் கிடைக்கும் ஆபரணங்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக தமிழகத்தின் கீழடியில் 2019ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான பொருட்களில் உடைந்த வளையல்களின் அறுபத்து மூன்று பாகங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் சங்குகளை மூலப்பொருளாகக் கொண்டு செய்யப்பட்ட வளையல்களும் அடங்கும் (தமிழக தொல்லியல் துறை, (2020) பக்.47). இது சங்குகள் ஆபரணங்களாகப் பயன்படுத்தப்பட்டமைக்கு ஒரு சான்றாக அமைகின்றது.

**பிலிப்புஸ் பால்டியூசின் தமிழ் இலக்கணம்**

பிலிப்புஸ் பால்டியூஸ் தனது மிகப்பெரிய ஆவணப்படைப்பான “ A True and Exact Description of the Most Celebrated East-India Coasts of Malabar and Coromandal, As Also of the isle of Ceylon” என்ற நூலில் தனது பயண அனுபவங்களையும், செயல்பாடுகளையும், தான் உள்வாங்கிய கருத்துக்களையும் மிக விரிவாகக் குறிப்பிடுகின்றார். அன்றைய தமிழகத்தின் தூத்துக்குடி மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகள் நாகப்பட்டினம், சதுரங்கப்பட்டினம், பழவேற்காடு உட்பட ஏனைய கடற்கரையோர நகரங்களில் செயல்பட்ட டச்சு கிழக்கிந்திய கம்பெனி பற்றி இந்த நூல் விளக்குகின்றது. இதே நூலில் 13 பக்கங்களில் டச்சுக்காரர்கள் எளிய முறையில் தமிழ் மொழியை (இங்கு தமிழ் மொழி `மலபார் மொழி` என வழங்கப்படுகிறது என்பதைக் காண்க) கற்றுக் கொள்ளும் வழிகாட்டி விளக்கப்பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது (Philippus Baldeaus,1703,p. 664). தமிழர்கள் பனைமரத்தின் ஓலைகளைத் தயார் செய்து அதில் எழுதுவர் என்றும், இரும்பால் ஆன எழுத்தாணி கொண்டு எழுதுவர் என்றும் நூலின் இப்பகுதியின் குறிப்பு தெரிவிக்கின்றது.

**காண்க: பின்னிணைப்பு 2**

டச்சுக்காரர்களுக்குத் தமிழ் மொழி அப்போது தெரியாமல் இருந்ததற்கான காரணம் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியால் இந்தியா 1661லிருந்து 1663 வரையிலான காலகட்டத்தில் போர்த்துக்கீசியர்களிடமிருந்து கைப்பற்றப்படாததும், தங்கள் ஆட்சிக்குட்படாத பகுதிகளுக்குத் தங்கள் அரசு பிரதிநிதிகளை அனுப்பும் வழக்கம் இல்லாததுமே எனக் குறிப்பிடுகின்றார். பாதிரியார் பால்டியூசுக்கு மொழிபெயர்ப்பு உதவியாளராக பிரான்சிஸ் என்ற பெயர் கொண்ட ஒரு தமிழரை அவர் பணிக்கு அமர்த்தியிருந்ததாகவும் அவருக்குத் தமிழும் போர்த்துக்கீசிய மொழியும்

நன்கு பரிச்சயம் ஆகியிருந்தது என்றும் குறிப்பிடுகின்றார். தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வது டச்சுக்காரர்களுக்கு உள்ளூர் பொதுமக்களோடு பழக உதவும் என்று குறிப்பிடுவதோடு இந்திய இளவரசர்களைத் தங்கள் பக்கம் ஈர்க்கவும் உதவும் என்றும் குறிப்பிடுகின்றார் (Philippus Baldeaus,1703,p. 663).

## இராமன்கோயில் – ஆதாம் குன்று – புத்தர் பாதம்

சோழமண்டல கடற்கரை பகுதிகளில் பிலிப்புஸ் பால்டியூசின் குறிப்புக்களில் அடுத்து விரிவாக நாம் காண்பது ராமன்கோயில் என அவர் குறிப்பிடும் இன்றைய இராமேஸ்வரம். இன்றைக்கு முன்னூறு ஆண்டுகள் வாக்கில் இப்பகுதி இராமன் கோயில் என்று வழக்கில் அழைக்கப்பட்டிருக்கின்றது என்பது இதன் வழி அறிகின்றோம். ராமன் என்ற பெயர் கொண்ட கடவுளுக்கு எடுக்கப்பட்ட கோயில் இருக்கும் தீவு என்பதால் ராமன்கோயில் என மலபார் மொழியில், அதாவது தமிழ் மொழியில் இந்தத் தீவுக்கு பெயர் அமைந்ததாக இவர் குறிப்பிடுகிறார். ஆக, ராமன்கோயில் என்று கி.பி.1661 காலவாக்கில் தமிழ் பெயர் பெற்றிருந்த இப்பகுதி சமஸ்கிருதமயமாக்கப்பட்டு இராமேஸ்வரம் என இன்று அழைக்கப்படுகிறது எனக் கருதலாம்.

ராமர் கோயில் கடற்கரை பகுதியில் இருந்தது; கடற்கரை பகுதி மணல் நிறைந்து காணப்படும்; இப்பகுதியின் மன்னர் மிக உறுதியான ஒரு கோட்டையைச் சோழமண்டல கடற்கரை பகுதியில் கட்டியிருக்கின்றார் என்றும் நாயக்கமன்னரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இது இருந்தது எனவும் இவர் குறிப்பிடுகின்றார் (Philippus Baldeaus,1703,p. 649).

1662ம் ஆண்டில் ஒருமுறை பாதிரியார் பிலிப்புஸ் பால்டியூசும், லெஃப்டினன் ஹெர்மான் எக்பெர்க்ட்ஸூம் இப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது உள்ளூர் மக்களால் பிடிக்கப்பட்டு கைதிகளாக சில நாட்கள் இருந்திருக்கின்றனர். அச்சமயத்தில் இவர்களுக்குப் போதிய உணவும் அருந்த நீரும் இல்லாமல் இருந்தனர் என்றும், அவ்வழியே வந்த மன்னர் இச்செய்தியை அறிந்து இவர்கள் இருவரையும் விடுவிக்கச் செய்தனர் என்றும் தனது குறிப்பில் அவர் எழுதுகின்றார் (Philippus Baldeaus,1703,p. 663). ஆக, உள்ளூர் மக்களே தாங்கள் ஐயப்படும் ஐரோப்பியர்களைக் கைது செய்து சிறைவைத்த நிகழ்வுகளும் நடந்தன என்பதை இதன் வழி ஊகிக்க முடிகின்றது.

ராமன்கோயில் பகுதி நாகபப்பட்டினம், மன்னார், ஜஃப்னாபட்டினம் (யாழ்ப்பாணம்) ஆகிய பகுதிகளுக்கு அருகிலேயே இருந்தது என்றும் மக்கள் அன்று எளிதாக இப்பகுதிகளில், அதாவது தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் பயணம் செய்து வந்தனர் என்பதையும் அதற்கு தடைகள் இல்லாமல் இருந்ததையும் காண்கின்றோம். இன்றைய நிலையோடு ஒப்பிட்டுக் காணும் போது பயண நடைமுறையில் இருக்கும் சிக்கல்கள் எவ்வளவு கடினமாக மக்கள் போக்குவரத்தைப் பாதித்திருக்கின்றது என்பதை உணர முடிகின்றது. தமிழகமும் மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இலங்கை பகுதிகளும் அன்றைய காலகட்டத்தில் ஒரே நாடு போலத்தான் இயங்கியிருக்கின்றது.

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கையின் மன்னாருக்குச் செல்லும் பாதையில் உள்ள ஆடம்ஸ் ப்ரிட்ஜ் பகுதி பற்றியும் இவர் குறிப்பிடுகின்றார். இந்த ஆடம்ஸ் ப்ரிட்ஞ் (ஆதாம் பாலம்) பகுதியிலிருந்து பயணித்தால் ஆதாமின் மலைக்குன்று என ஒரு பகுதி இருப்பதாகவும் சிங்களவர்களும் தாய்லாந்தின் சயாமியர்களும் இந்தப் பகுதியைப் பற்றி அறிந்திருந்தனர் என்றும் இவர் குறிப்பிடுகின்றார். இப்பகுதியில் கால் பாதம் பொறிக்கப்பட்ட ஒரு பகுதி இருப்பதாகவும், இது உலகில் தோன்றிய `முதல் மனிதனின் கால்பாதச் சுவடு` என அன்று அறியப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

இந்த சின்னத்திற்கு அருகிலேயே மிகப் பிரம்மாண்டமானதொரு கோயில் கட்டுமானம் இருந்தது என்றும், இங்கு தாய்லாந்தின் சயாமிய பிக்குகள் வந்து வழிபடுவார்கள் என்றும் அருகில் உள்ள மக்களும் வந்து வழிபடுவார்கள் என்றும்,

இங்கு வருவோர் தலையில் சிதறித் தெரிக்கும் நீர்த்துளிகள் மிகப் புனிதமானவை பாவங்களை தூய்மைப்படுத்தி மனிதனைப் புனிதமாக்குபவை என நம்புவதாகவும் இவர் குறிப்பிடுகின்றார். இந்த மலைக்கோயிலுக்குத் தனியாக யாரும் செல்வதில்லை; மக்கள் பொதுவாக பத்து, அல்லது பனிரெண்டு பேர் சேர்ந்து குழுவாக மெழுகுவர்த்திகளை ஏந்திக் கொண்டு செல்வார்கள் என இவர் குறிப்பிடுகின்றார். அப்படிச் சென்று திரும்பி வரும் பக்தர்கள் மூங்கில் குடுவைகளில் அந்த புனிதநீரைச் சேகரித்து எடுத்து வருவார்களாம். இப்பகுதியின் மன்னரும் ஆண்டுக்கு ஒரு முறை இத்தகைய புனித பயணம் செல்வாராம். பொதுவாக இப்படிக் கொண்டுவரப்படும் நீரை முழு பௌர்ணமி நாளில் இப்பகுதி மக்கள் புனிதமாக வைத்து இரவில் ஆடிப்பாடி அருந்தி மகிழ்ந்திருப்பார்களாம் (Philippus Baldeaus, 1703, p.650).

கிபி.1654ம் ஆண்டின் ஒரு ஆவணத்தில் ஒரு டச்சுக்காரரின் குறிப்பில் மார்ச் மாதம் அவர் ஆதாம் குன்றுக்குப் பயணம் செய்த போது கால் பாதம் பொறிக்கப்பட்ட பகுதியில் அதே அளவில் தங்கத்தாலான ஒரு பாதத்தகடு இருந்ததாகவும், அதில் 68 வடிவங்கள் அதன் மேல் பொறிக்கப்பட்டிருந்தன என்றும், ஆனால் சில ஆண்டுகளில், பாதிரியார் பால்டியுஸ் தான் அப்பகுதிக்கு வருவதற்கு முன்னரேயே அந்தத் தங்கத் தகடு காணாமல் போய்விட்டது என்ற ஒரு குறிப்பினையும் குறிப்பிடுகின்றார். இதனை `ஆதாமின் பாதம்` என தனது குறிப்பில் இவர் எழுதியிருக்கின்றார். (Philippus Baldeaus,1703,p. 650).

இவர் குறிப்பிடும் ஆதாம் குன்று இன்றைய இலங்கையின் Adams Peak பகுதியில் உள்ள புனித பாதம் (புத்தரின் புனித பாதம்) உள்ள கோயில் பகுதியே.

## மதிப்பீடு

கடந்த ஐநூறு ஆண்டுகளுக்கிடையிலான ஐரோப்பியர்களின் தமிழகம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் துறைமுகப் பகுதிகளில் நடைபெற்ற வணிகம் மற்றும் அரசுகளின் செயல்பாடுகளை விவரிக்கின்ற ஆவணங்கள் தமிழக வரலாற்றில் விடுபட்ட பகுதிகளை அறிந்து கொள்ள மிக முக்கியத் தரவுகளாக அமைகின்றன. இதுகாறும் நமக்குக் கிடைத்திருக்கின்ற கி.பி.16ம் நூற்றாண்டுக்குப் பின்னான தமிழ் நூல்களைவிட ஐரோப்பியர்களின் ஆவணங்கள் அக்காலத்தைய தமிழக வரலாற்றுச் செய்திகளை துல்லியமாக அறிந்துகொள்ள உதவும் முதன்மை நிலை ஆதாரங்களாக அமைகின்றன. இதற்குக் காரணம் தமிழில் நமக்குக் கிடைக்கின்ற இக்காலகட்டத்தின் நூல்கள் பெரும்பாலும் தலபுராண வகைகளாகவும், இலக்கிய வகைகளாகவும், சமயம் சார்ந்தவையாகவும் இருப்பதே ஆகும். அதற்கு மாறாக ஐரோப்பியர்களின் தமிழகம் பற்றிய ஆவணங்கள் நாட்குறிப்புக்களாகவும், நடந்த நிகழ்வுகளின் பதிவுகளாகவும், வணிக ஆவணங்களாகவும் அமைந்திருக்கின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இன்று நமக்குக் கிடைக்கின்ற இத்தாலிய, பிரெஞ்சு, ஆங்கிலேய, டேனிஷ், ஜெர்மானிய ஆவணங்கள், தமிழகம் பற்றிய பல்வேறு சமூகவியல் பார்வையில் அமைந்த வரலாற்றுச் செய்திகளை வழங்குகின்றன. கூடுதலாக நிலவரைப்பட செய்திகள் அக்காலத்தைய தமிழகத்தின் தோற்றக் காட்சியையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டும் முதன்மை நிலை ஆவணங்களாக வரலாற்று ஆதாரங்களாக அமைந்திருக்கின்றன.

தமிழக வரலாறு பற்றி ஆய்வு செய்கின்ற பலர் ஐரோப்பியர்களது ஆவணக் குறிப்புகளை ஒதுக்கிவிட்டு செய்கின்ற ஆய்வுகள் கி.பி.16ம் நூற்றாண்டுக்குப் பின்னான தமிழக வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ள உதவாது என்பதை ஆய்வாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். உலகளாவிய பல அயலக நூலகங்களும் ஆவண பாதுகாப்பகங்களும் உருவாக்கியுள்ள இணையவழி ஆவணத் தொகுப்புகளும் (Internet Archive) மற்றும் நூலகம் ஆகியவற்றின் வசதிகளைக் கொண்டு ஆய்வாளர்கள் ஏராளமான முதன்மைநிலை

சான்றுகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் இன்று அதிகரித்திருக்கின்றன.

## முடிவுரை

தூத்துக்குடி மாவட்டத்தில் கி.பி.19ம் நூற்றாண்டில் இறுதியில் நிகழ்த்தப்பட்ட ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுகள் தொடங்கி அண்மைய அகழாய்வுகள் வரை இப்பகுதியில் பல்வேறு இனக்குழு மக்கள் வந்து புழங்கிச் சென்றதற்கான நீண்ட கால தொல் பழங்காலச் சான்றுகளைக் காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியினைப் பாதிரியார் பால்டியூஸின் குறிப்புக்களின் வழி கி.பி 17ம் நூற்றாண்டிலும் காண்கின்றோம். இதன் அடிப்படையில் நோக்கும் போது, தமிழகத்தின் வரலாற்றில் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுகின்ற மிக முக்கிய நகரங்களில் தூத்துக்குடி சிறப்பிடம் பெறுகின்றது. இங்கு இதுகாறும் நிகழ்த்தப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளும் சரி, சமூகப் பண்பாட்டு அடிப்படையில் அமைந்த ஆய்வுகளும் சரி, மிகச் சிறிய அளவிலேயே நிகழ்த்தப்பட்டுள்ளன என்றே கருதக் கூடியதாக அமைகின்றது. மிக நீண்ட கால மனிதப் போக்குவரத்து நிலைபெற்றிருந்த இப்பகுதியில் விரிவான அகழாய்வுப் பணிகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மிக மிகக் குறைவாகவே ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன என்பதும், அது நிவர்த்தி செய்யப்பட்டு ஆய்வுகள் விரிவாக நிகழ்த்தப்பட வேண்டியது அவசியம் என்பதும் வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது.

மிக விரிவான அகழாய்வுப் பணிகளும் மக்கள் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்தும் சமூக மானுடவியல் கண்ணோட்டத்திலான ஆய்வுகளும் அறிவியல்பூர்வமான கருதுகோள்களின் அடிப்படையில் இப்பகுதியில் நிகழ்த்தப்பட வேண்டிய தேவை இருக்கின்றது. இதனைத் தமிழகக் கல்வி ஆய்வு நிறுவனங்களும், தமிழக அரசின் கீழ் இயங்கும் தொல்லியல் துறையும் கவனத்தில் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

கி.பி.16ம் நூற்றாண்டில் டச்சு கிழக்கிந்திய வணிக நிறுவனத்தில் டச்சு அரசின் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு ஆசிய நாடுகளில், குறிப்பாக இலங்கையிலும் தமிழகத்தின் சோழமண்டல கடற்கரை பகுதிகளிலும் பணியாற்ற வந்த பாதிரியார் பிலிப்புஸ் பால்டியுஸ் அவர்களது ஆவணக் குறிப்புகளும் நில வரைப்படங்களும் அக்காலத்து தமிழக வரலாற்றின் சில பகுதிகளைப் படம் பிடித்துக் காட்டும் முக்கியத் தரவுகளாக அமைகின்றன. இவரது நூல் தருகின்ற குறிப்புக்கள் மட்டுமன்றி இது போன்ற ஐரோப்பிய அறிஞர்களது ஆவணக்குறிப்புக்களை ஆராய்வதும் அதனை மீள்வாசிப்பு செய்வதும் அவற்றைத் தமிழுக்கு மொழி பெயர்த்து அளிப்பதும் ஆய்வுலகத் தேவையாக அமைகிறது. இத்தகைய பணிகள் தமிழக வரலாற்றை அறிந்து கொள்ள மிக உதவும் என்பதனால் இப்பணிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்து கின்றது.

## References


Alexander Rea. (1897). *Monumental remains of the Dutch East India Company in the Presidency of Madras*

Galletti. A (1911). *I.C.S, The Rev. A.J. Van der Burg and the Rev. P. Groot Selection form the Records of the Madras Government, Dutch Record No. 13, The Dutch in Malabar.*

Israel, Jonathan I. (1995). The *Dutch Republic: Its Rise, Greatness, and fall 1477-1806*. New York: Oxford University Press.

Luba Zubkova. (2004). *Dravidian Studies in the Netherlands Part I (1605-1690),* pioneers of orientalism at the VOC.

Meilink-Roelofsz, MAP. (1962). *Asian trade and European influence in the Indonesian Archipelago between 1500 and about 1630*. Nijhoff, 's-Gravenhage.

Meilink-Roelofsz, MAP. (1988). 'A comparative study of the administration and trade of the Dutch and English trading companies in Asia during the first half of the seventheenth century', in Meilink-Roelofsz, MAP, Opstall, ME van, Schutte & GJ (eds*), Dutch authors on Asian history: a selection of Dutch historiography on the Verenigde Oostindische Compagnie*, Foris, Dordrecht.

Narasaiya. (2005). Kadalvazhi Vaanikam. Chennai: Pazhaniyappa Brothers.

Philip Baldaeus. (1703). *A True and Exact Description of the Most Celebrated East-India Coasts of Malabar and Coromandal, As Also of the isle of Ceylon, London* (original in Ducth 1672, English translation Printed in London 1703)

Poongunran, R. (2010). "Kadalvazhikalum Poorgalum". Naavai Kadarsar Varalatraivugal. Thanjavur: Tamil University.

Robert Parthesius. (2010), Dutch *ships in Tropical Waters, The Development of the Dutch East India Company (VOC) Shipping Network in Asia 1595-1660*

Selvakumar, V. (2010). Ilakiyathil Musiri,Tholliyal Paddinam. Naavai Kadarsar Varalatraivugal. Thanjavur: Tamil University.

Selvaraj, S. (2010). "Tamilaga Kadarkarai Thuraimuga Pattinangalum Akalaivugalum". Naavai Kadarsar Varalatraivugal. Thanjavur: Tamil University.

Subashini, K. (2019). German Tamiliyal. Kalasuvadu Pathipakam.

Warmington, E.H. (M.A). (1928). *The Commerce between the Roman Empire and India*. Cambridge university press.

https://www.zebregsroell.com/philippus-baldaeus-malabar-coromand

http://www.mysrilankaholidays.com/adams-peak-history.html

## பின்னினைப்புகள்

### பின்னினைப்பு 1




**'Tutecoryn India, Philippus Baldaeus 1672**
(பாதிரியார் பிலிப்புஸ் பால்டியுஸ் தயாரித்த தூத்துக்குடி நில வரைப்படம் 1672)

### பின்னினைப்பு 2



A Short Orthography of the MALABAR LANGUAGE.

The Malabars Commonly write upon the Leaves of Palmtrees with Iron Pencels, Their Letters are diſtinguiſhed thus (1) ſome are accounted ſhort (2) others long (3) ſome are Vowells which they call Letters of life, becauſe they give life to the Conſonants.(4) ſome Conſonants which they call bodily letters, becauſe the vowels are their ſound and life. (5) others they call Mixed letters, the ſame with our Dipthong, compoſed of two Vowels, (6) ſome are called Initiall letters, uſed in the beginning of a word (7) ſome only in the middle, (8) and ſome in the end of a word.

The following are the Vowels

Conſonants united with the Vowels, make a Syllable sho[...]

பிலிப்புஸ் பால்டியூஸ் தயாரிப்பில் தமிழ் இலக்கணம்

# 2000-2009 - ஆம் ஆண்டுகளில் வெளிவந்த மலேசிய சிங்கப்பூர் சிறுகதைகளில் கையாளப்பட்ட பின்னோக்கு, நனவோடை, கடித உத்திகள்: ஒரு பார்வை.

# The writing techniques employed in selected short stories in Malaysia and Singapore from years 2000 to 2009: A Review

வீரமோகன் வீரபுத்திரன் / Veeramohan Veeraputhran[1]
மணிமங்கை மணி / Manimangai Mani[2]

*Abstract*

Short stories in Tamil language have become an essential component of Tamil literature lately. The novels produced between the years 2000 and 2009 by writers from Malaysia and Singapore reflect different writing styles. These writers seemed to have varied in their approachesto narrating their short stories compared to their older counterparts. Therefore, this study investigates the short stories produced within this ten-year time frame to identify and analyse these writers' different plot techniques in their short stories. The current work then shows how the different styles like a flashback, a stream of consciousness, and letter techniques were employed by these writers to present their stories most effectively and interestingly. Finally, this study highlights the importance of utilising these writing techniques, which would be useful for future generations' writers as the techniques would enable them to produce higher quality literary works.

Date of submission: 2020-10-31
Date of acceptance: 2020-11-15
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
Manimangai Mani
Email: manimangai@upm.edu.my

**Key Words:** short stories, techniques, flashback, stream of consciousness, modern literature

## முன்னுரை

"படைப்பாளன் தன் முத்திரையைப் பதிக்க, கருத்தை வெளிப்படுத்த ஏதுவாய் அமைவன உத்திகள். இவை படைப்பாளனின் ஆளுமைத்திறத்தின் தனித் துவங்களைச் சுட்டிக்காட்ட வல்லவை. பாடுபொருளுக்கு ஏற்ப வடிவம் மாறுபடுவது போல, படைப்பாளனின் திறனுக்கு ஏற்ப உத்திகளும் வேறுபடும். (சிவகுமரன், 2001, p.136). உத்தி என்பது ஒவ்வோர் எழுத்தாளரும் தான் சொல்ல நினைப்பதை, எவ்வாறு சுவைபடச் சொல்ல விரும்புகிறார் என்பதைக் குறிப்பதாகும். இதற்கு எழுத்தாளன் பல்வேறு நுணுக்கங்களைக் கையாளுகின்றான்.

"ஓர் இலக்கியப் படைப்பில் கூறப்படும் கருத்துகளை வாசகர்கள் தெளிவாகவும் ஆழ்ந்தும் உணர வேண்டுமெனில், அக்கருத்துகள் சுவைபடக் கூறப்பட்டிருக்க வேண்டும். எனவே, படைப்பாளி வாசகர்களைக் கவரவும், தான் சொல்லும் கருத்துகள் வாசகர்களை நன்முறையில் சென்றடையவும் உரிய உத்திகளைப் பயன்படுத்த வேண்டும். எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும், அப்படைப்பாளியின் படைப்பில் நல்ல உத்தி முறைகள் இல்லையென்றால் அப்படைப்பு சிறக்காது". (இராமலிங்கம், 1973, p.146).

[1] The author is a lecturer in Tamil Language Programme, University Putra Malaysia. veeramohan@upm.edu.my

[2] The author is a lecturer in English Language Programme, University Putra Malaysia. manimangai@upm.edu.my

எனவே, தான் எடுத்துக் கொண்ட கதையைத் தெளிவாகக் கூறும் பொருட்டுப் படைப்பாளி பயன்படுத்தும் முறைகளே 'உத்திகள்' என்று கூறப்படுகின்றன.

"ஒரு சில பக்கங்களில் முழுமையாக முடிவுறும் சிறுகதை சிறந்த வடிவத்தைப் பெற அப்படைப்பில் உத்திகள் செம்மையாகக் கையாளப்பட்டிருக்க வேண்டும். ஒரு படைப்பாளி உத்திகளைக் கைவரப் பெறவும் தம் படைப்பில் பயன்படுத்தவும் ஆர்வம் காட்ட வேண்டும். இவ்வுத்திமுறை ஆசிரியரின் அறிவு, அனுபவம், எடுத்துக் கொண்ட கதை போன்றவற்றால் ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடும்". (சபாபதி, 1995, p.306). எனவே, ஒரு சிறுகதை, முழு வடிவம் பெறுவதற்கு உத்தி என்னும் கூறு பெரும் பங்காற்றுகின்றது.

சுருங்கக் கூறின், வாசகரின் மனத்தைக் கவர்ந்து இழுக்கும் நோக்கிலும், அவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் நோக்கிலும் படைப்பாளி பலவகை உத்திகளைப் பயன்படுத்துகின்றார். இந்த உத்திகள் பின்னோக்கு உத்தி, நனவோடை உத்தி, கடித உத்தி, மொழிநடை உத்தி, கதைக்கூற்று உத்தி, கதைப்பின்னல் உத்தி, கனவு உத்தி, வருணனை உத்தி, உரையாடல் உத்தி எனப் பலவகைப்படும். கருத்தை வெளியிட வெளிப்படுத்த உதவும் உத்திக்கு வெளிப்பாட்டு உத்தி அல்லது புலப்பாட்டு உத்தி என்று பெயர்.

மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்பினில் பயன்படுத்தப்பட்டுள்ள 3 உத்திகளை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

I. பின்னோக்கு உத்தி

II. நனவோடை உத்தி

III. கடித உத்தி

### பின்னோக்கு உத்தி

கதை சொல்லும் போக்கில் நிகழ்ச்சிகளைக் காலவரிசை முறைப்படி கூறாமல் நடந்து முடிந்த கடந்தகால நிகழ்ச்சிகளைப் பின்னால் நோக்குகிற காட்சிகளாகப் படைத்துகாட்டுவது 'பின்னோக்கு' (flashback) உத்தியாகும். "நிகழ்கால நிகழ்ச்சிகளுக்கு இயைந்த கடந்த கால நிகழ்ச்சிகளைக் காட்டுவது இது". (டயட்ரிச், சுண்டெல், 1967, p.49). கதையின் போக்கில் சலிப்பு ஏற்படாமல், ஆர்வநிலையைத் தூண்டுவதற்கும், காரண காரிய அடிப்படையில் நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்ற தோற்றத்தைத் தருவதற்கும், இந்த உத்தி பயன்படுகின்றது.

கதைமாந்தரின் வாழ்வில் நடந்த பழைய நிகழ்ச்சியின் விளைவுதான் இப்போது நடக்கும் நிகழ்ச்சியென நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ளுவதற்குக் கடந்தகால பின்னணியைக் காட்டுவதும், மனம் பின்னோக்கிச் செல்கையில் கடந்தகால நிகழ்ச்சிகளைக் காட்டி, மீண்டும் நிகழ்காலத்திற்குக் கொண்டு வருவதற்கும் இப்பின்னோக்கு உத்தி பயன்படுகின்றது. "திரைப்படங்களில் காணப்படும் இவ்வுத்தி நாடகத்திலும் புதினத்திலும் கதையிலும் பயன்படுகிறது. (கட்டன், 1961, p.66).

சுருங்கக் கூறின், வாசகர்களுக்குக் கடந்த காலத்தைக் காட்டவும் அல்லது கதை நிகழும் காலத்திற்கு இறந்தகாலத்தைக் காணவும் இந்த உத்தி மிகவும் பயன்படுகின்றது. மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் படைப்பில் இவ்வுத்தி எவ்வாறு பயன்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரையில் காணலாம்

மலேசியச் சிறுகதையான, 'ஆதிலெட்சுமியின் கதைகள்' என்னும் சிறுகதைத்தொகுப்பில் வெளிவந்துள்ள 'தீர்ப்பின் மடியில்' என்னும் சிறுகதையில் பின்னோக்கு உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கதையில் தன் தங்கையின் கணவனைக் கொலை செய்துவிட்டு, நீதிமன்றத்தில் தீர்ப்புக்காக அண்ணன் குணசீலன் நின்று கொண்டிருக்கின்றான். அப்போது, கடந்தகால வாழ்க்கைச் சம்பவங்கள், பின்னோக்கு உத்தியைக் கொண்டு நினைத்துப் பார்க்கப்படுக்கின்றன.

எடுத்துக்காட்டாக,

> "குணசீலன்... நல்லதம்பி செவ்வந்தி தம்பதியருக்கு மூத்த புதல்வன். ஐந்து

> வருடம் கழித்து இன்னொரு குழந்தை இவனுக்குத் தங்கையாய் பிறந்தாள். குணசீலன் தன் அப்பாவை விட கூடுதல் கருப்பாய் பிறந்து விட்டான்.”

என்று நினைத்துப் பார்க்கப்படுகிறது. இக்கதையின் முன்னுரை மற்றும் முடிவுரையைத் தவிர பிற பகுதிகள் யாவற்றையும் பின்னோக்கு உத்தியைக் கொண்டே ஆசிரியர் நகர்த்திச் செல்கிறார்.

இதே போன்று சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்களும் தங்கள் கதையில் பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். சிங்கை தமிழ்ச்செல்வனின் ‘எதிர்பாராதது’ என்னும் சிறுகதையில் கதாசிரியர் பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.

> “...அவர்களின் அந்தச் செல்வ மகன் அவனுக்கு மகனாகவே மட்டும் இருந்தான். ஆனால், அவளுக்கோ அவன் ஆசானாக, சகோதரனாக நண்பனாக, மகனாக என்று பல அவதாரங்கள் அல்லவா எடுத்திருந்தான்.”

என்று சவப் பெட்டிக்குள் கிடக்கும் தன் மகனை எண்ணி அழுது கொண்டிருக்கும் அவரின் மன உணர்வுகளும், சதீஷின் தற்கொலையின் காரணங்களும் பின்னோக்கு உத்தியைக்கொண்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

அடுத்ததாக, பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தி வெளிவந்திருக்கும் மற்றுமொரு மலேசியச் சிறுகதை ‘நிழலாடும் நிஜங்கள்’ என்னும் சிறுகதையாகும். இக்கதையைக் கதாசிரியர் கதாநாயகியின் வாயிலாக நகர்த்திச் செல்கிறார்.

> ‘நீ என்ன கஷ்டப்பட்டா சம்பாரிச்ச, படுத்துதான சம்பாரிச்ச’

என்று கதாநாயகியின் அக்காவின் கூற்றைத் தொடர்ந்து, கதாநாயகி தங்களின் வாழ்க்கை வரலாற்றையும் போராட்டத்தையும் நினைத்துப் பார்க்கிறாள்.

> ‘நான் பிறந்தவுடன் அம்மா இறந்து விட்டாளாம், அதனால் என் அப்பா என்னைப் பார்க்கப் பிடிக்காமல் யாரோ ஒருத்தியுடன் போய்விட்டாராம்...’

என்று தொடங்கிக் கதாநாயகி ஏன் விபச்சாரத் தொழிலுக்கு வந்தாள் என்பதைப் பின்னோக்கு உத்தியைக்கொண்டு சிறப்பாகக் கதாசிரியர் விளக்கிச் செல்கிறார். தொடர்ந்து, சிங்கப்பூரின் ஜெயந்தி சங்கரின் ‘ஃபீனிகிஸ்’ என்னும் கதையில் கதாசிரியர் பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தியுள்ளார். ஜமுனா என்ற பெண் தன் வாழ்வில் அவள் கடந்து வந்த வாழ்க்கைப் பயணத்தை நினைத்தவாறே ஒரு தீவில் அமர்ந்து யோசிக்கிறாள். சிறுவயது முதல் ஒவ்வாமை என்னும் நோயால் பாதிப்புற்று, அதனால் தான் அனுபவித்த இன்னல்கள் என்று தொடங்கித் தற்பொழுது தன் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் பல பிரச்சினைகளை எண்ணியவாறு ஜமுனா யோசித்துக் கொண்டிருக்கிறாள்.

> ‘ஞ்.எனக்கு ஒவ்வாமை இருப்பதாய் நான் அறிந்தது என் ஒன்பதாவது வயதில். அதற்கு முன் இருந்த பெற்றோர் வைத்தியம் பார்த்ததாய் சொல்லிக் கேள்வி பட்டிருக்கிறேன்ஞ்..

என்ற தன் எண்ண அலைகளைப் பின்னோக்கிச் செலுத்திய வண்ணம் கதை நகர்வதாகக் கதாசிரியர் படைத்துள்ளார். மேற்கண்ட கதைகளின் வாயிலாக மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் பரவலாகப் பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தியுள்ளதைக் கண்டறிய முடிகிறது. சொன்னதைத் திரும்பத் திரும்பச் சொன்னாலும் படைப்பிலக்கியவாதிகள் எல்லாரும் ஒரே மாதிரியாகச் சொல்லுவதில்லை. எழுத்தாளர்கள் தமக்கென்று தனிப்பட்ட ஓர் அணுகுமுறையைப் பின்பற்றுகின்றனர். மலேசிய, சிங்கப்பூர், எழுத்தாளர்கள் தங்களின் படைப்புகளில் பின்னோக்கு உத்தியைக் கையாண்டு தம் கதைகளுக்கு மேலும் மெருகேற்றியுள்ளனர். மேலும், இருநாட்டவரும் பெரும்பாலான தம் படைப்புகளில் இந்த உத்திமுறையைப் பயன்படுத்தியுள்ளனர்.

சில சிறுகதைகளின் தொடக்கம், முன்னர் நடந்த நிகழ்ச்சிகளைக்கொண்டு

ஆரம்பமாவதுபோல் அமைகின்றன. இதுபோன்ற கதை அமைப்பில் சிறுகதைகளில் நிகழ்கால நிகழ்வுகளைக் கூறியபின், அந்த நிகழ்காலச் சம்பவங்கள் நடப்பதற்கான காரணங்களைக் கூறுவதற்காகப் பின்னோக்கு உத்தி பயன்படுத்தப்படுகிறது.

மேலே, கூறப்பட்ட ‘தீர்ப்பின் மடியில்’, ‘எதிர்பாராதது’, நிழலாடும் நிஜங்கள்’, ‘ஃபீனிக்ஸ்’ என்ற நான்கு கதைகளிலும், நிகழ்காலச் சம்பவங்கள் முதலில் கூறப்பட்டுள்ளன. பின்னர் அவை நடப்பதற்கான காரணங்கள் கூறப்பட்டுள்ளன. மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் அதிக அளவில் பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தியுள்ளது புலனாகிறது.

### ii) நனவோடை உத்தி

சிறுகதையில் கதை சொல்வதற்குப் பின்னோக்கு உத்தி பயன்படுவதுபோல ‘நினைவோட்டம்’ அல்லது ‘நனவோடை உத்தி’ (Stream of Consciousness) என்னும் உத்தியும் பயன்படுகிறது. நனவோடை உத்தி எனப்படுவது ஓர் எழுத்தாளன் மனம்போன போக்கில், பலவற்றைச் சிந்தித்து, பல செய்திகளை ஓர் எழுத்தாளன் மனம்போன போக்கில், பலவற்றைச் சிந்தித்து, பல செய்திகளைச் சூழலில் அமைத்து ஒரு சிறுகதையை எழுதிவிடுகிறான். இவ்வுத்தியைப் பயன்படுத்திப் படைக்கப்படும் சிறுகதை எளிதில் வாசகனுக்குப் புரியாது. சாதாரண வாசகனால் விளங்கிக் கொள்ளவும் முடியாது. ஒருசில வாசகர்களால் மட்டுமே கதையை உள்வாங்கி, அதற்கு ஒரு வடிவம் கொடுக்க முடியும்.

நனவோடை உத்தி பயன்படுத்தப்பட்டுள்ள கதைகளில் கதாமாந்தர்களின் மனம் பற்றிய பல்வேறு உண்மைகளை அறிந்து கொள்ளலாம். கதைமாந்தர்களின் நிறை குறைகளை இம்முறையில் இனம்காண முடிகிறது. கதைமாந்தர்களின் உண்மைத் தன்மையை ஒப்பீடு செய்து அறிந்து கொள்ளவும் இவ்வுத்தி உதவுகிறது. இங்ஙனம் சிறுகதைகளில் நனவோடை உத்தி என்பது புதுமைக்கு உரியதாகச் சிறப்புப் பெறுகிறது.

இக்காலத்தில் மலேசியா, சிங்கப்பூரில் வெளிவந்த சிறுகதைகளில் இதுவரை மலேசியாவில் ஒரு கதை கூட நனவோடை உத்தியைப் பயன்படுத்தி எழுத்தாளர்கள் எழுதவில்லை. அக்காலத்திற்கு முன் “மலேசிய எழுத்தாளர்களான சீ.முத்துசாமி மட்டுமே நனவோடை உத்தியைப் பயன்படுத்திச் சிறுகதைகளை எழுதியுள்ளார். பெரும்பாலான எழுத்தாளர்கள் நனவோடை உத்தியைப் பயன்படுத்தாதற்கு அவர்களுக்கு அவ்வுத்தியைப் பற்றிய புரிதலும் அறிதலும் இல்லாததே காரணம்” என மலாயாப் பலகலைக்கழகப் பேராசிரியர் வே.சபாபதி பேட்டியின்வழி அறியலாம்.

ஆய்வுக்குப்பட்ட காலத்தில் சிங்கப்பூர் எழுத்தாளர் இந்திரஜிட் ‘வீட்டுக்கு வந்தார்’ என்ற சிறுகதைத் தொகுப்பை நனவோடை உத்தியில் அமைத்துள்ளார். இந்திரஜித் நனவோடை உத்தியை நன்கு பயன்படுத்தியிருக்கிறார்; அதேபோலக் கதை சொல்லும் உத்தியையும் சிறப்பாகப் பயன்படுத்தியிருக்கிறார். இந்திரஜித்தின் படைப்புகள் புதிய பரிமாணத்தைச் சிங்கப்பூரில் அறிமுகப்படுத்துகின்றன எனலாம். இவரது மொழிநடை இவரின் மற்றொரு முகத்தைக் காட்டுகிறது எனலாம். அதே நேரம் ஒருவகையான தத்துவார்த்த பார்வையையும் நம்மால் அந்த முகத்தில் ஊடுருவிப் பார்க்கமுடிகிறது என தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதே இதற்குச் சான்றாகும். (சீதாலட்சுமி, 2001, p.194)

சிங்கப்பூர்த் தமிழ்ச்சிறுகதைகள் என்னும் நூலில் 17 சிங்கப்பூர் எழுத்தாளர்களின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1992இல் அச்சிடப்பட்டுள்ளது. இந்நூலை நா.கோவிந்தசாமியும் இளங்கோவனும் தொகுத்துள்ளனர். இதில் இளங்கோவன் இயற்றிய ‘புகை ஏணி’(1981) என்ற சிறுகதையும் நனவோடை உத்தியைப் பயன்படுத்தி எழுதிய எழுத்தாளர்கள் உண்டு. நனவோடை உத்தியைப் பயன்படுத்தித் தமிழில் சிறுகதை படைத்தோரில் தமிழக எழுத்தாளர்களான மௌனி, லா.ச.ராமாமிர்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### iii. கடித உத்தி

சிறுகதையில் குறைவாகக் காணப்படும் ஓர் உத்திமுறை கடித உத்தி ஆகும். நாகரீகம் வளர்ந்துவிட்ட நவீனயுகத்தில், கடிதத்தின்மூலம் மக்கள் தொடர்புகொள்வது அரிதாகிவிட்டது. தகவல் தொழில்நுட்பம் இன்றைய மக்களின் உடனடித் தேவையைத் தீர்க்கும் ஊடகமாக உள்ளது. சங்க காலத்தில் தகவலைப் புறாவழி அனுப்பிவைப்பது வழக்கம். இன்றைய நவீனகாலத்தில் இணையம்வழித் தகவல் அனுப்புவது வழக்கமாகிவிட்டது. தகவல் தொழில்நுட்பம் நம்மை ஆட்கொண்டாலும் கையெழுத்துப் படிவங்களுக்கு இன்றளவும் மதிப்பிருக்கிறது. எடுத்துக்காட்டுக்கு, மாவீரர் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் மகாத்மா காந்திக்குத் தம் கைப்பட எழுதிய கடிதங்கள் இன்றளவும் பெரும் மதிப்புடையவையாகக் கருதப்படுகின்றன.

மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்களில் சிலர் சிறுகதைகளில் கடித உத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். பூச்சோங் எம்.சேகரின், 'பேசு மனமே' என்னும் கதை, கடித உத்தியில் அமைந்துள்ளது. இக்கதையில் இரு காதலர்களின் மன உணர்வுகள் இரண்டு வெவ்வேறான கடிதங்களின்வழி நகர்கின்றன.

> 'காதலில் காத்திருப்பது ஒரு சுகம். காதலுக்காக ஏங்கித் தவிப்பதில் ஒரு சுகம். உன் மௌனம் என் காதலுக்கு வலு சேர்க்கிறது'.

என்று ஆணின் கடிதம் தொடங்குகிறது. அதேவேளையில் பெண்ணின் கடிதம் கீழ்க்கண்டவாறு முடிவடைகிறது,

> 'ஆனால் ஒன்று மட்டும் உண்மை. என் மனம் இன்னும் காதலுக்குத் தயாராகவில்லை. அன்புடன், கவிதை'.

உயிரோடு இருப்பவர்களுக்குக் கடிதம் வாயிலாகத் தொடர்புகொள்வது இயல்பான ஒரு முறையாகும். ஆனால் இறைவனடி சேர்ந்த தன் தாய்க்கு, மகன் கடிதம் எழுதுவது போன்ற பாணியில் 'கடிதம்' என்னும் கதையை எழுதியுள்ளார்.

> 'அன்புள்ள அம்மாவுக்கு, நேற்று நீ இறந்த செய்தி கிடைத்தது. ஆபத்தாக இருப்பதாக முதல் செய்தி வந்ததுஞ்.'

என்று தொடங்கும் இச்சிறுகதையில், தன் உள்ளத்து உணர்வுகளை இறந்த தன் தாயிடம் வெளியிடுவது போன்ற முறையில் கதையை ஆசிரியர் எழுதியுள்ளார். நேற்று இறந்த தாய்க்குக் கடிதம் எழுதும் மகனின் உணர்வுகளையும், அவன் தன் தாய்க்குச் சொல்ல நினைத்த செய்திகளையும் மிக அழகாகக் கதாசிரியர் வெளியிட்டிருக்கிறார்.

சிங்கப்பூர் எழுத்தாளர் இரா.துரைமாணிக்கத்தின் 'எல்லைக்கோடு' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் 'கடவுளின் குழந்தைகள்' என்னும் சிறுகதையைக் கதாசிரியர் கடித உத்தியைக் கொண்டு அமைத்துள்ளார். தனது சிறுவயது நண்பன் அருணகிரிக்கு, பல வருடங்கள் கழித்து நம்பி என்பவர் கடிதம் எழுதுகிறார். 'அன்புள்ள நண்பன் அருணகிரிக்கு, உன்னை என்றும் மறவாத நண்பன் வரையும் மடல்' என்று தொடங்கி,

> '... ஏனெனில் என் போன்ற அனாதைகள் எல்லாம் ஆண்டவனுடைய பிள்ளைகள். அதனால் அந்த ஆண்டவந்தான் அழ வேண்டும்.

இப்படிக்கு,

உயிருள்ள வரை உன்னை மறக்காத நண்பன் நம்பி'.

என்று முடிவுறும் இக்கடிதத்தின்மூலம் கதாசிரியர் கதாநாயகனின் சிறுவயது வாழ்க்கைச் சம்பவங்களையும், எதிர்நோக்கிய சவால்களையும், வாலிப வயதில் எதிர்கொண்ட கரடுமுரடான வாழ்க்கைப் பயணங்களையும் இன்ன பிறவற்றையும் கூறியிருக்கிறார். சிறுகதையை முழுமையாகக் கடிதத்தின்மூலம் நகர்த்துவது ஒருவகை உத்தியாகும். இயல்பான சிறுகதை அமைப்பில், சிறுகதையின் தொடக்கத்திலோ, இடையிலோ, இறுதியிலோ கடித உத்தியைப் பயன்படுத்தி, அச்சிறுகதைக்குத் தனித்தன்மையைக் கொடுப்பதும் ஒருவகைக் கடித உத்தியாக விளங்குகிறது. இதுபோன்று கதை முழுவதுமே கடிதமாக இருக்கும் ஓர் உத்திமுறையையும் நாம் மலேசிய, சிங்கப்பூர்ச்

சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகளில் காணலாம்.

'கதைச்சோலை' என்னும் சிறுகதைத்தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் 'பெண்ணின் இலட்சியம்' என்னும் சிறுகதையின் முடிவில் கதாநாயகி ஜெயா தன் தாய்க்கு ஒரு கடிதத்தை எழுதி வைத்துத் தன் இலட்சியப்பாதையை நோக்கிச் செல்கிறாள்.

> 'என்னை பெற்று வளர்த்த அன்னைக்கு ராதா எழுதும் மடல். நான் எடுத்திருக்கும் முடிவு உங்களுக்கு நிச்சயம் அதிர்ச்சியைத் தரும்.'

என்று கடிதத்துடன் சிறுகதையை முடித்துள்ளார் இளம் எழுத்தாளர் ரெஹனா ஷெரின்.

ஆய்வுக்குட்பட்ட 10 ஆண்டுகளில், இரு நாடுகளிலும் குறைந்த எண்ணிக்கையிலே கடித உத்தியை எழுத்தாளர்கள் பயன்படுத்தி இருக்கின்றனர். இரு நாட்டிலும் உள்ள புதிய எழுத்தாளர்கள் மட்டுமே இந்த உத்தியைப் பயன்படுத்தி உள்ளனர். மலேசியாவின் மூத்த சிறுகதை எழுத்தாளர்களான ரெ.கார்த்திகேசு, சை.பீர்முகம்மது, மு.அன்புச்செல்வன் ஆகியோரும் சிங்கை எழுத்தாளர்களான மா.இளங்கண்ணன், ஜே.எம்.சாலி ஆகியோரும் இவ்வுத்தியைக் கையாளவில்லை.

### முடிவுரை

மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் அனைவரும் எல்லா உத்திகளையும் தங்களின் எல்லாப் படைப்புகளிலும் பயன்படுத்தவில்லை. தங்களின் சிறுகதைக்கு எந்த இடத்தில், எந்த உத்தியின் தேவை இருக்கின்றதோ, அந்தந்தப் பகுதியில் தேவைப்படும் உத்திகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

மலேசியச் சிறுகதை எழுத்தாளர்களால் அதிகமாகக் கையாளப்பட்ட உத்தி, பின்னோக்கு உத்தியாகும். பெரும்பாலான சிறுகதை எழுத்தாளர்கள் பின்னோக்கு உத்தியைப் பயன்படுத்தித் தங்கள் படைப்புகளுக்கு மேலும் மெருகேற்றியுள்ளனர். பின்னோக்கு உத்தி சிறுகதையின் தொடக்கத்தில், இடையில், முடிவில் பயன்படுத்தப்படுவதுண்டு. மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் பெரும்பாலும் சிறுகதையின் இடை இடையே இவ்வுத்தியை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

சிங்கப்பூர் எழுத்தாளரான இந்திரஜித் மட்டுமே நனவோடை உத்தியைக் கையாண்டுள்ளார். இதற்குக் காரணம், பல எழுத்தாளர்களுக்கு நனவோடை உத்தியைப் பற்றிய புரிதலும் அறிதலும் இல்லாததே ஆகும். இந்திரஜித்தின் 'வீட்டுக்கு வந்தார்' என்ற சிறுகதைத் தொகுப்பு நனவோடை உத்தியைக்கொண்டு எழுதப்பட்டுள்ளது.

மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்கள் தங்கள் படைப்பினை மேலும் சிறப்பாக வெளிக்காட்டுவதற்குக் 'கடித உத்தியைச்' சிறுகதையில் பயன்படுத்தியுள்ளனர். எழுத்தாளர்கள் இவ்வுத்தியைக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தியுள்ளனர். மலேசியாவில் 1259 சிறுகதைகளில் 17 கதைகளில் மட்டுமே இவ்வுத்தி கையாளப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் 534 சிறுகதைகளில் 13 கதைகளில் மட்டுமே கடித உத்தி கையாளப்பட்டுள்ளது. மலேசிய, சிங்கப்பூர்ச் சிறுகதைகளின் தொடக்கத்தில், இடையில், முடிவில் அல்லது கதை முழுவதும் கடிதத்தைக்கொண்டு கதைகள் அமையப்பெற்றுள்ளன. சிறுகதை தொடக்கத்தில், இடையில், முடிவில் கடித உத்தியைப் பயன்படுத்துவதைக்காட்டிலும், ஒருசிறுகதையையே கடித வடிவில் அமைப்பது ஒரு மாறுபட்ட உத்தியாகும். இப்படிக் கதை முழுவதையும் கடிதத்தில் நகர்த்தும் முறையை மலேசிய எழுத்தாளர்களான எம்.சேகர், கோ.புண்ணியவான், சிங்கப்பூர் எழுத்தாளர்களான துரைமாணிக்கம், யசோதா சுப்ரமணியம் ஆகியோர் கையாண்டுள்ளனர். சிங்கப்பூரில் பெரும்பாலும் புது எழுத்தாளர்கள் குறிப்பாக மாணவ எழுத்தாளர்களே இவ்வுத்தியைப் பயன்படுத்தியுள்ளனர்.

சுறுங்கக்கூறின், மலேசிய சிங்கப்பூர் சிறுகதை எழுத்தாளர்கள் பின்னோக்கு உத்தி, நனவோடை உத்தி, கடித உத்தி ஆகிய உத்திகளைப் பயன்படுத்தி இருநாட்டு சிறுகதை வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியுள்ளனர்.

## References

Ramaiah, Ma. (1978). *Malaysia Tamil Ilakkiya Varalaaru*. Chelam: Puratchi Pannai..

Kannabiran, Rama. (1977). *Singapuril Tamil Cirukathai.* Singapore: Singapore Palkalaikalaga Tamil Peravai.

Sababathy,Ve. (1995). Viduthalaikku Pinthiya Malaysia Tamil Novelkal. Kuala Lumpur: Uma Pathippagam.

Sivakumaran, A.,R.,A. (1997). Singapore Marabu Kavithaigal Oru Thiranaaivu. Bharathi Puthtagalayam.

Baskaran, Na. (1995). Malaysia Tamil Cirukathai. Chennai: Arasi Pathipagam.

# பெருந்தகை மு.வ.வின் இலக்கிய வளத்திற்கு ஒரு சான்று
# A Testament to the Literary Richness of Dr. Mu. Varatarācaṉār

டாக்டர் வே. விக்னேசு / Dr. V.Vignesh[1]

## *Abstract*

Dr. Mu. Varadarasanar's contributions to the development of Twentieth-century literature were numerous. He had excelled in multiple fields such as Literature, Novel, Drama, Correspondence, Literary research, Literary Criticism, Literary History, and Linguistics. He had a deep interest in *Sangam* literature, and his main objective was to simplify the *Sangam* literature. He firmly believed that simplicity was the key to make the *Sangam* literature reach the general public. He advocated the notion that in a perpetually existing world, the Sangam literature could only survive if the generations to come could understand it very well and form the perception of "*Sangam* literature is our literature". To achieve his aim, Dr. Mu. Varadarasanar even created short stories based on the Sangam literature, which he had already simplified, to appeal to the general masses. The purpose of this article is to demonstrate the lushness of Dr. Mu. Varadarasanar's research on '*Ovacceyti*', which describes the fifth song of *Akanāṉūṟu*, a book which is considered as one of the most literaryresearch books in the Tamil Literary world. This article explains how'*Ovachett*i'could testify to Dr. Mu. Varadarasanar's literary strength.

Date of submission: 2020-02-05
Date of acceptance: 2020-08-10
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
Dr. V.Vignesh
Email: vignesh@psgcas.ac.in

**Key Words:** Mu. Varadarasanar, sangam literature, mu.va., akananooru, ovacheithi, Literary Richness, literary criticism

### தோற்றுவாய்

தமிழிலக்கியப் பெற்றியை ஆராய்ந்து தமிழின் பெருமையை உயர்த்திய சான்றோருள் குறிக்கத்தக்கவர் பெருந்தகை மு.வ. அவர்களாவர். முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் இணைப்புப் பாலமாய் விளங்கியவரவர். இயற்கையின்பால் ஈடுபாடு கொண்ட அவர், சங்க இலக்கியத்தைப் பெரிதும் கற்றதோடன்றி, அதனைப் பல்லாற்றானும் ஆய்ந்து, இயன்றுழியெல்லாம் எளிமைபடுத்தித் தமிழ்மொழியின் பண்பாட்டு இலக்கியச் செழுமையை இளந்தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தினார். இங்ஙனம் மு.வ. அவர்கள் படைத்த இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் யாவற்றிலும் அவரின் இலக்கியவளம் இனிது புலனாகக் காணலாம். அன்றியும், சங்க இலக்கியப்பாடல்களை மு.வ. அவர்களைப் போல் இலக்கியவளத்தோடு இனிது புலப்படுத்தியவர் ஒருசிலரே எனல் துணிபு. இவ்வகையில், மு.வ. அவர்கள் அரிதின் முயன்று படைத்த இலக்கிய ஆராய்ச்சி நூல்களுள், அகநானூற்றின் ஐந்தாம் பாடலின் விளக்கமாக அமைந்த 'ஓவச்செய்தி' என்னும் ஆராய்ச்சிப் பெருநூல் ஒன்றுதானும் அவர்தம் இலக்கிய வளத்திற்குச் சான்று பகர்வதாயமைந்துள்ளது. இந்நூலின்கட் புலனாகும் அன்னாரின் இலக்கிய வளத்தினைச் சாற்றுதலே இக்கட்டுரை ஆராயக்கொண்ட ஆய்வுப்பொருளாம்.

[1] Assistant Professor of Tamil, PSG College of Arts and Science, Coimbatore - 641014, Tamilnadu, India. vignesh@psgcas.ac.in

### முன்னாய்வுகள்

பெருந்தகை மு.வ. அவர்கள் இம்மன்பதையினின்றும் மறைந்த பின்னர் அவர்தம் படைப்புக்களைப் பலரும் ஆய்வு செய்துள்ளனர். அவ்வகையில், பசையப்பன் கல்லூரித் தமிழ் முதுகலை மாணவர் மன்றம் மு.வ. அ.மு.ப. அவர்கள் குறித்தக் கருத்தரங்கு ஒன்றனை நடத்தி, 'பேராசிரியர் மு.வ. பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்கக் கட்டுரைகள்' என்னும் தலைப்பில் 1947 இல் நூலக வெளியிட்டனர். இந்நூல்தானும் மு.வ.வின் படைப்புக்களுள் சிலவற்றை மட்டும் ஆராய்கிறது. அன்றியும், டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களின் 'மு.வ.வின் இலக்கியங்கள்' (1975) என்னும் நூலும் இவ்வகையினதேயாம். இங்ஙனமே, பேராசிரியர் க.த. திருநாவுக்கரசு அவர்கள் படைத்த 'பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம்' (1984) என்னும் ஆய்வுப்பெருநூல் மு.வ. அவர்களின் படைப்புக்கள் முழுவதையும் ஒரோவழி ஆய்ந்து அறிமுகஞ்செய்கிறது. பேராசிரியர் சி. பாலசுப்பிரமனியன் இயற்றிய 'டாக்டர் மு.வ.வின் சிந்தனை வளம்' (1994) என்னும் பெயரிய நூல் மு.வ.வின் சிந்தனை வளத்தினைப் பல்லாற்றானும் ஆய்ந்துணர்த்துகிறது. இந்நூல்கள் யாவும் இக்கட்டுரை ஆராயக்கொண்ட ஆய்வுப்புலத்திற்கு முன்னாய்வுகளாய் அமைகின்றன.

### இலக்கிய ஆராய்ச்சி நூல்கள்

அ.சி. செட்டியார், க. வெள்ளை வாரணனார், குருதேவர் தெ.பொ.மீ. ஔவை. துரைசாமிப்பிள்ளை என்றின்ன புலமிக்க சான்றோர்கள் மரபிலக்கியக் களத்தில் வலம்வந்த காலத்தில் பண்டைத் தமிழிலக்கியத்திற்கும் புத்திலக்கியத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்கியவர் பெருந்தகை மு.வ. அவர்கள். சங்க இலக்கியத்தில் தோய்ந்த நெஞ்சங் கொண்ட அவர், சங்க இலக்கியத்தை எளிமைப்படுத்தினால் மட்டுமே அவை பொது மக்களிடம் சென்று சேரும்; பல்லாண்டுகள் இம்மன்பதையில் நின்று நிலவும்; சங்க இலக்கியம் என்றால் என்ன என்று அறியாதவரும் இல்லாத நிலை ஏற்பட்டு, 'சங்க இலக்கியம் எங்கள் இலக்கியம்' என்னும் நிலை உருவாகும் என்பதை மனதிற்கொண்டு மு.வ. அவர்கள் சங்க இலக்கியங்களை இயன்றுழியெல்லாம் எளிமைப்படுத்தி, அவற்றைத் தொடர்கதை வடிவிலும் சிறுகதை வடிவிலும் அவர் படைத்துள்ளார்.

அவையே, மணல்வீடு (1948), திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (1948), மாதவி (1950), ஓவச்செய்தி (1950), கண்ணகி (1950), முல்லைத்திணை (1952), நெடுந்தொகை விருந்து (1952), குறுந்தொகை விருந்து (1953), நற்றிணை விருந்து (1953), சங்க இலக்கியத்தில் இயற்கை (1954), நற்றிணைச்செல்வம் (1954), குறுந்தொகைச்செல்வம் (1955), நெடுந்தொகை செல்வம் (1955), நடைவண்டி (1955), கொங்குதேர் வாழ்க்கை (1955), புலவர் கண்ணீர் (1957), தமிழ்நெஞ்சம் (1957), இளங்கோ அடிகள் (1959), இலக்கியக் காட்சிகள் (1961), குறள் காட்டும் காதலர்கள் (1968) என்னும் பெயரிய நூல்களாம்.

இவற்றுள் விருந்து வரிசை நூல்களும் செல்வம் வரிசை நூல்களும் சங்க இலக்கியங்களான செவ்வியல் நூல்களை; நம் முன்னோர் நமக்கு விட்டுச்சென்ற இலக்கியக் கருவூலத்தை நயம்பட; எளிமையாக; சுவை மிளிர உரைக்கும் சொல்லோவியங்களாகும்.

### மு.வ.வின் இலக்கிய வளம்

மு.வ. அவர்கள் தாம் பிறந்த ஊரான 'வேலம்' என்னும் சிற்றூரைக் குறித்து 'எங்கள் ஊர் வேலம்' என்னும் தலைப்பில் படைத்த கட்டுரை 03.08.1969 இல் ஆனந்தவிகடனில் வெளிப்போந்தது. தம் சொந்த ஊர் குறித்து உவகை பெருக மு.வ. கூறுகின்றார்:

"ஆர்க்காட்டில் இருந்து ஐந்தாவது மைலில் சோளிங்கபுரம் போகும் சாலையில் அமைந்த கிராமம் அது. ஊரின் முகப்பிலேயே ஒரு நல்ல குளம் (ஊருணி) அமைந்து அழகான காட்சி தருகிறது. அதன் உயர்ந்த கரையின் மேட்டில் ஆலமரங்கள் பல சூழ்ந்து விளங்கும். குளத்திற்கும் ஊருக்கும் இடையே நீரற்ற ஓடையும் பெரிய ஆலமரமும் அரசமரமும் உள்ளன. அந்த மரங்களே

ஊர்ப் பெரியவர்களுக்கு அரசியல் அரங்கம்; இளைஞர்களுக்கு ஆடும் களம்; அரட்டை மன்றம். இவையெல்லாம் ஊருக்கு மேற்கே உள்ளன. கிழக்கே உள்ள சத்திரம் பலருக்கு ஒதுக்கிடம்; சிலருக்கு ஊர் வம்புக் கூடம். வடக்குப் பகுதியில் உள்ள தெருவில் எங்கள் வீட்டின் திண்ணை மேலிருந்து பார்த்தால் வேலத்து மலை ஒரு மைல் தொலைவில் தெரியும். இளமையில் அந்த மலையின் உச்சிப்பகுதி மட்டுமே தெரியும். மலைக்கும் எங்கள் தெருவுக்கும் இடையே அவ்வளவு மரங்கள் அடர்ந்திருந்தன. இப்பொழுது வீட்டிலிருந்து பார்த்தால் மலையின் முழு வடிவமும் தெரிகிறது. மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுப் போயின.

ஒரு பொருளின் உண்மையான மதிப்பு அல்லது ஒருவரின் உண்மையான சிறப்பு நெருங்கிப் பழகுகின்றவர்களுக்குத் தெரிவதில்லை" *(வரதராசனார், 1969, P.24).* தம்முடைய சொந்த ஊர் பற்றி எடுத்துரைத்த மு.வ., அவ்வூரின் இயற்கையில் தம்மைக் கரைத்துக் கொண்டமையை,

> "நான் விரும்பி குளித்து வந்த மற்றோர் இடம் ஊருக்கு வடக்கே மலையடிவாரத்தில் உள்ள பெரிய ஓடை என்னும் அருவியாகும். கலசல என்ற ஒலி ஒளியோடு வரும் அந்தக் குளிர்ந்த நீரில் குளித்துஇ பக்கத்தே ஓர் அத்திமரத்தின் கீழே உள்ள பாறை மேல் அமர்ந்து நல்ல நூல்களைப் படிப்பது வழக்கம். என் வாழ்வில் பலநாள் மனம் அமைதியில் மூழ்கிய இடம் அது. பாடல்களை வாய்விட்டுப் பாடி மகிழ்ந்த இடம் அது" *(வரதராசனார், 1969, P.24)*

என்பதனான் நமக்கறிவிக்கின்றார். இவ்வகையில் நோக்கின், அவரின் இலக்கிய நெஞ்சம் புலனாக; இலக்கிய மணம் இனிது கமழ இக்கட்டுரை திகழ்வதைக் காணவியலுகிறது.

### ஓவச்செய்தி

மு.வ.வின் நெஞ்சம் தூய தமிழ்நெஞ்சம்; சங்க இலக்கியங்களுள் ஆழ்ந்து தோய்ந்த; இயற்கையோடு இயைந்த இலக்கியநெஞ்சம். எனவேதான், 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் ஆய்வுப்புலத்தைத் தம் டாக்டர் பட்டத்திற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அவ்வகையில், சங்க இலக்கியம் பற்றிய மு.வ.வின் கருத்தும் ஈண்டு நோக்கத்தக்கதாம். அவர் கூறுமாறு:

> "சங்க நூல்களைக் கற்பவர். வாழ்க்கையின் உண்மைகளை மறவாமல் ஆராய்ந்து காண வேண்டும். வாழ்க்கையைப் பற்றிய தெளிவு பெறாத வரும் சங்க இலக்கியத்தைக் கற்று அந்தத் தெளிவு பெற முடியும். வாழ்க்கையால் இலக்கியக் கல்வியும், இலக்கியக் கல்வியால் வாழ்க்கையும் வளம் பெற முடியும் என்ற உண்மையை இங்குக் காணலாம். இது மட்டுமன்று. ஒரே வகையான தூய உயர்ந்த அமைப்பு, சங்க இலக்கியம் முழுவதும் ஊடுருவி நிற்பதால் ஒரு பாட்டைக் கற்பவருக்கு ஏதேனும் ஐயம் இருந்தால் மற்ற பாட்டுக்களின் கருத்துக்கள் முன் வந்து துணை செய்யும்; ஐயம் போக்கும்; உண்மை உணர்த்தும்"

என்னுமாற்றான் அழகுற விளக்குகின்றார்.

இங்ஙனமே, சங்க இலக்கியப் பாடல்களை இனிது துய்ப்பதற்குரிய வழிமுறைகளையும் மு.வ. அவர்கள்,

"பாட்டுக்கு உயிர் உணர்ச்சி; உடல் கற்பனை; உடை ஒலிநயம். குறுந்தொகைப் பாட்டுக்களில் உடை எளிதாக உள்ளது; உடல் அழகுற அமைந்துள்ளது. உயர் போற்றத்தக்கதாக உள்ளது. உயிரின் வாழ்வுக்காக உடலும், உடலின் காப்புக்காக உடையும் அமைந்த அமைப்பை இவற்றில் காணலாம். நுணுகி யுணரும் செவிப்புலன் வாய்ந்தவர்க்கே, இப்பாட்டுக்களில் உள்ள ஒலிநயம் புலனாகும். பிற்காலத்துப் பாட்டுப் போலவோ, கலித்தொகைப் பாட்டுப் போலவோ எளிதில் விருந்தாகும் இசைக் கவர்ச்சி இவற்றில் இல்லை. நுட்பமாக செவி உடையவராய். எளிமையான நயமே போதுமென அமைபவர்க்கே இங்கே விருந்து உண்டு. உடலாகிய கற்பனையும் அளவுபட்டு அமைந்துள்ளது. தசைநார்த் திரட்சியும்

பெருக்கமும் அமைந்து காண்போரை மருட்டும் உடல் வளர்ச்சி போன்ற கற்பனைகள் சில நூல்களில் உள்ளன. இவற்றில் உள்ள கற்பனை காந்தியடிகளின் தூய உடல் போன்றது. வலிமைமிக்க உடல் அன்று; நலம் நிறைந்த உடலாகும்; இடர்ப்பாடின்றி உணர்ச்சி விளங்குதற்கு ஏற்ற நோயற்ற உடலாகும். எளிய உடை சூழ்ந்து நோயற்று விளங்கும் இந்த அழகிய உடலில் அமைந்துள்ள உணர்ச்சி மாசற்றது; நெறியானது; போற்றத்தக்கது" (வரதராசனார், 2008, P. 14)

என்பதனான் தெள்ளித்தின் புலப்படுத்தியுள்ளார் என்பது ஈண்டுச் சுட்டத்தக்கதாம். அன்றியும், சங்க இலக்கியங்களை மக்களிடம் கொண்டுசேர்ப்பதற்கு ஒல்லும்வகையெல்லாம் முயன்ற மு.வ. அவர்கள், அங்ஙனம் கொண்டு சேர்த்தற்குரிய வழிகளையும் நமக்கறிவிக்கின்றார். அவர் அறிவிக்குமாறு:

> ''எவ்வளவு சிறப்புவாய்ந்த இலக்கியமாயினும் அதன் எதிர்காலம், கற்கும் மக்களைப் பொறுத்தே அமைகின்றது. ஒருபுறம், அதனை ஆழ்ந்து கற்று உணரும் புலவரும் வேண்டும். மற்றொருபுறம் அதன் கருத்தை உணர்ந்து போற்றிப் புகழும் பொதுமக்களும் வேண்டும். பொது மக்களின் உள்ளத்தில் இடம் பெறாமல், புலவர் நெஞ்சில் மட்டும் வாழும் வாழ்வு போதாது. பொதுமக்களின் புறக்கணிப்பு, இலக்கியத்தின் எதிர்கால வாழ்வுக்கு இடையூறாகும்.
>
> சங்க இலக்கியம் என்றால் என்ன என்று அறியாதவரும், அந்தத் தொடரைக் கேட்டறியாதவரும் பலர். இந்த நிலை தமிழகத்தில் இனியும் நீட்டித்தல் நன்றன்று. சங்க இலக்கியம் என்றால், எமது எமது என்ற பெருமிதத்துடன் எண்ணும் நெஞ்சமும், கூறும் நாவும் இனி மிகுதல் வேண்டும். ஷேக்ஸ்பியர் போன்ற புலவர்பெருமக்களின் நூல்களுக்கு அத்தகைய சிறப்பான வாழ்வு அமைந்திருத்தலை மேற்கு நாட்டவரிடையே காணலாம்" (வரதராசனார், 2008, P. 4).

என்பது அப்பகுதியாம்.

இத்தகு பேரறிஞர் படைத்த இலக்கிய ஆராய்ச்சி நூல்களுள் குறிக்கத்தகுந்தது 'ஓவச்செய்தி' என்னும் நூல். வேலத்து மலையின் இயற்கைச் சூழலில் தன் நெஞ்சைப்பறிகொடுத்த மு.வ. அவர்கள்,

> ''மலையின் அந்தப் பக்கத்தில் தாழை ஓடை என்ற ஓடை உண்டு. அங்கே உள்ள தாழை மரங்கள் அழகான காட்சியாக இருக்கும். சங்க இலக்கியங்களில் வரும் இயற்கைக் காட்சிகளையும் காந்தள் முதலான மலர்களின் அழகையும் உவமைச் சிறப்புக்களையும் பாராட்டுவதற்கு இந்த அனுபவம் எனக்குப் பயன்பட்டது" (வரதராசனார், 2008, P. 7)

எனக்கூறுவதனின்றும், இயற்கையையும் இலக்கியத்தையும் இணைத்து நோக்கிய அவரின் தூய இயற்கையுள்ளம் ஒருவாற்றான் புலனாகின்றதாம். இயற்கையோடியைந்த இச்சூழலில் தோன்றியதே 'ஓவச்செய்தி' என்னும் ஆராய்ச்சிப்பெரு நூலாம்.

## நூலெழுந்த சூழல்

நவில்தொறும் நயம் பயக்கும் அகநானூற்றுப் பாடல்களுள் 'அளிநிலை பெறாஅது' எனத்தொடங்கும் ஐந்தாம் பாடலை ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட மு.வ., 28 அடிகளில் அமைந்த அப்பாடலுக்கு 184 பக்கங்களில் எளிய நடையில்; பல்லார்க்கும் பயன்படும் வகையில் விளக்கங்களை வழங்கியுள்ளார். "முன்னங் காட்டி முகத்தின் உரையா ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து" என்னும் அடிகளுள் அமைந்துள்ள 'ஓவச்செய்தி' என்னுந் தொடரையே இந்நூற் பெயராக்கியுள்ளார்.

> "ஒரு பாட்டு; அதைக் குறித்துப் பல நாள் போராட்டம்; இரண்டு நாள் இரவும் பகலும் ஏக்கம்; மூன்றாம் நாள் மாலையில் வேலத்து மலையை அடுத்த அழகிய ஓடையில் உலவும் போது எதிர்பாராத விளக்கம்; உள்ளத்தின் தெளிவால் திறந்த பேருவகை. இவையே இந்நூலாக உருப்பெற்றன" (வரதராசனார், 2008, P. 14)

என்பதனான் இந்நூலெழுந்த சூழலை நமக்கறிவிக்கின்றார் மு.வ. அன்றியும், இயற்கையையும் இலக்கியத்தையும் இணைத்து நோக்கிய அவர்தம் இலக்கிய நெஞ்சமும் இப்பகுதியான் புலனாகின்றதாம்.

## நூலமைப்பு

'ஒவச்செய்தி' எனுந் தலைப்பு அணியப்பெற்ற இந்நூல்,

1. பாட்டும் பொருளும்
2. இலக்கியமும் வாழ்க்கையும்
3. புது விளக்கம்
4. ஓவச்செய்தி

என்னும் நான்கு பகுதிகளை உடையதாம்.

வண்மையின் காரணமாக வறுமையுற்ற குடும்பத்தலைவன் வடபுலம் சென்று பொருள்தேடிக்கொணரத்துணிந்து பயணத்தைக் குறிப்பாக மனைவிக்குத் தெரிவித்த அவன்இ பயணத்திற்குரிய ஏற்பாடுகளனைத்தையும் செய்துவிட்டு, மனைவியிடம் விடை பெறுதற்கு மனைவியை அழைக்க, அவளோ வாய் திறந்து பேசாமல் ஓவியம் போல் ஒரு செய்தியைக் குறிப்பாக உணர்த்த, மனைவியையும் கைக்குழந்தையையும் விட்டுப் பிரிய முடியாமல் கலங்கிய அவன், பிரிந்து செல்லும் முயற்சியைக் கைவிட்டான் இதுவே அப்பாடலுணர்த்தும் கருத்து.

## பாட்டும் பொருளும்

'பாட்டும் பொருளும்' என்னும் முதலியற்கண், மேற்குறித்த இப்பாட்டு, நாளுக்கு நாள் அவருள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கலைச்செல்வமாக விளங்கி வந்ததையும் அதனை ஆராயும் ஆராய்ச்சியில் அவர் மனம் ஈடுபட்டமையையும் உணர்த்தும் மு.வ. அப்பாட்டிற்கு அமைந்த பழைய குறிப்புரையின் நயத்தினை விளக்கி, அகநானூற்றிற்கு அவ்வுரையே முதல் மணிவிளக்கமாக இருந்து உதவியது என்றுரைத்து, இப்பாடலைப் பாடிய புலவர், பாலை பாடிய பெருங்கடுங்கோ இப்பாடலைப் பாடிய வரலாறு, இப்பாட்டிற்கு அமைந்த குறிப்புரையின்படி அமைந்த பொருள்மயக்கம் அதுகுறித்து எழுந்த வாதங்கள் என இவற்றைச் சுட்டுகின்றார்.

தலைவன் தன் பயணத்தை இறுதிவரையில் தலைவிக்கு நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ அறிவித்தான் அல்லன். பயணத்திற்குப் புறப்படும்போதுதான் அவளிடம் சொல்லி விடை பெற அழைத்தான். ஆயின், தான் தெரிவிக்க வந்ததை அறிவிக்கும் முன்னரே அவள் உணர்ச்சி வயப்படுகின்றாள். அவள் முகக்குறிப்பைக் கண்ட தலைவன் "நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே, இவ்வாறு பயணத்தைத் தடுக்க நினைக்கிறாளோ" (கண்ணியது உணரா அளவை நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே அடி 6,7:குறிப்புரை) என எண்ணினான் என்று இப்பாட்டிற்கு அமைந்த குறிப்புரை நவிலும் இச்செய்தி பொருந்தாது என்றுணர்ந்த மு.வ. இதற்கு ஏழு வாதங்களை முன்வைத்து ஒன்றுஇ பாட்டில் குறைகாண வேண்டும் அல்லது பாட்டிற்கு வேறு பொருள் காணவேண்டும் என்பதனான் இவ்வியலை நிறைவு செய்கின்றார்.

## இலக்கியமும் வாழ்க்கையும்

'இலக்கியமும் வாழ்க்கையும்' என்னும் இரண்டாம் இயலகத்து, பாட்டை உணரும் முறையை நன்கு தெளிவித்து, 'பாடிய புலவரின் உணர்வைப் படிப்பவரும் பெறுதலே பாட்டை உணர்தலாகும்' என்று அறிவிக்கின்றார் மு.வ. அன்றியும், 'கற்பனைச் சிறகு கொண்டு இந்த வாழ்வை விட்டு, பாட்டு எழுந்த காலத்தில் அந்நாட்டு மக்கள் வாழ்ந்த வாழ்க்கைக்குப் பறந்து செல்ல வேண்டும் என்றுரைக்கின்றார். எனவே, பழங்கால வாழ்க்கை நிலையை ஆராய்ந்து உணர்ந்திடில் சங்கப் பாட்டுகள் உண்மைக் கற்பனை அமைந்தவை என்பது எளிதில் விளங்கும் என்பது இவ்வியலின் முடிபாக விளங்குகிறது.

## புது விளக்கம்

'புது விளக்கம்' என்னும் பெயரிய மூன்றாம் இயலில், பழங்கால வாழ்க்கையை உணர்ந்து இப்பாட்டு என்ன கூறுகிறது என்று காணத் தலைப்படும் மு.வ., அவன் நெஞ்சம்,

அவள் நெஞ்சம் என்றின்ன தலைப்புகளில் பாடலுக்கு புதிய விளக்கங்களைக் கூறி, 'ஒவ்வொரு நிலையிலும் தலைவி கருதியது இன்னது என்று உணராது திகைத்த தலைவன், அவளிடம் அமைதி கண்டு அவள் உள்ளத்தை உணராது திகைத்தான். அவளின் கண்ணீரைக் கண்டு கலங்கி, அவளின் நெட்டுயிர்ப்பைக் கண்டு தன் பயணத்தைக் கைவிட்டான்' என்று முடிபுரைக்கின்றார். ஆதலின், தலைவனின் மனம் திடீரென மாறவில்லை மாறாகத் தலைவியின் ஒவ்வொரு குறிப்பும் தலைவனின் மனத்தைப் படிப்படியே மாற்றி வந்தது. அவளின் உள்ளத்தை உணராது திகைத்தான். அவள் உகுந்த கண்ணீர் அவன் திகைப்பை வழக்கமாக மாற்றியது. அன்றியும், அவளின் நெட்டுயிர்ப்பே அவனுடைய கலக்கத்தை மேலிடச் செய்து பயணத்தைக் கைவிடச் செய்தது என்பது மு.வ. அவர்கள் இப்பாடலிற்குக் காணும் பொருள் என அறியலாகின்றது.

## நினைந்த ஒன்று

'ஓவச்செய்தி' என்னும் இறுதியியலின்கண். இப்பாடலின் மணிமுடியாய் விளங்கும் 'முன்னம் காட்டி முகத்தின் உரையா ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து' என்னும் அடிகளை விளக்க முனைந்த மு.வ. அவர்கள் இவ்வடிகளுள், தலைவி ஓவியச் செய்தி போல் நினைந்து நின்ற 'ஒன்று' என்ன என்பதனை ஆய்தற்கு எடுத்துக்கொண்டு, உள்ளப்பிரிதலையும் அப்பிரிதல் தரும் உயிர் துயரத்தையும் நன்கு விளக்கி, "தலைவன் பிரியும் போது மீண்டும் இவரை எப்போது காண்போம்? என்று தலைவி நினைந்து கலங்கினாள்; கசிந்துருகினாள்; ஓவியச் செய்தி போல் உணர்த்தப்பட்ட அந்த 'ஒன்று இதுவே ஆகும்" என்பதனான், 'ஒன்று' என்பதற்கு அவர் தந்த விளக்கமும் நயமும் உள்ளங் கொள்ளை கொள்வதாம்.

## முடிநிலை

இருபத்தெட்டு வரிகளைக் கொண்ட ஒற்றைப் பாடலைப் பல்லாற்றானும் ஆய்ந்த மு.வ. அவர்கள், வடபுலப் பயணத்திற்குத் தலைப்பட்ட தலைவனின் உள்ளத்து உணர்வுகளையும் மீண்டும் தலைவனை எப்போது காண்போம் என்று அந்த ஒன்றை நினைந்து உள்ளம் வருந்திய தலைவியின் உள்ளப் போராட்டத்தையும் புதுவது கிளக்கும் பான்மையிலான தம் அரிய விளக்கங்களால் நம் மனக்கண்முன் விரியச் செய்த மு.வ., ஒளிமிக்க ஒரு முழுமணியினைக் கலைத்துறையிலும் வாழ்க்கையிலும் இருளைப் போக்க வல்ல தூய ஒளிபடைத்த சிறந்த விளக்கம் அமைந்த இப்பாடலைப் பன்முறை போற்றிப் புகழ்ந்து, அவர் நல்கிய இலக்கிய இன்பப்பரிசே ஓவச்செய்தி என்பது தொள்ளிதின் விளங்குகின்றதாம். அன்றியும், ஒற்றைப் பாடலை எடுத்துக் கொண்டு, இயற்கையோடியைந்த தம்முடைய இலக்கிய உள்ளம் இனிது புலனாகுமாறு, இருநூறு பக்கங்களில் விளக்கங்கள் வழங்கியுள்ள அவர்தம் இலக்கியவளத்திற்கு ஓவச்செய்தி எனும் ஒரு நூலே பல்லாற்றானும் சான்றுபகன்று கொண்டிருக்கின்றது எனல் வெள்ளிடைமலையாம்.

## References


Balasubramaniyan, C. (1994). Dr .MU.VA. vin sinthanaivalam, Chennai: Paarinilayam.

Vardarasanaar, Mu. (2008). Ovachithi, Chennai: paarinilayam.

Vardarasanaar, Mu. (2008). Palanthamil ilakkiyathil iyarkai, Chennai: Paarinilayam.

Vardarasanaar, Mu. (2008). Nedunthogai virunthu, Chennai: Paarinilayam.

Vardarasanaar, Mu. (2008). Nedunthogai selvam, Chennai: Paarinilayam.

Vardarasanaar, Mu. (2008). Kurunthogai selvam, Chennai: Paarinilayam.

Vardarasanaar, Mu. (1969). Engal oor velam, Chennai: Anantha Vikadan.

# ஔசித்யக்கோட்பாடு: தொல்காப்பியமும் சமஸ்கிருத அலங்கார நூல்களும்
# The Appropriateness Theory: *Tholkappiyam* and Sanskrit Rhetoric Texts

பா.உமா / B.Uma[1]


### *Abstract*

*Tholkappiyam* is the most ancient and extantTamil grammar text. It is also considered a long piece of Tamil literature. *Tholkappiyam*is also the pioneering work in Tamil grammar, which describes the 'Rhetoric Grammar'. Hemachandrar, a prolific Kashmirianwriter, dwelled on many subjects, including producing the *BharathaManchary*, *VrthkadhaManchary*, and about forty other works. However, his contribution to poetics was meagre, and he did not exert any appreciable influence over the *Alankarasastra*(the science of figure of speech). He divided the chapters (*vinyaasas*) into many categories and madesome fascinating remarks. He gave directions to the employment of meters and pointed out the types of meters that individual poets excelled in using, such as *Panini*, *Abhinandha*, and *Bharavi*, to name a few. Hemachandrar proposed that Rhetoric grammar should be identified with apositionand that the appropriateness is the essence of "*rasa*" (emotion). He illustrated his points by referring to*padha*(words),*vaakya*(sentence), *prabhandharda*, *guna*, *alankara*, *rasa*(emotion), *kriya*(verb), *kraraka*, *linga*(gender), *vachana, kaala*(time)*, desa*(place) andseveral others matters.



Date of submission: 2020-07-30
Date of acceptance: 2020-10-30
Date of Publication: 2020-12-10


Corresponding author's Name: B.Uma
Email: umajnu2011@gmail.com


**Key Words:** Tholkappiyam, Auchithyam, Rhetoric, Tholkappiyar, Hemasandrar.

### முன்னுரை

படைப்பாளியின் கருத்து மொழிவழி வெளிப்படுவதற்கான ஊடகமாகத் திகழ்வன செய்யுள், கவிதை, நாடகம், புதினம் முதலியனவாகும். இந்த இலக்கிய வடிவங்களை அழகுபடுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் சில இலக்கிய அணிகள் தேவையாயின. அவ்வாறு உருவானவையே இரசம், அணி, குணம், ரீதி முதலானவையாகும். இந்நான்கிற்கும் தனித்தனியான வரையறைகள் இருந்தாலும் அடிப்படையில் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகும். இந்திய இலக்கியங்களில் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே உவமை, உருவகம் முதலிய அணிகள் பயன்பாட்டில் இருந்துள்ளன. சமஸ்கிருத இலக்கியத் திறனாய்வை நோக்கினால் இவற்றின் முக்கியத்துவத்தை உணரலாம். இலக்கியக் கோட்பாடுகள் காலந்தோறும் வளர்ச்சி பெற்றுப் புதிய விதிகளில், வடிவங்களில் பயணித்துக் கொண்டிருந்தாலும், சமஸ்கிருதத்தில் க்ஷேமேந்திரர் இயற்றிய "ஔசித்யவிசரசர்ச்சா" சமஸ்கிருத அலங்கார சாஸ்திரங்களிலேயே, அணியியல் கோட்பாடுகளை மிகச்சிறப்பாக வரையறுக்கும் நூலாக விளங்குகிறது. இலக்கியத்தில் இருக்கவேண்டிய பொருத்தத்தைப் பற்றிச் க்ஷேமேந்திரர் இதில் விரிவாக விளக்குகிறார். அவருக்கு முன்பு சமஸ்கிருத அறிஞர்கள் ஔசித்யத்தைப்

[1] The author is a Assistant Professor in the Department of Tamil, G.Venkataswamy Naidu College, Kovilpatti, Tamil Nadu, India. umajnu2011@gmail.com

பற்றிக் கூறியிருந்தாலும் அவற்றிற்கென்று முறையான கோட்பாட்டை உருவாக்கியவர் க்ஷேமேந்திரரே ஆவார்.

தமிழ் இலக்கண நூல்களில், உலகவழக்கையும், செய்யுள் வழக்கையும் விவரிக்கும் முதல் நூலான தொல்காப்பியம் தமிழ்மொழிக்குக் கிடைத்த முதல்நூலாக இருந்தாலும் முந்துநூல் கருத்துக்களைப் பல்வேறு இடங்களில் முறையாகப் பதிவுசெய்கிறது. தொல்காப்பியரின் அந்த விளக்குமுறையே தமிழ்மொழி தொல்காப்பியருக்கு முன்பே சிறந்த இலக்கிய, இலக்கண வளங்களைக் கொண்டிருந்தது என்னும் கருத்தை உணர்த்துகிறது. அந்த வகையில் சமஸ்கிருத மரபில் உருவான "ஔசித்யம்" என்னும் கோட்பாட்டைத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதை இக்கட்டுரை சுருக்கமாக ஆராய்கிறது.

இலக்கியத்திற்கு எதனை ஆன்மாவாகக் கொள்ளலாம் என்ற விவாதத்தில் இரசக்கோட்பாடு, ரீதிக்கோட்பாடு, அணிக்கோட்பாடு, வக்ரோத்திக் கோட்பாடு, தொனிக் கோட்பாடு முதலியன முக்கியப் பங்கு வகிக்கின்றன. க்ஷேமேந்திரர் ஔசித்யத்தையே இலக்கியத்தின் ஆன்மாவாகக் கருதுகிறார். ஔசித்யம் என்பதற்குப் 'பொருத்தம்' என்று பொருள். எதைச் சொன்னாலும் அது அந்த இடத்திற்குப், பாத்திரத்திறச் சூழலுக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும் என்பதாகும். ஒரு படைப்பில் ஔசித்யம் இல்லையெனில் அதன் இலக்கிய இன்பம் குறைவுபடும்.

**ஔசித்ய விளக்கம்**

ஔசித்ய விதிகளைப் பற்றி முதன்முதலில் கூறியவர் பரதரே. பரதர் ஔசித்யம் (தகுதி) என்ற சொல்லைப் பயன்படுத்தாவிட்டாலும், ஓர் இலக்கியப் படைப்பிற்கு ஔசித்யம் அவசியம் என்ற கருத்தினைப் பல இடங்களில் சுட்டியுள்ளார். "நாடகத்தில் பொருத்தமான வேடம், பாத்திரத்திற்கு ஏற்ற மொழி, அணிகலன், உரையாடல், இசை முதலியவற்றைக் கையாளுவதில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளை எடுத்துரைக்கிறார். ஒரு பாத்திரத்தின் வேடம், இடம் (தேசம்), காலம் முதலியவற்றிற்குப் பொருத்தமாக இருக்க வேண்டும், அப்படி இல்லாது போனால் அதன் இலக்கிய அழகு கெடும்" என்று பரதர் ஔசித்யத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். பாமகரும் தண்டியும் இக்கோட்பாட்டைத் தமது கவிதைச் சிந்தனைக்கேற்ப உள்வாங்குகின்றனர். நடை, அலங்காரம் முதலியன சரியாக அமைப்பதில் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். மேலும், கவிதையின் குறைபாடுகள் பற்றிக் கூறி அதை நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர். ருத்ரடர் கவிதையில் ஔசித்யத்தின் பங்கு என்ன என்பதைப் புரிந்து கொண்டு விளக்குகிறார். பாத்திரப் படைப்புகளின் உடை, நடை, பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியவற்றோடு பொருந்தக் கூடியதாக அமைய வேண்டும் என்கிறார்.

ஆனந்தவர்த்தனரே ஔசித்யம் என்ற சொல்லைப் பரவலாக்குகிறார். தொனிக் கோட்பாட்டிற்கு முதலிடம் தரும் ஆனந்தவர்த்தனர் ஔசித்யக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தைக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "சங்கடனை தானே மாதுரி யமாதி
>
> குணங்களைப் பற்றிச் சுவைகளைக் குறிக்கும்
>
> அந்நிய மத்தி நேது கூறுவோன்
>
> வாச்சிய மிவற்றி னௌசித் யமாகும்". (காரிகை.61)

ஔசித்யம் என்பதற்குப் பிரிதியாகத் தகுதி என்பதை வழங்கலாம் என்றும், தகுதி என்பதை யோக்யதை (योग्यता) என்றும் வழங்கலாம் என்றும் ஆனந்தவர்தனார் கூறுகிறார். மேலும் "ஔசித்ய விதிகள் மீறிவிடாமல் இருக்கின்றனவா? என்று இலக்கியம் படைக்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையிலும் முக்கியக் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார். சொல், எழுத்து உச்சரிப்பு முதலியனவற்றில் கூடச் சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்கிறார்". ஔசித்ய விதிகள் இருக்க வேண்டும் என்பதைவிட,

ஔசித்யமற்றவைகளாக இருக்கக் கூடாது என்பதில் முக்கியக் கவனம் உடையவராய் திகழ்ந்துள்ளார். குந்தகர் வக்ரோத்தியே கவிதையின் ஆன்மா என்று வாதித்தார். ஆனால் ஔசித்தியக் கோட்பாட்டை அவரால் மறுக்க முடியவில்லை. ஔசித்யம் கவிதைக்கு மிகத் தேவையான ஒன்று என்பதே இவரின் கருத்து. மகிமபட்டரும் ஔசித்யக் கோட்பாட்டைப் பேசுகிறார். தொனிக் கோட்பாட்டைத் தீவிரமாக விமர்சனம் செய்தவர் என்றாலும் ரசம் மற்றும் ஔசித்யக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறார். ஔசித்தியத்தின் தேவையைக் கூறும் அவர் ஔசித்யத்தோடு ரசமும் கவிதையில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்கிறார்.

ஔசித்யம் வரக்கூடிய இடங்கள்

சொல், சொற்றொடர், காவியப் பொருள், குணம், அணி, இரசம், வினைச் சொல், வேற்றுமை, பால், வசனம், உருபு, உரி, இடைச்சொல், காலம், இடம், குலமரபு, நோன்பு, தத்துவம், சத்துவம் (ஆழ்பொருள்), கருத்து, இயல்பு, சாரசங்கிரகம், பிரதிபை, அவத்தை, விசாரம், பெயர், வாழ்த்து முதலிய காவிய அங்கங்களுக்கிடையே பரவிக் கிடக்கும் ஔசித்யமே காவியத்தின் ஆன்மா என க்ஷேமேந்திரர் 8,9,20 ஆம் பாடல்களில் வலியுறுத்துகிறார்.

“उचतिम् प्राहराचार्या: सट्दशम् कलि यस्य यत्

உசிதம் ப்ராஹராசார்யா: ஸத்தசம் கிள யஷ்ய யத்

उचतिस्य च यो भावस्तदौचत्यिम् प्रचण्ते(कारकि7)

உசிதஸ்ய ச யோ பா$^{4}$வஸ்தஔ$^{3}$சித்யம் ப்ரசண்தே”

“எதற்கு எது பொருத்தமாக (தகுதியாக) அமைக்கிறதோ அதனை ‘உசிதம்’ (தகுதி) என்று சான்றோர் கூறுவர். அத்தகைய உசிதம் உடையதே ஔசித்யம் (தகுதிப்பாடு) ஆகும்”. அதாவது தொனியாக இருந்தாலும் அல்லது இரசமாக இருந்தாலும் அல்லது ஏனைய அணிகளாக இருந்தாலும் அவை எல்லாம் ‘பொருத்தமுற’ அமைந்தால்தான் படைப்புச் சிறப்படையும்.

## மொழி சார்ந்த ஔசித்யம்:

சொல், சொற்றொடர், காவியப்பொருள் என்பவை மொழியியல் சார்ந்த ஔசித்தியமாக ஆசிரியர் கூறுகிறார். பத ஔசித்யம் என்பது காவியத்தில் ஒரு சொல் தகுதிப்பாட்டினால் அழகூட்டுவது என்பதாகும். பெண்களின் முகத்திற்குத் திலகம் போல சொல்(பதம்) அமைந்து மெருகூட்டும் என்பது குறிப்பு. மேலும் சிவந்த மேனியாருக்கு கருஞ்சாந்து பொட்டும், கருவண்ணக் காரிகைக்குச் சந்தனப் பொட்டும் பொருத்தமாக அமைந்து எழில் தருவது போல இச்சொல் ஔசித்யத்தினால் அழகு பெறும் என்கிறார்.

(எ.கா) நவசாகசாங்க சரிதம் பரிமளகவி

“மன்னா! எனது வாள் ஒளி வெள்ளத்தில் பகைவர்கள் மூழ்கடிக்கப்பட்டார்கள்” என்று திருப்பள்ளி எழுச்சிப் பாடுவோரின் பாடல்களை அடிக்கடி கேட்ட கூர்ஜர நாட்டு மன்னனின் மனைவியான பேதை, காட்டில் நீர் வேட்கையால் தனது கணவனின் வாளினை மீண்டும் மீண்டும் உற்று நோக்குகிறாள்”. பகைவரை ஓட்டிய மன்னன் புகழ்பாடுவதாக அமைந்த பரிமள கவியின் கவிதை இது. இங்குப் பேதை என்று பெண்ணினைக் குறிக்கும் சொல் மூலம் ஔசித்யம் தருவிக்கப்பட்டது என்கிறார்.

## அழகியல் சார்ந்த ஔசித்யம்

குணம், அணி, இரசம் முதலியானவை காவிய சாஸ்திரமாகிய அழகியல் சார்ந்தவை. காவியத்தில் ஏற்புடைய தகுந்த பொருளில் அமைந்த குணமே அழகும், நலனும் தரும். காதற்சுவைக்கு மென்மையான சொல் நடையும், வீர சுவைக்கு வன்மையான சொல் நடையும், தெளிவு, அழகு முதலிய நடைச்சிறப்புகளும் குண ஔசித்யம் எனப்படும் என்கிறார். மேலும் ஏற்புடைய பொருளில் தகுந்த பொருத்தமுடன் வரும் இனிமை, மென்மை, ஆழமுடைமை முதலிய காவியக் குணங்கள் ரசிகர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியையூட்டும் என்கிறார்.

(எ.கா) வேணீசம்ஹார பட்டநாராயணன்

“மகாபிரளயக்கலாக் காற்றினால்

கலக்கப்பட்ட புஷ்கராவர்த்தக பயங்கர மேகங்களின் முழக்கத்தின் எதிரொலிபோல, கேட்கசகிக்காத ஆகாயம் பூமியின் இடையே நிறைந்துள்ளதுமான இதற்குமுன் பாராத இந்த முழக்கம் போர் கடலில் இருந்து மீண்டும் ஏன் எழுந்துள்ளது". இங்கு பராக்கிரமசாலியும் வீரசிகாமணியுமாகிய அசுவத்தாமன் தன் வீரத்திற்கேற்ப கடுநடையில் கூறியது, இதில் ஓஜஸ் எனும் காவியகுணம் பொருந்தி வந்துள்ளதாக ஹேமசந்திரர் கூறுகிறார்.

### இலக்கணம் சார்ந்த ஔசித்யம்

வினை, வேற்றுமை, பால், உரி, உருபு, இடைச்சொல், காலம், இடம் முதலியானவை அனைத்தும் இலக்கணம் சார்ந்து வரும் ஔசித்யம். எட்டு வேற்றுமைகளின் சொற்பிரயோகங்கள் மூலம் பொருத்தம் அமைய வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார். நற்குடிக்கணியாகியவர்களின் செல்வம் பெருந்தன்மை உடையமையால் புகழுறுவது போல பொருள்கோள் உடைய சொற்றொடர் தகுந்த வேற்றுமைகள் மூலம் அழகுறுகின்றது.

(எ.கா) லாவண்யவதி க்ஷேமேந்திரர்

"தூய வெள்ளம் போல ஒளி வெள்ளம் பாய்ச்சும் நின் வாளின் கூர்மை, கண் கவர்வதாகி எதிரிகளின் படைகளைக் கடந்து செல்வதாகி, வீரலச்சுமியின் காதிலணிந்த கருங்குவளைப் பூப்போல ஒளிர்ந்து குளிர்ந்திருந்தும் கூட, உன்பகைவர்க்கு மட்டும் எரி தீயாகச் சுடுவது வியப்பாகவே உள்ளது". இங்கு வாள்முனையின் குளிர்மை, ஒளிச் சிறப்புகள் இருந்து பகைவரைச் சுடுவது ஆகிய செயல் பொருத்தமாக அமைந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

### உலகவழக்காறு சார்ந்த ஔசித்யம்

குலம், மரபியல் என்பவை உலக வழக்காற்றினைச் சார்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். குலத்தின் மேன்மைக்கேற்ப மனிதன் சிறப்பும் பெருமையும் அமைவது போலக் காவியங்களிலும் குலப் பொருத்தத்தின் மூலம் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை உருவாக்குகிறது.

(எ.கா) ரகுவம்சம் காளிதாசர்

"புலனின்பங்களில் ஈடுபாடற்ற அவன், இளைஞனான மகனுக்கு அரச சின்னங்களாகிய வெண் கொற்றக் குடையைத் தந்து தன் அரசியருடன் தபோவன மரநிழல்களைச் சேர்ந்தான். முதிய இட்சுவாகு மன்னர் மரபினர்க்குக் குல விரதமாக இவ்விதம் நடந்து வருவது இயல்பேயன்றோ!". இங்கு முன்னைய இன்றைய பின்னைய இட்சுவாகு மன்னர்களின் குலமரபு இதுவெனக் காட்டிப் பொருத்தமாக மரபின் சிறப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்கிறார்.

### கவிஞனது திறன் சார்ந்த ஔசித்யம்

தத்துவம், சத்துவம், கருத்து, இயல்பு முதலியவை கவிஞனது திறன் சார்ந்து வரக்கூடிய ஔசித்யம் என்கிறார். காவியம், இதயத்தோடிணைந்த மெய்ப்பொருள் உறுதியோடு கவிஞனின் தத்துவப் பொருத்தமான வருணனை மூலம் பெறும் சிறப்பினை அடைகிறது.

(எ.கா) பௌத்தாவதான லதிக க்ஷேமேந்திரர்

"சொர்கத்திலாயினும், பூமியிலாயினும், பாதாளத்திலாயினும், பாவியத்திலாயினும், இளமையிலாயினும், முதுமையிலாயினும், சாகும் போதாயினும், கருநிலையாயினும், முன்வினை என்பது கூடவே வந்து பற்றும் திறனுடையதாதலின் உடல் எடுத்தவர்கட்கு முன் வினைப் பயன் அழிவுறுவதே இல்லை". இங்கு ஐயத்திற்கு இடமில்லாதபடி எல்லா மக்களுடைய இதயத்தையும் ஈர்க்கும் மெய்பொருள் சிந்தை இருப்பதால் பொருத்தமுடன் திகழ்கின்றது என்கிறார். இவ்வாறு ஆசிரியர் காவியத்தில் பொருந்தி வருகின்ற இடங்களாக 27 இடங்களைக் குறிப்பிட்டு அவற்றிக்குத் தகுந்த உதாரணப் பாடல்களையும் கொடுத்து விளக்கிச் செல்கிறார்.

மேற்கண்ட சமஸ்கிருத அறிஞர்கள் அனைவரும் ஔசித்யம் இலக்கியத்திற்குத் தேவையானது என்பதில் ஒத்த கருத்துடையவர்கள். மேலும், ஔசித்யம் என்ற கோட்பாட்டின் முக்கியத்துவத்தைச் சமஸ்கிருத இலக்கியத் திறனாய்வாளர்

அனைவரும் உணர்ந்திருக்கின்றனர். அதே போன்று தமிழின் முதல் இலக்கணமான தொல்காப்பியம் தொடங்கி, பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியம் வரையான தமிழிலக்கியம் முழுமையும் ஔசித்யக்கோட்பாடு பரவிக்கிடக்கிறது. தமிழிலக்கியத்தில் பண்டைய கால வரலாற்றிலேயே ஔசித்யத்திற்குத் தரப்பட்ட முக்கியத்துவத்தைக் கோ.சுந்தரமூர்த்தியின் 'பண்டைய தமிழ் இலக்கியக் கொள்கைகள்' என்ற நூலின் மூலம் அறியலாம்.

ஔசித்யம் என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்றோ அல்லது அதற்குச் சமமான சொல்லை அம்மொழியிலேயே பயன்படுத்தி ஔசித்யக் கோட்பாட்டை விளக்க வேண்டும் என்றோ இல்லை. தொல்காப்பியர் தம்நூலில் ஔசித்யம் என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. ஆனால் இலக்கியத்தில் இக்கோட்பாட்டின் முக்கியத்துவம் என்ன என்பதை உணர்ந்திருந்தார். ஔசித்திய விதிகளின் நிலையைப் போற்றுவதில் கவனம் கொள்ள வேண்டும் என்று தொல்காப்பியர் உணர்த்துகின்றார். எடுத்துக்காட்டாக உள்ளுறை என்ற நுனுக்கமான ஒன்றைத் தொல்காப்பியர் கண்டுபிடித்துக் கூறியது அவரின் ஔசித்யக் கோட்பாட்டின் உடன்பாட்டை வெளிப்படுத்துகிறது. குறிப்புப் பொருள் வரலாறு ஔசித்ய விதிகளைக் காக்கும் அடிப்படை முறைகளையும் பாத்திரங்கள் இலக்கியத்தில் அமையவேண்டிய பாண்மையின் சீர்மையும் விளக்கி நிற்கிறது. "தோழியும் செவிலியும் காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்தும் நிலையில் உள்ளுறை உவமத்தைப் பயன்படுத்த வேண்டும்" (தொல்.உவம:304) என்கிறார். இது சமஸ்கிருதத்தில் க்ஷேமேந்திரர் கூறும் காலம், இடப் பொருத்தம் என்ற கோட்பாட்டோடு ஒப்பிட்டு நோக்கததக்கது.

### தொல்காப்பியரின் ஔசித்தியக் கோட்பாடு:

தொல்காப்பியர் பாத்திரப்படைப்புப் பற்றிக் கூறும் போதும் ஔசித்திய விதிகளைப் பின்பற்றுகிறார். தலைவியின் தாய் இலக்கியத்தில் மற்றவர்களால் எடுத்துப் பேசப்படும் பாத்திரப்படைப்பாகக் காட்டுகிறார். தலைவியுடனோ, தலைவனுடனோ நேரடியாகப் பேசுவதாக இப்பாத்திரம் அமையக்கூடாது. தாய் வேண்டியவை எல்லாம் செவிலியின் மூலமாகத் தலைவன் அல்லது தலைவியிடம் கூறப்பட வேண்டும். செவிலி தலைவியுடன் பழகுகிறாள், தலைவியும் தன் ரகசியங்களை எல்லாம் அவளிடம் வெளிப்படையாகவே கூறுகிறாள். இங்குகூடப் பாங்கியின் மூலமாகத்தான் தன் மனவெழுச்சிகளைத் தலைவி வெளிப்படுத்துகின்றாள். தலைவியின் காதல் செய்திகளை அவள் தந்தையிடம் நேரடியாகக் கூறக்கூடாது என்றும், பாங்கியிடம் தலைவி கூற, பாங்கி செவிலியிடம் கூற, செவிலி தாயிடம் கூற, தாய் இறுதியாகத் தந்தையிடம் கூற வேண்டும் என்றும் கூறுகின்றார். இங்கு அறத்தோடு நிற்றல் என்ற விதியில் ஔசித்தியக் கோட்பாட்டைத் தொல்காப்பியர் மறைமுகமாக எடுத்தியம்புகிறார்.

இது போன்றே தொல்காப்பியரின் பிரிவு பற்றின நூற்பாக்களிலும் ஔசித்யக் கோட்பாட்டைக் காணலாம். ஓதல்,பகை,தூது,காவல்,பொருள்,பரத்தை என்பவை யார் யாருக்கு உரியவை என்பது பற்றியும் அவற்றில் ஓதலுக்குச் செல்பவர்கள் யார்? அவர்கள் ஓதற்பிரிவில் கற்கும் கல்வி யாது? என்பன பற்றியும் பல்வேறு அகப்பொருள் இலக்கண உரையாசிரியர்கள் உரை எழுதியிருக்கிறார்கள். 'ஓதல் பகையே தூது இவை பிறிவே' (தொல்.அகம்.25) என்று கூறும் தொல்காப்பியர் தொடர்ந்து பின் வரும் 9 சூத்திரங்களில் காவல், பொருள் பிரிவைப் பற்றியும் அவற்றின் இயல்பு பற்றியும் அவை செய்வதற்கு யார் யார் தகுதியுடையவர்கள் என்பது பற்றியும் பேசுகிறார். 'அவற்றுள் ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன' (மேற்படி.26) என்றும் 'உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான' (மேற்படி.31) என்றும் ஓதற் பிரிவு பற்றிக் கூறும் நூற்பாக்களுக்கு ஓதலாகிய கல்விப் பிரிவு அரசர், அந்தணர், வணிகர் மூவருக்கும் உரியது என்றும் அவர்களுடன் வேளாளரையும் உட்படுத்தியும் பின்னர் நால்வருணத்தில் உயர்ந்தோர் என்றும் பல முறையில் பொருள் கொண்டுள்ளனர்

உரையாசிரியர்கள்.

அகஇலக்கியங்கள் பெரும்பாலும் இதுபோன்ற ஔசித்யக் கோட்பாட்டைக் கொண்டிருக்கிறன. கரு, பாத்திரபடைப்பு, உரையாடல்கள் முதலியவற்றைக் குறித்துத் தொல்காப்பியர் கூறியிருக்கும் விதிமுறைகள் எல்லாம் ஔசித்தியக் கோட்பாட்டின் வெளிப்பாடே எனலாம். ரசக்கோட்பாட்டை விளக்கும் விதிமுறைகளின் தேவை பற்றி ஆனந்தவர்த்தனர் விளக்குவது போல் இதுவும் இலக்கியத்திற்குத் தேவையானது. ஔசித்திய விதிகள் இலக்கியத்தில் தவறாகப் பயன்படுத்துவதால் இலக்கியத்தின் போக்கு மட்டுமல்ல சுவையும் குலைந்துவிடும் என்ற எண்ணம் தொல்காப்பியரிடத்தில் உண்டு.

தொல்காப்பியர் கூறிய செய்யுளியியளில் ஒலி அளவு, சீர், அடி, நோக்கு, பா(ஓசை), அளவியல் முதலியானவற்றில் ஔசித்யத்தைக் காணலாம். காவியத்தில் ஏற்புடைய தகுந்த பொருளில் அமைந்த குணமே அழகும், நலனும் தரும் என்பது க்ஷேமேந்திரர் கருத்தாகும். தொல்காப்பியர் செய்யுளியியலில் வெளிப்படையாகக் ஔசித்யத்தை வெளிப்படுத்தவில்லை என்றாலும் செய்யுளின் இலக்கணம் மூலம் ஔசித்யத்தை வெளிப்படுத்துகிறார். தொல்காப்பியரின் நோக்குப் பற்றி ஆய்வு செய்தவர்களுள் கோ.சுந்தரமூர்த்தி, தமிழண்ணல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். இவர்களுள் கோ.சுந்தரமூர்த்தி சங்க இலக்கியப் பாடல்களில் இடம் பெற்றுள்ள நோக்குப் பற்றி ஆராய்ந்துள்ளார். தமிழண்ணல் திருக்குறளுடனும் மேலை இலக்கியங்களுடனும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். தொல்காப்பியர் குறளடி, சித்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்று செய்யுள் அடிகளின் வகைகளைப்பிரித்து அவற்றிக்கென்று முறையான எழுத்து அமைப்புப் பற்றியும் விளக்குகிறார்.

> ‘நால் எழுத்து ஆதியாகிய ஆறேழுத்து
>
> ஏறிய நிலத்தே குறளடி என்ப’. (தொல். செய்யுள்.1293)

நால் எழுத்து முதலாக ஆறு எழுத்து ஈறாக ஏறிய நிலத்தில் வருவது குறளடி என்று கூறுவர். தொல்காப்பியர் முன்னோர் கூறிய செய்தியைக் கூறி இவ்விடத்தில் அடிபொருத்தத்தைப் பற்றிக் கூறுகிறார். இது போன்றே செய்யுளின் ஓசை பற்றிக் கூறுகிறார். குணத்திற்கு ஏற்ற ஓசையை தர வேண்டும் இல்லை என்றால் அதன் இசை நயம் கெட்டு இலக்கியத்தைக் கெடுத்துவிடும் என்ற சமஸ்கிருத அறிஞர்களின் கருத்து தொல்காப்பியரின் பாவகையோடு ஒப்பிட்டு நோக்கலாம். அலங்காரத்தில் கூறபெறுகின்ற செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், பொருண்மை, காந்தம், வலி, சமாதி முதலான குணங்களுக்கெல்லாம் தொல்காப்பியரின் ஓசையைப் பயன்படுத்திக்கொண்டனர். எடுத்துக்காட்டாக ‘செறிவு’ என்பதற்கு நேரிசை வெண்பாவையும் தெளிவு என்பதற்கு குறள் வெண்பாவையும் பயன்படுத்தியுள்ளனர். இது போன்றே ஒவ்வொரு குணத்திற்கும் ஒவ்வொரு ஓசையைப் பயன்படுத்துக் கொண்டனர்.

இவ்வாறு குணம் என்பது செய்யுள் ஓசையைக் கொண்டுள்ளது. குணம் என்பதும் தோசம் என்பதும் இலக்கியத்தில் பேசப்படும் மிக முக்கியமான ஒன்றாகும். அந்தவகையில் பொருத்தமாக அமைந்தால் தோசமும் குணமாகும். பொருத்தமின்றி அமைந்தால் குணமும் தோசமாகிவிடும். எனவே குணமாக இருந்தாலும் குற்றமாக இருந்தாலும் பொருத்தமாகக் கூறவேண்டும் என்ற வி.இராகவன் கூற்று இங்கு நோக்கதக்கது. இது போன்றே தொல்காப்பியரின் மெய்பாட்டியலும் கிட்டதட்ட ஔசித்யக் கோட்பாடேயாகும். தொல்காப்பியர் கூறிய எண் வகை மெய்பாடுகள் நாடகத்திற்குரியவை அல்ல செய்யுளுக்குறியவை என்று பல்வேறு அறிஞர்கள் கூறிச்சென்றுள்ளனர். நாடகத்திற்காயினும் செய்யுளுக்காயினும் தகுதியான முறையில் கூறவேண்டும் என்பதே ஔசித்தியக் கோட்பாடாகும். பரதர் நாடக மாந்தர் ஒப்பனை, உடை, பேச்சு, பாட்டு முதலியானவை எல்லாம் அதில் இடம் பெறும் மன உணர்வுக்கும் சுவையுணர்ச்சிக்கும் ஏற்ப பொருத்தமாக அமைய வேண்டும் என்று கூறுகிறார். தொல்காப்பியர் மெய்பாட்டியலில் எண் வகை மெய்பாடுகள் கூறி அவை பிறக்கக் கூடிய சூழலைக் கூறுகிறார்.

நகை என்பது இகழ்ச்சியிற் பிறப்பது, அழுகை என்பது அவலத்திற் பிறப்பது, இளிவரல் இழிப்பிற் பிறப்பது, மருட்கை வியப்பிற் பிறப்பது, அச்சம் அஞ்சத் தகுவனவற்றார் பிறப்பது, பெருமிதம் வீரத்திற் பிறப்பது, வெகுளி வெறுக்கத்தக்கனவற்றால் பிறப்பது, உவகை சிருங்காரத்தில் பிறப்பது என ஒவ்வொரு மெய்ப்பாட்டின் பிறப்புப் பற்றிக் கூறுகிறார். இங்கு தொல்காப்பியரின் மெய்பாட்டியலின் பொருத்தத்தைக் காணலாம்.

### முடிவுரை

மேலே குறிப்பிட்ட முறையில் சிந்தித்துப் பார்த்தால் தொல்காப்பியர் இன்னும் பல ஔசித்திய விதிகளைக் கூறியுள்ளார் என்பதனை இனம் காணலாம். இலக்கியத்திற்கு ஔசித்ய விதிகள் தேவை அல்லது ஔசித்யமற்ற முறைகள் இல்லாதிருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் வலியுறுத்துகிறார் என்பதே இங்குக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுவதாகும். ஆனால் சமஸ்கிருத அறிஞர்கள் போன்று ஔசித்ய விதிகளைக் குறிக்க ஔசித்யம் என்ற சொல்லையோ ஒரு கோட்பாட்டையோ தொல்காப்பியர் வகுக்கவில்லை. எந்த படைப்புப் படைத்தாலும் பொருத்தமுற படைக்க வேண்டும் என்பதலிருந்து ஓர் இலக்கியம் முழுவதும் செம்மையுடன் படைக்கப்பட்டுள்ள போக்கினை அறியமுடிகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அறத்தோடு நிற்றல், பாத்திரப்படைப்பு, பிரிவு, அடி, பா வகைகள், மெய்பாடு முதலியவை அனைத்திலும் இத்தகைய போக்கினைக் காணலாம். சமஸ்கிருத மொழியில் பரதர் கூறிய இரசக்கோட்பாடு அடிப்படை விளக்கமே பிற்காலத்தில் விரித்து ஒரு கோட்பாடாக விளக்கப்பட்டுள்ளது. அது போன்றே ஔசித்யம் என்ற கோட்பாடு பரதர் காலம் தொடங்கி மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் பல்வேறு கோணங்களில் விளக்கப்பட்டு கி.பி.11ஆம் நூற்றாண்டில் முழுவடிவப்படுத்தப்பட்டு ஒரு தனிக் கோட்பாடாக விளக்கப்பட்டுள்ளது. எனினும் இது தமிழில் தொல்காப்பியர் காலத்திலிருந்து கருத்தளவில் மட்டுமே வளர்ந்து வந்துள்ளது எனலாம்.

## References

[1]Ragahvan, V. (1970). *Introduction of Indian Poetics*, Bombay: Magmillan and Company Limited,

[2]Jaganatharaja M., K. (1989). Ausatya Visara Sarcha. Rajapalayam: Visuvasanthi Pathipakam. p.41.

[3]Subramaniya Sastri. Thoniyalogam. Mundram Kathir. P.110

[4]Sushil Kumar De. (1961). *Introduction of Vakrotijivita*, Calcutta: Firma K.LMukhopadhyyay. pp.99.

[5]Kane, P., V. (1971). (4th ed). *History of Sanskrit Poetics*, Banaras: Motilal Banarasidas. P. 125.

[6]Ragahvan, V. (1970). *An Introduction to Indian Poetics.* BOmbay: Magmillan and Company . Limitedpp.102-116

[7] Subramanian, S., V. (1998). Tholkapiyam Thelivurai. Chennai: Manivasagar Pathipakam.

[8] Subrahmanya Sastri, P., S. (1914). *Tonivilakku*, His Holiness Kasivasi Arulnundi Tambiran Swamigal, Trichinopoly.

[9] Sundramurthy, K. (1977). Pandaya Tamil Ilakiya Kolgaikal. Madurai. Sarvothaya Ilakiya Panmai.

[10] Rewa Prasada Dwivedi (1990). *Rutusamhara of Kalidas*, Delhi: Sahitya Akademi.

# உயரியச் சிந்தனையும் சங்க இலக்கியமும்

# Niche Thinking in *Caṅkam* Literature

முனைவர் ரா.செல்வ சுப்ரமணியம் / Dr R.Seiva Subramaniam[1]

Date of submission: 2020-07-13
Date of acceptance: 2020-9-10
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
Dr R.Seiva Subramaniam
Email: selvas3098@gmail.com

***Abstract***

The value of literature as a source of history, especially an ancient one, can hardly be exaggerated as it reflects the real lives and thoughts of the ancestors; the *Caṅkam* literature is considered one such literary work. It could be assumed that there are not many literary works in Indian literature that could parallel the antiquity and contemporaneity of these quiet and dramatic Tamil poems of *Caṅkam* literature. In its values and stances, *Caṅkam* literature represents a mature collection of classical poetry. It outlines passion balanced by courtesy, transparency by ironies and nuances of design, impersonality by vivid detail, and the line's austerity by the richness of implication. The *Caṅkam* literature is the historical evidence of indigenous literary developments in South India, and it offers a window into some aspects of the ancient Tamil culture: secular and religious beliefs, and the people themselves. One of the essential aspects that we can gauge from *Caṅkam* literature is the varieties of thinking skills,especially niche thinking. Niche thinking is related to early child development, especially brain development, which controls most human activities. The developmental niche of children,which are embedded within, arises from the interaction between factors and processes operating across multiple levels of influence, which one can find in many poems of *Caṅkam* literature.

**Key Words:** Cankam literature, Niche Thinking, Child Development, Brain, Multiple of Intelegence

### முன்னுரை

தமிழிலக்கியத்தின் கருவூலமாக திகழ்வது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியங்களின் பிரிவுகளான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும், காலந்தொரும் வாழ்ந்து வந்த பழந்தமிழர்களின் வாழ்வியல் கூறுகளான கலை, கலாச்சாரம், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், முதலிய பண்பாட்டுக் கூறுகள் பலவற்றையும் பயின்று அறிவதற்குப் பயன்படும் ஆவணமாகவும் திகழ்ந்து வருகின்றது. இதன் அடிப்படையில் தமிழரின் வாழ்வியல் சிந்தனைகள் சங்ககாலம் தொட்டே வரலாற்றுப் பூர்வமாக அறியப்பட்டு வந்துள்ளது.

### கட்டுரையின் நோக்கம்

இலக்கியம் என்பது மக்களுக்கெல்லாம் பொதுவாகப் பயன்படும் பொருளை உடையதாயும் இனிய வகையில் சொல்லப்படுவதாயும் இருத்தல் வேண்டும். வாழ்வின் குறிக்கோளை வகையற எடுத்தியம்புவதே இலக்கியமாகும். இலக்கியத்தின் வாயிலாக மாணவர்கள் மத்தியில் சிந்தனைத் திறனை மேலோங்கச் செய்ய முடியும் என பல கல்வியாளர்களும், அறிஞர்களும் நமக்கு உணர்த்தியுள்ளனர். இலக்கியங்களை பயன்படுத்தி சிந்தனைத் திறனை கண்டறியலாம் என்ற காலம் மாறி, சிந்தனைத் திறன் மூலமாக இலக்கியம் மூலம் அறிமுகம் செய்யலாம் என்ற கருத்து இன்று

[1] The author is a Secondary School Teacher in SMK Datok Lokman, Jalan Kg Pandan, Kuala Lumpur. selvas3098@gmail.com

மேலோங்கி நிற்கின்றது. அந்த வகையில் சிந்தனை திறன்களில் ஒன்றான உயரியச் சிந்தனை எப்படி சங்க இலக்கியங்களில் வெளிப்படுகின்றது என்பதனை ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

### ஆய்வு முன்னோடிகள்

சங்க இலக்கியம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் உண்டு என்றாலும் சங்க இலக்கியத்தில் காணப்படும் உயரியச் சிந்தனைகள் என்ற அடிப்படையில் அமைந்த ஆய்வுகள் மிகக் குறைவே. அதாவது நேரிடையாக மேற்காணும் தலைப்பை ஒட்டி பேசாமல் மறைமுகமாக அமைந்த ஒரு சில ஆய்வுகள் இந்த கட்டுரைக்கு ஆய்வின் முன்னோடிகளாக அமைந்தன.

அந்த வகையில் இந்த ஆய்விற்கு மிகவும் கைக்கொடுத்த ஆய்வுகளாக Kamil Zvelebil அவர்களின் *"The Smile Of Murugan: On The Tamil Literature Of South India, (1973)* ஆய்வு சங்க இலக்கியத்தின் பின்புலத்தைப் பற்றி அறிய துணைப் புரிந்தது. அதுப்போல பக்தவத்சாலாவின் *பண்பாட்டு மானிடவியல் (1990)* என்ற ஆய்வு சங்க கால மக்களின் பழக்கவழக்கங்களை அறிந்துக் கொள்ள துணைப்புரிந்தது. அதேவேளை சிந்தனைகளைப் பற்றி அறிவதற்கு *N.S* ராஜேந்திரனின் *Higher Order Thinking Skills: Theory & Practice (2013)* என்ற ஆய்வு மிகவும் துணைப்புரிந்தது என்று சொல்லலாம்.

இந்த ஆய்விற்கு மிகவும் உறுதுணையாய் நின்ற ஆய்வாக Mohd Yusof Hasan அவர்களின் *Pemikiran Saintifik: SPB4L (2002), Teori Pendidikan: Pemikiran Global (2007), Pembinaan Teori Pendidikan: Pemikiran UPSI (2007),* திகழ்ந்தன. A. தட்சணாமூர்த்தியின் *தமிழர் நாகரீகமும் பண்பாடும்* என்ற ஆய்வு, Xavier S.Thani Nayagam அவர்களின் *Tamil Culture And Civilization; Readings: The Classical Period (1997),* N. சுப்புரெட்டியாரின் *அகத்திணைக் கொள்கை* போன்ற ஆய்வுகளும் இந்த ஆய்வின் முன்னோடிகளாக அமைந்தன.

### கட்டுரையின் வரையரை

இக்கட்டுரை சங்க இலக்கியத்தில் காணப்படும் உயரியச் சிந்தனை என்பதனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. அந்த வகையில் உயரியச் சிந்தனைப் பற்றிய விளக்கமும், அவற்றை எப்படி சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது என்ற எடுத்துக் காட்டுகளும் இந்த கட்டுரையில் குறிப்பிடப்படப்பட்டுள்ளது. இதன் வாயிலாக இந்த ஆய்வில், சங்க இலக்கியத்தில் எப்படி உயரியச் சிந்தனை மிளிர்கிறது என்ற மதிப்பீடும் இடம்பெறுகிறது.

சங்க இலக்கியமும் சிந்தனைத் திறன்களும் என்ற ஆய்வானது மிக ஆழமும் அகலமும் கொண்ட ஆய்வுக்குறியப் பொருளாகும். இத்தகைய ஆய்வுகள் மிகப் பெரிய ஆய்வுகளுக்கு இட்டுச்செல்வதோடு அதிக காலத்தையும் எடுத்துக் கொள்ளும். அதே வேளை ஆய்வின் முடிவுகளோ பல நூல்களுக்குள் அடங்கும் வண்ணம் எண்ணிக்கையில் விரியும் தன்மைக் கொண்டன. எனவே இக்கட்டுரை மேற்குறியிடப்பட்டுள்ள வரையறைக்கு உட்பட்டு, சங்க இலக்கியங்களில் காணப்படும் உயரியச் சிந்தனைகள் பற்றிய ஒரு சில எடுத்துக்காட்டுகளையும் மதிப்பீட்டுகளை மட்டுமே முன்வைக்கின்றது.

### உயரியச் சிந்தனை: ஒரு விளக்கம்

சிந்தித்தல், அல்லது சிந்தனை சிந்தை எனப்படுவது மூளையில் முதன்மையாக இடம்பெறும் ஒரு அடிப்படைச் செயற்பாடு. சிந்தித்தலின் ஊடாக சிந்தனைகள் அல்லது எண்ணங்கள் பெறப்படுகின்றன. இன்றையக் காலக் கட்டத்தில் மனிதனின் சிந்திக்கும் ஆற்றலை புரிந்துக் கொள்ளவும், அதிகரிக்கவும் பல்வேறு சிந்திக்கும் திறன்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. இறைச்சிந்தனை, ஆய்வுச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை, பெண்ணியச் சிந்தனை என சிந்தனைத் திறன் பற்றிய பட்டியல் நீண்டுக் கொண்டேப் போகும்.

தனி மனிதன் ஒருவன் வளர்ச்சியில் சிந்தனை வளர்ச்சி மிக முக்கிய அங்கம் வகிக்கிறது. ஒவ்வொரு மனிதனும் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி என சமசீராக ஒருவாக துணை நிற்பது உயரியச் சிந்தனை என்பதாகும். உயரியச் சிந்தனை எனப்படுவது

மனிதனின் மூளை வளர்ச்சியோடு தொடர்புடையது (Mohd Yusof Hasan, 2007, p.63). பிறந்த குழந்தையின் மற்ற உருப்புகளைக் காட்டும் மூளையே முதலில் வேகமாக வளர்வதால், உயரியச் சிந்தனை மனித வாழ்க்கையில் மிக முக்கியான இடத்தைப் பிடித்துள்ளது.

உயரியச் சிந்தனையானது ஒரு பிள்ளை கருவில் உருவாகுவதிலிருந்து அக்குழந்தை ஆறு வயது வரையிலான மூளை வளர்ச்சியைக் குறித்தது. அந்த வகையில் உயரியச் சிந்தனையானது ஒரு குழந்தை உருவாக்கம், வளர்ப்பு முறை, கல்வி, ஆரோக்கியம், உணவு முறை, பெற்றோர் மற்றும் மற்ற குடும்ப உறுப்பினர்களோடு உள்ள உறவு முறை ஆகிய கூறுகளை ஆய்வு செய்து, அது எப்படி ஆரோக்கியமான குழந்தை உருவாக்கத்திற்கு வித்திடுகிறது என்பதனை விளக்குகிறது.

ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சியானது கருவிலேயே தொடங்குகிறது. கருவில் முதல் ஐந்து மாதங்களில் ஒரு திரில்லியன் நரம்புகள் உருவாக்கம் பெற்று, அதற்கடுத்த மூளை வளர்ச்சியானது படிப்படியாக வளர்ச்சியடைகிறது (Campbell & Singer, 1979, p.1). குழந்தையின் மூளை வளர்ச்சி பிறந்தவுடன் 25% மாகவும், அடுத்த ஆறு மாதம் 50% மாகவும், மூன்று வயது நிரம்பும் போது 85% மாகவும், பிறகு ஆறு வயது நிரம்பும் போது 95% அடைகின்றது என்றால் மூளை வளர்ச்சியைப் பொருத்தமட்டில் இந்த ஆறு வருட கால நேரம் குழந்தைக்கு மிகவும் முக்கியமான கருதப்பட வேண்டும் (Mansor Sukaimi, 2006, p.51).

உயரியச் சிந்தனை குறிப்பிடும் மூளை வளர்ச்சி ஆரோக்கியமான முறையில் அமைந்தால் நேர்மறை எண்ணங்கள் உருவாகும். இல்லையென்றால் எதிர்மறை எண்ணங்கள் உருவாகும். நேர்மறை எண்ணங்கள் ஆக்கத்திற்கு துணைநிற்க, எதிர்மறை எண்ணங்கள் அழிவிற்கு வழிவகுக்கும். அதோடு மட்டுமல்லாமல் மனிதனின் மூளையானது வலப்பக்கம் மற்றும் இடப்பக்கம் என இரண்டு பக்கங்களைக் கொண்டுள்ளது. இந்த இரண்டுப் பக்கங்களுக்கு அதற்குறிய ஆற்றல் உண்டு. இதை உணர்ந்து இந்த இரண்டுப் பக்கங்களும் குழந்தைக்கு ஒரே சீராக வளர்ச்சியடைவதையும் உறுதிச் செய்துக் கொள்ள வேண்டும் (Gilling & Brightwell, 1982, p.11). உயரியச் சிந்தனை குறிப்பிடும் மூளை வளர்ச்சியானது நன்கு அமைந்தால், அறிவு, திறன், பண்பு என ஒருங்கே பெற்ற நல்ல பிள்ளைகள் உருவாவது நிச்சயம். உயரியச் சிந்தனையின் வாயிலாக நனிச்சிறந்த, தரமிக்க, சிறப்பு வாய்ந்த, நிகரில்லாத, ஒப்பற்ற, போற்றத்தக்க, மதிப்புடைய மற்றும் அனைத்து துறைகளிலும் மிகச் சிறந்த நன்மக்கள் உருவாவது திண்ணம்.

## சங்க இலக்கியத்தில் உயரியச் சிந்தனைப் பற்றிய குறிப்புகள்

சங்க இலக்கியத்தில் பல்வேறு வகையான சிந்தனைகள் கொட்டிக் கிடந்தாலும், உயரியச் சிந்தனை அல்லது மூளை பற்றிய ஆராய்ச்சி பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவு. ஆகவே, சங்க இலக்கியத்தில் காணப்படும் உயரியச் சிந்தனைகள் பற்றிய குறிப்புகளை நாம் முதலில் அடையாளம் காண்பது சிறப்பாகும். அதன் பிறகே, கிடைக்கப்பெறும் குறிப்புகளின் வாயிலாக நம்மால் சங்க இலக்கியத்தில் உயரியச் சிந்தனைப் பற்றிய மதிப்பீட்டை வெளிப்படுத்த முடியும். சங்க இலக்கியத்தில் காணப்படும் உயரியச் சிந்தனைப் பற்றிய குறிப்புகளை நாம் பின்வரும் வரைப்படம் விவரிக்கின்றது.

**வரைப்படம் 1 : சங்க இலக்கியத்தில் காணப்படும் உயரியச் சிந்தனைப் பற்றிய குறிப்புகள்**



### i. குடும்பத்தில் குழந்தையின் வரவு

ஒரு குடும்பத்தில் பிள்ளையின் வரவானது மிகவும் முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது. குடும்பத்தில் உள்ள அனைவராலும் நனிச்சிறந்த குழந்தைக்கு ஏங்கும் காட்சியை சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது (தட்சணாமூர்த்தி, 2001, p.141). அதன் விவரங்கள் பின்வரும் அட்டவணை 1 இல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: குடும்பத்தில் பிள்ளையின் வரவு**

| அ) குடும்பத்தில் குழந்தையின் வரவு | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| குடும்ப உறுப்பிணரின் ஆசி | அகம் - 54: 11-12, 86:13-14 | திருமண நிகழ்வின் போது மணமக்கள் நன்மக்களை ஈன்றெடுக்குமாறு குடும்ப உறுப்பிணர்கள் ஆசி வழங்குவர். |
| இறைவனிடம் வேண்டுதல் | பரி - 8: 105-106, 11: 129<br>பதிற்று- 74: 7-22 | கணவன் மனைவி இருவரும் தங்களுக்கு நன்மக்கள் வேண்டி இறைவனிடம் வேண்டுவர். |
| பெண் பிள்ளைக்காக வேண்டுதல் | அகம் - 12: 1-3, 257<br>கலி - 50: 14 | மனைவியைப் பொருத்தமட்டில் பெண் குழந்தையின் வரவு குடும்பத்தின் சொத்தாகக் கருதப்படுகின்றது. |
| | ஐங் - 255:1, 256:1, 257: 1-2<br>அகம் - 12, 282<br>நற்றிணை- 44:12, 324:3 | கணவன்மார்களும் பெண் குழந்தைகளைப் பெரிதும் விரும்புகிறார்கள். காட்டில் வாழும் வேடவர்களும் பெண் குழந்தைகள் வேண்டி இறைவனைப் பிராத்திக்கின்றனர். |
| ஆண் பிள்ளைக்காக வேண்டுதல் | அகம் - 6: 1-5<br>புறம் - 9:34, 270:6-9<br>மதுரை - 601610 | குடும்பத்தில் ஆண் குழந்தையின் வரவு குடும்பத்தின் பெருமையை நிலை நிறுத்துவதாகக் கருதப்படுகின்றது. |

**ஆ) குடும்பத்தில் பிள்ளையின் அவசியம்**

| அ) குடும்பத்தில் குழந்தையின் வரவு | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| வாழ்க்கையின் முழுமை | புறம் 188: 67<br>கலி 75: 28 | தாம்பத்திய வாழ்க்கையில் ஒரு குழந்தையின் வரவே வாழ்க்கையை முழுமையடைவதாகக் கருதப்படுகின்றது. |
| அத்தியாவசியமான தேவை | புறம் 9: 14, 188: 67<br>நற்றிணை 269: 17 கலி 50: 14 | குடும்பத்தில் குழந்தைப் பேறு இல்லாமல் இருப்பது பெரும் குறையாகவே கருதப்படுகின்றது. ஆகவே குடும்ப விருத்திக்கு பிள்ளைகளின் வரவு மிக அத்தியவசியமான தேவையாக கருதப்படுகின்றது. |
| பிள்ளை வரவால் கிட்டும் பேரின்பம் | புறம் 92: 13, 188: 17<br>அகம் 54:1619, 184: 14, 66: 16, 219: 59, 16: 45<br>கலி 80: 1026, 83: 1719 | குழந்தைகளின் மழலை மொழி, குறும்பு, சுட்டித்தனம் போன்றவை அளவில்லா ஆனந்தத்தை அளிப்பதால், குடும்பத்தில் குழந்தையின் வரவே மிகப் பெரிய சொத்தாக மதிப்பிடப்படுகிறது. குழந்தையின் இம்மைக்கும் மறுமைக்கும் ஆனந்தம் கொடுக்கவல்லது என்று எண்ணப்படுகின்றது. |

### ii. கருவுற்ற காலம்

ஒரு குழந்தையின் மூளை வளர்ச்சி என்பது அக்குழந்தையை தாய் கருவுற்ற காலம் தொடங்கி நடைபெறுகிறது (Kogilavani, 2004, pp.36-37). இக்காலக்கட்டத்தில் தாயும், தாயோடு தொடர்புடையவர்களும் செய்யத்தக்கன மற்றும் செய்யக் கூடாதவைப் பற்றி பல்வேறு குறிப்புகளை சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. அதன் விவரங்கள் பின்வரும் அட்டவணை 2 இல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2: குருவுற்றக் காலம்**

| அ) குடும்பத்தில் குழந்தையின் வரவு | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| உடல் நலத்தைப் பேணுதல் | நற்றிணை 40:59 | கருவுற்ற காலத்தில் தன் தோல்கள் வளவளப்பாக இருக்க வேண்டி தாயானவள் நெய் பூசிக்கொள்கிறாள். |
| விரும்பிய உணவு | ஐங் 51:3 குறுந்தொகை 287: 4 | கருவுற்ற காலத்தில் பெண்கள் புளிப்பான உணவை விரும்பி உண்கின்றனர். |
| தவிர்க்கப்பட வேண்டிய உணவுகள் | நற்றிணை 116: 35 | கரு கலையாமல் இருக்க குறிப்பிட்ட சில உணவுகளை தவிர்க்கப்பட வேண்டும். |
| கணவனின் அரவணைப்பு | ஐங் 51:14 | கருவுற்ற காலத்தில் மனைவியானவள் தன் கணவன் அரவனைப்பில் இருக்க விரும்புவாள். |
| கணவன் மனைவியை விட்டுப் பிரியாமை | ஐங்386:4, 361: 47<br>அகம் 197:10<br>கலி 18: 712<br>நற்றிணை16:13,314:37 | மனைவி கருவுற்ற காலத்தில் கணவனாவன் தன் மனைவியை தவிக்க விட்டு விட்டு பொருள் தேட வெளியூர் செல்ல மாட்டான். மனைவியை பிரிந்து இளைமையைத் தொலத்து பொருள் தேடுவதால் எவ்வித பயனும் இல்லை எனக் கருதப்படுகின்றது. |
| கணவனின் கடமை | குறுந்தொகை 287:6<br>நற்றிணை 263, 272<br>அகம் 34, 72, 367<br>ஐங் 323, 51 கலி 40: 2628 | தன் மனைவிக் கருவுற்றிருக்கும் போது அவளது ஆசைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதே கணவின் மிக முக்கியக் கடமையாகக் கருதப்படுகின்றது. மனவியின் ஆசை நிறைவேற்றப்படா விட்டால் பிறக்கும் குழந்தை உடல் குறைவீனமாகக் பிறக்கக் கூடும். |
| மனைவியின் கடமை | அகம் 184: 1819<br>புறம் 312: 1 | மனைவியானவள் எவ்வித குறையும் இல்லாமல் குழந்தையை பெற்றெடுக்க வேண்டும். இச்செயலே அவளது கனவனை மகிழ்வடையச் செய்யும். |
| கருவிலுள்ள குழந்தை யின் பாதுகாப்பு | அகம் 21:1623, 160:38<br>பொரு 185186<br>புறம் 173: 68 | விலங்குகள் எப்படி தன்னுடை முட்டைகளை அடைகாத்து பாதுகாப்பதுப் போல கருவுற்ற பெண்ணும் தன் கருவில் இருக்கும் குழந்தையின் பாதுகாப்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| மன உணர்வு பாதிப்பு | புறம் 28: 16<br>அகம் 206: 2 | கருவுற்ற காலத்தில் பெண்ணொருவள் மன ரீதியாக பாதிப்படைந்திருந்தால், அவளுக்குப் பிறக்கும் பிள்ளை எட்டு வகையான உடல் குறைகளுடன் பிறக்கும் என அஞ்சப்படுகிறது. அவை குருடு, ஊமை, செவிடு, உடல் உறுப்புகளில் குறைப்பாடு, விலங்குகளை ஒத்த முக உருவம் மற்றும் மனநிலை பாதிப்பு என்பனவாகும். |
| கரு கலைப்பு | புறம் 24:12 | கருகலைப்பு பாவச் செயலாகக் கருதப்படுகிறது. |

### iii. குழந்தை பிறப்பும், குழந்தை வளர்ப்பும்

உயரியச் சிந்தனை எனப்படுவது குழந்தையின் உடல் மற்றும் உள வளர்ச்சியைப் பொறுத்து அமைகிறது (Saranggabani, 2006, p.44). அதனால், குழந்தைப் பிறந்தவுடன் அக்குழந்தை வளர்ப்பில் பல்வேறு விசயங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதைப் பற்றிய குறிப்புகளை சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. அதன் விவரங்கள் பின்வரும் அட்டவணை 3 இல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3: குழந்தை பிறப்பும், குழந்தை வளர்ப்பும்**

| அ. குழந்தை பிறப்பு | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| குழந்தை பிறப்பு | குறுந்தொகை 287: | மனைவி குழந்தை ஈன்றெடுக்கும்போது கணவன் பக்கத்தில் இருப்பர். |
| பெண்மை என்ற தகுதி | அகம் 6:1314, 184:1819<br>புறம் 250: 8<br>நற்றிணை 330: 811 | ஒரு பெண் குழந்தை ஈன்றெடுக்கும் போதுதான் அவளுக்கு உயரிய மதிப்பு அளிக்கப்படுகிறது. |
| பெயர் சூட்டுதல் | ஐங் 403:3<br>கலி 81: 35, 75:<br>23 நற்றினை 40:12 | ஆண் குழந்தைக்கு தந்தைவழிப் பெயரும், பெண் பிள்ளைகளுக்கு தாய்வழிப் வழங்கி மகிழப்படுகிறது. |
| தந்தையின் சாயல் | கலி 86: 1124<br>புறம் 198: 1418 | ஆண் குழந்தை தந்தையின் உருவம், குணம் மற்றும் பழக்கவழக்கத்தை சாயலாக கொண்டிருப்பர். |

| ஆ.குழந்தைக்கான உணவு முறை | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| தாய்பால் கொடுத்தல் | நற்றிணை269:12,355:12<br>புறம்44:6, 68:810<br>ஐங் 404:1, 402;12 | பிறந்த குழந்தைக்கு தாய்பாலே வழங்கப்படுகிறது. அதேவேளை நீண்ட நாட்களுக்கு குழந்தைக்கு தாய்பால் கொடுக்கப்படுகின்றது. |
| சமமான வாய்ப்பு | புறம்159: 69, 160: 1415<br>கலி 99: 34<br>நற்றிணை 355:12 | ஏழ்மை நிலையில் இருந்தாலும் குழந்தைக்கு பாலுட்ட தாய் தயங்வதில்லை. அதேவேளை ஒரு சில நேரங்களில் ஒரு தாய் பல பிள்ளைகளுக்கு ஒரே நேரத்தில் பாலூட்டவும் தயங்குவதில்லை. |

| | | |
|---|---|---|
| சோறு ஊட்டுதல் | அகம் 219: 67, 89: 1920<br>கலி 80: 1920. 85: 2833<br>புறம் 5: 11, 77:78, 160:18<br>310: 12, 4: 18<br>நற்றிணை 110: 14 | குழந்தைக்குச் சோறு ஊட்டும் தாய் நிலா மற்றும் நட்சத்திரங்களைக் காட்டுவாள். அதேவேளை குழந்தை குடும்ப உறுப்பிணர்களுக்காகவும் ஒவ்வொரு பங்கு சாப்பிடுமாறும் அன்பாகக் கட்டளையிடுவார். சில வேளைகளில் குழந்தைகள் தாய்தான் தனக்கு சோறு ஊட்ட வேண்டும் என்றும் பிடிவாதம் செய்வர். |
| சத்தான உணவு | பெறும் 222224, 247252<br>குறுந்தொகை 61: 13<br>பட்டின 2425 | செல்வச் செழிப்பில் இருக்கும் குழந்தைகளுக்கு பழங்கள் உணவாகக் கொடுக்கப்படுகின்றன. அதேவேளை இக்குழந்தைகளின் உணவானது சமசீர் உணவாகவும் சத்தான உணவாகவும் அமைகின்றது. |

| இ. உடல் ஆரோக்கியம் | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| புதிய கட்டில் | புறம் 82: 14 | குழந்தை ஈன்ற தன் மனைவிக்கு புதிய கட்டில் அமைக்கிறான் கணவன். |
| மான் தோல் | பெறும் 8990 | பிள்ளையை ஈன்ற தாயும் குழந்தையும் மான் தோல் போர்த்தப்பட்ட தரையில் உறங்குகின்றனர். |
| சுத்தத்தைப் பேணுதல் | அகம் 86: 11<br>நற்றிணை 370: 23<br>பதிற்று 16: 34<br>மலை 253254 | குழந்தையை ஈன்ற தாய் குளத்தில் குளித்து, உடலில் வசனைத் திரவயங்களைப் பூசிக் கொள்கிறாள். இதன் வாயிலாக தாய்க்கு நன்கு பால் சுரக்கும் என்ற நம்பிக்கை உண்டு. |
| மனைவிக்கான தேவைகள் | குறுந் 8: 46 | குழந்தையை ஈன்ற தன் மனைவியின் பல்வேறு தேவைகளை கணவன் செய்ய துணிகின்றான். |

### iv.கல்வி முறை

மனிதனின் அறிவு வளர்ச்சிக்கு கல்வி மிக அவசியம். குழந்தைக்கான அதிகாரப்பூர்வமற்ற கல்வி குடும்ப உறுப்பிணர்கள் மூலமாக மறைமுகவாகவும், அதிகாரப்பூர்வக் கல்வி கல்விச்சாலைகள் மூலமாகவும் நடைப்பெறுகிறது (Shiza Mozhi, 2014, p.437). உயரியச் சிந்தனை எனப்படுவது குழந்தையின் உடல் மற்றும் உள வளர்ச்சியைப் பொறுத்து அமைவதால், குழந்தைப் பிறந்தவுடன் குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கல்வி கற்கும் முறைப் பற்றிய குறிப்புகளை சங்க இலக்கியங்களில் பல்வேறு காண முடிகின்றது. அதன் விவரங்கள் பின்வரும் அட்டவணை 4 இல் விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4: கல்வி முறை**

| அ. அதிகாரப்பூர்வக் கல்வி | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| தாய்மொழிக் கல்வி | பரி 11: 8788 | குழந்தைகளுக்கு கல்விச்சாலையில் தமிழ் எழுத்துகள் சிறு வயது முதற்கொண்டே அறிமுகம் செய்யப்படுகின்றன |

| | | |
|---|---|---|
| மாணவர் கடமை | புறம் 183: 12 | ஆசிரியர் கற்றுத்தரும் கல்வியை மாணவர்கள் ஆழமாகக் கற்று தெளிவடைய வேண்டும். இதனால் ஆசிரியரின் பாரம் குறையும். அதேவேளை மாணவர்கள் ஆசிரியரின் கோபத்திற்கு ஆளாகக் கூடாது. |
| கேள்விக் கேட்கும் திறன் | புறம் 237:5 | மாணவர்கள் கேள்விக் கேட்கும் திறன வளர்த்துக் கொள்வதன் வாயிலாக கற்கும் கல்வியைப் பிழையில்லாமல் கற்க முடியும். |
| மதச்சார்புடைய கல்வி மடங்கள் | மதுரை 468-488<br>பட்டின 5355 | புத்த மதம் மற்றும் ஜைன மதத்தைப் போதிக்கும் கல்வி மடங்கள் வேத அறிவை மாணவர்களுக்கு போத்தித்தல் |
| கல்வி கற்காத குழந்தைகள் | அகம் 127: 15 | சிறு வயது முதற்கொண்டே முறையான கல்வியறிவு பெறாத குழந்தைகள் தவறான செயல்களில் ஈடுபடுதல் |

| ஆ. அதிகாரப்பூர்வமற்றக் கல்வி | | |
|---|---|---|
| **குறிப்பு** | **பாடல் வரிகள்** | **விளக்கம்** |
| வீர உணர்வும் நாட்டுப்பற்றும் | புறம்74:12, 86:46, 89:5, 1-10 | குழந்தைகளுக்கு சிறு வயது முதற்கொண்டே வீர உணர்வு நாட்டுப்பற்றும் குடும்ப உறுப்பிணர்களால் ஊட்டப்படுகிறது. இதனாலே சிறு வயதிலும் நாட்டைக் காக்க வேண்டி பிள்ளைகள் போர்களம் செல்லவும் துணிகின்றனர். |
| பெரியோரை மதித்தல் | பதிற்று 79:3, 70: 20-22 சிறு 23 | பெரியோரைக் கண்டதும் இரு கரம் கூப்பி வணக்கம் சொல்லி மரியாதையைப் புலப்படுத்த வேண்டும். |
| நல்ல பழக்க வழக்கங்கள் | குறிஞ்சி 13-18<br>அகம் 304:19<br>புறம் 187:1-4, 214:1-2<br>கலி 133: 6-14<br>நற்றிணை 110: 11-13 | ஒருவர் எப்பொழுதும் நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடித்து தனது நன்நடத்தையை பாதுகாக்க வேண்டும். இல்லையினில் அவரை இந்த சமூகம் ஒதுக்கி வைத்து விடும். |
| உண்மை பேசுதல் | ஐங் 287: 3-4, 472: 3-5<br>நற்றி 310:10-11,<br>283: 6-8, 1:1 | பொய் பேசுதல் மிக இழிவான செயலாகக் கருதப்படுகிறது. விளையாட்டிற்காகக் கூட பொய் பேசக் கூடாது என்று வலியுறுத்தப்படுகிறது. உண்மையை மட்டும் பேசினால் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. |
| மற்றவரோடு பகிர்தல் | பதிற்று 38: 13-16<br>புறம் 46: 3-4, 182<br>நற்றி 186: 8, 210: 5-9 | குழந்தைகள் தங்களுடைய உணவு, விளையாட்டுக் கருவிகள் போன்றவற்றை மற்றவரோடு பகிர்ந்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். |
| கர்மப் பலன் | புறம் 176:78,192:11 194:6 7, 236:1012<br>குறுந் 366:1112 | ஒருவர் செய்யும் செயலுக்கு ஏற்பவே அவரின் கர்மப் பலனும் அமயும். நல்லது செய்தால் நன்மையும் தீயவைச் செய்தால் தீமையும் தான் கிடைக்கும். |

| | | |
|---|---|---|
| தர்மம் செய்தல் | *பரி 10: 87-88*<br>*புறம் 29:2026, 72:17-19,*<br>*பதிற்று 20:21-27, 6:16-20*<br>*கலி 2:11-19, 14:14-1527:* | தர்மம் செய்யும் செயல் மிகவும் ஊக்குவிக்கப் படுகிறது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு தர்மம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். |
| இறை வழிபாடு | *மதுரை 461-466*<br>*பரி 8:125-126, 17:35-39* | பெற்றோர்கள் கோவிலுக்குச் செல்லும்போது தங்கள் குழந்தைகளையும் அழைத்துச் சென்று வழிபாடு மேற்கொள்கின்றனர். |
| புறம் பேசுதல் | *மலை 77-80*<br>*கலி 43:18-19* | பிறரைப் பற்றி புறம் பேசுதல் இழிவான செயலாகக் கருதப்படுகிறது. |
| செய்நன்றி மறத்தல் | *புறம் 34: 5-7*<br>*குறுந்தொகை 115: 1*<br>*கலி 34: 4-5, 149: 4-12* | செய்நன்றி மறத்தல் பெரிய பாவமாகக் கருதப்படுகிரது. அதேவேளை மற்றவருக்கு உதவும் வாய்பிற்காக காத்திருப்பதே உத்தமம். |
| சோம்பலை தவிர்தல் | *நற்றிணை 252:4, 214:1-2*<br>*அகம் 173:1-3, 231:1-3*<br>*புறம் 182:3 பதிற்று 70:1* | லொருவரின் ஏழ்மைக்கு காரணம் சோம்பலேயாகும். ஆகவே வாழ்க்கையில் வெற்றிப் பெற சோம்பலைத் தவிர்க்க வேண்டும். |

**v. விளையாட்டு முறை**

குழந்தைகள் என்றாலே விளையாட மிகவும் விரும்புவர். விளையாட்டு என்பது உடல் வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது (Sangar, 2011, p.155). பண்டையக் காலத்தில் குழந்தைகள் விளையாடிய விளையாட்டுகளைப் பற்றிய குறிப்புகளை சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. அப்படி சங்க காலத்தில் குழந்தைகளால் விளையாடப்பட்ட விளையாட்டுகளை பின்வருமாறு பிரிக்கலாம்.

ii. குழு விளையாட்டு

iii. ஆண் குழந்தைகள் விளையாட்டு

iv. பெண் குழந்தைகள் விளையாட்டு

v. இருபாலரும் விளையாடும் விளையாட்டு

vi. உடல் உறுப்புகள் பயன்படுத்தும் விளையாட்டுகள்

vii. அறிவுத் திறனை பயன்படுத்தும் விளையாட்டு

viii. நீர் விளையாட்டு

**vi. குழந்தைகளுக்கான வீட்டுப் பொறுப்புகள்**

குழந்தைகள் என்றால் சாப்பிட்டு நன்கு விளையாடி, பிறகு தூங்குவதைத் தான் வழக்கமாகக் கொண்டிருப்பர் என்று அர்த்தமாகாது. சங்க இலக்கியங்களில் பிள்ளைகளுக்கு பெற்றோர்களால் பல்வேறு பொறுப்புகள் வழங்கப்பட்டு அது உயரியச் சிந்தனைக்கு வித்திட்ட பல்வேறு குறிப்புகளைக் காண முடிகின்றது (Murugesan, 2008, p.12). அதன் விவரங்கள் அட்டவனை 5 இல் கீழ்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5: குழந்தைகளுக்கான வீட்டுப் பொறுப்புகள்**

| குறிப்பு | பாடல் வரிகள் | விளக்கம் |
|---|---|---|
| வேலை செய்யும் இடத்தில் உதவுவதல் | *புறம் 32:7-9, 206:11-12, 324: 3-9, 320:8-9, 322:4-6, 327:1-2*<br>*நற்றிணை 45:1-3, 80:1-2, 389:1-5,*<br>*அகம் 20:1-10, 140:5-7, 206:5, 290:1-8, 387:4-7, 399:11-12*<br>*பெறும் 268-271*<br>*சிறு 34-37*<br>*மலை 253-255* | சிறு வயது முதற்கொண்டே குழந்தைகளை பெற்றோர்கள் தாங்கள் செய்யும் வேலையில் ஈடுபடுத்திக் கொண்டு அவர்களுக்கு தாங்கள் செய்யும் தொழிலுக்கு தேவையான திறன்களை அறிமுகம் செய்வார்கல் பெற்றோர்கள். குறிப்பாக சிறு வியாபாரம் செய்தல், பானை வனைதல், கால்நடை வளர்த்தல், மீன் வளர்த்தல் போன்ற தொழில்களை குழந்தைகளும் செய்வார்கள். |
| வீட்டு வேலைகள் செய்ய உதவிவதல் | *குறுந்தொகை 365: 1-3, 361*<br>*பெறும் 97-98*<br>*அகம் 60: 3-5* | பெண் குழந்தைகள் தங்களின் தாயாருக்கு வீட்டு வேலகள் செய்ய உதவுவார்கள். குறிப்பாக தண்ணீர் எடுத்து வருதல், தோட்ட வேலைகள் செய்தல், சமைத்தல், உணவு பரிமாறுதல் போன்ற வேலைகள் செய்வார்கள். |

### vii. குழந்தைகளுடான உறவு

குழந்தைகள் என்றாலே பாசத்திற்கு ஏங்குபவர்கள். ஆக அக்குழந்தைக்குத் தேவையான அன்பையும் பாசத்தையும் வழங்கு மனரீதியாக நல்ல குழந்தைகள் வளர்க்கும் பொறுப்பு பெற்றோர்களையேச் சேர்கிறது (Arokiaswami, 2011, p.88). அதன் விவரங்கள் அட்டவனை 6 இல் கீழ்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6: குழந்தைகளுடான உறவுகள்**

| *அ. குழந்தை பிறப்பு* | | |
|---|---|---|
| குறிப்பு | பாடல் வரிகள் | விளக்கம் |
| தாயின் பாதுகாப்பு | *பரி 15: 46-48, 9: 58-66*<br>*மதுரை 461-465* | கூட்ட நெரிசலில் குழந்தையின் கையை நன்கு கெட்டியாக தாய் பிடித்து இருத்தல். |
| கண்டிப்புடன் வளர்த்தல் | *குறுந்தொகை 397: 4-8*<br>*கலி 82: 20-25, 84: 20-32* | குழந்தைகள் தவறு செய்தால் தண்டனை வழங்கி தாயானவள் கண்டிப்புடன் நடக்கிறாள். |
| பிள்ளையின் மீதான நம்பிக்கை | *குறுந்தொகை 361:1-6* | பிள்ளையின் மீது மற்றவர் சுமத்தும் வீண்பழிகளை தாய் நம்பாமல் தன் பிள்ளையின் மீது முழு நம்பிக்கை கொள்கிறாள். |
| தந்தையின் மகிழ்ச்சி | *நற்றிணை 221: 12-13*<br>*புறம் 92: 1-3*<br>*ஐங் 403:1-2, 410:1-2*<br>*அகம்54:16-19, 197: 11* | வேலைக்குச் சென்ற தந்தை மிக மகிழ்ச்சியாக வீடு திரும்புவது தனது குழந்தையின் முகத்தைக் காண வேண்டித்தான். அதுப்போல குழந்தையும் தந்தையின் வரவிற்காக வாசலிலேயே காத்திருக்கும். |
| தந்தையுடனான நெருக்கம் | *ஐங் 401:1-6, 402:1-2 403:1 -5, 409:1-6*<br>*குறுந்தொகை 359:2-6, 366:3-5* | பிள்ளை வீட்டிற்கு திரும்பும் தந்தையுடன் விளையாச ஆசைப்படுகிறது. தூங்கும் போது கூட குழந்தை தந்தையைக் கட்டிப்பிடித்து தான் தூங்குகிறது. |

| | | |
|---|---|---|
| விரிசலை தவிர்தல் | *அகம்16:1-19, 66: 26, 76 நற்றிணை 166: 7* | கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளால் ஏற்படும் விரிசலை தீர்க்கும் மருந்தாக குழந்தை செயல்படுகிறது. |
| உடன் பிறந்தோர் உறவு | *குறுந்தொகை123:5,129: 1 நற்றிணை 127, 172: 4-6 புறம்342:14-15, 345:12-15, 353:15 -17, 354:3, 275: 8-9* | மூத்த குழந்தைகள் இளைய குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும். அதுப்போல குழந்தைகள் தங்களின் இரகசியங்களை தங்கள் உடன் பிறப்போடித்தான் பகிர்ந்துக் கொள்வார்கள். |

## சங்க இலக்கியத்தில் உயரியச் சிந்தனைப் பற்றிய மதிப்பீடு

சங்க இலக்கியத்தில் மேற்காணும் குறிப்புகளை அலசி ஆராய்ந்தால், பண்டைத்தமிழர்கள் குழந்தை வளர்ப்பில் குறிப்பாக மூளையின் வளர்ச்சிக்கு எந்த அளவு முக்கியம் அளித்தார்கள் என்ற உண்மை விளங்கும். சங்க இலக்கியத்தில் உயரியச் சிந்தனைப் பற்றிய மதிப்பீட்டை நாம் பின்வரும் வரிப்படத்தின் மூலமாக விளக்கலாம்.

**வரைப்படம் 2 : சங்க இலக்கியத்தில் உயரியச் சிந்தனைப் பற்றிய மதிப்பீடு**




## முடிவுரை

ஒரு குடும்பத்தில் குழந்தையின் வரவானது அனைத்து தரப்பினராலும் மிக ஆவலாக காத்திருக்கபடுவதால், அது நேர்மறையான எண்ணங்களை விதைத்து, குழந்தை நன்கு வளர்வதற்கான நல்ல சூழலை உருவாக்குகின்றது (Indrani, 1994, p.97). அதேவேளை கருவுற்ற காலத்தில் தாய்க்கு ஏற்படும் நேர்மறை எண்ணங்களும், தாய் உட்கொண்ட சத்தான உணவும் குழந்தை கருவில் ஆரோக்கியமாக வளரும் சூழலை ஏற்படுத்துகிறது. கணவனின் பாசமும் பணிவடையும் மனைவிக்கு ஆரோக்கியமாக குழந்தையை பெற்றெடுக்கும் வாய்ப்பை வழங்கிறது.

அதேவேளை குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தைக்கு நோய் தடுப்பு உள்ள தாய்பால் நீண்ட நாள் கொடுத்தும், சத்தான உணவுகள் வழங்கியும் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் மூளை வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தையின் உடல் ஆரோக்கியம் கருத்தில் கண்டு குழந்தையை நெருங்கும் தாய் சுத்தத்தைப் பேணுகிறாள். அதேவேளை தாயானவள் தன்னை அலங்காரம் செய்துக் கொண்டு நெருங்குவதால் குழந்தையின் அந்த பிஞ்சு உள்ளத்தில் நல்ல சிந்தனைகள் அப்பொழுதே விதைக்கப்பட தொடங்குகின்றன (Murugesan, 2008, p.12).

ஒரு குழந்தைக்குத் தேவையான அடிப்படை அறிவு, திறன் மற்றும் பண்புகள் வீட்டிலேயே மறைமுகமாகவும், நேரிடையாகவும் போதிக்கப்படுகின்றன. எது செய்யத்தக்கவை, வீட்டில் உள்ள பெரியோரும் இக்குழந்தைகளுக்கு முன் உதாரணமாய் இருக்க எது செய்யத் தகாதவை என்ற நன்னெறிப் பண்புகள் மிக கவனமாக இளம் வயதிலேயே விதைக்கப்படுகின்றன (Salini, 1995, p.10). அதேவேளை வாழ்க்கைக்குத் தேவையான திறன்கள் சிறு சிரு வீட்டு வேலைகள் செய்வதன் வாயிலாகவும், பெற்றோருக்கு வேலை செய்யும் இடத்தில் செய்வதன் வாயிலாகவும் கிடைக்கப் பெறுகின்றன. இதனால் வருங்காலத்தில் பெரியவர் ஆனதும் தனது சுய காலில் இவர்களால்

நிற்க முடிகின்றன தன்னம்பிக்கையையும் இது வளர்க்கிறது.

அறிவு வேண்டி கல்விச்சாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு கல்வியின் அவசியம் நன்கு உணர்த்தப்படுகின்றது. ஆசிரியர்களுக்கான உரிய மரியாதை, கல்வி கற்றல்தான் மதிப்பும் மரியாதையும் கிட்டும் என்ற சிந்தனை சங்க காலத்தில் நம்மால் காண முடிகின்றது. அதுவும் குறிப்பாக ஆண் பிள்ளைகளுக்கு நிகராக பெண் பிள்ளைகளுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு தக்க சான்று சங்க காலத்தில் உள்ள பெண் புலவர்களின் எண்ணிக்கையேயாகும். 473 சங்க காலப் புலவர்களில் 43 பேர் பெண் புலவர்கள். இது உலகில் தோன்றிய மற்ற நாகரீகங்களான சீனம், கிரேக்கம் போன்றவற்றைக் காட்டிலும் மிக அதிகம் (Gloria Sundaramathy, 1975, p.62).

அதேவேளை ஆன்மிக வளர்ச்சிக்கும் முக்கியத்தும் அளித்து குழந்தைகளுக்கு சிறு வயது முதற்கொண்டு சமய அறிவு போதிக்கப்பட்டுள்ளது. கோவில் வழிப்பாட்டில் இசைப்பயிற்சியும் அளித்து புத்தாக்கச் சிந்தனை தட்டியெழுப்பப் பட்டுள்ளது. அதேவேளை விளையாட்டுகளின் மூலமாக அறிவுக்கும், உடல் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது (Kathir Mahadevan, 1981, p.164). குடும்பத்தில் கிடைக்கும் அன்பும் பாசமும் நேர்மறை எண்ணங்களுக்கு வித்திட்டு ஆரோக்கியமான முழந்தை வளர்வதையும் உறுதிச் செய்கிறது. அந்த வகையில் சங்க இலக்கியப் பாடல்கள் வாயிலாக உயரியச் சிந்தனைகள் பற்றிய பழந்தமிழர் கொள்கையினை நம்மால் அறிந்துக் கொள்ள முடிகின்றது.

## References


Abdul Fatah Hasan. (2001). *Pemikiran keseluruhan otak*. Kuala Lumpur: Utusan Publications.

Arokiaswami, M. (2011). *The classical age of the the tamils*. (3 ed.). Chennai: University Of Madras.

Baktavatsala Barati, C. (1990). *Paṇpāṭṭu māṉiṭaviyal*. Chennai: Manivasagar Pathippakam.

Campbell, F., & Singer, G. (1979). *Brain and behaviour: Psychobiology of everyday life*.

Melbourne: Pergamon Press.

Gilling, D., & Brightwell, R. (1982). *The human brain* . London: Orbis Publishing.

Gloria Sundaramathy, L. (1975). The women poets in cankam age. In *Journal Of Tamil Studies* (Vol. 8, pp. 62-79). Chennai: International Institute of Tamil Studies.

Indrani, M. (1994). The sweet home. In M. Valarmathi (Ed.), *The Contributions Of The Tamils To Indian Culture* (Vol. 3, pp. 88-103). Madras: International Institute of Tamil Studies.

Kathir Mahadevan, C. (1981). *Cultural heritage of ancient tamils*. Madras: Lakshmi Publications.

Kogilavani, S. (2004). *Caṅka ilakkiyattil tāy- cēy uṟavu*. Chennai: T.Barker.

Mansor Sukaimi. (2006). *Anak cerdik, anak mulia, anak indah*. Singapura: Nury Singapura.

Mohd Yusof Hasan. (2002). *Pemikiran saintifik: Spb4l*. (2 ed.). Petaling Jaya: Pearson Education Malaysia Sdn.Bhd.

Murugesan, K. (2008). *Caṅka ilakkiya tēṉamutam*. Chennai: Naam Tamilar Pathippakam.

Rajalakshmi, M. A. (1975). Women in the age of cankam. In *Journal Of Tamil Studies* (Vol. 8, pp. 88-92). Chennai: International Institute of Tamil Studies.

Rajendran, N. S. (2013). *Higher order thinking skills: Theory & practice.* Tanjung Malim: Universiti Pendidikan Sultan Idris.

Salini, I. (1995). *Caṅkat tamiḻariṉ maṉitanēya maṇineṟikaḷ.* Chennai: International Institute of Tamil Studies.

Shiza Mozhi, T. (2014). Kalvi vaḷarccikku vaḻikāṭṭiya ilakkiyaṅkaḷ. In R. Krishna Moorthy, R. Vengkadesan & M. Rajantheran (Eds.), *Payaṉpāṭṭiyal Pārvaiyil Tamiḻ Ilakkiyaṅkaḷum Āvaṇaṅkaḷum* (Vol. 1, pp. 437-442). Chennai: Semmuthai Pathipakam.

Saranggabani, R. (2006). Caṅkakāla paḻakka vaḻakkaṅkal. In S. Nadana Sabapathy & T. Neduncheliyan (Eds.), *Tolkāppiyam Caṅkat tamiḻ: Ōr Putiya Pārvai* (pp. 37-54). Annnamalai Nagar: Annamalai Palkalai Kalagam.

Suppureddiyar, N. (1981). *Akattiṇaik koḷkaikaḷ.* Chennai: Pari Nilayam.

Thachana Moorthy, A. (2005). *Tamiḻar nākarikamum paṇpāṭum*. (2 ed.). Chennai: Yaal Veliyeetu.

Thani Nayagam, X.S. (1997). *Tamil culture and civilization; readings: The classical period*. Chennai: International Institute of Tamil Studies.

Zvelebil, K. (1973). *The smile of murugan: On the tamil literature of south india*. Netherlands: E.J.Brill.

# சோழர் காலத் தமிழ்ச் சமுதாயம் மனுதர்மச் சமுதாயமா?
# Is Chola Period Tamil Society a *Manu Dahrma* Society?

மு.கயல்விழி / M.Kayalvizhy[1]


## Abstract

The *Chola* period is considered a golden period in the history of Tamil Nadu. Tamil Nadu reached its peak politically, socially, economically and culturally during this reign. Nevertheless, it was evident that the *Chola* kings, who were of Tamil origin, gave much importance to the *Brahmins* in all aspects of life. These kingswere the stringent followers of*Manu dharma*, which was introduced by the *Aaryans*. Hence, the *Brahmins*gained supremacy in the *Chola* epoch: a considerable number of *Sathurvedhi Mangalam* was established exclusively for the *Brahmins*, lands were donated solely to the *Brahmins*(most of the time by encroaching lands owned by the Tamils within the country),the *Brahmins* dominated essential positions like *Gurus*, chief ministers, army chiefs and other higher official*s*, the temples were managed under the administration of the *Brahmins*, and the *Brahmins* subjugated the judicial department. In addition, the *Chola* kings established many Sanskrit educational intuitions all over the country singularly for this group besidesbestowingthem various grants. The degree of priority given to the *Brahmins* by the *Chola* kings could also be clearly seen by the *Brahmins*' responsibility in conducting all the coronations during this period. The Chola kings implemented a strict communal system at that time.



Date of submission: 2020-10-05
Date of acceptance: 2020-11-05
Date of Publication: 2020-12-10


Corresponding author's Name: M.Kayalvizhy
Email: kayalarul22@gmail.com


**Key Words:** Manu dharma, golden period, brahmins domination, village and lands, various donations

### முன்னுரை

இந்திய வரலாற்றில் தலைசிறந்த காலமாகச் சோழர் காலத்தைக் கொள்வர். இது தமிழகத்தின் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. அரசியல், சமுதாயம், பொருளாதாரம், சமயம், கலை, இலக்கியம், பண்பாடு போன்று எல்லாத் துறையிலும் தமிழகம் முன் எப்போதும் இராத உன்னத நிலையைச் சோழர் காலத்தில் எட்டிற்று. சோழர் காலத்தில் மக்கள் மன நிம்மதியுடனும் மகிழ்வுடனும் வாழ்ந்தனர் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள. ஆனால் அவர்கள் சமூகத்திலும் ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் செய்தன. உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பாகுபாடும் அதில் காணப்பட்டது. உயர் குலத்தோரான பிராமணர் ஒரு பிரிவாகவும் பிற இன மக்கள் மறுபிரிவாகவும் பிரிந்து கிடந்தனர். இறுகிய சாதி முறை அமைப்பே அங்குக் காணப்பட்டது. இதைத் தடுத்திருக்க வேண்டிய சோழ மன்னர்கள் யாது நிர்ப்பந்தத்தாலோ இதை ஆதரித்துப் போற்றினர். எனவே சாதி முறை அவர்கள் காலத்தில் பல்கிப் பெருகியது. ஒரு வகையில் பார்த்தால் சிறப்பாக ஆட்சிபுரிந்த அவர்கள் வீழ்ச்சிக்கு இம்முறையே காரணமாய் அமைந்தது.

அனைத்துத் துறையிலும் மதியூகத்துடன் செயல்பட்ட சோழப் பெருவேந்தர்கள் யாது காரணத்தாலோ பிராமணர்களைக் கண்டு

[1] The author is an Assistant Professor in the department of Tamil, Pachayappas College for women, Kancheepuram, Tamil Nadu. kayalarul22@gmail.com

அஞ்சினர். எனவே அவர்களை ஆதரித்துப் போற்றி அவர்கள் கொணர்ந்த மனு தர்மக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டனர். அவர்களே மனு தர்மத்தை முதன் முதலில் தமிழகத்தில் புகுத்தியவராவர். சோழர் சமுதாயத்தில் பிராமணர்கள் மிகவும் உயர்வான நிலையைத் துய்த்தனர். தமிழ் வேந்தர்களான சோழர்களும் பாண்டியர்களும் மனு தர்மக் கோட்பாட்டைத் தடையேதும் கூறாமல் ஏற்றுக்கொண்டது வரலாற்றில் வியப்புக்குரிய நிகழ்வாகும். இவர்களுக்கு முன் ஆண்ட பல்லவ வேந்தர்கள் பிராமணர்கள் என்ற போதிலும் அவர்கள் மனுதர்மத்தைப் போற்றினாரில்லை என்பதை ஈண்டு எண்ணிப் பார்க்கலாம். சோழர் காலச் சமூகத்தில் மனுதர்மக் கோட்பாடு நாட்டின் தர்மமாகக் கருதப்பட்டது. சோழப் பெருவேந்தர்கள் எவ்வாறு எல்லா நிலையிலும் பிராமணர்களைப் போற்றி இத்தர்மத்தைக் கட்டிக் காத்தனர் என்பதையும் மனு தர்மம் எவ்வாறு சோழ நாட்டில் மேலோங்கி நின்றது என்பதையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மனு தர்மக் கோட்பாடு

மனு தர்மம் என்பது ஆரியர்களின் வாழ்வியல் நிலையாகும். இது ஆரிய வர்த்தனம் என்ற வட இந்தியாவில் தோன்றிய முறையாகும். இத்தர்மத்தை எடுத்துரைக்கும் நூல் மனு ஸ்மிருதி என்று பெயர். இந்தியாவில் சாதி முறையைக் கூறும் முதல் நூல் இதுவேயாகும். இந்நூல் வடமொழியில் மனு என்ற முனிவரால் கி.மு. 1600 ஆண்டளவில் இயற்றப்பட்டது. இது 3 பகுதிகளையும் 12 அத்தியாயங்களையும் 2685 செய்யுள்களையும் கொண்டுள்ளது. வட மொழியில் காணப்பட்ட இந்நூலைக் கி.பி. 1794 இல் சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones) என்ற மேல்நாட்டு அறிஞர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இந்நூல் மூன்று விதமான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. அவை வருமாறு:

1. சாதி முறையின் அமைப்பு
2. பெண்களின் நிலை
3. வருணாசிரமத் தர்மம்

இக்கோட்பாட்டின்படி பிரம்மாவின் தலையிலிருந்து பிராமணர்களும் தோளிலிருந்து சத்திரியர்களும் வயிற்றிலிருந்து வைசியர்களும் காலிலிருந்து சூத்திரரும் தோன்றினர். இக்கொள்கையின்படி பிராமணர்கள் உயர்ந்தோராகவும் சத்திரியர், வைசியர், சூத்திரர் அடுத்தடுத்த நிலையிலும் வைக்கப்பட்டனர். அவரவர் தமது குலதருமத்தை தவறாமல் பின்பற்ற வேண்டும் என்பதை இந்நூல் வலியுறுத்தியது. மேலும் இந்நூல் சாதி முறையின் சிறப்பை வலியுறுத்தியது. இம்முறையின் மூலம் பிராமணர் உயர்வு, சாதி முறையின் சிறப்பு ஆகிய கோட்பாடுகள் சமூகத்தில் நிலைபெற்றன. இவ்வாறான கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட சமுதாயமே வடஇந்திய அரசுகளில் (மகாஜனப் பதங்களில் Mahajanapathas) காணப்பட்டது. வடஇந்தியாவில் இருந்த ஆரிய அரசுகள் அனைத்தும் மனுதர்மத்தைத் தீவிரமாகப் பின்பற்றின. ஆனால் திராவிட அரசர்களான குறிப்பாகத் தமிழரான சோழர் மற்றும் பாண்டிய மன்னர்களும் இம்முறையைத் தீவிரமாகப் பின்பற்றியது தமிழக வரலாற்றில் வியப்புக்குரிய நிகழ்வாகும் (பாண்டியர் வரலாறு, 2000, p.96).

## சோழர் காலச் சமுதாய அமைப்பு

சோழர் காலச் சமுதாயம் ஏற்றத் தாழ்வுகள் கொண்ட சமுதாயமாக விளங்கியது. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இதில் காணப்பட்டது. “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற வள்ளுவரின் கோட்பாடு யாண்டும் பின்பற்றப்படவில்லை. அனைத்துச் சாதியினரும் தமக்கென்று தனிக்கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு அதை வழுவாமல் பின்பற்றி வாழ்ந்தனர். மேலும் இச்சமுதாயம் தொழில் அடிப்படையிலும் (சான்று: தச்சர், கொல்லர், வண்ணார்) வணிக அடிப்படையிலும் (சான்று: நானா தேசிகர், வளஞ்சியர், மணிக் கிராமத்தார்) சமய அடிப்படையிலும் (சான்று: சிவப் பிராமணர், ஸ்ரீவைஷ்ணவர்) என்று பிரிந்து கிடந்தது.

ஒவ்வொரு சமுதாயமும் தம் தொழிலையும் தம் சாதிக்குரிய கடமைகளையும் தவறாமல் பின்பற்றினர். மேல் வகுப்பு, கீழ் வகுப்பு என்ற பிளவு இங்குப் பரவலாகக் காணப்பட்டது. இதன் காரணமாய்ச் சமூக மோதல்கள் தோன்றின. ஆனால் இதைப் பெரிதாக்காமல் சோழ மன்னர்கள் தடுத்து நிறுத்தினர். சில ஆய்வாளர்கள் "அக்காலச் சாதியினர் பிறசாதியினர் விஷயத்தில் தலையிடாமல் தம் கடமைகளை நன்முறையில் செய்து வந்தனர்" என்று கருதுகின்றனர் (சதாசிவப் பண்டாரத்தார், 2008, p.472) ஆனால் பல்கிப் பெருகிய சாதி முறைகள் கொண்ட ஒரு சமுதாயத்தில் பூசல்கள் தோன்றாமல் இருப்பது அரிதன்று. எனவே அக்காலத்திலும் சாதி மோதல்கள் தோன்றியிருக்கக் கூடும். ஆனால் அது பெரிதாக வெடிக்கவில்லை என்றே தெரிகிறது. சாதி முறையை சோழ வேந்தர்கள் தடுக்காத காரணத்தால் அது பல்கிப் பெருகியது. சோழர் காலத்தில் காணப்பட்ட பல்வகைச் சாதிகள் வருமாறு: (SIIVol: 6 No:33, ARE.No:271/1929, ARE. No:180/1919, SIIVol:3No:68, SIIVol:4No:556, ARE.No:72/1926)

**அட்டவணை: 1**

| | | | |
|---|---|---|---|
| 1 | சத்திரியர் | 9 | பள்ளிகள் |
| 2 | பிராமணர் | 10 | முத்திரையர் |
| 3 | வேளாளர் | 11 | அனுலோமர் |
| 4 | வணிகர் | 12 | இரதக்காரர்கள் |
| 5 | சூத்திரர் | 13 | கம்மாளர் |
| 6 | மன்றாடிகள் | 14 | தச்சர் |
| 7 | கைக்கோளர் | 15 | கொல்லர் |
| 8 | முதலிகள் | 16 | ஆயோக்கவர் |

## சோழ நாட்டில் பிராமணர் நிலை

பரந்து விரிந்த சோழப் பேரரசில் பிராமணர்கள் பரவி வாழ்ந்து வந்தனர். இவர்கள் பெரும்பான்மையானோர் கி.பி. 6 முதல் 8 ஆம் நூற்றாண்டு வரையிலான அளவில் வட இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து வந்தவராவர். அவர்கள் வடமொழிக் காவலர்களாகவும் தமிழை மதிக்காதவர்களாகவும் தாம் பிராமணர் என்ற பெருமிதம் கொண்டவர்களாகவும் திகழ்ந்தனர். சோழ மன்னர்கள் தம் பங்கிற்கு ஏராளமான வடமொழிப் பிராமணர்களை வட இந்தியாவிலிருந்து அழைத்து வந்து தமிழகத்தில் குடியேற்றினர் (பிள்ளை, 2013, p.317). சான்றாக முதலாம் இராஜேந்திர சோழன் கங்கைக் கரையிலிருந்து ஏராளமான பிராமணர்களை அழைத்து வந்து காஞ்சி மாநகரிலும் சோழ நாட்டிலும் குடியேற்றினான் என்று திருலோசன சிவாச்சாரியார் இயற்றிய சித்தாந்த சாராவளி என்ற நூலின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வீரராசேந்திர சோழன் மூன்று வேதங்களிலும் வல்ல 40,000 பிராமணருக்கு பிரம்மதேய நிலங்களை தானமாக வழங்கி சிறப்பித்தான். சோழ நாட்டில் வாழ்ந்த பிராமணர்கள் பல்வகையினர். அவர்கள் வருமாறு (சோழர் வரலாறு, 2000, p.23):

**அட்டவணை: 2**

| | | | |
|---|---|---|---|
| 1 | பிராமணர் | 12 | மகேஸ்வரர் |
| 2 | அந்தணர் | 13 | கௌணியர் |
| 3 | பூசரர் | 14 | பண்டிதர் |
| 4 | மறையோர் | 15 | நம்பி |
| 5 | பார்ப்பார் | 16 | ஆண்டார் |
| 6 | பிடாரர் | 17 | ஸ்ரீவைஷ்ணவர் |
| 7 | வேதியர் | 18 | சிவ பிராமணர் |
| 8 | பட்டர் | 19 | அகநாழிகை பிராமணர் |
| 9 | அர்ச்சகர் | 20 | முப்பது வட்டன் |
| 10 | சிவாச்சாரியார் | 21 | காணியுடைய சிவப்பிராமணன் |
| 11 | மந்திரப் பிராமணர் | | |

இது தவிரக் கர்நாடக, ஆந்திரா, கேரளா போன்ற நாடுகளிலிருந்தும் புலம் பெயர்ந்து வந்த பிராமணர்களும் பரவலாகச் சோழ நாட்டில் வாழ்ந்து வந்தனர். சோழநாட்டில் பல்வேறு கோத்திரத்தைச் சார்ந்த பிராமணர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வருமாறு (ARE.No:506/1907, ARE.

No:494/1921, ARE.No:375/1954-55, ARE. No:150/1967-68, ARE.No:557/1926)

*அட்டவணை: 3*

| | |
|---|---|
| *1.* | பரத்வாஜ கோத்திரம் |
| *2* | வசிஷ்டக் கோத்திரம் |
| *3* | காசியப கோத்திரம் |
| *4* | வச்சிய கோத்திரம் |
| *5* | அகத்தியக் கோத்திரம் |
| *6* | ஆத்திரேய கோத்திரம் |
| *7* | இரதிதார கோத்திரம் |
| *8* | கௌதமக் கோத்திரம் |

### சோழ நாட்டில் பிராமணரின் செல்வாக்கு

சோழநாடு முழுவதும் பிராமணர்கள் தனித்தும் பிற இனத்தவர் வாழ்ந்த ஊர்களிலும் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு வாழ்ந்த பிராமணர்களுக்குத் தனி ஊர்களும் தனி நிலங்களும் சோழ அரசால் வழங்கப்பட்டன. அவை வருமாறு: (SII.Vol:6 No:33, Epi.Ind.Vol No:15, ARE.No:379/1922)

*1. சதுர்வேதி மங்கலம் பிராமணர்களுக்கான ஊர் (சான்று: காவிரி*

*பாக்கத்து அவனி நாராயண சதுர்வேதிமங்கலம்)*

*2. ஏகபோக இறையிலி தனி ஒரு பிராமணருக்கு வழங்கப்பட்ட ஊர்*

*(சான்று: அன்பில் அநிருத்த பிரமாதிராயருக்கு தானம் வழங்கப்பட்ட கருணாகர மங்கலம்)*

*3. அகரம்/அக்கிரகாரம் பொது ஊர்களில் பிராமணர் வாழ்ந்த*

*தனிப்பகுதிகள் (சான்று: கோவிந்தவாடி அகரம்)*

சோழ நாட்டில் பிராமணர்களுக்கென்று ஏராளமான சதுர்வேதி மங்கலங்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் குடியமர்த்தப்பட்டனர். இச்சதுர்வேதி மங்கலங்களில் பிற இனத்தவர் குடியிருக்க அனுமதிக்கப்படவில்லை *(பாலசுப்பிரமணியம், 1978, p.318)*. இவ்வூர் நிர்வாகம் இவர்களின் கட்டுப் பாட்டிலேயே இயங்கியது. சோழர் காலத்தில் பிராமணருக்காக உருவாக்கப்பட்ட சதுர்வேதி மங்கலங்கள் வருமாறு (ARE. No:3/1907, ARE.No:379/1922, ARE.No:198/1919, ARE.No:379/1922, ARE. No:29/1910, ARE. No:393/1907, ARE.No:46/1911)

*1.* அவனி நாராயண சதுர்வேதி மங்கலம்

*2.* மதுராந்தக சதுர்வேதி மங்கலம்

*3.* இராஜராஜச் சதுர்வேதி மங்கலம்

*4.* உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலம்

*5.* கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலம்

*6.* செம்பியன் மாதேவி சதுர்வேதி மங்கலம்

*7.* சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம்

*8.* திருநாராயணன் சதுர்வேதி மங்கலம்

*9.* ஸ்ரீதிருபுவன மாதேவி சதுர்வேதி மங்கலம்

*10.* குலோத்துங்க சோழ நியாயப்பரிபாலன சதுர்வேதி மங்கலம்

*11.* மனு குலமெடுத்த சதுர்வேதி மங்கலம்

*12.* சிங்களாந்தக சதுர்வேதி மங்கலம்

*13.* சாளுக்கியக் குல காலச் சதுர்வேதி மங்கலம்

*14.* முடி வழங்கும் சதுர்வேதி மங்கலம்

*15.* ஜனநாத சதுர்வேதி மங்கலம்

*16.* சோமநாத சதுர்வேதி மங்கலம்

*17.* இராஜகேசரி சதுர்வேதி மங்கலம்

*18.* இராசேந்திர சோழ சதுர்வேதி மங்கலம்

*19.* விருதராச பயங்கர சதுர்வேதி மங்கலம்

இவ்வாறு சோழநாடு முழுவதும் காணப்பட்ட சதுர்வேதி மங்கலங்களில் பிராமணர்கள் பல்வகைச் சலுகைகளைத் துய்த்து மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர்.

### பிராமணருக்குத் தானம் வழங்கப்பட்ட நிலங்கள்

சோழர் காலப் பிராமணர்கள் கல்வி அறிவு மிக்கவர்களாக விளங்கினர். பிற இனத்தவரை விட அவர்களே அறிவில் சிறந்தோராய்த் திகழ்ந்தனர். எனவே அவர்களை அரசர் முதல் ஆண்டி வரை அனைவரும் மதித்துப் போற்றினர். அவர்களின் கல்வித் திறனையும் சமய அறிவையும் மதியூகத்தையும் போற்றிப் பல்வகையான நிலங்கள் அவர்களுக்குத் தானமாக வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட நிலங்கள் வருமாறு: (Swaminathan, 1991, pp.146-147 & சதாசிவப் பண்டாரத்தார், 2008, p.456)

1. வேதம் வல்ல பிராமணர் வேத விருத்தி
2. புராணத்தில் வல்ல பிராமணர் புராண விருத்தி
3. வடமொழியில் வல்ல பிராமணர் பட்ட விருத்தி
4. மகாபாரதம் ஓதும் பிராமணர் பாரத விருத்தி
5. அர்ச்சனை வல்ல பிராமணர் அர்ச்சனா விருத்தி
6. அன்னசாலை வைத்திருக்கும் பிராமணர் சாலாபோகம்
7. வடமொழி பாஷ்யம் வல்ல பிராமணர் பாஷ்ய விருத்தி
8. பிராமண சைவ ஆசாரியர்கள் சைவ ஆச்சாரியர் காணி

### சோழப் பேரரசில் பிராமணர்களின் ஏற்றமிகு நிலை

பரந்து விரிந்த சோழப் பேரரசில் பல்வகை நிலையில் பிராமணர்கள் பங்கேற்றனர். சோழப் பேரரசின் மிக முக்கியமான பதவிகள் யாவும் அவர்களே வகித்தனர். குலகுருக்கள், அமைச்சர்கள், படைத்தலைவர் போன்றவற்றுடன் அரசின் உயர் அலுவலர்களாகவும் பிராமணர்களே பணியாற்றினர். சான்றாகச் சோழ மன்னர்களின் குலகுருவாகப் பணியாற்றிய பிராமணர்கள் வருமாறு:(SII.Vol:7No:196, SII. Vol:7 No:104, ARE.No:198/1919)

1. முதலாம் இராஜராஜன் ஈசானசிவ பண்டிதர்.
2. முதலாம் இராசேந்திரன் உலகளந்த பிரம்மராயன்
3. முதலாம் குலோத்துங்கன் திருநாராயண பட்டர்
4. விக்கிரம சோழன் ஸ்ரீகண்ட சம்பு
5. இரண்டாம் இராஜராஜன் கேசவ ஸ்வாமி
6. மூன்றாம் குலோத்துங்கன் சோமேஸ்வரர்

இது தவிர நாட்டின் மிக உயர்ந்த பதவியான முதலமைச்சர் என்ற பதவியையும் பிராமணர்களே வகித்தனர். சோழர் காலத்தில் சிறப்பாக முதலமைச்சர் பதவி வகித்த பிராமணர்கள் வருமாறு: (Epi.Gra. Ind. Vol.15)

1. சுந்தர சோழன் அநிருத்த பிரம்மராயன்
2. விக்கிரம சோழன் மறையோன் கண்ணன்

சோழநாட்டின் படைத்தலைவர்களாகப் பல பிராமணர்கள் பதவி வகித்தனர். அவர்கள் வருமாறு: (SII.Vol:2 No:31, SII. Vol:3 No:29)

1. முதலாம் இராஜராஜன் மும்முடிச்சோழ பிரம்மராயன்
2. முதலாம் இராசேந்திரன் உத்தமசோழ பிரம்மராயன்
3. வீர இராசேந்திரன் இராசேந்திர சோழப் பிரம்மராயன்
4. இரண்டாம் இராசேந்திரன் ஜெயங்கொண்ட சோழப் பிரம்மாதிராஜன்
5. முதலாம் குலோத்துங்கன் மதுராந்தக பிரம்மாதிராஜன்

இது தவிரச் சோழநாட்டின் உயர் அலுவலர்களாகப் பல பிராமணர்கள்

பணியாற்றிப் புகழ் பெற்றனர். அவர்கள் வருமாறு: (SII.Vol:2 No:140, SII.Vol:7 No:496, ARE.No:174/1915 ARE.No:198/1919 ARE.No:851/1917 ARE.No:81/1925 ARE. No:467/1925, ARE.No:420/1922).

*அட்டவணை: 4*

| | | |
|---|---|---|
| 1 | கோயில் கண்காணிப்பு அதிகாரி | உத்தமச் சோழ பிரம்மாதிராஜ கன்மி |
| 2 | நாட்டின் பெருந்தனம் | வானவன் பிரம்மாதிராஜன் |
| 3 | நாடுகூறு அதிகாரி | பரத்வாஜ மாற நாராயணன் வீரசந்தோஷ பிரம்ம சக்கரவர்த்தி, ஆதித்ய சூளாமணி பிரம்மராஜன் |
| 4 | அரசு உயர் அதிகாரிகள் | வாசுதேவ ஸ்ரீதர பட்டன் தென்னவன் பிரம்மராயன், ஆராவமுத மாதேவன், விக்கிரம சோழப் பிரம்மராயன், வீரசோழ பிரம்மராயன் |

### நிர்வாக அமைப்பில் பிராமணர்களின் பங்கு

நாட்டின் முக்கிய நிர்வாக அமைப்பில் பிராமணர்களே பெரும் பங்கு வகித்தனர். பிராமணர்கள் அதிகம் வாழ்ந்த சதுர்வேதி மங்கலத்தின் நிர்வாகச் சபையானது பிராமணர்களைக் கொண்டதாகவே இருந்தது (ARE.No:131/1904-05). இதில்,

1. மந்திரம் வல்ல பிராமணன்
2. ஓதுவித்து அறிவோன்
3. பாஷ்யங்கள் அறிந்தோன்
4. வேதம் மற்றும் சாத்திரம் அறிந்தோன்

போன்ற பிராமணர்கள் மட்டுமே இடம் பெற்றனர். இச்சபையில் பிற இனத்தார் பங்கு பெற அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பிற இனத்தவர் வாழ்ந்த ஊர்களில் உள்ள கிராமச் சபைகளில் பிராமணர்களும் இடம் பெற்றனர். அரசு அலுவலர்களும் நியாயச் சபையோரும் பொதுகிராமச் சபையாரும் தமக்கு ஏற்படும் ஐயங்களைப் பிராமணர்களைக் கொண்டே தீர்த்துக்கொண்டனர் (கிஸிணி.ழிஷீ:95/1908 09). இது தவிர நாடு முழுவதும் காணப்பட்ட கோயில் நிர்வாகத்தைப் பிராமணர்களே வகித்தனர். இந்நிர்வாகக் குழு "மூலப் பருவுடைய குழு" என்று அழைக்கப்பட்டது. இக்குழுவில்,

1. அர்ச்சகர்
2. நம்பிகள்
3. சிவபிராமணர்
4. அகநாழிகை சிவபிராமணர்
5. அபூர்விகள்
6. ஸ்ரீவைஷ்ணவர்
7. சிவயோகிகள்
8. திருப்பதிகம் ஓதுவோர்

போன்றோர் இடம் பெற்றனர் (கிஸிணி. ழிஷீ:629/1916). இவர்கள் அனைவரும் பிராமணர்களாகவே இருந்தனர். சோழ நாட்டில் அரசனுக்கு அடுத்துச் செல்வத்திலும் செல்வாக்கிலும் செழித்த கோயில்களின் நிர்வாகம் என்ற மிக உயரிய பொறுப்பைப் பிராமணர்களே மேற்கொண்டது அவர்கள் அக்காலத்தில் பெற்றிருந்த அபரிமிதச் செல்வாக்கைப் புலப்படுத்தும்.

### சோழ மன்னர்கள்மனு தர்மக் காவலர்கள்

சோழ மன்னர்கள் மனுதர்மத்தைக் காப்பதும் நான்மறைகளைப் போற்றுவதும் சாதி முறையை வளர்ப்பதும் பிராமணர்களை ஆதரிப்பதும் தம் தலையாய கடமைகளாகக் கருதினர் (கிஸிணி.ழிஷீ:261/1909). அவர்கள் வெளியிட்ட கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இலக்கியங்களிலும் வர்ணாசிரம நெறியை அவர்கள் போற்றியதைக் காணலாம். அவர்களின்

மெய்க்கீர்த்திகளே இதற்குச் சாலச்சிறந்த சான்றுகளாகும் மனு தர்மத்தைப் போற்றும் சோழமன்னர் மெய்க்கீர்த்திகள் பின் வருமாறு: (சதாசிவப் பண்டாரத்தார், 2008. pp.507529).

*"தர்மநெறி நிற்ப மனுநெறி நடத்திய*

*உடையார் ஸ்ரீ இராஜமகேந்திர தேவர்"*

*"மேவரு மனுநெறி விளக்கிய கோப்பராசகேசரி வர்மரான*

*உடையார் ஸ்ரீ வீரராஜேந்திர தேவர்"*

*"மாப்புகழ் மனுவுடன் வளர்த்த கேப்பரகேசரி வர்மரான*

*உடையார் ஸ்ரீ அதிராஜேந்திரதேவர்"*

*"முன்ன மனுவாறு பெருகக் கலியாறு வளப்பச்*

*ஸ்ரீ குலோத்துங்க சோழத் தேவர்"*

*"மண்முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்தது*

*திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழத் தேவர்"*

*"மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க*

*ஆதி அந்தணர் ஆகுதிக் கனலும்*

*மேதினி வளருஞ் சாதி ஒழுக்கமும்*

*நீதி அறமும் பிழறாது திகழ*

*இராஜகேசரி வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி*

*குலோத்துங்க சோழத் தேவர்"*

*"தருமமும் திருமறையு மோங்க*

*அமைவில்லா மனுவொழுக்க மாதியாம்படி நிலைக்க*

*திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவர்"*

*"செயல் வாய்ந்த மனுநூலும் செங்கோலுந் திரை நடப்பத்*

*திரிபுவன வீரசோழ தேவர்"*

*"ஒப்பரிய மறை நூலும் உறைதிறம்பா மனு நூலுஞ்*

*செப்பரிய வடகலையும் தென்கலையும் தலையெடுப்ப"*

*"நீதிதரு குலநான்கும் நிலைநான்கு நிலைநிற்ப*

*திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்"*

இது தவிரச் சோழர் கால இலக்கியங்களும் அக்கால மனு தர்மச் சமுதாயத்தையும் சோழர்கள் அதற்கு அளித்த ஏற்றத்தையும் விளக்குகின்றன. சான்றாக

*"மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்தும் மாறித்*

*துறைகளோராறு மாறிச் சுருதியு முழக்கமேய்ந்தெ"*

என்றும்

*"சாதிகளோன்றோடொன்று தலைத் தடுமாறியாகும்*

*ஓதிய நெறியினில்லா தொழுகக்மும் மறந்து போயே"*

என்று கலிங்கத்துப் பரணியில் ஜெயங்கொண்டார் மனுதர்ம நெறியைப் பற்றியும் சாதி முறைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். மேலும் சோழரின் கரந்தை தமிழ்ச் சங்கச் செப்பேடு பிராமணருக்குப் பிற தமிழ் இனத்தவர் கீழ்ப்பட்ட மக்கள் என்று உரைக்கின்றது. இதே கருத்தை,

*"அந்தணன் முதல் அரிப்பன் கடையாக அனைத்துச் சாதியினரும்"*

என்று வாலிகண்டபுரம் கல்வெட்டு

உரைக்கும் (SII.Vol.7 No:177). மேலும்,

*"அந்தணன் தலைப்பாக அரிப்பன்*

*கடையாக அனைத்துச் சாதியினரும்"*

என்று செங்கம் கல்வெட்டு இதை உறுதிசெய்யும் (SII.Vol.5 No:118).

சோழ மன்னர்களின் முடிசூட்டு விழா (பட்டாபிஷேகம்) என்ற மிக முக்கியமான நிகழ்வும் பிராமணர்களைக் கொண்டே நிகழ்த்தப் பட்டது. இது "திருஅபிஷேக நிகழ்வு" என்று அழைக்கப்படும். இந்நிகழ்வில் பிராமணர்களால் பொற்குடங்களில் நீர் கொணரப்பட்டு, அருகம்புல்லைக் காப்பாகப் பிராமணர்கள் அரசர்களுக்கு அணிவித்து, அம்மன்னர்களின் நெற்றியில் அவர்களே திருநீறு அணிவித்தும் அப்பிராமணர்கள் குறித்த நல் ஓரையில் வேதங்கள் முழங்க, பிராமண இராஜகுருக்கள் மணிமகுடம் சூட்டச் சோழ மன்னர்களின் முடிசூட்டு விழா இனிது நிறைவேறியது.

*"வேதங்கள் நான்கும் ஆர்ப்பத்*

*திருவபிடே கம் செய்தே*

*மறையவர் முடி எடுத்தனர்*

*மனு நெறிதலை யெடுக்கவே"*

*(கலிங்கத்து பரணி, பா:264265)*

என்று இச்செய்தியை ஜெயங்கொண்டார் அழகாக விளக்குவார். இது தவிர ஆரியர்களின் சமயச் சடங்குகளான வேள்விகளும் யாகங்களும் மறையவர்களைக் கொண்டு சோழ அரசர்களால் நிகழ்த்தப்பட்டன. இதை கீழ்கண்ட கல்வெட்டுச் செய்தி உறுதி செய்யும்:

*"உகந்த நாள் மறையவர் முகத்து கொளக்கொடுத்து*

*விசுவவோகத்தும் விளக்கமது நெறிநின்*

*றாகமமே தஞ்செய் தரைவீற்றி ருந்த"*

*(முதலாம் இராஜாதிராஜன் மெய்கீர்த்தி)*

இது தவிர சோழநாடு முழுவதும் பிராமணருக்கும் சிவ யோகிகளுக்கும் சிவபிராமணருக்கும் அபூர்விகளுக்கும் தபசிகளுக்கும் அமுது படைக்க பொன்னும் பொருளும் நிலமும் அரசும் தனியரும் வாரி வழங்கினர் (SII.Vol.3 No:35).

## சோழ நாட்டில் வடமொழிக் கல்வி நிறுவனங்கள்

சோழ மன்னர்கள் பிராமணர்களை ஆதரித்ததுடன் அவர்களின் மொழியான வடமொழியையும் நன்கு ஆதரித்துப் போற்றினர். எனவே அம்மொழியை வளர்க்கப் பல கல்வி நிறுவனங்கள் நாடு முழுவதும் தொடக்கப்பட்டன. சோழர்கள் தமிழராய் இருந்த போதிலும் பரந்த சோழ நாட்டில் ஓர் இடத்திலேனும் தம் தாய்மொழியாம் தமிழ் மொழியில் ஒரு கல்வி நிறுவனத்தையும் ஏற்படுத்தாதது வியப்பான ஒன்று. மாறாக இந்த வடமொழிக் கல்லூரிகளுக்கு அம்மன்னர்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்து அவற்றிற்கு ஏராளமான மானியங்களை வழங்கி மகிழ்ந்தனர். இக்கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டன. இது தவிரப் பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் அரசே ஊதியத்தை வழங்கியது. இக்கல்லூரியுடன் இணைந்து சில இடங்களில் மருத்துவமனைகளும் செயல்பட்டன. நாடு முழுவதும் காணப்பட்ட வடமொழிக் கல்லூரிகளும் பள்ளிகளும் வருமாறு: (ARE.No:268/1938, ARE.No:76/1932, ARE. No:333/1917, ARE.No:176/1919, ARE. No:182/1915, ARE.No:159/1925, ARE. No:512/1937, ARE.No:202/1912).

1. காமப்புல்லூர் கல்லூரி வேதப் பயிற்சி
2. ஆனியூர் கல்லூரி வேதம், வடமொழி இலக்கணம்
3. எண்ணாயிரம் கல்லூரி வேதம், மீமாம்சை
4. திரிபுவனிக் கல்லூரி சாஸ்திரப் பயிற்சி
5. திருமுக்கூடல் கல்லூரி வேதம், வியாக்கரணம், மருத்துவக் கல்லூரி
6. திருவாவடுதுறை, பெருவேலூர், திருவொற்றியூர் வடமொழிப் பள்ளிகள்

## தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பு

பிராமணர்கள் வாழ்ந்த ஊர்கள் "சதுர்வேதி மங்கலங்கள்" என்று அழைக்கப்பட்டன. ஊர்கள் என்ற அமைப்பில் அனைத்துத் தமிழ் இனத்தவருடன் பிராமணர்களும் வசித்து வந்தனர். அவ்வூர்களில் அவர்கள் வசித்த தனிப்பகுதிகள் "அக்கிரகாரங்கள்" என்று அழைக்கப் பட்டன. அவ்வூர்களில் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் "பிரம்மதேயம்" என்றும் பிற இனத்தவருடைய நிலங்கள் "வெள்ளான் வகை" நிலங்கள் என்றும் அழைக்கப்பட்டன. சில சமயம் இந்த ஊர்கள் சதுர்வேதி மங்கலங்களாக அரசால் மாற்றப்பட்டன. அந்த வகையில் அவ்வூர்களில் இருந்த பிற இனத்தவர் நிலங்கள் அனைத்தும். அவர்களிடம் இருந்து வலிந்து பறிக்கப்பட்டுக் கோயில்களுக்கு வழங்கப்பட்டன (ஷிமிமி.ஃஷிஷீறீ:2 ழிஷீ:190). பிராமணரைத் தவிரப் பிற இன மக்கள் தயவு தாட்சண்யம் இன்றி அவ்வூரை விட்டு வெளியேற்றப்பட்டனர். காலம் காலமாக அங்கு வாழ்ந்தவர்கள் தம் வீடுகளையும் நிலங்களையும் இழந்தனர். சான்றாக முதலாம் இராஜராஜன் காலத்தில் செங்கல்பட்டு மாவட்டம் "வெளிச்சேரி" என்ற கிராமம் "இராஜகேசரி சதுர்வேதி மங்கலம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதைக் கொள்ளலாம். இக்கிராமத்தில் இருந்த பிற இனத்தவர் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அக்கிராமம் முழுவதும் பிராமணர் குடியிருப்பாக மாற்றப்பட்டது. இவ்வாறு பல கிராமங்கள் சதுர்வேதி மங்கலங்களாகச் சோழர் காலத்தில் மாற்றப்பட்டன. சோழ மன்னர்கள் தமிழர்களாக இருந்த போதிலும் பிராமணர்களுக்குச் சார்பாக நடந்து கொண்ட து வரலாற்றுப் புதிராகும்.

## சட்டமும் குற்றமும் தண்டனையும்

சோழ நாட்டில் நீதி பரிபாலனம் மிகச்சரியான முறையில் பின்பற்றப்பட்ட போதிலும் பிராமணர்களுக்கு அது வளைந்து கொடுத்தது. பிராமணர்களை உயர்வாக மதித்துப் போற்றிய சோழ மன்னர்கள் குற்றம் இழைத்த பிற இனத்தவருக்குத் தயவு தாட்சண்யமின்றி தண்டனைகள் வழங்கிய போதிலும் பிராமணர்களுக்குச் சலுகை காட்டினர். சான்றாகச் சோழ இளவரசனான ஆதித்ய கரிகாலனைக் கொலை செய்த "இரவிதாசனான பஞ்சவன் பிரம்மாதிராயன்", "பரமேஸ்வரனான இருமுடிச் சோழப் பிரம்மாதிராயன்", "மலையனானூரனான தேவதாச கிரம விந்தன்" என்ற கொலையாளிகள் குற்றம் நிருபிக்கப்பட்ட போதிலும் அவர்கள் பிராமணர்கள் என்பதால் எவ்விதத் தண்டனையும் இல்லாமல் விடுதலை செய்யப்பட்டனர் (ணிஜீவீ.நிஃஷீணீ மிஸீபீ. ஃஷிஷீறீ.21 ழிஷீ:27). இதன் மூலம் கொலை முதலிய கொடும் குற்றங்கள் செய்த கொலையாளிகளும் பிராமணர்களாய் இருப்பின் மன்னித்து விடுவிக்கப்பட்டனர் என்பது புலனாகின்றது.

சோழர் ஆட்சியில் பிராமணர்கள் நீதியின் முன் உயர்ந்தோராகக் கருதப்பட்டதை இது உணர்த்தும். ஆனால் அதே சமயம் சோழ மன்னர்கள் தெய்வப்பற்று மிக்கவர்கள் என்பதால் கோயில் நிலத்தை அபகரித்தல், தெய்வங்களின் ஆபரணங்களைத் திருடுதல், அடியார்களுக்கு அமுது படைக்க வழங்கப்பட்ட பொருட்களைக் களவாடுதல், அரசுக்குச் செலுத்தவேண்டிய வரிகளை ஏமாற்றுதல், இராஜத் துரோகம் போன்ற குற்றங்களைச் செய்யும் பிராமணர்கள் தயவு தாட்சண்யமின்றித் தண்டிக்கப்பட்டனர். சான்றாகக் கீழ்க் கண்ட நிகழ்வுகளைக் காட்டலாம்:

1. திருவலத்தில் முதலாம் இராஜராஜன் காலத்தில் அவ்வூர் கோயில் நிலத்தை அபகரித்த பிராமணர்களுக்கு 74 கழஞ்சு பொற்காசுகள் அபராதமாக விதிக்கப்பட்டது (ARE.No:218/1921).
2. முதலாம் இராசேந்திரன் காலத்தில் கோயில் நிலத்தை அபகரித்த அகரம் கிராமத்தைச் சார்ந்த கிளாக்கிய அவனி பட்டன் என்பவனுடைய நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன (ARE.No:379/1922).
3. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பனந்தாளில் கோயிலில்

ஆபரணங்களைத் திருடிய அர்ச்சகர்களின் பூஜை செய்யும் உரிமைகள் பறிக்கப்பட்டன (ARE. No:112/1915).

4. ஊட்டத்தூரில் உள்ள துகை மாமணி உடையார் கோயிலில் குற்றம் செய்த பிராமணர்களின் நிலங்கள் விக்கிரம சோழன் காலத்தில் ஏலம் விடப்பட்டது (ARE. No:512/1912).

5. மேலும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இதே கோயிலில் அம்மன் ஆபரணங்களைத் திருடிய கோயில் அர்ச்சகரின் நிலங்கள், வீடு, அடிமைகள் போன்றவை பறிக்கப்பட்டுக் கோயிலுக்கு வழங்கப் பட்டது (ARE. No:490/1912).

6. சிவபுரத்தில் மூன்றாம் இராஜராஜன் காலத்தில் இரண்டு பிராமணர்கள் சிவ நிந்தனை செய்ததற்காகத் தண்டிக்கப்பட்டனர் (ARE. No:279/1927).

7. கடலூர் மாவட்டம் திருப்பாப்புலியூர் பாடலீஸ்வரர் கோயில் நிலங்கள் அக்கோயில் பிராமணர்களால் அபகரிக்கப்பட்டது. பின்பு உண்மை தெளிவாகி அப்பிராமணர் நிலங்கள் யாவும் பரிமுதல் செய்யப்பட்டு அக்கோயிலுக்கே வழங்கப்பட்டது.

இவ்வாறு சமயக் குற்றம் செய்த பிராமணர்களை மனு தர்மம் என்றும் பாராமல் சோழ மன்னர்கள் தண்டித்தனர்.

### முடிவுரை

சோழ மன்னர்கள் சமயப் பற்றுமிக்கவர்கள். ஆன்மீகமும், ஆலயங்களும் அவர்களின் இரு கண்களாகும். அவர்கள் நாடு முழுவதும் உருவாக்கியளித்த ஏராளமான ஆலயங்களே இதற்குச் சான்று. ஆலயங்களை உயிர் போன்று கருதிய அவர்கள் அவ்வாலயத்துடன் தொடர்புடைய பிராமணர்களை ஆதரித்துப் போற்றியது வியப்பன்று. கல்வி அறிவும் ஒழுக்க நெறிகளும் தோற்றப் பொலிவும் கட்டுப்பாடான வாழ்க்கை முறையும் கூர்த்த மதியும் கொண்ட அவர்களைத் தமிழ்ச் சமுதாயம் உயர்வுடனும் மரியாதையுடன் நோக்கியது. வீரமும் விவேகமும் திறமையும் அறிவும் மதிநுட்பமும் ஒருங்கே கொண்ட சோழ மன்னர்களும் அப்பிராமணர்களுக்கு உயரிய மரியாதை அளித்து அவர்களை ஆதரித்துப் போற்றினர். எனவே சாமானியரைப் பற்றி சொல்லித் தெரிய வேண்டுவதில்லை. மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்ற நிலையில் சமூகத்தின் அனைத்து நிலை மக்களும் அவர்களை ஆதரித்தல் தம் கடன் என்று எண்ணிச் செயல்பட்டனர்.

ஆரியச் சமுதாயத்தைப் போன்றே சோழர் காலத் தமிழ்ச் சமுதாயமும் மனு தர்மச் சமுதாயமாகச் செயல்பட்டது. சோழப் பெருவேந்தர்கள் மனு தர்மத்தைக் காத்தல் தம் கடன் என்று எண்ணிச் செயல்பட்டு அவற்றைப் பின்வரும் தலைமுறையினர் அறிந்து கொள்ள கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பதிய விட்டுச் சென்றுள்ளனர். பிற தமிழ் மன்னரான பாண்டிய மன்னரும் மனு தர்மத்தைப் பின்பற்றினாலும் சோழ மன்னர்களை அவர்களால் விஞ்ச இயலவில்லை. அவர்கள் ஆதரவால் மனு தர்மக் கோட்பாடு சோழ நாட்டின் சமூகத் தர்மமாகப் பின்பற்றப்பட்டது. மனு தர்மத்தை வளர்ப்பதில் சோழப் பெருவேந்தர்கள் ஆரிய அரசர்களையும் விஞ்சினர். தென் இந்திய அரசர்களில் மனு தர்மத்தைப் போற்றுவதிலும் காப்பதிலும் வளர்ப்பதிலும் சோழ வேந்தர்களுக்கு ஈடு இணை ஒருவரும் இலர்.

**Abbrevations:**

ARE – Annual Report of Indian Epigraphy

SII – South Indian Inscriptions

Epi Gra Ind – Epigraphica Indica

**Referances:**


Pillai.K.K. (1969). *A Social History of The Tamils*. Chennai: University of Madras.

Pillai.K.K. (2013). History *of Tamil Nadu - People And Culture*. Chennai: International Institute of Tamil Research.

Swaminathan.A. (1991). *Social and Cultural History of Tamil Nadu*. Chennai: Deepa Publications.

Neelakanta Sastri.K.A. (1935). *The Cholas*. Chennai: University of Madras

Neelakanta Sastri.K.A. (1979). *History of South India*. (Vol-2). Chennai: Tamil Nadu Text Book Society.

Balasubramanyam.M. (1978). *Political and Cultural History of Cholas*. Chennai: Tamil Nadu Text Book Society.

Sathasiva Pandarathat.T.V. (2008). *History of Later Cholas*, Chidambaram: Annamalai University.

Rajamanikkam.M. (2005). *History of Cholas*. Chennai: Pooram Publications.

*History of Cholas*. (2000). Chennai: Tamil Nadu Text Book Society.

*History of Pandiyas*. (2000). Chennai: Tamil Nadu Text Book Society.

# வீடும் விழுதுகளும் எனும் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் சமூகவியல் கோட்பாடு ஓர் ஆய்வு

# *VeedhumVizhutugalum*: A Sociological Analysis


விக்னேஸ்வரன் பார்த்திபன் / Vickneshwaran Parthiban[1]

கவியரசி ரமேஸ்வரன் / Kaviarasi Ramespran[2]



Date of submission: 2020-10-04
Date of acceptance: 2020-11-10
Date of Publication: 2020-12-10



Corresponding author's Name: Kaviarasi Ramespran
Email: d079110@siswa.upsi.edu.my



## *Abstract*

Literature is a creative work of beauty and passion. The literature of short stories that began its journey with verbal pieces of apanded itself to include written works. Malaysianshort story writers have been creating remarkable works locally, and these pieces have gained world recognition through various steps. One of the most critical aspects of these short stories was the social theories infused within each work. To elicit these social theories within Malaysian short stories, *VeedhumVizhutugalum*, a collection of short stories by the Malaysian writer M. Shanmugam Siva, has been analysed. This study aims to investigate the social background symptoms and its causes as well as the social problems and their solutions found in this collection of short stories.



**Key Words:** Short story, Sociology, background, causes, solution.


### முன்னுரை

படைப்பிலக்கியங்களில் இன்றளவும் இன்றியமையாத இலக்கியமாகத் திகழ்வதில் சிறுகதையும் ஒன்றாகும். முக்கால் நூற்றாண்டு வரலாற்றினைக் கொண்டு சிறுகதைத் திகழ்கின்றது. அளவில் சிறியதாக இருந்தாலும் கூற வரும் கதைக்ச் சுருங்க கூறுவதே சிறுகதையாகும். மலேசிய திருநாட்டில் ஒரு சில எழுத்தாளர்களின் சிறுகதைகளே இன்றைய வாழ்நாள் மனித வாழ்க்கையோடு ஒப்பிடும் தரத்தைக் கொண்டுள்ளதாக அமைகின்றது. அவ்வகையில் சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்கள் காரணங்கள் மற்றும் அதன் தீர்வுகள் அடங்கிய ஒரு சிறந்த சிறுகதை நூலாக மா.சண்முக சிவாவின் நூல் அமைந்துள்ளது. அதோடு, இச்சிறுகதையின் எழுத்தாளர் மா.சண்முக சிவா மலேசியா நாட்டில் ஒரு புகழ்பெற்ற சமுதாயசிந்தனையாற்றலைக் கொண்ட எழுத்தாளராகத் திகழ்கிறார். 1970 ஆம் வருடம் முதல் எழுதி வரும் முன்னனி சிறுகதையாசிரியராகவும் இலக்கிய விமர்ச்கரான இவரது வீடும் விழுதுகளும் எனும் இச்சிறுகதையில் உள்ள அனைத்து கதைகளையுமே சமூகவியல் கோட்பாடு அடிப்படையிலே எழுதியுள்ளார். ஒவ்வொரு கதைகளிலும் மானிடர்களிடையே காணப்படும் சமுதாய அவலங்களைச் சித்தரிக்கும் வண்ணம் இக்கதைகள் அமைந்துள்ளன. இவைகளே இவ்வாயிவின் பின்னனியாகவும் அமைகிறது.

இவ்வாய்வின் முக்கியதுவமாக அமைவது, அவரது படைப்புகளை ஆராயும் பொருட்டு, மனிதர்களின் அசலான தோட்டப்புற வாழ்க்கையைச் சார்ந்த கதைக்களம் எந்தப்


[1] The author is a Degree candidate at Universiti Pendidikan Sultan Idris, Perak, Malaysia. vickneshwaranvicky17@gmail.com

[2] The author is a Degree candidate at Universiti Pendidikan Sultan Idris, Perak, Malaysia. d079110@siswa.upsi.edu.my

படைப்புகளிலும் இடம்பெறவில்லை. அவரது காலக்கட்டத்தில் எழுதிய எல்லா எழுத்தாளர்களுக்கும் தோட்டப்புற வாழ்க்கை நிதர்சனமான கதைக்களமாக இருந்த பட்சத்தில் மா.சண்முகசிவாவின் இப்படைப்பு அதைவிட்டு விலகி நிற்பதை அடையாளம் காணமுடிகிறது. மலேசியத் தமிழ் இலக்கியத்தில் முழுமையான, அசலான தோட்டப்புற வாழ்க்கையைப் பதிவு செய்யாத படைப்புகளாக அவரது படைப்புகள் இருக்கின்றன. அதற்கு மாறாகச் சமுதாய விழுமியங்களைத் தற்காலச் சூழலோடு பதிவு செய்வதில் தனித்துவம் பெற்றவராகத் திகழ்கிறார்.

## ஆய்வு முன்னோடிகள்

2015 ஆம் வருடம் சு.தாராசுந்தரி எனும் ஆய்வாளவர் 'தமிழர்களின் சமுதாயப் பண்பாட்டு வரலாறு' எனும் தலைப்பில் ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராச்சி மாநாட்டு நூலில் ஒரு கட்டுரையைப் படைத்துள்ளார். இக்கட்டுரை இம்மாநாட்டின் சிறப்பு மலரில் இடம்பெற்றிருந்தது. அக்கட்டுரையின் வழியாகச், சமூதாயத்தில் தமிழர்களின் உரிமைகளும் சமூதாய விழுமியங்களும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது. பெண்களின் எழுச்சி, சமூக சட்டங்கள் பற்றியும் விளக்கப்பட்டது, இவ்வாய்வுக் கட்டுரையின் சமூகவியல் கோட்பாட்டினையும் தொடர்புப்படுத்தி பார்க்க அவரது கட்டுரை ஏதுவாக அமைந்தது எனலாம்.

தொடர்ந்து, 2017 ஆம் வருடம் இலக்கியமும் சமூக அறிவியலும் எனும் மாநாட்டு கட்டுரையில் பெ.வசந்தன் என்பவர் 'ஐந்து மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகள்' எனும் ஆய்வுக்கட்டுரையைப் படைத்துள்ளார். இவ்வாய்வுக்கட்டுரைப் புத்தாக்கத் தமிழ் மொழியியல் கழகத்தின் ஏற்பாட்டில் வெளிவந்த கட்டுரையாகும். இவ்வாய்வுக் கட்டுரையின் வழியாகக் சமூகவியல் கோட்பாடின் ஓர் அங்கமான ஏழ்மையைத் தகர்ந்தெறிந்து அறம், உழைப்பு, உண்மை, முயற்சி என வாழ்வியல் விழுமியங்களை நினைவில் கொண்டு வாழ்ந்தோமேயானால் வாழ்வு சிறக்கும் சமூக அவலங்கள் நீங்கும் எனப் அறிய முடிந்தது.

அதோடு, 2018 ஆம் வருடம் வெளிவந்துள்ள தமிழ் இலக்கியத்திலும் சமூக அறிவியலிலும் புத்தாக்கச் சிந்தனைகள் என்ற மாநாட்டு இதழில் நா.பாஸ்கரன் என்பவர் சு.கமலா அவர்களின் 'இளையோர் கதைகளில் ஒரு சமூகவியல் பார்வை' எனும் ஆய்வுக்கட்டுரையை வழங்கியுள்ளார். இக்கட்டுரைப் புத்தாக்கத் தமிழ் மொழியியல் கழகத்தின் ஏற்பாட்டில் வெளிவந்த கட்டுரையாகும். இவ்வாய்வுக்கட்டுரையின் வழியாக மனிதர்கள் குறிப்பாக இளையோர்கள் எதிர்நோக்கும் சமுதாயச் சிக்கல்களை உணர்ச்சிப்பூர்வமாகப் பார்க்காமல் அறிவுப்பூர்வமாக நோக்க வேண்டும் என வழியுறுத்தப்பட்டுள்ளது. ஒரு சிறந்த அறிவார்ந்த குமுகாயத்தை உருவாக்குவதற்கு இத்தகைய சமூகவியல் கோட்பாடு பொருந்தியச் சிந்தனைகள் வாழ்க்கைக்கு அவசியம் என நம்பப்படுகிறது.

மேலும், புஷ்பா சுப்பையா (2006), வீடும் விழுதுகளும் எனும் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் ஒவ்வொரு கதைமாந்தர்களையும் ஆய்வு செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதோடு, டாக்டர் வா.செ. குழந்தைசாமி (2000) என்பவரும் சமுதாயச் சிந்தனைகள் எனும் நூலில் சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களைச் சமூகவியல் கோட்பாடு அடிப்படையில் வகைப்படுத்தி பிரித்துக் காட்டியுள்ளார்.

## ஆய்வு முறை

ஆய்வாளர்கள் 'நூல் பகுப்பாய்வு முறையை' ஆய்வுக்கான முதன்மை வழிமுறையாகத் தேர்ந்தேடுத்துள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளை ஆழமான ஆய்வுக்கு உட்படுத்த உள்ளடக்க ஆய்வையும் இம்முறை கொண்டுள்ளது (Peter Goodrich, 1986). உள்ளடக்க ஆய்வு முறையின் வழி இச்சிறுகதைகளில் உள்ள சிக்கல்களையும் அதற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகளைக் கண்டுப்பிடிக்க முடிகிறது. ஆய்வில் பகுப்பாய்வு செய்வதற்குப் பண்புச்சார் அணுகுமுறை கையாளப்பட்டு விளக்கியல் முறையில் விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுகதைகள் வீடும் விழுதுகளும் எனும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து ஆராயப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆய்வுக் கோட்பாடு

தமிழில் பலரால் அறியப்பட்டதும் பின்பற்றப்பட்டதும் சமூகவியல் கோட்பாடாகும் (sociological approach). சமூகவியல் கோட்பாட்டின் தந்தை 'Comte' என்பவராவார். சமூகவியல் துறை பிரஞ்சுப் புரச்சிக்குச் சற்றுப் பிந்திய காலத்தில் அறிவொளிச் சிந்தனைகளில் இருந்து, சமூகத்தின் நேர்காட்சியாக அறிவியலாக உருவானதில் இருந்து தொடங்குகிறது. தற்கால புலமைச்சார் சமூகவியல், நவீனத்துவம், முதலாளித்துவம், நகராக்கம், பகுத்தறிவுமயமாதல், குடியேற்றவாதம் ஆகியவற்றுக்கான ஒரு எதிர்வினையாகத் தோன்றியது தான் இச்சமூகவியல் கோட்பாடு.

இந்த சமூகவியல் கோட்பாடு இலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றின அதிகம் அக்கறைக் கொள்கிறது. அதனையே தளமாகவும் கொள்கிறது. தமிழ்ச் சமூக வரலாற்றுக்கு முக்கியமாகப் பழந்தமிழ்ச் சமூகத்தை அறிய இந்த கோட்பாடு பெருமளவில் துணைச் செய்துள்ளது. வெ. கனகசபைப் பிள்ளை மற்றும் கே.ஏ நீலகண்ட சாஸ்திரியார் முதலிய பல அறிஞர்கள் இக்கோட்பாட்டிற்கு இணங்க பல நூல்களைச் செய்துள்ளனர். சமூகவியல் கோட்பாடு அடிப்படையிலான திறனாய்வு மிகவும் விசாலமானது. மேலும், இது மிகவும் பழமையானது அதே நேரத்தில் தொடர்ந்து பரவலாகச் செய்யப்பட்டு வருவதும் ஆகும். இது பல கோணங்களில் வெளிப்படுகிறது. குறிப்பாகச் சமுதாயப் பின்புலம் (social background) காணுதல் மற்றும் குறிப்பிட்ட இலக்கியம் தோன்றுவதற்குக் குறிப்பிட்ட பின்புலம் காரணமாகும்.

சமுதாய நிறுனங்கள் (Social institution) பற்றிய சித்திரிப்பு: திருமணம், தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம், சமூக நிறுவனங்கள் அல்லது எழுத்தப்படாத சட்டங்களும் மரபுகளும் சாதி முதலியவைச் சமுதாய நிறுவனங்களாகும். அடுத்து, சமுதாய மதிப்புகள் அல்லது விழுமியங்கள் (Social values). இவை பெருமான்மை மக்களால் அல்லது செல்வாக்குப் பெற்ற சமூகக் குழுவினரால் இவையிவை நல்லன அல்லது, தீயன, கெட்டன அல்லது ஏற்புடையன என்று நீண்ட காலமாக அங்கீகரிக்கப்பட்டு வருவதாகும். இவ்வாறு வீடும் விழுதுகளும் எனும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள அனைத்து சிறுகதைகளுமே சமூகவியல் கோட்பாடு அடிப்படையில் ஆராய முடிகிறது.

## ஆய்வுக் கண்டுபிடிப்பு

வீடும் விழுதுகளும் எனும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள 10 சிறுகதைகளை ஆய்வாளர் சமூகவியல் கோட்பாடு அடிப்படையில் ஆய்வு செய்து இரண்டு நோக்கங்களைக் கொண்டு பிரித்துள்ளார். அனைத்து சிறுகதைகளிலும் உள்ள சமுதாயச் சிக்கல்களும் மற்றும் அதன் காரணங்களையும் கண்டறிந்து பின் அதற்கான தீர்வுகள் வழங்கியுள்ளார்.

### கதைகளில் காணப்படும் சிக்கல்களும் அதற்கான காரணங்களும்

| தலைப்பு | சமுதாயச் சிக்கல்களும் அதற்கான காரணங்களும் |
|---|---|
| தரிசனம் | மலேசிய நாட்டைச் சேர்ந்த தோட்டக்காரனான பத்துமலை ஊமையன் என்பவன் தான் வேலைச் செய்யும் கோவில் உயரதிகாரிகளால் மதிக்கப்படாமல் அவன் செய்யும் வேலைக்கான சம்பளமும் வழங்காமல் அடிமைத்தனமாகப் பல வருடங்களாக வேலைச் செய்து வரும் அவனைக் கண்டு, அக்கோவிலின் அர்ச்சகர் அவன் மேல் பரிதாபப்படுகிறார். இச்சிக்கல் எழுவதற்கான காரணம் உயரதிகாரிகள் மனித உழைப்பிற்கு மதிப்பு தராமல் பணத்திற்கு முக்கியத்துவம் வழங்குகிறார்கள். சமுதாயத்தில் மனிதேநேயம் குன்றி இருப்பதைக் இக்கதையில் காண முடிகிறது. |

| | |
|---|---|
| கலகக்காரன் | சமூதாயத்தில் சட்ட முறைப்படி மக்கள் உரிமைக்காக் போராடி அவர்களுக்கு அவர்களின் உரிமையை பெற்றுத் தருவதில் நம்பிக்கையில்லாத சூர்யா அடித்தடியில் இறங்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகிறான். இவன் முரடனாக் மாறுவதற்கான மற்றோரு காரணம் சிறுவயதில் இவன் வாங்கிய அடி இவனை முரடனாக்கி இப்பொழுது அடித்தடியில் தள்ளப்பட்டது. சூர்யா இளம் வயதில் பல சிக்கலில் மாட்டிக் கொள்கிறான். இதற்கான சட்டங்கள் முறையில்லாமல் இருப்பதாலும் ஒருதலைப்பச்சமாக மட்டும் சட்டம் இயங்குவதாலே இம்மாதிரியான போராட்டங்கள் நிகழ காரணமாகிறது. |
| சுருதி பேதம் | இடைநிலைப்பள்ளியில் பயிலும் போது தனக்குப் பிடித்த பெண் மாணவிக்கு முத்தம் கொடுத்ததால் பள்ளி நிர்வாகம் அவருக்கு அளித்த தண்டனையானது அவரது வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றியதோடு அம்மாணவியின் வாழ்க்கையையும் மாற்றியது. இதற்குக் காரணம் பள்ளி நிர்வாகமும் பெற்றோரும் அவரது நிலையிலிருந்து யோசிக்காமல் அவருக்கு அளித்த தண்டனையே ஆகும். அவருக்கு நடந்த அதே சம்பவம் அவர் தலைமையாசிரியராக இருக்கும் அப்பள்ளி மாணவனுக்கும் நிகழும் போது அதனை நிதானமாகக் கையாளுகிறார். |
| மையம் | தீர விசாரிக்காமல் வெளிநாட்டில் வேலைச் செய்யும் ஒருவருக்கு மகளைத் திருமணம் செய்துக் கொடுத்து தன் கணவன் இன்னொரு பெண்ணோடு தொடர்பு வைத்திருப்பதை அறிந்தும் மனைவி யாரிடமும் கூற முடியாமல் தவிக்கும் சிக்கலை இக்கதையில் காண முடிகிறது. இவ்வாறு ஏற்படுவதற்கான காரணம் அப்பெண் தன் உரிமைக்காகக் குரல் கொடுக்காமல் தன்னை அடிமைப்படுத்திக் கொள்வதாலே ஆகும். |
| திரைகடலோடு | ஊர் விட்டு ஊர் வந்து நன்றாகச் சம்பாரித்து வசதியாக வாழலாம் என்று எண்ணி அயல்நாட்டுகாரர்கள் தங்கள் சோத்துகளை விற்று இங்கு முதலாளிகளால் அடிமைத்தனப்படுத்தப்படுகிறார்கள். உரிமைக்காகக் குரல் கொடுத்தாலும் முதலாளிகளால் தாக்கப்படுகிறார்கள். இச்சூழல் ஏற்படுவதற்கான காரணம் முதலாளிகள் தங்களது அதிகாரத்துவத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாலே ஆகும். |
| கிழிசல் | சமூகத்தில் தன்னை யாரும் தாழ்த்தி பார்த்துவிடக்கூடாது என்பது திருமதி ரெட்டினத்தின் எண்ணமாக இருப்பதால் தன்னிடம் அன்புக் காட்டும் வீட்டு வேலைக்காரி பெண்ணான அம்மினியிடம் எரிந்து விழுகிறார். தன் சங்க உறுப்பினர்களுக்கு முன்னுரிமையும் மரியாதையையும் கொடுத்து அவர்களால் அவமானம் பட்ட திருமதி ரெட்டினம் ஆரம்பத்திலிருந்து அன்பைக் காட்டும் அம்மினியின் அன்பை இறுதியாகப் புரிந்துக் கொள்கிறார் காரணம் அன்பைவிட அவருக்குப் பணம் பதவி முன்னுரிமையாக இருந்தது. |

| | |
|---|---|
| தோழமை | ரங்காவிற்கு அடித்தடி மிரட்டலுக்கு ஊரே அடங்கி அவனுக்கு அளிக்கும் மரியாதையைக் கண்டு நன்றாகப் படித்துக் கொண்டிருந்த செல்வம் ரங்காவுடன் நட்புக் கொண்டு திருட்டு வேலையில் ஈடுப்பட்டு தன் வாழ்க்கையை இழக்கிறான். இதற்கான கூட நட்பினால் வாழ்க்கையை இழக்க நேரிடுவதோடு தன்னை சார்ந்தவர்களும் பாதிக்கப்படுகின்றனர். |
| திரிபு | ஒரு சங்கீத ஆசிரியர் தன் குடும்பத்தைக் காப்பாற்றும் நோக்கில் சமூகத்தில் ஆண்களால் அவளுக்கு வரும் சிக்கல்களைத் தகர்த்து எறிந்து வாழ்ந்துக் காட்டுபவளாகச் சித்தரிக்கப்படுகிறார். இவ்வாறு சிக்கல் இன்னும் ஏற்படுவதற்கான காரணம் சில ஆண்கள் தனித்து குடும்பதிற்காகப் போராடும் பெண்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்பதாலே ஆகும் என்பதை இக்கதையின் வழியாகக் காண முடிகிறது. |
| வீடும் விழுதுகளும் | கணவனையும் வாழ்ந்த இருப்பிடத்தையும் இழந்த செல்லமாள் தன் பிள்ளைகளோடு ஓடிப்போன தன் தோழி கோவிந்தம்மாளின் ஆதரவைத் தேடிச் செல்கிறாள். பாலியல் தொழில் செய்யும் கோவிந்தம்மாளுடன் இருப்பது தவறாக இருந்தாலும் தன் பிள்ளைகளுக்காக வாழ்ந்தாக வேண்டும் எனும் செல்லமாவின் கொள்கை அவளது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டுச் செல்கிறது. இதற்குக் காரணம் வீடாகச் செல்லாம்மாள் இருந்து விழுதுகளான அவளது குழந்தைகளைக் காப்பாற்றிட வேண்டும் என்கிற எண்ணமாகும். |
| முறிவு | கட்டாயத்தின் பேரில் திருமணம் செய்துக் கொண்டு நிம்மதியற்ற வாழ்க்கையை வாழ்ந்து வரும் சுந்தரம் மற்றும் அவரது மனைவி பல வருடங்களுக்குப் பிறகு இறுதியில் பிரியும் நிலை ஏற்படுகிறது. இச்சிக்கலுக்கான காரணம் சுந்தரம் சமூகத்தில் தன் பெயர் வீணாகிவிடும் என்ற எண்ணத்தில் தன் முடிவை கூறாமல் கோழையாகவே வாழ்க்கையை நகர்த்தி கொண்டு சென்றுள்ளார். |

**கதைகளில் காணப்படும் சிக்கல்களுக்கான தீர்வுகள்**

| தலைப்பு | சிக்கல்களுக்கான தீர்வுகள் |
|---|---|
| தரிசனம் | மனித உழைப்புக்கு மதிப்பளிக்கும் மனிதர்கள் சமூகத்தில் தேவையாகும். ஊமையாகவும் அவர்களுக்கென குரல் கொடுக்க யாரும் இல்லை என்று எண்ணி அவர்களைப் பகடைக்காயாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் அவர்களது உழைப்புக்கு மதிப்பளிக்க வேண்டும். |
| கலகக்காரன் | சமுதாயத்தில் சட்டம் என்பது அனைவருக்கும் ஒரே போல அமைந்திருத்தல் அவசியமாகும். இச்சமுதாயத்தில் ஒருசாருக்கு மட்டும் சட்டம் இயங்காமல் அனைவருக்கும் சமமாக இருந்தால் முறையாக அமைவதோடு வீண் போராட்டங்களைத் மக்கள் மத்தியில் தவிர்க்க இயலும். |

| | |
|---|---|
| சுருதி பேதம் | அவருக்கு நடந்த அதே சம்பவம் அவர் தலைமையாசிரியராக இருக்கும் அப்பள்ளி மாணவனுக்கு நிகழும் போது அதனை நிதானமாகக் கையாளுகிறார். ஒரு மாணவன் தவறு செய்வது இயல்பு. அதனை முறையான வழியில் கையாளாவிட்டால் அவர்களது எதிர்காலத்தோடு அவரைச் சார்ந்து இருக்கும் மற்றவர்களது எதிர்காலமும் பாதிப்படைவதைப் பள்ளி நிறுவாகங்கள் கருத்தில் கொள்வது அத்தியாவசியாகும். |
| மையம் | தீர விசாரிக்காமல் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது என்பது வாழ்க்கையையே சிதைத்து விடும் என்பதனை திருமணம் செய்து வைக்கும் ஒவ்வொரு பெண்ணின் பெற்றோர்களும் அறிந்து செயல்படுவது அவசியமான வாழ்வியல் கடப்பாடு என இக்கதையின் வழி அறிய முடிகிறது. |
| திரைகடலோடி | இக்கதையில் உரிமைக்குப் போராடும் தொழிலாளிகளிடத்தில் அதிகாரத்துவத்தை முதலாளிமார்கள் பயன்படுத்துவது இன்று சமுதாயத்தில் ஒரு மிக பெரிய தவறாகும். இதற்குச் சட்டங்கள் தக்க நடவடிக்கை எடுப்பது மிக அவசியமாகும். |
| கிழிசல் | இக்கதையின் மூலம் யாராக இருப்பினும் பெரியவரோ சிறியவரோ சமூகத்தில் மதிப்பு அல்லது பதவியுள்ளவரோ அல்லது இல்லதவரோ அனைவரையும் ஒரே மாதிரி நடத்துதல் அவசியமாகும். நமக்காக வேலைச் செய்யும் வேலைக்காரர்களிடம் முதலாளித்துவத்தையும் அதிகாரத்துவத்தையும் காண்பிக்காமல் கொடுக்கும் அன்பை மதித்தல் அவசியமாகும். |
| தோழமை | தோழமைக்காக வாழ்க்கையை இழப்பது இங்கு செல்வம் மட்டுமல்ல இது போன்று சமுதாயத்தில் பல இளைஞர்கள் வாழ்விழந்து இருக்கின்றனர். ஒருவருடைய வாழ்க்கையில் நண்பர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். குமுகாயத்தில் அவர்களைத் தேர்ந்தேடுப்பதில் கவனமாக இருப்பது அவசியமாகும். |
| திரிபு | தன் குடும்பத்திற்காகத் தனித்து ஒரு பெண் பல சிக்கல்ல்களுக்குப் பிறகும் போராடுவது மிக அவசியமாகும். துவண்டு விடாமல் தொடர்ந்து முயற்சி செய்யும் இப்பெண்களைச் சமுதாயத்தில் ஆண்கள் சிக்கல்களைத் தராமல் அவர்களைப் போற்றி மதித்திட வேண்டும். |
| வீடும் விழுதுகளும் | இக்காலக்கட்ட சமுதாயத்தில் தனித்து வாழும் தாய்மார்கள் தன் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு பல துன்பங்களையும் தாண்டி வாழ்கின்றனர். மனிதன் இறுதியில் வாழ்ந்தாக வேண்டியுள்ளது. வேறு எதையும் விட தானும் தன்னைச் சுற்றி உள்ளவர்களும் முக்கியம். அதற்காக அவள் எந்த நிலைப்பாடும் எடுப்பாள் என்பது புரிகிறது. |
| முறிவு | சமூகம் நம்மை இழிவாகப் பார்த்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் பலர் கட்டாயத்தில் எனும் பெயரில் இல்லற வாழ்க்கையில் இன்பமாக வாழ்வதாகக் காட்டிகொள்கின்றனர். குடும்பத்தில் ஒரு பிரச்சனைகள் இருப்பின் அதனைப் பேசி தீர்வு காண்பது மிக அவசியமான ஒன்றாகும். |

## முடிவு

இவ்வாயிவின் மூலம் ஆய்வாளர் அக்காலத்தின் சமூகச் சிக்கல்களையும் காரணத்தையும் அதோடு அதற்கான தீர்வுகளையும் ஆராய்ந்துள்ளார். எழுத்தாளர் மா.சண்முகசிவாவின் சிறுகதைகளில் கதாப்பாத்திரங்களில் பெண் கதை மாந்தர்களும் ஆண் கதைமாந்தர்களும் சமமான அளவில் படைக்கப்பட்டுள்ளார். பொதுவாக பெண்கள் சமூகத்தில் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர் அதனை எப்படி களைகின்றனர் அதற்கான காரணங்களை மட்டுமே அறிந்த ஆய்வாளர் ஆண்களும் சமூகத்தில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள். குடும்பத்தினராலும் சமுதாயத்திலும் பல இன்னல்களை ஆண்களும் எதிர்கொள்கிறார்கள் என்பதை தரிசனம், கலகக்காரன், கலங்ககாரன், சுருதிபேதம், திரைக்கடலோடி, தோழமை, முறிவு போன்ற சிறுகதைகளில் ஆண்கள் சமுதாயத்தில் எதிர்கொள்ளும் சிக்கல்களை நாம் சமூகவியல் கோட்பாடு அடிப்படையில் ஆராய முடிந்தது. அதோடு ஒரே கதைகளில் இரு தரப்பட்ட கதாப்பாத்திரங்களைக் காண்பித்துள்ளார். கிழிசல் எனும் சிறுகதையில் அம்மிணி மிகவும் பணிவானவளாகவும் மிஸஸ் ரெட்டினத்தை முதலாளித்துவத்தைக் காண்பதைபோல காண்பித்துள்ளார். அதுப்போல் உயிர்ப்பு மற்றும் வீடும் விழுதுகளும் எனும் சிறுகதைகளில் காணமுடிகிறது. ஒரு மனிதன் சமுதாயச் சிந்தனையுடனும் பண்பு நெறிகளுடன் வாழ்வது மிகவும் அவசியமான வாழ்வியல் விழுமியமென இச்சிறுகதைகளின் சமூகவியல் கோட்பாட்டின் வழி நாம் உணர இயலுகிறது.

**Referances:**

Kulanthai Sammy,S.V. (2001). *Samuthaya Sintanaigal*. Tamil Nadu: Bharathi Enterprise.

Kumarasamy Tannirmalai. (2011). *Isu- isu Sosial Ynag Digambarkan Oleh Novel- Novel Tamil Malaysia Sekitar 1990an*. Tesis Ijazah Sarjana, Kuala Lumpur: Universiti Malaya.

Kumaran.S. (2015). *Tamilargalin Samuthaya Panpaathu Varalaaru*. 9th International Tami Research Conference. Universiti of Malaya, Kuala Lumpur: Malaysia.

Muniiswaran. (2017). *Ilakiyamum Samuga Ariviyalum*. Tesis Doktor Falsafah, Perak: Universiti Pendidikan Sultan Idris.

Muniiswaran. (2018*). Inovative Thoughts in Tamil Literature and Social Sciences*. Persatuan Linguistik Malaysia, Perak: Universiti Pendidikan Sultan Idris.

Peter Goodrich. (1986). *Reading the Law: Acritical Introduction to Legal Method and Technique*. U.K. Blackwell Publisher.

Pushpa Supaiya. (2006). *Perwatakan Dalam Cerpen Veedum Vizhutugalum*. Tesis Ijazah Sarjana, Kuala Lumpur: Universiti Pendidikan Sultan Idris.

Rinah Periasamy. (2014). *Cerpen N.Mageswary: Kajian Theory Feminism* (Unpublished Master's thesis): Universiti Pendidikan Sultan Idris, Tanjung Malim.

Shanmuga Siva. (1998) *Veedum Vizhutugalum*. Malaysia: Mughil Pathipagam.

# சங்க இலக்கியத்தில் இயற்பியல் துறைசார் கருத்தாக்கங்கள்
# Physics Concepts in *Sangam* Literature

முனைவர் த.கீதாஞ்சலி / Dr.T.Geethanjali[1]

Date of submission: 2020-08-15
Date of acceptance: 2020-09-30
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name: Dr.T.Geethanjali
Email: t.geethanjalingm@gmail.com

***Abstract***

Science and inventions play a vital role in revolutionizing the world. Ground-breaking thoughts and inventions put human beings one-step ahead of all the other creatures. Today, humans from any part of the world cannot imagine a life without science, which has manifested itself within each nook and corner of their day-to-day lives. However, the field of science that could be seen today did not develop overnight; each invention only materialized after copious amounts of trials and errors. The experience and knowledge obtained from the effort of inventing something resulted in the field of science today. Thus, science and inventions could not be claimed exclusively by the Renaissance era; it began when humans started inventing things during the Palaeolithic Age itself. From the Stone Age tools to the present-world Nanotechnology, millions of inventions and scientific truths are available today. Undoubtedly, when a group of people has a long history and civilization, that group will also have a comprehensive history of science and inventions. Based on this view, it could be confidently concluded that the cultured and civilized Tamil society possesses many outstanding sciences in its literature. Tamil works of literature were nothing but the real history of real people of this soil. Finding the civilized ancestors' scientific thoughts from their periodical literature will provide future generations with an insight into these ancestors 'revolutionary thoughts. Since the Stone Age, Tamil society has been developing fantastic scientific expertise in Agriculture, Medicine, Zoology, Astronomy, Chemistry and Physics. Thus, this project aims to present the Tamil ancestors' scientific knowledge to the upcoming generations by extracting the scientific innovations from *Sangam* Poetic Literature, which contains essential information about the galaxies. These ideas could provide a comprehensive guide to technological advancements in agriculture for future generations.

**Key Words:** Sangam Literature, Techniques, scientific thoughts, Knowledge of science, Higher order thinking skill

## முன்னுரை

உலகமொழிகளின் தாய் என வருணனை இயம்புமளவு தமிழ்மொழித் தொன்மை வாய்ந்தது. இத்தொன்மொழியின் இலக்கியங்கள் தன்னேறில்லாத் தகுதிப்பாடுடையன. தனித்துவச் செவ்வியல் வளப்பம் மிக்கதாகச் சங்கப்பாக்கள் திகழ்கின்றன. சங்க இலக்கியத்தில் இலக்கண, இலக்கிய சுவை மட்டும் செறிந்து காணப்படவில்லை. சங்கச் சான்றோர் தாம் புனைகின்ற பனுவல்களுள் இன்றியமையாக் கூறுகள் பலவற்றை இலைமறைக்காய் உத்தியில் பதிந்துள்ளனர். அத்தன்மையுள் வியத்தகு அறிவியல் கண்டுபிடிப்புகளும் அதைச்சார்ந்த தொழில்நுட்பக்கூறுகளும் இடம்பெறுகின்றன. சங்க இலக்கியமானது கணக்கில் அடங்காத அறிவியல் சிந்தனைகளின் கருவூலமாகத் திகழ்கிறது.

[1] The author is an Assistant Professor in Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642 001 , Tamil Nadu, India, t.geethanjalingm@gmail.com

## நோக்கம்

அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் பல்வேறு துறைகள் மேம்பாடு கண்டுள்ளன. வானியல், இயற்பியல், வேதியல், வேளாண்மையியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல், கணிதவியல், மருத்துவயியல் ஆகியவை அறிவியலின் துணையினால் மட்டுமே தங்கள் துறைகளை அலங்கரிக்க இயலும். அறிவியல் இல்லாமல் இன்றைய யுகமே இயங்க வாய்ப்பில்லை. இன்றைய நிலை இவ்வாறிருக்க சங்கத் தமிழரின் இலக்கியச் சான்றுகள் அக்கால மக்களின் அறிவியல் சிந்தனைகளைப் பலவகைகளில் பறைசாற்றி நிற்கின்றன. அவற்றை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு முன்னோடிகள்

1. முனைவர் க.பலராமன்,பழந்தமிழில் அறிவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , தரமணி, சென்னை.
2. பி.எல்.சாமி, இலக்கியத்தில் அறிவியல், சேகர் பதிப்பகம், எம்.ஜி.ஆர் நகர்.
3. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல், உதகம், உறையூர், திருச்சி

## ஆய்வு நெறி

தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்தித் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்வதால் பகுப்பாய்வு அணுகுமுறையும், அவற்றை விளக்கிக் கூறுவதால் விளக்கமுறைத் திறனாய்வும் சமுதாயக் கண்கொண்டு ஆய்வதால் சமூகவியல் திறனாய்வும் அணுகுமுறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## இயற்பியல்

இயற்பியல் என்பது பொருள் மற்றும் வெளியின் வழியாகவும் காலத்தின் வழியாகவும் அதன் இயக்கம் அதனோடு தொடர்புடைய கொள்கைகளான ஆற்றல் மற்றும் விசை முதலியவை பற்றிக் கூறும் இயல். மெய்யியல் மற்றும் இயல் அறிவியலின் ஒரு பகுதியாகும். இயற்கை நிகழ்வுகளைத் திருத்தமாகவும் உள்ளபடியாகவும் கண்டறிய இயற்பியலில் எடுக்கப்படும் முயற்சிகளால் எண்ணவியலா எல்லைகளை இது எட்டியுள்ளது. தற்போதைய அறிவுபடி, அணுவினும் மிகச்சிறிய நுண்துகள்களைப் பற்றியும் பேரண்டத்தின் தொலைவிலுள்ள விண்மீன்களின் உருவாக்கம் குறித்தும் எவ்வாறு நமது பேரண்டம் உருவாகியிருக்கலாம் என்பது குறித்தும் இயற்பியல் விவரிக்கிறது.

## இயற்பியலின் உட்பிரிவுகள்

இயற்பியல் சார்ந்த உட்பிரிவுகள் எனக் கருதப்படும் இயல்களானவை பொறியியல், இயக்கவியல், நிலையியல், ஒளியியல், ஒலியியல், வெப்ப இயக்கவியல், காந்தவியல், அணுக்கரு இயற்பியல், வானியல், அண்டவியல், புவி இயற்பியல் என வகைபடுத்தப்படுகின்றன. இவற்றில் இயற்பியல் சார்ந்த அறிவியல் கருத்துக்களைப் புலவர்கள் சங்கப்பாடல்களில் எங்ஙனம் வெளிப்படுத்துகின்றனர் என்பதனை இனிக் காணலாம்.

## ஒளிவிலகல்

ஒளியானது ஓர் ஊடகத்திலிருந்து பிறிதொரு ஊடகத்திற்குச் செல்லும்போது வளையும் என்பதை ஒளிவிலகல் என்பர். இந்த விளைவின் காரணத்தால்தான் மாலைக்கதிரவன் மேற்குத் திசையில் மறைந்த பின்னரும் நமக்குச் செந்நிறத்தோடு காட்சி தருகிறான் என்பது அறிவியல் உண்மையாகும். இக்கருத்தினையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்கள் அறிந்திருந்தனர் என்பதை,

*"விசும்பு நீத்தம் இறந்த ஞாயிற்றுப்*

*பசுங்கதிர் மழுங்கிய சிவந்து வாங்கு அந்தி"* (புறநானூறு: *376*)

என்ற புறநானூற்று அடிகள் காட்டுகின்றன.

## ஒளிச்சிதறலை அறிதல்

கதிரவன் தோன்றும்போதும் மறையும்போதும் ஒளிக்கற்றையைப் பரப்பும்போதும் வானம் சிவந்து காட்சி

அளிப்பதைக் காணலாம். இக்காட்சி சூரியனின் ஒளிச்சிதறல் பற்றிய அறிவியல் சிந்தனையைப் பண்டைத்தமிழர் அறிந்து உள்ளதையே காட்டுகிறது.

*"எல்லுப்பட இட்ட சுடு தீ விளக்கம்*

*செல்சுடர் ஞாயிற்றின் செக்கரின் தோன்ற"* (புறநானூறு: 16)

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. மீனவர்கள் இரவு நேரத்தில் கலங்களில் பயன்படுத்திய விளக்கின் ஒளிகள் ஆகாயத்தில் தோன்றும் செவ்வாய் மீனைப்போன்று காணப்பட்டதாகப் புறநானூறு சுட்டும்.

*"முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச்*

*செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்*

*உச்சி நின்ற உவவுமதி கண்டு"* (புறநானூறு: 60)

இதன் மூலம் பண்டைத்தமிழர்க்கு வானியல் அறிவும் இருந்துள்ளதைக் காணலாம்.

### பனித்துளியும் பனைமரமும்

ஒளியைக் கோட்டம் (Refraction) அடையச் செய்வதால் சேய்மையிலுள்ள பொருளின் உருவத்தை அண்மையில் வந்து தோன்றுபடி செய்யலாம். கபிலர் இந்த உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளார்..

வள்ளுவரின் சிறிய குறட்பாக்கள், பெரிய பொருட்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இது, தினையைக் காட்டிலும் சிறிய நீர்த்துளியில் தொலைவிலுள்ள பனைமரத்தின் உருவம், பிரதிபலிப்பதைப் போலுள்ளது. இக்கருத்தை,

*"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட*

*பனையளவு காட்டும் படித்தால் மனையளகு*

*வள்ளைக்கு உறங்கும் வளநாட! வள்ளுவர்செய்*

*வெள்ளைக் குறட்பா விரி* (திருவள்ளுவமாலை: அருணாசலம், 2005, p.56)

என்னும் வெண்பாவின் வழியாகக் கபிலர் வடித்துள்ளார்.

கண்ணாடி வில்லைகள் எதுவுமில்லாமல் குவி ஆடியாகச் செயல்பட்ட பனித்துளியின் திறத்தைப் பாடலில் பதிவு செய்வதுடன் தமிழரின் அறிவு நுட்பத்தைக் கபிலர் பதிவு செய்கின்றார். இவ்விலக்கியங்களைப் பயிலும் அறிஞர்களும், மாணவர்களும், கவிஞர்களின் அறிவியல் பதிவுகளைக் கற்பனை, உயர்வு நவிற்சி என்று கூறிச் சமாதானம் அடைந்து விடுகின்றனர்.

வீட்டின் மேல்மாடத்தில் இருந்த கலிலியோ ஒரு நாள் தனது மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தார்.. அதனைச் சரிபார்ப்பதற்காக ஒளிவரும் வழியில் உயர்த்திப் பார்த்தார். அவரது கண்ணாடி இரண்டாக மடிக்கும் தன்மையுடையது. கண்ணாடியை மடித்து வைத்திருக்கும் போது ஒரு வில்லை மற்றொரு வில்லையின் மீது பொருந்தியிருந்தது. இந்நிலையில் கண்ணாடியை ஒளி வரும் திசையில் தூக்கிப் பிடித்துப் பார்த்தபொழுது தொலைவில் இருந்த கோபுரத்தின் உருவம் கண்ணாடியில் தெரிவதைக் கண்டார். ஈயக்குழாயின் இரு முனைகளில் இரு கண்ணாடி வில்லைகளைப் பொருத்தி தொலைநோக்கியைக் கண்டறிந்தார். இதனை கபிலர் தன் பாடலில் பொதிந்து வைத்திருக்கும் தன்மையை நோக்கும்போது தமிழனின் அறிவு புலப்படுகின்றது.

### வெப்பநிலைப் பாதுகாப்பு

ஒரு பொருளின் வெப்பநிலை மாறாமல் அதனைப் பாதுகாத்து வைக்கும் அமைப்பு கொண்ட கருவியினைச் (Flask) சேமச்செப்பு என்று பெயரிட்டு அழைத்தனர். அது குறித்த கோட்பாடு அக்காலத்தில் பயன்பாடாக மட்டும் நிலவி வந்தது என உணரலாம். வெப்ப இயக்கம், வெப்பக்கதிர்வீச்சு, வெப்பக்கடத்தல் ஆகியன குறித்து விரிவான சிந்தனை இல்லாவிடினும் முன்னோட்டச் சிந்தனை இல்லை என்று கூறி மறுப்பதற்கில்லை. சங்க காலத்தில் பனிக்காலங்களில் குடிப்பதற்கு இதமான

*சுடுநீரைச் சேமித்து வைக்க சேமச்செப்பு என்ற கலன் இருந்துள்ளதைக் குறுந்தொகைப்பாடல் கூறுகிறது. தற்போது பாதரசம், அலுமினியம் போன்ற உலோகங்கள் வெப்பநிலை மாறாமல் பாதுகாக்கப் பயன்படுகின்றன. ஆனால் அக்காலத்தில் எவ்விதத் தொழில்நுட்பமும் இன்றி சேமச்செப்பினை உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளனர்.*

*"ஆசுஇல் தெருவின் ஆய்இல் வியன் கடை*

*செந்நெல் அமலை வெண்மை வெள்ளி முது*

*ஓர்இல் பிச்சை ஆர மாந்தி*

*அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்*

*சேமச் செப்பில் பெறீ இயரோ? நீயோ"*(குறுந்தொகை: 277)

இதிலிருந்து வெப்பம் என்பது ஆற்றலின் ஒரு வடிவம் என போற்றினர் என்பது புலனாகிறது. 'சேம செப்பு' என்பதற்குத் தமிழண்ணல் "முற்காலத்தில் பெரிய மூங்கில் குழாய்களில் இருபுறமும் கணவுள்ளதில் துளையிட்டுத் தூய்மைப்படுத்தி வெந்நீரை ஊற்றி வைத்தால் சூடுகுறையாமல் இருந்துள்ளது. அது சேமம் பாதுகாவலான செப்பு, 'குப்பி' எனப்பட்டது. இன்று பிளாஸ்க் என்பதைப்போல அன்றும் முயன்றுள்ளதை இது காட்டுகின்றது" *(சிதம்ரம், படைப்புகளும் பார்வைகளும், p.80)* எனக் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

## நிழல்காண் மண்டிலம்

*சங்கத்தமிழர் முகம் பார்க்கும் கண்ணாடியை 'நிழல்காண்மண்டிலம்' என்று குறிப்பிடுகின்றனர். "நிழல் என்பது ஆடியில் காணப்படும் சாயல் அல்லது உருவத்தைக் குறிக்கும் சொல்லாகும். இதனை வயங்கல், கண்ணாடி, ஆடி என்றும் இலக்கியங்கள் குறித்துள்ளன. வயங்கல் என்பதற்கு ஒளி என்று பொருள். நம்மை ஒளிப்படுத்திக் காட்டுவதால் இப்பெயர் கண்ணாடிக்கு வந்திருக்கலாம்" (சுந்தர ஆவுடையப்பன், 2010, pp.2829) பாதரசப்பூச்சுப் பூசப்பட்ட கண்ணாடியில்தான் பிம்பம் நன்றாகத் தெரியும் என்பது நாமறிந்த ஒன்று. ஆனால் சங்க காலத்திலேயே நிழல்காண் மண்டிலம் என்ற பெயரில் கண்ணாடி இருந்துள்ளதைப் பரிபாடல் விளக்குகிறது. ஒரு பெண் கையோடு எடுத்து வந்திருந்த நிழல்காண் மண்டிலம் கொண்டு, தான் அணிந்திருந்த கழுத்தணி நகைகளை ஒழுங்குப்படுத்திய குறிப்பைக் காணமுடிகிறது. இதனை,*

*"நிழல் காண் மண்டிலம் நோக்கி*

*அழல் புனை அவிரிழை திருத்துவாள்" (பரிபாடல்: 21)*

*என்ற அடிகளால் அறிகிறோம். குளித்து முடித்த பெண்கள், தங்களை ஒப்பனை செய்து கொள்வதற்கு முன் கண்ணாடியைத் தூய்மைப்படுத்திக்கொண்டு பயன்படுத்தும் செய்தியைப் பரிபாடலின் மற்றொரு பகுதிச் சுட்டுகிறது.*

*"வாச நறு நெய் ஆடி, வான் துகள்*

*மாசு அறக் கண்ணாடி வயக்கி, வண்ணமும்*

*தேசும் ஒளியும் திகழ நோக்கி"*

*(பரிபாடல்: 12)*

*இந்த வரிகள், அக்காலத் தமிழர் கண்ணாடியை எப்படியெல்லாம் துடைத்துத் தூய்மை செய்தனர் என்கிற முறைமையை உணர்த்துகின்றது. முதலில் கண்ணாடியில் வாசமிக்க நறுநெய்யைப் பூசுகின்றனர். பிறகு வெண்மையான கல்மாவை அதன்மீது தூவித் துடைத்துத் தூய்மை செய்கின்றனர். கண்ணாடி, தூய்மையாக்கப்பட்ட பிறகு தங்களது அழகை அதில் கண்டு மகிழ்ந்து ஒப்பனை செய்து கொள்கின்றனர். அகநானூறும் கண்ணாடி தொடர்பான ஒரு நுண்ணிய செய்தியை அழகான உவமையாக்கி நம்மை அகம் மகிழ வைக்கிறது. முகம் பார்க்கும் கண்ணாடியின் அருகே சென்று நம் வாய்கொண்டு ஊதினால் நம் மூச்சுக்காற்று கண்ணாடியில் ஆவிபோலப் படர்வதைப் பார்க்கலாம். சிறிது நேரத்தில் அது சுருங்கி மறைந்துவிடும். இந்த நுட்பச்செயலை ஓர் அழகிய காதல் உவமையாக்குகிறது.*

*"எள் அற இயற்றிய நிழல் காண் மண்டிலத்து*

*உள் ஊது ஆவியின் பைப்பய நுணுகி*

*மதுகை மாய்தல் வேண்டும் பெரிது அழிந்து*

*இதுகொல் வாழி தோழி"* (அகநானூறு: 71)

என்ற வரிகள் பறைசாற்றுகின்றன.

### வான ஊர்தி

*"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்*

*வலவன் ஏவா வான ஊர்தி*

*எய்துப என்ப..."* (புறநானூறு: 27)

புலவரால் பாடப்படும் புகழையுடையவர்கள் ஆகாயத்தின்கண் பாகனால் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவாரென்று சொல்லுவார் அறிவுடையோர் என்பது மேற்கண்ட வரிகள் குறிப்படும் கருத்தாகும். இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் சிலப்பதிகாரத்தில் பலராலும் புகழப்படும் சிறப்புப்பெற்று கண்ணகி வானவூர்தியில் ஏறி வானுலகம் அடைந்தது இங்குச் சுட்டத்தக்கது.

*"வாடா மாமலர் மாரி பெய்தாங்கு*

*அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்*

*கோநகர் பிழைத்த கோவலன் தன்னோடு*

*வானவூர்தி ஏறினள் மாதோ*

*கானமலர் புரிகுழல் கண்ணகி தானென்"*

*(சிலப்பதிகாரம், 3:196200)*

என்ற வரிகளில், வாடாத பெரிய மலர்களை மழையாகச் செரிந்து அமரர்களின் அரசனான இந்திரனும் வானோடும் வந்து வாழ்த்தி கோவலனோடு கண்ணகி தேவ விமானத்தில் ஏறிச் சென்றாள் என்று கூறப்பட்டுள்ளது. இச்செய்திகளால் வானவூர்தி இருந்தமை உறுதியாகிறது. அதேபோல, உம்பர் உறையும் ஒளிகிளர் வானத்தின்கண் ஊர்ந்து திரியும் விமானங்களின் நிழல் வைகை ஆற்று நீரில் விழுந்து ஒளிவிட்டதை,

*"உம்பர் உறையும் ஒளிகிளர்வா னூர்பு ஆடும்*

*அம்பி கரவா வழக்கிற்றே"* (பரிபாடல்: 11)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

இவ்வானவூர்தியின் தொழில்நுட்பம் குறித்துக் கூறும்போது இதன் பொறியினை வலஞ்சுழி, இடஞ்சுழியாகத் திருகுவதன் மூலம் அவ்வூர்தி வான் மேகங்களிடையே பறக்கவோ, தரையில் இறங்கவோ செய்யமுடியும் என்ற கருத்து நம்மை வியக்க வைக்கிறது.

*"பண்தவழ் விரலில் பாவை*

*பொறிவலந் திரிப்பப் பொங்கி*

*விண்தவழ் மேகம் போழ்ந்து*

*விசும்பிடைப் பறக்கும்: வெப்ப*

*புண்தவழ் வேல்கண் பாவை*

*பொறி இடந்திரிப்பத் தோகை*

*கண்டவா; மருள் வீழ்ந்து*

*கால் குவிந்திருக்கும் அன்றே" (சீவகசிந்தாமணி: 239)*

என்ற வரிகளால் மேற்கண்ட கருத்துப் புலனாகின்றது.

### வேகம் பற்றியக் கருத்துகள்

வேகம் எனும் கோட்பாட்டினை அக்கால மக்கள் பதிய வைத்திருந்தனர்.

*"நீர் மிகிற் சிறையுமில்லை: தீ மிகின்*

*மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை*

*வளிமிகின் வலியும் இல்லை"*

*(புறநானூறு: 51)*

என்ற ஐயூர் மூடவனார் தம் பாடல் நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. நியூட்டன் விசை என்பதற்குக் கொடுத்த விளக்கத்தைப் போலவே இப்பாடலை ஆழ்ந்து கவனிக்கும்போது இயக்கத்தினால் விசை உண்டாகிறது என்ற கருத்தையும் கூறுவதை அறியமுடிகிறது. ஓய்வு நிலையிலோ அல்லது தொடர்ந்து இயக்க நிலையிலோ இருக்கும் ஒரு பொருளை அதன் நிலையில் மாற்றம் ஏற்படச் செய்யும் ஓர் ஆற்றலை விசை எனலாம் என்பது நியூட்டனின் முதல் விதி. ஒரு மணித்துளிக்கு எவ்வளவு கல்

என்று கணக்கீடுதான் வேகம் எனப்படும். எனவே நீரின் இயல்பான வேகத்தில் மாற்றம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் விசை என்று உய்த்துணரச் சான்றோர்கள் வாய்ப்பளித்துள்ளனர். நியூட்டனின் இரண்டாவது விதி, பொருளின் விசைக்கு ஏற்ப இடமாற்றம் என்பது. வினையும் மறுவினையும் அளவில் ஒத்தவை ஆயினும் எதிர் நிலையுடையன என்பது அவருடைய மூன்றாவது விதி. நியூட்டனின் அறிவியல் நோக்கு மூன்று விதிகளும் நம் முன்னோர்களின் விதிக் கொள்கையோடு அரண்பட்டுச் செல்வதைக் காணமுடிகிறது.

## கானல் நீர்

ஒரே ஊடகத்தின் அடர்வு வேறுபாட்டினால் ஒளிக்கதிர்கள் ஒளிரும்போது விலகல் ஏற்பட்டுக் கண்ணிற்குப் பொய்த் தோற்றமானக் காட்சியை உருவாக்குகின்றன. இதுவே கானல்நீர் என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இதற்கான ஆதாரங்கள் அகநானூற்றுப் பாடலில் உள்ளது.

*"உவல் இடு பதுக்கை ஆள் உகு பறந்தலை*

*உருஇல் பேஎய் ஊராத் தேரொடு*

*நிலம்படு மின்மினி போல பலவுடன்*

*இலங்கு பரல் இமைக்கும்"* (அகநானூறு: 67)

இதில் பரல் மின்மினிபோல இமைக்கும் என்பது,பொய்தோற்றக்காட்சியை விளக்குவது போல உள்ளது. அறிவற்ற விலங்குகளை கானல் நீர் ஈர்ப்பதோடல்லாமல் சிந்திக்கும் ஆற்றல் உள்ள மனிதர்களையும் ஏமாற்றும் பெற்றியது என்பதால்தான் இலக்கியங்களில் கானல்நீர் பற்றிய செய்திகள் இடம் பெற்றது எனலாம்.

## இராமன் விளைவு

கண்ணின் பார்வைக் கோணத்தினை மாற்றுவதால் பொருளின் முழுமையான அளவுகள் தெரிகின்றன என்பதே சர்.சி.வி இராமனின் அறிவியல் கண்டுபிடிப்பு. சான்றோர்களின் உவமைகள் இக்கருதுகோளுக்கு அரண் செய்கின்றன. 'வையங் காவலர்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் கதிரவனைப் பற்றிக் கபிலர் பாடிய கருத்துக்களைப் பயில்வோர்க்கு இக்கண்ணோட்டம் புலப்படும் எனலாம்.

*"வீங்கு செல்ல மண்டிலம்!*

*பொழுதென வரைதி; புறக்கொடுத்து இறத்தி;*

*அகல் இரு விசும்பி னானும்*

*பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே"* (புறநானூறு: 8)

இதில் பல்கதிர் என்ற சொல்லாட்சி பல்வேறு வண்ணங்களையுடைய கதிர் எனப் பொருள் கொள்ள வாய்ப்பிருக்கிறது. வைரத்தின் பார்வைக் கோண வேறுபாட்டினால்தான் அது பளிச்சிடுகிறது. பல்வேறு வண்ணங்களையும் காண்பவர்கட்கு விருந்தாகப் படைக்கிறது. முழுமையாக தனக்குள்ளேயே ஒளிரும் ஆற்றல் இருப்பதால்தான் அது பளிச்சிடுகிறது என்பது இயற்பியலின் விளக்கம். இதன்கண் தமிழ் புலவர்களின் அறிவியல் சிந்தனை மிளிர்கிறது என்றால் அது மிகையல்ல.

## பனி பற்றிய சிந்தனை

பனி என்பது ஒருங்கிய வெப்பம் கொண்ட நீர்மத்தின் ஒரு நிலை என்பதை அகநானூற்றுப் பாடல் புலப்படுகிறது.

*"முளரி கரியும் முன்பனிப் பானாள்"(அகநானூறு: 163)*

*"வயங்கு கதிர்கரந்த வாடை வைகறை"*(அகநானூறு: 24)

என்ற பாடல்கள் பனி பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.

## முடிவுரை

புலவர்கள் தங்களின் இலக்கியங்களில் பல்வேறு அறிவியல் புதுமைகளைக் கையாண்டுள்ளது இதன் மூலம் அறியப்படுகிறது. நம்முடைய கல்வியறிவிற்கேற்பப் பண்டைய

இலக்கியங்களை முழுமையாக ஆராய்ந்து அதில் கூறப்பட்டுள்ள அறிவியற் கருத்துகளை எடுத்துக்காட்டுதல் பயன்தரத்தக்க வகையில் அமையும் என்பதும் தெளிவாகிறது. அறிவியலில் எவ்வித வளமும் வளர்ச்சியும் அடையாத காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தம் இலக்கியங்களில் இவ்வளவு அறிவியற் செய்திகளைப் பதிவு செய்திருக்கையில் பல அறிவியல் வளம் உடைய நாம் நம் மொழியில் இன்று அவற்றை பெருக்க வேண்டியது அவசியமாகும் என்பது இக்கட்டுரையின் மூலம் உணர முடிகிறது.

**Referances:**


Agananooru. (2004). Chennai: New Century Book House Private Limited.

Arunachalam, Mu. (2005). *Tamil Ilakkiya Varaaru*. Chennai: 11th Century Edition.

*Kurunthokai*. (2004). Chennai: New Century Book House Private Limited.

*Paripaadal*. (2004). Chennai: New Century Book House Private Limited.

*Purananooru*. (2004). Chennai: New Century Book House private limited.

Sundra Aavudaiyappan. (2010). *Sanga Sevvi*, Chennai: New Century Book House Private Limited.

*Thiruthakka Thevar, Seevaga Sinthamani*. (2010). Chennai: Western Publication.

Vengadaamy Nattar, Ku., Mu. (1940). *Silappathikaram*. Thirunelveli Chennai: Thenninthiya Saiva Siddananda Nulpathippu Kazhakam.

# இந்திய மெய்யியலில் பிரதிபலிக்கப்படும் சடவாத சிந்தனைகள்

# Reflection of Materialism in Indian Philosophy

பொ. பூலோகநாதன் / P. Poologanathan[1]

***Abstract***

There are two prominent doctrines of philosophies found in Philosophical tradition viz. Idealism and Materialism. These doctrines are also very well established among the Western and Eastern philosophical traditions. That being said, Idealism is metaphysical conceptualization; however, materialism is ideas based on physical matter being the fundamental reality or simply nature. Studying Indian Philosophical tradition, one can draw two major systems. Firstly, orthodox schools consisting of religions such as Samkya, Yoga, Nyaya, Vaisidika, Vedanta and Saiva Siddhantha which subscribe to the concepts of God, Soul and Rebirth by accepting Vedas and Upanishada. Secondly, heterodox schools such as Jainism, Buddhism and Chārvaga which subscribe to materialistic thoughts. Materialism however denies the very metaphysical concepts such as existence of God, Soul and Rebirth and, it implies more of physical and hedonistic life. Although most of the Indian Philosophical systems widely insist on spiritual ideologies, Materialism thoughts also prevails in certain places indirectly. Therefore, the objective of this research is to explore the implied materialistic concepts within the Indian Philosophical tradition. Besides, this investigation also intends to clarify that the Indian Philosophy implies not only the spiritual life but also the hedonistic life. Mainly, in this research analytical and historical methods were used upon primary and secondary sources in order to produce the findings.

Date of submission: 2020-10-11
Date of acceptance: 2020-11-10
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
P. Poologanathan
Email: Ponnuthurainathan1985@gmail.com

**Key Words:** Materialism, Idealism, Orthodox, Heterodox and Meta Physics.

## ஆய்வு அறிமுகம்

இந்திய தத்துவ சிந்தனை மரபானது கருத்து முதல்வாத சிந்தனைகள் அல்லது ஆன்மீக சிந்தனைகளுக்கு மட்டுமன்றி பொருள் முதல்வாதம் அல்லது சடவாத கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் அளிப்பதாக அமைந்திருந்தது.(Bina Gupta,2012,p.55). கருத்துமுதல் வாதம் என்பது பௌதீகவதீத சிந்தனைகளுடன் தொடர்புபட்டதாகவும், பௌதீக பொருட்களை விடுத்து மனத்திற்கும் அதனது சிந்தனைகளுக்கும் முக்கியத்துவம் வழங்குவதோடு ஆன்மீகம்சார் விடயங்களான கடவுள், ஆன்மா, மறுபிறப்பு, மறுவுலகு போன்ற விடயங்களை ஆய்வு செய்யும் சிந்தனை போக்காகவும் காணப்படுகிறது. (Dasgupta, 1982, p.5). மாறாக, சட வாதமானது கருத்துமுதல் வாதத்திற்கு எதிரான போக்கினைக் கொண்டமைந்ததுடன் பௌதீக விடயங்களுடன் தொடர்புபட்ட மனித வாழ்வுக்கு முக்கியத்துவம் வழங்குவதாகவும் கடவுள், ஆன்மா, மறுபிறப்பு எனும் பௌதீகவதீத விடயங்களை நிராகரித்து, மனித நடத்தைகளைப் பௌதீக நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி விளக்குவதாகவும் அமைகின்றது. (Chandadhr Sharma, 1960, p.40).

[1] The author is a PhD candidate University of Peradeniya & Former Visiting Lecturer Department of Philosophy, University of Peradeniya and University of Jaffna, Srilanka. Ponnuthurainathan1985@gmail.com

இந்திய தத்துவ மரபில் வேத, உபநிடத சிந்தனைகளை ஏற்று நிற்கும் தத்துவப் பிரிவுகளான சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், வேதாந்தம், சைவசித்தாந்தம் போன்றவை வைதீக நெறிகள் என அழைக்கப்படுகிறது. இவை பெரும்பாலும் கருத்து முதல்வாத சிந்தனைப் போக்கை வற்புறுத்துவதாக அமைகின்றது. வேத, உபநிடத கருத்துக்களை ஏற்காத அவைதீக நெறிகளான சமணம், பௌத்தம் (ஆதி பௌத்தம்), சார்வாகம் போன்ற தத்துவ கூடங்கள் சடவாத சிந்தனையை வலியுறுத்துவதாக அமைகின்றன.

இந்திய தத்துவ மரபு போன்று மேலைத்தேய கிரேக்க சிந்தனைகளிலும் கருத்துமுதல் வாதம், சடவாதம் எனும் இரு சிந்தனை போக்குகளை நாம் காண முடியும். ஆதி கிரேக்க மெய்யியலாளர்களான தேலிஸ், அனஸ்சிமினிஸ், ஹெரக்கிளட்டஸ் போன்ற மைசீலிய சிந்தனையாளர்களும் அவர்களுக்கு பிற்பட்ட சோபிஸ்டுக்களும் (Sophist) நவீன கால சிந்தனையாளர்களான தோமஸ் கொப்ஸ், பிரான்சிஸ் பேக்கன், காள் மார்க்ஸ், ஏங்கிள்ஸ், பயர்பார்க் மற்றும் இருத்தலிய சிந்தனையாளர்களும் சடவாதக் கருத்துக்களை மேலைத் தேய தத்துவ மரபில் வளர்த்தெடுத்தனர்.

மறுமுகமாக மேலைத் தேய மரபில் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் மற்றும் மத்தியகால சிந்தனையாளர்களான சென்.அகஸ்ரின், சென்.அன்சிலம், சென். அக்குவனஸ் போன்ற இறையியலாளர்களும் நவீன கால மெய்யியலாளர்களான இமானுவெல் கான்ட், ஹெகல், பார்க்ளி, கியூம், ஜீ.ஈ. மூர் போன்ற சிந்தனையாளர்களும் கருத்துமுதல் வாத சிந்தனைகளை வெளிப்படுத்தினர். வரலாற்று ரீதியாக இந்திய சிந்தனை மரபில் சடவாத கருத்துக்களினை ரிக் வேதம், உபநிடதங்கள் சிலவற்றிலும் புராண இதிகாசங்கள் மற்றும் நியாய வைசேடிக தத்துவப் பிரிவுகளின் சில இடங்களிலும் ஆதி பௌத்தம், சமணம், சார்வாகம் போன்ற தத்துவ சிந்தனைகளிலும் காண முடிகின்றது. அதிலும் குறிப்பாக சார்வாக சிந்தனையிலேயே சடவாதம்சார் உலகியற் கருத்துக்கள் சிறப்பாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்படுகின்றன. (Chandadhr Sharma, 1960, pp.40-41).

இந்திய மரபில் சார்வாகமானது ஓர் சிந்தனை பள்ளியாகவும், ஓர் வாழ்க்கை நெறி முறையாகவும், பௌதீகப் பிரபஞ் சத்தை விளக்கும் ஓர் கோட்பாடாகவும் நடைமுறை வாழ்க்கையை அறிந்து அதன்படி செயற்பட மனித குலத்திற்கு வழிகாட்டும் ஓர் நெறிமுறையாகவும் எழுச்சி பெற்றது. இவ்வாறு இந்திய மரபில் வேறு காலப்பகுதியில் ஆங்காங்கே தோற்றம் பெற்று மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் பேசப்பட்ட சடவாதக் கருத்துக்களை ஒன்றுதிரட்டி ஆய்வு செய்து இந்திய மெய்யியலில் சடவாதச் சிந்தனைகளின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துவதாக இவ்வாய்வு அமைகின்றது. குறிப்பாக வேத, உபநிடதங்களில் மறைமுகமாகக் காணப்படும் சடவாத கருத்துக்களையும், வைதீக நெறியான வைசேடிய சிந்தனைகளில் காணப்படும் அணுவாதக் கோட்பாட்டினையும், சமணம் மற்றும் ஆதிபௌத்தம் போன்றவற்றில் குறிப்பிடப்படும் சடவாதக் கருத்துக்களையும், சார்வாகம் குறிப்பிடும் வெளிப்படையான இவ்வுலகியல் சார்ந்த சடவாதக் கருத்துக்களையும் அடிப்படையாக வைத்து இந்திய மெய்யியியலில் சடவாதத்தின் முக்கியத்துவத்தினை இவ்வாய்வு வெளிக்கொணர்கிறது.

### ஆய்வுப் பிரச்சினை

இந்திய தத்துவ மரபில் கருத்து முதல்வாத சிந்தனைகளே மேலோங்கிக் காணப்படுகிறது. இலைமறை காயாகக் காண ப்படும் சடவாதக் கருத்துக்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. இதனைச் சரியான முறையில் தெளிவுபடுத்துவது அவசியம். இப்பிரச்சினையை மையப்படுத்தியே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### ஆய்வின் நோக்கம்

இந்திய தத்துவங்கள் கருத்துமுதல் வாதம் சார்ந்த ஆன்மீக சிந்தனைகள் மட்டுமன்றி சடவாதம் சார்ந்த உலகியற் கருத்துக்களுக்கும்

முக்கியத்துவம் வழங்குகின்றது என்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வு முழுவதுமாக பகுப்பாய்வு முறையை (Analytical method) பயன்படுத்துவதோடு காலவோட்டத்தினூடாக சட வாத சிந்தனைகளை ஆராய்வதற்காக வரலாற்று ஆய்வு முறையையும் (Historical method) பயன்படுத்துகிறது. இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் யாவும் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளாகப் பெறப்பட்டு ஆய்வு வடிவமைக்கப்படுகிறது. முதல்நிலை தரவுகளாக கருத்துமுதல் வாதம் பற்றிக் குறிப்பிடும் மூல நூல்களைப் பயன்படுத்தியும் இரண்டாம் நிலை தரவுகளாக இவ்வாய்வு சார்ந்து வெளிவந்த ஏனைய உரை நூல்கள், சிறுசிறு கட்டுரைகள் என்பவற்றை பயன்படுத்தியும் இவ்வாய்வு மேற்க் கொள்ளப்படுகிறது.

### ஆய்வு தொடர்பான விவாதங்கள்.

இந்திய சிந்தனை மரபில் சடமுதல் வாதத்தின் முழு வடிவத்தினை நாம் சார்வாக மெய்யியலில் காண கூடியதாகவுள்ளது. சார்வாகம், உலோகாயுதம், பூதவாதம், நாஸ்தீக மதம் போன்ற சொற்கள் யாவும் சடமுதல் வாத சிந்தனையையே பிரதிபலிக்கின்றன. வரலாற்று நோக்கில் சடமுதல்வாத கருத்துக்களின் தோற்றத்தினை நோக்கும்போது, ரிக்வேத பாடல்கள் சிலவற்றில் பொருள் முதல் வாத போக்குகள் முதன் முதலில் பிரதி பலிக்கப்படுகின்றன. உலக படைப்பு பற்றிய ரிக் வேத பாடல்களில் (Rigveda, 2011, x.121.1, x.71,72) பிரகிருதியிலிருந்து உலகப் பொருட்கள் பரிணமிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (Satchidananda Murthy, 2007, p.109). இதுவே இந்திய தத்துவ மரபில் உலோகாயுதம் சார்ந்த முதல் சிந்தனையாகும்.

வேதங்களுக்குப் பின்னரான உபநிடதங்களில் குறிப்பாக பன்னிரு உபநிடதங்களில் ஒன்றான பிருகதாரண்ய உபநிடதத்தில் மனிதனை மரத்துடன் ஒப்பிட்டு மரத்தை வெட்ட அது வேரிலிருந்து தழைப்பது போல மனிதன் எத்தகைய வேரிலிருந்து மீண்டும் தழைப்பான் என ஞானவல்லியர் தனது குருவான மைத்திரேயிடம் வினவும் வினா ஒன்று பொருள் முதல் பட்ட நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதாக உள்ளது. (பிருக தாரண்ய உபநிடதம்: 3.9.28.6). மேலும் கட உபநிடதத்தில் இவ்வுலகம் மட்டுமே மெய்யானது என்றும் வேறு உலகங்கள் இல்லை என்றும், இறப்பின் பின் வேறு வாழ்க்கை இல்லை எனக் கருதும் மக்கள் கூட்டம் பற்றியும் கூறப்படுகிறது. (கிருஸ்ணராஜா, 2001, p.67).

பிற்பட்ட கால பௌத்த பாளி நூல்களை நோக்கும்போது அங்கு சடவாத சிந்தனை குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. பௌத்தத்தில் இரு வகையான சடவாதக் குறிப்புக்களை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

1. அனைத்து உண்மைகளையும் நிராகரிக்கும் துன்பவாதப் பிரிவினர் ஒரு வகையினர்.

2. இவ்வுலகில் இருப்புடையன மட்டுமே உள்ளவை எனக் கருதும் மற்றுமொரு பிரிவினர்.

இவர்கள் நிலம், நீர், நெருப்பு, வாயு எனும் பூதங்கள் மட்டுமே உள்ளன என்றும் ஆன்மாவென ஒன்று இல்லை என்றும் மனிதன் நான்கு பூதங்களின் சேர்க்கையினால் ஆனவன் என்றும் இச்சாரார் வாதிட்டனர். இவர்களது அபிப்பிராயப்படி வேள்விகள், பூசைகள் என்பனவற்றினால் எத்தகைய பயனும் இல்லை எனவும் நற்செயல், தீய செயல்கள் என எதுவுமில்லை எனவும் இவை எத்தகைய பயனையும் விளைவிப்பதில்லை எனவும் வாதிட்டனர். மரத்திலிருந்து உதிர்ந்த இலைபோல் இறந்த உயிர் மீண்டும் உதிர்ப்பதில்லை எனும் உயிரின் இயல்பு பற்றிய சடவாத சிந்தனை பௌத்தத்தின் தீக நிகாயாவில் காணப்படுகின்றன. (Satchidananda Murthy, 2007,p.110). சம்யுத்த நிக்காயாவில் உலோகாயுத கொள்கை உடையவர் எனக் குறிப்பிடப்படும் இரு பிராமணர்கள் புத்தருடன் சம்பாசித்ததாகவும் இவர்கள் மெய்யான இருப்புடையது என எதுவுமில்லை எனும் கொள்கை உடையவர்களாக இருந்தனர் எனும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

(கிருஸ்ணராஜா, 2001, p.67).

பிற்கால வைதீக நெறிகளான நியாய வைசேடிகர் போன்றோர் வைதீக நெறி சார்ந்த கருத்துமுதல்வாதிகளாக விளங்கிய பொழுதும் இவர்களது அணுவாதக் கோட்பாடு பொருள்முதல் வாத சிந்தனையை பிரதிபலிப்பதாக அமைகின்றன. நியாய நூலாசிரியரான உதயணர் இது பற்றிக் குறிப்பிடும் பொழுது அணுக்களை கடவுள் படைக்கவில்லை என்றும், அந்த அணுக்களை மரம், செடி, கொடி, விண்மீன்கள், சூரிய சந்திரர்கள், மலை, கடல் ஆகிய இப் பிரபஞ்சமாக உருவாக்குவதே கடவுளின் பணி என்று குறிப்பிடும் கருத்துக்கள் நியாய தத்துவத்தில் பொருள்முதல் வாத நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. (இ.எஸ்.டி.- ஞானன்,1999.p. 165).

வைசேடிய நூலாசிரியரான கணநாத முனிவரின் வைசேடிய சூத்திரத்திலும் அதன் வழி நூலான தச பதார்த்த சாஸ்திரம் போன்ற நூல்களிலும் சடவாதம் சார்ந்த அணுக் கோட்பாடு காணப்படுகிறது. வைசேடியம் பொதுவாக பௌதீக சாஸ்திர முன்னோடிச் சிந்தனையை உடைய தத்துவ ஞானம் என்றே பலராலும் அழைக்கப்படுகிறது. இவர்களது பதார்த்த கோட்பாடு அனைவராலும் அறியப்பட்டது. பதார்த்தம் என்பது அறியக்கூடியது என பொருள்படும். இவர்கள் ஏற்புடைய முறையில் அறியக்கூடிய 07 பதார்த்தங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றனர். அவை முறையே பொருள், இயல்பு, செயல், பொதுமை, சிறப்பியல்பு, உள்ளார்ந்த தன்மை, இன்மை என்பனவாகும். இதில் பொருளை முதன்மையான பதார்த்தமாகக் குறிப்பிடுகின்றனர். இப்பொருட்களை ஒன்பது வகையாகப் பாகுபடுத்துகின்றனர். இப்பொருட்களினாலேயே இப்பிரபஞ்சம் ஆக்கப் பட்டிருப்பதாக வைசேடியம் குறிப்பிடுகிறது. வைசேடிகரினது இப் பதார்த்தக் கோட்பாடு சடவாத சிந்தனையை பிரதிபலிப்பதாக அமைகிறது. (மேலது, pp.170 171).

ஜைன தர்மம் எனப் போற்றப்படும் சமணத்திலும் சடவாதக் கருத்துக்கள் காணப்படுகின்றன. உலகம் பற்றி ஜைனம் கூறும்போது இவ்வுலகம் யாராலும் படைக்கப்படவில்லை. இயல்பாகவே எப்போதும் இருப்பதாகும். இதற்கு முதலோ முடிவோ கிடையாது. அது என்றும் நிலைத்திருக்கும். இது இல்லாமல் போவதும் இல்லை. இவ்வுலகு ஆறு பொருட்களால் ஆனது. இவ்வுலகைப் பகுத்தால். ஆறு பொருட்களைத் தவிர வேறு எதுவும் கிடையாது. இவ் அறுவகை பொருட்களையே ஜைனம் திரவியங்கள் என்று குறிப்பிடுகிறது. அவற்றை உயிர், உயிர் அற்றவை. அதாவது ஜீவன் அஜீவன் எனப் பிரித்து இவற்றின் சேர்க்கையே உலகம் என ஜைனம் குறிப்பிடுகிறது. இவ் அறுவகை பொருட்களை பற்றிய விரிவான விளக்கமே ஜைன தத்துவமாகும். ஜைன தத்துவத்தில் குறிப்பிடப்படும் புத்கலம் பற்றிய கோட்பாடு சடமுதல் வாத கருத்துக்களை பிரதிபலிப்பதாகவுள்ளது. (மேலது, p. 118).

அடுத்து சடவாதக் கருத்துக்களின் முழுமையான வடிவத்தினை சார்வாக மெய்யியலில் நாம் காண முடிகிறது. Cārvaka எனும் சொல்லானது eat, drink and merry எனப் பொருள்பட்டு இன்ப வாழ்வைக் குறிப்பதாக அமைகின்றது.(Bina Gupta, 2012,p.56). சார்வாக சிந்தனை பற்றிய தகவல்களைச் சார்வாக தத்துவத்திற்கு எதிரான போக்கினைக் கொண்ட நூல்களினூடாகவே அறிய முடிகிறது. இது சார்வாக சிந்தனையின் துரதிஸ்டம் என்றே குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, பிரம சூத்திரம், சங்கரர் வேதாந்தம், நீலகேசி, சிவஞான சித்தியார், அர்த்த சாஸ்திரம், புராண, இதிகாசங்கள் மற்றும் பௌத்த இலக்கியங்கள் ஊடாக அறிந்து கொள்ளலாம். பிரகஸ்பதி என்பவரால் தொகுக்கப்பட்ட பிரகஸ்பதி சூத்திரத்திலேயே புராதன இந்திய சடவாதக் கருத்துகளின் தொகுப்பினை நாம் முழுமையாக காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு பல்வேறு மாறுபட்ட தரப்புகளிலிருந்தே சார்வாக மெய்யியல் பற்றிய கருத்துக்களை கூறக் கூடியதாக காணப்படுகின்றது.

பொதுவாக அறிவிற்கு அடிப்படை வாயிலாக புலன்களை மட்டும் கருதும் சார்வாகர் பிரதியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் எனும் மூன்று அளவைப் பிரமாணங்களில் பிரத்தியட்சத்தை மட்டுமே

ஒப்புக் கொண்டவராய் இவ்வுலகமும், உடம்பும் மட்டுமே மெய் என்றும் உயிரும் இறைவனும் பொய் என்ற முடிவுக்கு வந்தனர். (Hiriyanna, 2009,p.189). “உடம்புக்கு வேறாய் உயிரை நாம் கண்டதில்லை. எனவே உயிரின் பொருட்டும், இறைவன் பொருட்டும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளும் இல்லை. உயிர் இல்லை என்பதால் மறுவுலக வாழ்வும் இல்லை. பாவ புண்ணியங்களும் இல்லை என்பதே இவர்களது கொள்கை.

நிலம், நீர், காற்று, தீ என்னும் நான்கு பூதங்களின் சேர்க்கையே இவ்வுலகு எனவும் இதை விடுத்து பௌதீகத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை அடியோடு நிராகரிக்கின்றனர். பொறி, புலன்களின் தோற்றம் இவ் நான்குவகை பூத சேர்க்கையினால் ஆனதென்றும் ஆகாயம் எனும் ஐந்தாவது பூதத்தை இவர்கள் ஏற்கவில்லை. ஏனெனில் ஆகாயத்தை நாம் புலன்களால் காணமுடியாது என்பதனால் ஆகும். (Bina Gupta, 2012,p.60). அறிவும், இன்பமும் உடலிற்கே உரியது என்றும் உடல் அழியும் போது இவையும் அழியும் என்பது சார்வாகரின் நிலைப் பாடாகும். (Rathakrishnan,1971,p.279).

அறிவுக்கு அடிப்படையாக காட்சியினைக் கொள்ளும் இவர்கள் பகுத்தறிவுசார் அனுபவவாதிகளாக விளங்கியதனால் கடந்த நிலைக்குரியதான கடவுள், ஆன்மா, மறுவுலகு,மறுபிறப்பு போன்றவற்றையும் நிரா கரிக்கின்றனர். பூத சேர்க்கையும் பிரிவுமே ஆக்கமும் அழிவும் எனும் சார்வாகரின் நிலைப்பாடு சமணம், நியாய வைசேடிகரினது உலகு பற்றிய அணுவாதக் கோட்பாட்டினை ஒத்ததாக அமைகிறது. கண்ணால் காண்பதை மாத்திரமே உண்மை என கொள்ளும் இவர்கள் உடலில் வேறாய் உடல் தோன்றுவதற்கு முன்பும் அழிந்ததற்கு பின்னரும் நிலைத்து நிற்பதாய் உள்ள உயிர் எனும் ஒன்று இல்லை என்பதை வற்புறுத்துகின்றனர். (Chandradhar Sharma, 1960,pp.41-42). பூத சேர்க்கையால் உடல் தோற்றம் பெறுகின்றபோது அதே சேர்க்கையின் விளைவால் அவ்வுடலுக்கு உணர்வு ஏற்படுகிறது. இதனை ஓர் சிறப்பான உதாரணம் மூலம் இவர்கள் விளக்குகின்றனர். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு எதிலும் இல்லாத சிவப்பு நிறம் மூன்றையும் சேர்க்கும் போது எங்கிருந்து வந்ததோ அது போன்று பூதச் சேர்க்கையால் உடலுக்கு அறியும் சக்தி ஏற்படுகிறது என குறிப்பிடுகின்றனர். (Chatterjee, & Datta, 1939, P.28).

படைப்புக் கொள்கையை சார்வாகர் நம்புவதில்லை. இதன் காரணமாக பிரபஞ்ச உருவாக்கத்திற்கு ஓர் சித்துப் பொருள் அவசியம் என்ற கொள்கையை நிராகரிக்கின்றனர். கர்மப் பயன், விதிவாதம் என்பவற்றை நிராகரிக்கும் இவர்கள் இவற்றுக்கு பதிலீடாக சுபாவக் கோட்பாட்டினை முன் வைக்கின்றனர். நான்கு வகை பூதங்களை பிரதான சடக் காரணமாகவும் அதன் நிமிர்த்த காரணமாக சுபாவத்தையும் சார்வாகர் ஏற்றுக் கொள்கின்றனர் என குறிப்பிடலாம்.

மேலைத்தேய சிந்தனை மரபில் இன்பவாதிகள் (Hedonism) குறிப்பிடுவது போன்று இன்பத்தையே (Pleasure) ஒழுக்கத்தின் இலட்சியமாக இவர்கள் ஏற்றுக் கொண்டனர். சுவர்க்கம், நரகம் என்பவற்றின் இருப்பையும் கர்மபலன், விதி என்பவற்றையும் இவர்கள் நிராகரிக்கின்றனர். இவ்வுலகிற்கு வேறாக சுவர்க்க, நரகம் எனும் இடங்கள் இல்லை. இன்பமே சுவர்க்கம். துன்பமே நரகம் என்பதை சார்வாகர் தெளிவுபடுத்தினர். (Chandradhar Sharma,1960,p.46) சார்வாகர், மகிழ்ச்சியையும் நன்மையையும் அடைவதற்கான மனித முயற்சியிலும் பலத்திலும் நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் மனிதர்கள் எதிர்கொள்ளக் கூடிய சிரமங்களை உணர்ந்த யதார்த்தவாதிகளாக இருந்ததனால் துறவற வாழ்க்கையையும், உடலை வருத்தும் தவவிரத வாழ்க்கையையும் நிராகரித்தனர். வேள்விகளையும், கிரியைகளையும் பலனற்ற செயற்பாடு என இவர்கள் ஒதுக்கினர். மனிதன் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சமூகம் அவசியம் எனக் கருதிய இவர்கள் அர்த்த சாஸ்திரங்களையும் நீதி சாஸ்திரங்களையும் பின்பற்றினர். இவர்கள் இன்பத்தை அடிப்படையாக கொண்டிருந்தார்கள். ஆயினும் இவ்வின்பம் தனிமனித வாழ்வுக்காக அன்றி சமூகம்சார் நல்வாழ்வுக்குரியதாக அமைந்திருந்தது. இந்திய மரபில் ஏற்றுக்

கொள்ளப்பட்ட நான்கு புருஷாத்தங்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் பொருள், இன்பம் எனும் இரண்டை மட்டும் முதன்மைப்படுத்தி இவர்கள் குறிப்பிட்டாலும் இவர்களது ஒழுக்கவியல் தன்முனைப்புள்ள ஒழுக்கவியலாக குறுக்கிக் கொள்ள முடியாது. ஏனெனில் இவர்கள் மனிதனின் பொதுவான தேவையை போதித்தனர். இருந்த போதிலும் சைவசித்தாந்த நூலான சிவஞானசித்தியாரில் பிறமதங்களை மறுத்துரைக்கும் பகுதியான பரபக்கம் எனும் பகுதியில் அருள்நந்தி சிவாச்சாரியார் சார்வாக நிலைப்பாட்டினை பின்வருமாறு குறிப்பிடுகின்றர்

''மதிநிலா நுதலாரோடு மணிநிலா முன்றிலேறி முதிர்நிலா வெறிப்பச் செவ்வாய், இளநிலா முகிழ்ப்ப மொய்த்த கதிர்நிலா வடங்கொள் கொங்கைக் கண்கள்மார் பகல மூழ்கும் புதநிலாவியநன் போகம் விடுவர்பன் சமயத்தோரே" (சிவஞானசித்தியார், பரபக்கம் செய்யுள்: 29).

### முடிவுரை

முடிவாகத் தொகுத்து நோக்கும் போது, இந்திய மெய்யியலில் சடவாத கருத்தானது வேத, உபநிடத, இதிகாச, புராணங்களில் ஆங்காங்கு சிதறிக் காணப்பட்டாலும் பிற்பட்ட கால சமண, சார்வாக சிந்தனைகளிலேயே அவற்றைத் தெளிவாகக் காணக்கிடைக்கிறது. சார்வாக மெய்யியல் முழுமையக சடவாதத்தினையே பிரதிபலிக்கின்றது. சார்வாக சிந்தனைகளுக்கு எதிரான சில விமர்சனங்கள் அவர்களது சமகாலத்திலும், பிற்பட்ட காலத்திலும் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக யாவும் சடமே எனும் கருத்து உலகினை இயந்திர மயப்படுத்தப்பட்ட நிலைக்குக் கொண்டு செல்வதாகவும், மாதரோடு கூடி இன்பம் பெறுவதே முத்தி அதைவிடுத்து மறுமையை எண்ணி அலைவதை வெறுக்கும் போக்கும், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று யாவரும் வாழ்ந்தால் உலக அமைதி எவ்வாறு நிலை நாட்டப்படும் என்பவை போன்ற விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டாலும் அவர்களது சடவாத நிலைப்பாடு பகுத்தறிவினையும், யதார்த்த வழிப்பட்ட அனுபவவாத நிலைப்பாட்டையும் உலகியல்சார் மனித தேவைகள், அபிலாசைகள், பௌதிகம்சார் விடயங்களை வற்புறுத்துகின்ற வகையில் இந்திய மரபில் சடவாத கருத்தானது ஒதுக்கப்பட முடியாத ஒன்றாக நாம் குறிப்பிடலாம்.

**Referances:**


Bina Gupta. (2012). *An Introduction to Indian Philosophy*. London: Rutledge.

Chandrashar Sharma. (1960). *A Critical Survey of Indian Philosophy*. London: Rider & Company.

Chatterjee, S.,C., & Datta, D.,M. (1939). *An Introduction to Indian Philosophy.* Calcutta: Uni versity of Calcutta.

Dasgupta, S. (1982). *Philosophical Essays*. Delhi: Motilal Banarsidass.

Debi Prasad Chattopadhiyaya. (1976). *What is Living and What is Death in India Philosophy*. New Delhi: Peoples Publishing House.

E.S.D., & Yanan.S. (1999). *Thattuva Tharisanangal* .Chennai: Maanikavasagar Pathipakam.

Hiriyanna, M. (2009). *Outlines of Indian Philosophy*. Delhi: Motilal Banarsidass pvt.

Kirushnaraja, S. (2011). *Meiyal Senthanaikal*. Somasundharam Kirushnaraja Nenaivu Malar.

Magadevan, T.,M.,P. (2000). *Enthu Samaya Thatuvam*. Colombo-Sennai: Kumaran Puthaka Ellam.

Satchidananda Murty, K. (2007). *Evolution of Indian Philosophy*. New Delhi: D.K. Print World (P) Ltd.

Thiruvelangam, M. (1971). *Sivagnana Siddiyar Parapakkam*. Yaarlpanam: Yarlpana Kūdduravu Kalagam.

# நற்றிணைப் புலவர் பெயர் எண்ணிக்கை வேறுபாடுகளும் சிக்கல்களும்
# Variance of Poet counts of the text Natrinai and Related Issues

முனைவர் இர. ஆனந்தகுமார் / Dr. R. Anandhakumar[1]

Date of submission: 2020-08-26
Date of acceptance: 2020-09-30
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
Dr. R. Anandhakumar
Email: anadhakumar001@gmail.com


## *Abstract*

The *Sangam* literature is a compendium work, which is one among the oldest scriptures of the Tamils. The text titled Natrinai is known to be the very primitive text of the collection. Learneds justify this by the prefix of '*nal*' found in the title of the text. Natrinai consists of 400 poems expounded by a group of poets. Previous studies show a continuous variation on the number of poets contributed to the text Natrinai. Scholar par excellence, author and commentator Narayanasamy Iyer in his first edition text cites 175 poets' names under the chapter describing the names of the Poets composed the Natrinai text. However, this number varies from the second edition onwards. Other research texts also state multiple poet counts such as, total of 175, 176, 187 and 192. Hence, this study aims to reason out the differences found in the number of poets stated in the books by authors namely, Pinnathur A.Narayanasamy Iyer (1915), S.Vaiyapurippillai (1940), Oavai. Su.Thuraisamyppillai (1966 & 1968) and Eva Wildon (2008). Additionally, this article also presents 53 poet's names which had been excluded from the list of Poets of the Sangam literature by the researchers stated above and also explores the reason behind it.


**Key Words:** Sangam literature, Nattrinai, poets, A. Narayanasamy Iyer (1915), S. Vaiyapurippillai (1940), Oavai Su.Thuraisamyppillai (1966 & 1968), Eva Wildon (2008).

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களுள் சங்க இலக்கியங்கள் காலத்தால் முற்பட்டதும், மிகப் பழமையானதும் ஆகும். அச்சங்க இலக்கியங்கள் சங்கப்புலவர்களால் பாடப்பட்ட பாக்களின் தொகுப்பு. இதனைச் சான்றோர்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துத் தொகுத்துள்ளனர். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணை 400 பாக்களைக் கொண்டுள்ளதால் நற்றிணை நானூறு என்பர். இந்நூல் 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்டுள்ளது. எனினும் 8 அடிப்பாடல் ஒன்றும் (283), 7 அடிப்பாடல் முற்று பெறாமல் ஒன்றும் (385) 13 அடிப்பாக்கள் சிலவும் (64, 110, 181, 221, 372, 379, 393) உள்ளன. ஒரு பாடல் (234) கிடைக்கவில்லை. நற்றிணையைத் தொகுத்தவர் யாரென அறிதற்குச் சான்றுகள் கிடைக்கவில்லையென அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர், தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். 1915 ஆம் ஆண்டு பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்களால் முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டது. இம்முதற்பதிப்பில் பாடினோர் வரலாற்றுப் பகுதியில் 175 புலவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து வந்த எஸ். ராஜம் (1957), ச. வே.சுப்பிர மணியன்

[1] The author is a Lecturer at TVUCAS, Kallakurichi, Tamil Nadu,India.anadhakumar001@gmail.com

(2010) ஆகியோர் நற்றிணைப் பதிப்புகளில் 192 புலவர்களும், ஹெச். வேங்கடராமன் பதிப்பில் (1989) 176 புலவர்களும், ந. சஞ் சீவியின் சங்க இலக்கியம் ஆய்வுகளும் அட்டவணைகளும் (2010) என்ற நூலில் 187 புலவர்கள் நற்றிணையைப் பாடியுள்ளதாகக் குறிப்புகள் உள்ளன.

புலவர் பெயர் வரலாற்றுப் பகுதியில் நற்றிணையைப் பாடிய புலவர்களின் வரலாற்றையும், பெயர்க்காரணத்தையும் பதிப்பாசிரியர்கள் விளக்குகின்றனர். அதில் சில புலவர்களின் பெயர்களுக்கு முன்னர் ஊர்ப்பெயர், தந்தை பெயர் உள்ளது. சான்றாக ''கீரத்தனாரும் குடவாயிற் கீரத்தனாரும் ஒருவரே" (வேங்கடராமன், 1989, p. LXXIII - LXXIV), "இளங்கீரனாரும், எயினந்தை மகன் இளங்கீரனார் என்பவரும் இவரும் ஒருவரே" (மேலது. p. Lxi). ஹெச். வேங்கடராமனின் நற்றிணைப் பதிப்பிற்கு, நூலாராய்ச்சி எழுதிய மயிலம். வே. சிவசுப்பிரமணியன் ''ஏனைய பாடல்களைப் பாடியவர்கள் தொகை 192. இத்தொகை வேறுபடவும் கூடும். சில ஆசிரியர் பெயர்களை ஒன்றாகக் கருதுவதும், வேறாகக் கருதுவதும் உண்டு" (மேலது. p. XVIII) என்று குறிப்பிடுகிறார்.

## பதிப்புகளில் காணப்படும் புலவர் பெயர் எண்ணிக்கை வேறுபாடுகளும் சிக்கல்களும்

நற்றிணைக்கு 1915 ஆம் ஆண்டு முதல் 2020 வரை பல்வேறு பதிப்புகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் (1915), எஸ். வையாபுரிப்பிள்ளை* (1940) எஸ். ராஜம் (1957), ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (1966 - 1968), ஹெச். வேங்கடராமன் (1989) ஏவா வில்தன் (2008), ச. வே. சுப்பிரமணியன் (2013) ஆகியோரின் பதிப்புகள் புலவர் எண்ணிக்கை வேறுபாட்டு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சைவ சித்தாந்த மகாசமாஜம் 1940 ஆம் ஆண்டு 'சங்க இலக்கியம் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்' என்ற நூலை வெளியிட்டது. அந்நூலில் புலவர் பெயர்களின் அகரவரிசைப்படி பாக்கள் அமைந்துள்ளன. இப்பதிப்பின் முதற்பக்க அட்டையில் பதிப்பகத்தின் பெயர் இடம்பெற்றுள்ளதே தவிர எஸ். வையாபுரிப்பிள்ளையின் பெயர் இல்லை. இப்பதிப்பிற்கு முகவுரை எழுதிய ம. பாலசுப்பிரமணியன் "சென்னைப் பல்கலைக்கழகத் தலைமைத் தமிழாசிரியரும், ஏட்டுச்சுவடிகளைப் பரிசோதிப்பதில் சிறந்த நிபுணரும், சங்க நூல்களில் முப்பது வருஷ காலமாகப் பயிற்சியுடையவரும், சமாஜ வெளியீடுகள் பலவற்றிற்குப் பிரதிகளைச் சேகரித்து ஒப்பு நோக்கிப் பல வழிகளிலும் துணைபுரிந்தவரும், எனது நண்பருமாகிய சைவத்திருவாளர் ராவ்சாஹிப் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் இவ்வெளியீட்டிற்காக இயற்றிய தொண்டு அளவிடற்பாலதன்று. இப்பதிப்புக்கு இவர்களே பதிப்பாசிரியர் என்று சொல்லக்கூடிய அளவிற் பேருதவி செய்துள்ளார்கள். இந்த அன்பர்க்கும், இவர்கள் இவ்வாறு தொண்டு புரிதற்கு அநுமதியளித்த சென்னைப் பல்கலைக்கழகத்தினர்க்கும், இவர்கள் போன்று ஒத்துழைத்த ஏனைய அன்பர்கட்கும், நமது சமாஜம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார் (வையாபுரிப்பிள்ளை, 1940, p.XIX). இதே நூலை 1967 ஆம் ஆண்டு, பாரி நிலையம் இரண்டாம் பதிப்பாகவும், முல்லை நிலையம் 2005 ஆம் ஆண்டு முதற்பதிப்பாகவும் வெளியிட்டது. இப்பதிப்புகளின் முதற்பக்க அட்டைகளில் எஸ். வையாபுரிப்பிள்ளையின் பெயரே உள்ளது. பெறும்பாலான ஆய்வாளர்களும் 1940 ஆம் ஆண்டு வெளிவந்த சைவ சித்தாந்த மகாசமாஜப் பதிப்பை எஸ்.வையாபுரிப்பிள்ளையின் பதிப்பாகவே கருதுகின்றனர். ஆகவே அவர் பெயரே இங்கும் குறிப்பிடப் படுகிறது.

## பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் (1915)

1915 ஆம் ஆண்டு நற்றிணை முதற் பதிப்பு வெளிவருவதற்கு முன்னரே பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் நீரிழிவு நோயால் இறந்ததாகவும், அதன் பின்னரே பாடினோர் வரலாறும் பாடப்பட்டோர் வரலாறும் சேர்க்கப்பட்டதாகவும் முகவுரையில் (நாரயணசாமி ஐயர், 1915, p.3) குறிப்பிடப்பட்டுள்ளது.

நற்றிணை முதற்பதிப்பில் காணப்படும் புலவர் பெயர் வரலாற்றுப் பகுதியில் 175 புலவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அடைப்பெயர் உள்ள புலவர் இல்லா புலவர் என இருவரையும் ஒன்றாக கருதும் போக்கு இப்பதிப்பில் காணமுடிகிறது. சான்றாக "எயினந்தைமகனார் இளங்கீரனாரென்பவ ரிவரே" (மேலது. p. 6), "தொண்டைமான் இளந்திரைய னென்பவர் இவரே" (மேலது. p. 7) என்று, இவை போல பதினாறு புலவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

**அட்டவணை 1**

| வ.எ. | புலவர் பெயர் | புலவர் பெயர் |
|---|---|---|
| 1. | இளங்கீரனர் (3, 62,113) | எயினந்தை மகனார் இளங்கீரனர் (308, 346, 269) |
| 2. | மருதனிள நாகனார் (21, 39, 103) | மதுரை மருதனிள நாகனார் (194, 216, 283, 290, 302, 326, 341,362, 392) |
| 3. | பேராலவாயர் (51) | மதுரைப் பேராலவாயர் (361) |
| 4. | பேரிசாத்தனார் (25,37, 67, 104,199) | வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் (229,323, 378) |
| 5. | ஆலம்பேரி சாத்தனார் (152, 255) | மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார் (338, 303) |
| 6. | நல்வேட்டனார், (53, 292) | மிளைகிழான் நல்வேட்டனார் (210, 349) |
| 7. | பெரும்பதுமனார் (2) | மீளிப்பெரும்பதுமனார் (109) |
| 8. | பாலத்தனார் (52) | நப்பாலத்தனார் (240) |
| 9. | சேகம்புதனார் (69) | சேந்தம்பூதனார் (261) |
| 10. | கீரத்தனார் (42) | குடவாயிற் கீரத்தனார் (27, 212, 379) |
| 11. | கந்தரத்தனார் (116, 146, 238) | உரோடகத்துக் கந்தரத்தனார் (306) |
| 12. | இளந்திரையனார் (94, 99) | தொண்டைமான் இளந்திரையனார் (106) |
| 13. | மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் (329) | மதுரைப் பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் (352) |
| 14. | மாறன்வழுதி (97) | பாண்டியன் மாறன் வழுதி (301) |
| 15. | மாங்குடி கிழார் (120) | காஞ்சிப் புலவன் (123) |
| 16. | கதப்பிள்ளையார் (135) | கரூவூர்க் கதப்பிள்ளைச்சாத்தனார் (343) |

மேலும் 322 ஆம் பாடலைப் பாடிய 'மதுரைப் பாலாசிரியன் சேந்தன் கொற்றனார்' என்ற புலவரின் பெயர், 1915 ஆம் ஆண்டு வெளிவந்த நற்றிணை முதற்பதிப்பில் விடுபட்டுள்ளது. ஒரு வேளை பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் இறக்காமல் இருந்திருந்தால் இது போன்ற சிக்கல்கள் வந்திருக்காதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. 175 புலவர்களுடன் மேற்கண்ட அட்டவணையில் காணப்படுகின்ற 16 புலவர்களையும், விடுபட்ட புலவரின் பெயரையும் சேர்த்தால் 192 (175 + 16 + 1 = 192) புலவர்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன.

## எஸ். வையாபுரிப்பிள்ளை (1940)

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1940 ஆம் ஆண்டு 'சங்க இலக்கியம் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்' என்ற

நூலை வெளியிட்டது. ஏனைய பதிப்புகளைக் காட்டிலும் இப்பதிப்பு வேறுபட்டது. ஏனெனில் சங்க இலக்கியப் பாக்கள் அனைத்தும் புலவர்களின் வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. அந்நூலின் பின்னிணைப்பிலும் சங்கப் பாக்களின் புலவர்களின் பெயர்கள் அகர வரிசையில் இடம்பெற்றுள்ளன. அதில் நற்றிணைப் பாடிய 176 புலவர்களின் பெயர்கள் உள்ளன. மேலும் இப்பதிப்பில் இரு பெயர்களைக் கொண்ட புலவர்கள் ஒருவராக கருதும் போக்கைக் காணமுடிகிறது. சான்றாக இப்பதிப்பில் மருதனிளநாகனார் பெயர் இருக்க, மதுரை மருதனிளநாகனார் பெயர் இல்லை. இவரது பாடல்கள் மருதனிளநாகனாரின் பாடல்கள் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இது போல பதினைந்து புலவர்களின் பாடல்கள் காணப்படுகின்றன.

மதுரை மருதனிளநாகனாரின் பாடல்கள் மருதனிளநாகனார் பாடல் தொகுப்பிலும், மதுரைப் பேராலவாயரின் பாடல் பேராலவாயர் பாடல் தொகுப்பிலும், வடம வண்ணக்கன் பேரிசாத்தனாரின் பாடல்கள் பேரிசாத்தனார் பாடல் தொகுப்பிலும், மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனாரின் பாடல்கள் ஆலம்பேரி சாத்தனார் பாடல் தொகுப்பிலும், மிளைகிழான் நல்வேட்டனாரின் பாடல் நல்வேட்டனார் பாடல் தொகுப்பிலும், மீளிப்பெரும்பதுமனாரின் பாடல் பெரும்பதுமனார் பாடல் தொகுப்பிலும், பாலத்தனாரின் பாடல் நப்பாலத்தனார் பாடல் தொகுப்பிலும், கீரத்தனாரின் பாடல் குடவாயிற் கீரத்தனார் பாடல் தொகுப்பிலும், உரோடகத்துக் கந்தரத்தனாரின் பாடல்கள் கந்தரத்தனாரின் பாடல் தொகுப்பிலும், தொண்டைமான் இளந்திரயனின் பாடல் இளந்திரயனின் பாடல் தொகுப்பிலும், மாறன் வழுதியின் பாடல் பாண்டியன் மாறன் வழுதி பாடல் தொகுப்பிலும், மாங்குடி கிழாரின் பாடல் மாங்குடி மருதனார் பாடல் தொகுப்பிலும், இளவேட்டனாரின் பாடல்கள் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் பாடல் தொகுப்பிலும், அம்மள்ளனாரின் பாடல் மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் பாடல் தொகுப்பிலும், எயினந்தை மகன் இளங்கீரனார் பாடல்கள் இளங்கீரனாரின் பாடல் தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளன.

ஏனைய நற்றிணைப் பதிப்புகளில் அடைப்பெயர் இல்லாத கொற்றனார் (30), கணக்காயனார் (23), கண்ணம்பாளனார் (148), காரிக்கண்ணனார் (237), காமக்கணிப் பசலையார் (243) ஆகிய புலவர்களின் பெயர்கள், எஸ். வையாபுரிப்பிள்ளையின் பதிப்பில் முறையே செல்லூர்க் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார், மதுரைக் கணக்காயனார், கருர்க் கண்ணம்பாளனார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார், நப்பசலையார் என்று உள்ளன. இதற்குக் காரணம், நற்றிணையில் மட்டுமே இப்புலவர்களது பெயர்கள் அடை இல்லாமல் காணப்படுகின்றன. ஆனால் அகநானூறு, குறுந்தொகை, புறநானூறு ஆகிய நூல்களில் இவர்களது பெயர்கள் அடையோடு காணப்படுவதால் இவற்றையே பதிப்பாசிரியர் கையாண்டுள்ளார்.

புலவர் பெயர்களின் அகரவரிசையில் பாக்கள் அமைந்துள்ள இப்பதிப்பில், சங்கப் பாக்களைத் தொகுக்கும் பொழுதே இவ்வகையான சிக்கல்களைச் சந்தித்திருக்கின்றனர். நூலின் முகவுரையில் "இந்நூலிற்காணும் புலவர்களின் பெயர்களுள் சிலவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதரணமாகக் கதப்பிள்ளை, கதப்பிள்ளையார், கருவூர்க் கதப்பிள்ளை, கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார், கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார் என்று ஐவகையாகப் பெயர்கள் உள்ளன. இவற்றாற் குறிக்கப்படும் புலவர் ஒருவரா இருவரா பலரா என்பது ஐயத்திற்கிடமின்றித் தெளியக்கூடவில்லை. புறநானூற்றுப் பதிப்பாசிரியர் இப்பெயர்கள் தந்தையும் மைந்தனுமாகிய இருவரைக் குறிக்குமென்கிறார்; நற்றிணைப் பதிப்பாசிரியர் இவையனைத்தும் ஒருவரையே குறிக்குமென்கிறார்; நமது பதிப்பில் இப்பெயர்கள் கதப்பிள்ளையார், கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் என்ற இரு புலவர்களைக் குறிப்பனவாகக் கொண்டு பிரதிகளின் சான்றால் சில பாடல்கள்

ஒருவருக்கும் ஏனையவை மற்றவருக்கும் தரப்பட்டுள்ளன. இதிலிருந்து நற்றிணைப் பதிப்பாசிரியர் கொள்கை தவறென்று இப்பதிப்பு முடிவு கட்டி விட்டதாக எவரும் நினைத்தலாகாது. இவ்வாறே நக்கீரர், கந்தரத்தனார், முதலிய பல பெயர்கட்கும் கொள்க. இப்பதிப்பில் ஒரு புலவருடைய பாடல்களாகத் தரப்பட்டவை இருவர் அல்லது மூவர் பாடல்களாகவும் இருத்தல் கூடும்" (வையாபுரிப்பிள்ளை, 1940, p. xiii – xiv) என்று ம.பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். இவர் முகவுரையில் குறிப்பிட்டது போல கதப்பிள்ளையார், கரூவூர்க் கதப்பிள்ளையார் ஆகிய இரு புலவர்களின் பாக்கள் மட்டுமே தனித்தனியாகக் காணப்படுகிறது. ஆனால், ஏனைய அடையால் வேறுபடுகின்ற இருவகையான புலவர்களை ஒன்றாகக் கருதி, ஒரே புலவரின் பெயரில் பாக்கள் இடம்பெற்றுள்ளன (15 புலவர்கள்) என்பதை அந்நூலின் வாயிலாக அறியமுடிகின்றது. ஆகவே மேல குறிப்பிட்ட 176 புலவர்களுடன் 15 புலவர்களையும், கடவுள் வாழ்த்து பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனாரையும் சேர்த்தால் 192 புலவர் காணப்படுகின்றனர்.

### மர்ரே எஸ். ராஜமும் ச. வே. சுப்பிரமணியனும்

மர்ரே எஸ். ராஜம் (1957), ச. வே. சுப்பிரமணியன் (2010) ஆகியோர் தமது நற்றிணைப் பதிப்புகளில், புலவர்கள் பெயர் வேறுபாடுகளின்றி 192 புலவர்களின் பாக்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

### ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (1966 – 1968)

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் பல்வேறு பிரதிகளை ஒப்புநோக்கி நற்றிணைக்கு அரியதொரு விளக்கவுரையைக் கொண்டு வந்துள்ளார். அவர் தமது பதிப்பில் நற்றிணையைப் பாடிய மொத்த புலவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. ஆனால் பதிப்பில் இடம்பெற்றுள்ள புலவர்களை நோக்குகையில் 201 புலவர்கள் காணப்படுகின்றனர். எப்பதிப்பிலும் காணாத வகையில் இவர் மட்டும் பெயர் தெரியாத புலவர்களின் பாடல்களுக்குப் பெயர்களைக் கண்டறிந்து கொடுத்துள்ளார். இவரது பதிப்பில் காணப்படும் புலவர் பெயர்களில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அவற்றை எட்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

* ஏனைய பதிப்புகளில் அடை இல்லாத புலவர்கள் , இப்பதிப்பில் அடையுடன் காணப்படுவது
* தனித்தனிப் புலவர்கள்
* இருவரும் ஒருவரே
* புதிய புலவர்கள்
* புலவர் பெயர் பட்டியலில் இல்லாது நூலின் உள்ளே பெயர் காணப்படுவது
* புலவர் பெயர் பட்டியலில் ஒரு பெயர் இருக்க, நூலின் உள்ளே வேறு பெயர் காணப்படுவது
* புலவர் பெயர்களில் சிறிது வேறுபாடு
* புலவர் பெயர் முற்றிலும் மாறுபடுதல்

ஏனைய பதிப்புகளில் அடை இல்லாத புலவர்கள், இப்பதிப்பில் அடையுடன் காணப்படுவது

பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், ஹெச். வேங்கடராமன், மர்ரே எஸ். ராஜம், ஏவா வில்தன் ஆகியோர்களின் பதிப்புகளில் அடை காணப்படாத புலவர்கள், ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் பதிப்பில் அடைபெற்று காணப்படுகின்றனர்.

அட்டவணை 2

| வ.எ. | ஏனைய பதிப்புகளில் உள்ள அடை இல்லா புலவர்கள் | ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் பதிப்பில் காணப்படும் அடையுள்ள புலவர்கள் |
|---|---|---|
| 1. | அறிவுடைநம்பி | பாண்டியன் அறிவுடை நம்பி (15) |
| 2. | பேரிசாத்தனார் | வடவண்ணக்கன் பேரிசாத்தனார் (25) |

| | | |
|---|---|---|
| *3.* | *சீத்தலைச் சாத்தனார்* | *மதுரைச் சீத்தலைச் சாத்தனார் (36)* |
| *4.* | *கீரத்தனார்* | *குடவாயில் கீரத்தனார் (42)* |
| *5.* | *பேராலவாயர்* | *மதுரைப் பேராலவாயர் (51)* |
| *6.* | *பாலத்தனார்* | *நப்பாலத்தனார் (52)* |
| *7.* | *நல்வேட்டனார்* | *மிளைகிழான் நல்வேட்டனார் (53)* |
| *8.* | *மாறன் வழுதி* | *பாண்டியன் மாறன் வழுதி (97)* |
| *9.* | *இளங்கீரனார்* | *எயினந்தை மகனார் இளங்கீரனார் (113)* |
| *10.* | *மள்ளனார்* | *அம்மள்ளனார் (204)* |
| *11.* | *தேவனார்* | *பூதன் தேவனார் (227)* |
| *12.* | *கந்தரத்தனார்* | *கருவூர்க் கந்தரத்தனார் (238)* |
| *13.* | *காமக்கணிப் பசலையார்* | *காமக்கணி நப்பசலையார் (243)* |

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் அரசினர் கையெழுத்து நூல் நிலைய ஏடு, மதுரை தமிழ்ச்சங்கத்து ஏடு, டொம்மிச்சேரி கருப்பையாத் தேவர் ஏடு, புதுப்பட்டி சிவ. மு. முத்தையாச் செட்டியார் ஏடு ஆகிய ஏட்டுச்சுவடிகளைப் பயன்படுத்தியுள்ளார். அச்சுவடிகளில் புலவர்களின் பெயர்கள் எவ்வாறு உள்ளது என்பதை விளக்குகிறார். அப்புலவர்களுள், குடவாயிற் கீரத்தனார் பற்றிக் குறிப்பிடும் பொழுது கீரத்தனாரின் பெயர் எவ்வெவ் பிரதிகளில் வந்துள்ளது என்பதைக் குறிப்பிடவில்லை.

பேராலவாயரைப் பற்றிக் குறிப்பிடும் போது "இச்சான்றோர் பெயர் வெறிதே பேராலவாயர் என்றும் காணப்படுகிறது" (துரைசாமிப்பிள்ளை, *1966*, p. *210*) என்று குறிப்பிடுகிறார். ஆனால் மதுரைப் பேராலவாயர் என்ற பெயர் எந்தெந்த பிரதிகளில் இடம்பெற்றுள்ளது என்பதையும், இவர் ஏன் பேராலவாயர் என்ற பாடத்தைக் கொண்டார் என்பதற்கானக் காரணத்தையும் குறிப்பிடவில்லை. ஏனைய நற்றிணைப் பதிப்புகளில் பாலத்தனார் (*52*) என்று இருக்க, இவரது பதிப்பில் மட்டும் நப்பாலத்தனார் என்று உள்ளது. இப்புலவரைப் பற்றி குறிப்பிடுகையில் "இவர் பெயர் அச்சுப்படியிலும் மதுரைத் தமிழ்ச்சங்க ஏட்டிலும் பாலத்தனார் என்று காணப்படுகிறது. பாலப்பன், பாலம்மை என்றெல்லாம் இக்காலத்தும் மக்கட்குப் பெயரிட்டு வழங்குவதுண்மையாயின், பாலத்தன் என இவர் பெயர் இருப்பது வியப்புத் தராது. அத்தன், அப்பன் என்பன ஒரு பொருளன. இவர் பாட்டுக்கள் இந்நூற்கண்ணே தொகுக்கப்பட்டுள்ளன. கொல்லிநாட்டுத் தலைவனான வல்வில் ஓரியைச் சிறப்பிப்பதால் இவர் அவனது ஆதரவு பெற்றவரெனத் தெளியலாம்" (மேலது. p. *213*) என்று விளக்குகிறார். எனவே பாலத்தனார் என்று பாடம் கொள்வதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறும் ஆசிரியர், நப்பாலத்தனார் என்ற பெயரை ஏற்காமல் இருப்பதற்கான விளக்கத்தைக் குறிப்பிடவில்லை.

சேந்தன் பூதனாரைப் பற்றிக் கூறுகையில் "சேந்தம் பூதன் என்ற தொடர் சேந்தன் மகனான பூதன் என்று பொருள்படும். இவர் பெயர் அச்சுப்பிரதியில் சேகம் பூதனார் என்று இருக்கிறது. இது பற்றிக் கூறவந்த திரு. அ. நாராயணசாமி ஐயரவர்கள், பிரதிகளில் சேகம் பூதனார் என்று இருத்தலானே இருந்தவாறே பதிப்பிக்கப்பட்டது; சேந்தம் பூதனார் என்பவரும் மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார் என்பவரும் இவரே என்பர். சேந்தன் பூதன் என்ற பெயருடையார் கழுகுமலைப் பகுதியிலுள்ள கல்வெட்டுக்களில் காணப்படுகின்றார்கள்; ஆயினும் சேந்தன் பூதன் என்ற பெயர் இடைக்காலத்தும் தமிழகமெங்கும் மக்களிடையே வழங்கிய துண்டு என்பதை

நினைவிற் கொள்ளல்வேண்டும்" (மேலது. p. 271) என்கிறார்.

பாண்டியன் மாறன் வழுதியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "மதுரைத் தமிழ்ச்சங்க ஏட்டிலும் புதுப்பட்டி ஏட்டிலும் மாறன் வழுதி என்றே இவர் பெயர் காணப்படுகிறது" என்று குறிப்பிடுகிறார். மேலும் "மாறன் என்பது தொடக்கத்தில் ஒருவற்குச் சிறப்புப்பெயராய்த் தோன்றிப் பின் பழையன், மாறன் என்றார் போலப் பொதுப்பெயராய் மாறியது. வேள்விக்குடிச் செப்பேட்டிற் காணப்படும் பாண்டியருள் தேர்மாறன் என ஒருவன் இருப்பது மேற்குறித்தனை வலியுறுத்துவதாம்" (மேலது. p. 377) என்று விளக்கம் தருகிறார். அம்மள்ளனாரைப் பற்றிக் குறிப்பிடுகையில் "அச்சுப்பிரதிகளில் இவர் பெயர் மள்ளனார் என்று காணப்படினும், ஏடுகளில் அம்மள்ளனார் எனக் காணப்பட்டமையின் அதுவே கொள்ளப்பட்டது" (மேலது. ஜீ. 809) என உரை தருகிறார். எனவே இவ்வகை மாற்றங்களைக் களைய உரையாசிரியர் பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட ஏடுகளைக் கண்டறிந்து மூலபாட ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்.

### தனித்தனிப் புலவர்கள்

ஏனைய பதிப்புகளில் ஒரே புலவர்கள் என்று கருதப்பட்டவர்கள், ஔவை சு.துரைசாமிப்பிள்ளைப் பதிப்பில் வெவ்வேறு புலவராகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் புலவர் பெயர்களின் முன்னர் அடைப்பெயர் வருவதே காரணம் என்று உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

| | |
|---|---|
| மதுரைச் சீத்தலைச் சாத்தனார் (36, 127, 339) | எயினந்தை மகனார் இளங்கீரனர் (113, 269, 308, 346) |
| பெரும்பதுமனார் (2) | மீளிப்பெரும்பதுமனார் (109) |
| கந்தரத்தனார் (116, 146) | உரோடகத்துக் கந்தரத்தனார் (306) |

### இருவரும் ஒருவரே

ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் பதிப்பில் சில புலவர்களின் பெயர்கள், தனித்தனிப் புலவர்களாகக் கருதாமல், அடையால் வேறுபட்டிருப்பினும் ஒரே புலவராகக் கருதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இளங்கீரனார் (3, 56, 62) | மிளைகிழான் நல்வேட்டனார் (22, 53) |
| இளந்திரையனார் | தொண்டைமான் இளந்திரையனார் (94, 99, 106) |
| காஞ் சிப்புலவனார் | மாங்குடி கிழார் (123, 120) |
| சீத்தலைச் சாத்தனார் | மதுரைச் சீத்தலைச் சாத்தனார் (36, 127, 339 |

### புதிய புலவர்கள்

ஏனைய நற்றிணைப் பதிப்புகளில் இல்லாத புதிய புலவர்களாக, அதியன் விண்ணத்தனார் (182), ஆவூர் கிழார் மகனார் கண்ணனார் (207), அறுவை வாணிகன் மகனார் கண்ணனார் (186), இளங்கண்ணனார் (229), உம்பர்காட்டு இளங்கண்ணனார் (181), உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் (179), ஓதலாந்தையார் (126), கச்சிப்பேட்டுக் கதக்கண்ணனார் (125), பேயனார் (164), மதுரைக் கணக்காயனார் (175), முத்தூற்று மூதெயினனார் (396), வெள்ளூர்க் கிழார் மகனார் வெண்பூதியார் (160), அரிசிலங்குமரனார் (141), உரோடகத்தனார் (64), மிளைகந்தன் நாகனார் (66), உறையூர் முதுகூத்தனார் (58), கச்சிப்பேட்டு நன்னாகையார் (209), கரூர்க் கந்தரத்தனார் (238) ஆகியோர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் பதிப்பில் இடம்பெறுகின்றனர்.

### புலவர் பெயர் பட்டியலில் இல்லாது நூலின் உள்ளே பெயர் காணப்படுவது

ஔவை சு.துரைசாமிப்பிள்ளையின் பதிப்பில் காணப்படும் புலவர் பெயர் பட்டியலில் புலவர்களின் பெயர்களும்,

அவர்கள் பாடிய பாக்களின் எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அப்பட்டியலில் களக்கோட்டுத்தண்டியார் (382), பொதும்பில் கிழார் மகன் வெண்கண்ணியார் (375), மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் (388,), கண்ணகனார் (8, 79, 188,) ஆகிய புலவர்களின் பெயர் இல்லாது, நூலின் உள்ளே இப்புலவர்களின் பெயர் காணப்படுகின்றன.

## புலவர் பெயர் பட்டியலில் ஒரு பெயர் இருக்க, நூலின் உள்ளே வேறு பெயர் காணப்படுவது.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் பதிப்பில் புலவர் பெயர் பட்டியலில் ஒரு பெயர் இருக்க, நூலின் உள்ளே அதே பெயர் சிறிது மாற்றங்களுடன் இடம்பெற்றுள்ளது.

*அட்டவணை 3*

| வ. எ. | புலவர் பட்டியலில் உள்ள பெயர் | நூலின் உள்ளே காணப்படும் பெயர் |
|---|---|---|
| 1. | மதுரை மருதன் இளநாகனார் | மருதன் இளநாகனார் (21, 39, 103, 166, 341) |
| 2. | செங்கண்ணனார் | செங்கண்னார் (171) |
| 3. | விராஅன் சாத்தனார் | விரான் சாத்தனார் (68) |
| 4. | மதுரைப் பெருமருதன் | இளநாகனார் (251) |
| 5. | பேரிசாத்தனார் வடம வண்ணக்கண் பேரிசாத்தனார் | வடவண்ணக்கண் பேரிசாத்தனார் (25) வட வண்ணக்கண் பேரிசாத்தனார் (378) |
| 6. | மதுரை மருதங்கிழார் | மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் (329) |

மேற்கண்ட பெரும்பான்மையான சிக்கல்கள் யாவும் அச்சுப் பிழையினால் நேர்ந்திருக்கிறது.

## புலவர் பெயர்களில் வேறுபாடு

ஏனைய நற்றிணைப் பதிப்புகளில் காணப்படும் புலவர்களின் பெயர்கள் ஔவை சு.துரைசாமிப்பிள்ளையின் பதிப்பில் மட்டும் சிற்சில மாற்றங்களுடன் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

*அட்டவணை 4*

| வ. எ. | ஏனைய பதிப்புகளில் புலவர் பெயர் | ஔவை சு. துரைசாமிப் பிள்ளைப் பதிப்பில் புலவர் பெயர் |
|---|---|---|
| 1. | நக்கீரர் | நக்கீரனார் (31,358) |
| 2. | பிரமசாரி | பிரமன்காரி (34) |
| 3. | கோண்மா நெடுங்கோட்டனார் | கோமால் நெடுங்கோடனார் (40) |
| 4. | பெருங்கௌசிகனார் | பெருங்கோசிகனார் (44) |
| 5. | சேகம்பூதனார் | சேந்தம்பூதனார் (69) |
| 6. | சிறுமோலிகனார் | சிறுமேலாதனார் (61) |
| 7. | பிரான் சாத்தனார் | விரான் சாத்தனார் (68) |
| 8. | நல்விளக்கனார் | நல்விளக்குன்றனார் (85) |
| 9. | போதனார் | பூதனார் (110) |
| 10. | கண்ணாகரன் கொற்றனார் | கண்ணகன் கொற்றனார் (143) |
| 11. | கொள்ளம்பக்கனார் | கொள்ளம்பாக்கனார் (147) |

| | | |
|---|---|---|
| 12. | கருவூர்க் கோசனார் | கருவூர்க் கோசிகனார் (214) |
| 13. | மதுரைச் சுள்ளம் போதனார் | மதுரை சுள்ளிப் போதனார் (215) |
| 14. | குன்றுகட் பாலியாதனார் | குன்றின்கட் பாலியாதனார் (220) |
| 15. | கணிபுன்குன்றனார் | கணியன் பூங்குன்றனார் (226) |
| 16. | முடத்திருமாறன் | முட்டத்திருமாறன் (228) |
| 17. | அல்லங்கீரனார் | அள்ளங்கீரனார் (245) |
| 18. | காசிபன் கீரனார் | காப்பன் கீரனார் (248) |
| 19. | வண்ணக்கன் சோருமருங்குமரனார் | வண்ணக்கன் சேரிக்குமரனார் (257) |
| 20. | ஆவூர்க் காவிதி சாதேவனார் | ஆவூர்க் காவிதி மாதேவனார் (264) |
| 21. | வெறிபாடிய காமக்கண்ணியார் | வெறிபாடிய காமக் காணியார் (268) |
| 22. | தும்பிசேர் கீரனார் | தும்பைச் சொகினனார் (277) |
| 23. | மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் | மதுரைப் பொற்கொல்லன் வெண்ணாகனார்(285) |
| 24. | குதிரைத் தறியனார் | குதிரைத் துறையனார் (296) |
| 25. | வினைத்தொழில் சோகீரனார் | விளக்குடிச் சொகிரனார் (319) |
| 26. | மடல் பாடிய மாதங்கீரனார் | மடல் பாடிய மோதங்கீரனார் (377) |
| 27. | வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் | வடவண்ணக்கன் பேரிசாத்தனார் (378) |

## புலவர் பெயர் முற்றிலும் மாறுபடுதல்

ஏனைய நற்றிணைப் பதிப்புகளில் இடம்பெறும் புலவர்களான பெருவழுதி (56), உலோச்சனார் (64), இனிசந்த நாகனார் (66), கதப்பிள்ளையார் (135), சல்லியங்குமரனார் (141), நொச்சி நியமங்கிழார் (209) ஆகிய புலவர்களின் பெயர்கள் முறையே இளங்கீரனார் (56), உரோடகத்தனார் (64), மிளைகந்தன் நாகனார் (66), தூங்கல் ஓரியார் (135), அரிசிலங்குமரனார் (141), கச்சிப்பேட்டு நன்னாகையார் (209) என்று முற்றிலும் மாறுபட்டுள்ளன. இதற்கு, உரையாசிரியர் தான் பார்த்த பிரதிகளில் இப்புலவர்களின் பெயர் காணப்பட்டதால் அப்பெயரே கொள்ளப்பட்டது என்று விளக்கம் தருகிறார். எனவே ஏனைய பதிப்புகளைக் காட்டிலும் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் பதிப்பு வேறுபடுகிறது. அவர் தமது பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட ஏடுகள் தற்போது கிடைக்கவில்லை. அவ் ஏடுகள் கிடைத்தால் நற்றிணைக்கு மிகச்சிறந்த மூலபாட பதிப்பு கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

## வேங்கடராமனின் பதிப்பும், சஞ்சீவியின் ஆய்வும்

1989 ஆம் ஆண்டு ஹெச். வேங்கடராமனின் பதிப்புரையை உ. வே. சா. நூலகம் வெளியிட்டது. இந்நூலில் புலவர் பெயர் குறிப்பிடும் பகுதியை நோக்கும் போது, பின்னத்தூர் அ. நாரயணசாமி ஐயரின் முதற்பதிப்பை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்துள்ளது. முதற்பதிப்பில் 175 புலவர்களும் இப்பதிப்பில் 176 புலவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளனர். இதற்குக் காரணம் ஹெச். வேங்கடராமனின் பதிப்பில் புலவர் வரிசை எண்ணிக்கையில் ஒரு புலவரைக் குறிக்க இரு எண்களைக் குறித்துள்ளனர். அதனால் இப்பிழை நேர்ந்துள்ளது.

ந. சஞ்சிவீயின் ‘சங்க இலக்கியம் ஆய்வுகளும் அட்டவணைகளும்’ என்ற நூலில்

நற்றிணையைப் பாடியதாக மொத்த புலவர் 187 (சஞ்சீவி, 2010, p. 228) பேர் என்ற குறிப்பு உள்ளது. ஆனால் எதனடிப்படையில் 187 பேர் என்று கணக்கில் கொள்ளப்பட்டது என்பதை ந. சஞ்சீவி அவர்கள் குறிப்பிடவில்லை. மேலும், நூலின் 236 ஆம் பக்கத்தில், சங்க இலக்கியத்தைப் பாடிய ஒட்டு மொத்த (473 புலவர்கள்) புலவர்களின் பெயர்கள் அகர வரிசைப்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அங்கே உள்ள புலவர்களின் பெயர்களை ஒப்பிட்டு நோக்கும் போது, அடையால் வேறுபடுகின்ற புலவர்கள் கணக்கில் கொள்ளாமல் விடுபட்டுள்ளது. எனவே ந.சஞ்சீவி அவர்கள் நற்றிணையில் பாடிய புலவர்களாக 187 பேர் என்று கொள்ளாமல், 175 புலவர் என்ற எண்ணிக்கையைத் தான் கொடுத்திருக்க வேண்டும்.

## ஏவா வில்தன் (2008)

ஏவா வில்தன் அவர்கள் சுவடி, காகிதப்பிரதிகள், அச்சுப் பதிப்புகள் ஆகியவற்றை ஒப்புநோக்கி, நற்றிணைக்குச் செம்பதிப்பைக் கொண்டு வந்துள்ளார். இவர் தமது பதிப்பில் நற்றிணையைப் பாடிய புலவர்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. ஆனால் பிண்ணினைப்பில் புலவர்களின் பெயர்களைப் பட்டியலிடுகிறார். அப்பட்டியலில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. அவை

* மள்ளனார், அம்மள்ளனார் ஆகிய புலவர்களின் பெயர்கள் அப்பட்டியலில் விடுபட்டுள்ளன.
* பின்னிணைப்பில் காணப்படும் புலவர் பெயர் பட்டியலில் மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார் (ஏவா வில்தன், 2008, p. 371) இரு பாடல்களைப் பாடியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நூலின் உள்ளே மதுரை ஓலைக்கடையதார் நல்வெள்ளையார் (369), மதுரை ஓலைக்கடையத்தார் வல்வெள்ளையார் (250) என்று தனித்தனிப் புலவராகக் இடம்பெற்றுள்ளது.
* கந்தரத்னார் (ஏவா வில்தன், 2008, p. 367 மிமிமி பாகம்), நக்கீரர், நக்கீரனார், நக்கீரார் (மேலது. p. 367), கச்சிப்பேட்டுப் இளந்தச்சனார் (மேலது, p. 369), கச்சிப்பேத்துப் பெருந்தச்சனார் (மேலது.), மதுரைக் காருலவியங் கூற்றனனார் (மேலது. p. 371), மருங்கூர் பட்டினத்துச் சேந்தன் கூமரனார் (மேலது. p. 372), எயினந்தைனார் (மேலது. p. 373), கதப்பீள்ளைனார் (மேலது. p. 375), செகம்பூனளர் (மேலது. p. 376) என்று புலவர்களின் பெயர்களில் சில அச்சுப்பிழைகள் காணப்படுகின்றன.

## பிற இலக்கியங்களில் நற்றிணைப் புலவர்கள்

நற்றிணையில் காணப்படும் புலவர்களின் பாக்கள் குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு போன்ற நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. குறுந்தொகையில் கருவூர்க்கதப்பிள்ளை (265, 380), கருவூர்க்கந்தப்பிள்ளைச் சாத்தனார்* (64), பேரிசாத்தன் (366), வடமவண்ணக்கண் பேரிசாத்தன் (159) ஆகியோரும் புறநானூற்றில் மருதனிளநாகனார் (52, 138, 139), மதுரை மருதனிளநாகனாரும் (55, 349) தனித்தனிப் புலவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளன. ஆனால் அகநானூற்றில்* மருதனிளநாகனார் (77) மதுரை மருதனிளநாகனார் (34, 59, 90, 104) இருவரும் ஒரே புலவராக எண்ணப்பட்டுள்ளது. (*கருவூர்க்கந்தப்பிள்ளைச் சாத்தனார், கருவூர்க்கதப்பிள்ளைச் சாத்தனார் என்றும் பாடவேறுபாடு உள்ளது. அகநானூற்றின் புலவர் பெயர் வரிசையில் மருதனிளநாகனார் பெயர் காணப்படாமல் நூலின் உள்ளே காணப்படுகிறது. ஆகவே உரையாசிரியர் இருபுலவர்களும் ஒருவரே என்று கருதுவார் போலும்).

## முடிவுரை

உரையாசிரியர்கள் அடைப்பெயர் உள்ள, இல்லாத புலவர்கள் ஒருவரே என்று குறிப்பிடும் அதே வேளையில் அடைப்பெயர் உள்ள புலவர்களை வேறுபடுத்தியும் காட்டுகின்றனர். சான்றாக, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் பதிப்பில் ''மள்ளனாரெனப்பலபேர் உளராதலால் அவர்களி னின்றும் வேறுபடுத்த இவர் அம்மள்ளனாரெனப் பட்டார் போலும்"

என்றும் ''இளவேட்டனாரென்று அடைமொழி கொடாது கூறப்படுதலின் இவர் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரின் வேறானவர் போலும்" என்று காணப்படுகிறது. ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் பதிப்பில் "இச்சான்றோருடைய இயற்பெயர் பெரும் பதுமன் என்பது; பதுமனார் என வருவது இவரது நல்லிசைப் புலமை பற்றிய சிறப்பு. காரணப் பெயராயின், இவர் யாது காரணத்தால் பெரும்பதுமனார் எனக் குறிக்கப்படுகின்றார் என்பது தெரிந்திலது. இவரின் வேறாக மீளிப் பெரும்பதுமனார் என்றொரு சான்றோர் நல்லிசைப்புலவர் நிரலில் உள்ளார். சிலர் இவ்விருவரையும் ஒருவராகவே கொண்டு, வேறுபடுத்தும் அடைமொழியைக் கருதாமல் மகிழ்ச்சி கொள்வர்" என்றும் "இளங்கீரனார் என்ற இப்பெயர் சங்கத் தொகைநூல்களிற் காணப்படும் சான்றோர்களில் மூவர்பால் காணப்படுகிறது. ஒருவர் இளங்கீரனார் என்றும், ஒருவர் எயினந்தைமகனார் இளங்கீரனார் என்றும், ஒருவர் பொருந்தில் இளங்கீரனார் என்றும் குறிக்கப் பெறுகின்றனர். இவருள் சிறப்பிக்கும் அடைமொழி யொன்றும் இன்றி வெறிதே இளங்கீரனார் எனக் குறிக்கப்படுவதை நோக்கின், ஏனை இருவரின் இவர் வேறாவர் என்பது தெரிகின்றது" என்றும் ''கந்தரத்தனார் என்ற பெயருடைய சான்றோர் ஒருவர் இத்தொகை நூல்களுள் வேறே காணப்படுகின்றார்.

இருவரையும் வேறுபடுத்துணர்தற்குப் பண்டையோர் அவரை ஊர்ப்பெயராற் சிறப்பித்து உரோடகத்துக் கந்தரத்தனார் எனவும், இவரை வாளா கந்தரத்தனார் எனவும் குறித்திருக்கின்றனர். சிலர் இருவரையும் ஒருவராகவே கருதுகின்றனர். அதனை வற்புறுத்தும் சான்று ஒன்றும் அவர்களாற் குறிக்கப்படவில்லை" என்றும் காணப்படுகிறது. ஆகவே பதிப்புகளிலும் ஆய்வு நூல்களிலும் புலவர் எண்ணிகை வேறுபடுவதற்குக் காரணம் அடைப்பெயர் உள்ள புலவர், இல்லா புலவர் என்பது தான் காரணம். எனவே நற்றிணையில் அடை உள்ள புலவர்கள், இல்லா புலவர்கள் என இருவேறு நிலைகளில் 192 புலவர்களின் பெயர்கள் என எண்ணலாம். மேலும் சங்க இலக்கியத்தில் 53 புலவர்கள் அடையால் வேறுபடுகின்றனர் (பின்னிணைப்பு 1). இப்புலவர்கள் ஒட்டு மொத்த சங்க இலக்கியம் பாடிய புலவர்களின் எண்ணிகையில் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**நன்றி**

பேராசிரியர் கி. நாச்சிமுத்து, முதுநிலை ஆய்வாளர், பிரெஞ்ச் ஆசியவியல் நிறுவனம் (EFEO), புதுச்சேரி.

பேராசிரியர் ப. வேல்முருகன், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

முனைவர் கோ. சதிஷ், உதவிப் பேராசிரியர், அரசு கலைக்கல்லூரி, சீர்காழி

திரு. க. பிரகாஷ் உதவிப் பேராசிரியர், அரசு பொறியியல் கல்லூரி, தருமபுரி.

திரு. செ. தமிழ்சங்கர், முனைவர் பட்ட ஆய்வாளர், விஸ்வபாரதி பல்கலைக்கழகம் திரு. வேல்முருகன்.

**பின்னிணைப்பு–1**

**அடைவேறுபாடுகளையுடைய சங்கப் புலவர்களின் பெயர்கள்**

| வ.எ. | புலவர்களின் பெயர் | புலவர்களின் பெயர் |
|---|---|---|
| 1 | அண்டர் மகன் குறுவழுதியார் (அக. 228, குறு. 345, புற. 346) | குறுவழுதியார் (அகம்.150) |
| 2 | பாண்டியன் அறிவுடைநம்பி (அக. 28, புற.188) | அறிவுடைநம்பி (குறு. 230, நற்.15) |

| | | |
|---|---|---|
| *3.* | மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார் *(அக. 47, 81, 143,175, நற். 338, 303)* | ஆலம்பேரி சாத்தனார் *(நற்.152, 255)* |
| *4* | ஆமூர்க்கவுதமன் சாதேவனார் *(அக.159)* | ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்*(நற்.264)* |
| *5* | எயினந்தை மகனார் இளங்கீரனர் *(அக.3, 225, 239,289,299,361,371,395,399, நற். 308, 346, 269)* | இளங்கீரனர் *(நற்.3, 62,113, குறு.116)* |
| *6* | தொண்டைமான் இளந்திரையனார் *(புற.185, நற்.106)* | இளந்திரையனார் *(நற். 94, 99)* |
| *7* | மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் *(அக. 58, 298, 328)* | இளந்தேவனார் *(நற். 41)* |
| *8* | கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி *(புற.182)* | இளம்பெருவழுதியார் *(பரி.15)* |
| *9* | மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் *(அக. 231,307,குறு.189, 360, நற்.366)* | ஈழத்துப் பூதன் தேவனார் *(அக. 88, குறு. 343, )* |
| *10* | பாண்டியன் கானப்பேரெயில்தந்த உக்கிரப்பெருவழுதி *(அக. 26)* | உக்கிரப்பெருவழுதி *(நற். 98)* |
| *11* | ஐயூர் முடவனார் *(அக.216, குறு.123, 206, 322, நற்.206, 334, புற. 51, 228, 314,399)* | ஐயூர் கிழார் *(புற. 51, பா. வே.)* உறையூர் கிழார்*(புற. 228, பா. வே.)* |
| *12* | கருவூர் ஓதஞானி *(குறு.71)* | ஓதஞானி *(குறு. 227)* |
| *13* | மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார் *(அக. 70, 256, 354)* | கடுவன் மள்ளனார் *(குறு. 82)* |
| *14* | கருவூர்க் கண்ணம்புல்லனார் *(அக.63)* | கண்ணம்புல்லனார் *(நற்.159)* |
| *15* | மதுரைக் கண்ணனார் *(குறு.107)* | கண்ணனார் *(குறு. 244)* |
| *16* | மதுரைக் கதக்கண்ணன் *(குறு. 88)* | கதக்கண்ணனார் *(குறு. 94, கந்தக்கண்ணன், பா. வே.)* |
| *17* | கருவூர்க் கதப்பிள்ளையார் குறு. *64, (கருவூர் கந்தப் பிள்ளை, பா. வே.) 265, 380, புற. 380)*<br>கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் *(நற். 343)* | கதப்பிள்ளையார் *(நற்.135)* |
| *18* | உ (ஒ) ரோடகத்துக் கந்தரத்தனார் *(அக. 23, 95,191, நற்.306) (குறு.155, உரோடகத்துக் காரத்தன், பா.வே.)* | கந்தரத்தனார் *(நற்.116, 146, 238)* |
| *19* | காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் *(அக.107, 123,285, குறு. 297, புற. 57, 58, 169, 171, 353)* | காரிக்கண்ணனார் *(நற். 237)* |
| *20* | குடவாயிற் கீரத்தனார் *(அக. 44, 60,79,119,129, 287,315,345, 366, 385, நற். 27, 212, 379, குறு. 281,369,)*<br>*குறு.79,* குடவாயில் கீரனக்கன், பா.வே.<br>*புற.242,* குடவாயில் நல்லாதனார் | கீரத்தனார் *(நற். 42)* |

| | | |
|---|---|---|
| *21* | *மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் (அக. 54)* | *கொற்றங் கொற்றனார் (நற். 259)* |
| *22* | *கோவத்தன் (குறு. 66, கோவதத்தன், பா.வே)* | *கோவதத்தன் (குறு.194,கோவத்தன், பா.வே.)* |
| *23* | *மதுரைச் சீத்தலைச் சாத்தனார் (குறு.154)*<br>*மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் (அக. 229, 306, 320, புற. 59)* | *சீத்தலைச் சாத்தனார் (அக. 53, 134, நற். 36,127,339,* |
| *24* | *மதுரைச் செங்கண்ணனார் (அக. 39)* | *செங்கண்ணனார் (நற்.122)* |
| *25* | *செல்லூர்க் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார் (அக. 250)* | *செல்லூர்க் கொற்றன் (குறு. 363, நற். 30)*<br>*கொற்றன் (குறு. 218,358)* |
| *26* | *மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார் (அக.207,குறு.90, 226)*<br>*மதுரை எழுத்தாளன் (அக.84)* | *சேந்தம் பூதன் (குறு. 247, நற்.261)*<br>*சேகம் பூதனார் (நற்.69)* |
| *27* | *எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் (அக.149, 319, 357, புற.397)* | *தாயங்கண்ணனார் (அக.105,132, 213, 237,குறு.319, நற்.219, (புற.356, கதையங்கண்ணனார், பா.வே.)* |
| *28* | *தும்பிசேர் கீரனார் (குறு.61, தும்பிசொகிநன்,பா.வே.) 316,320,392 நற். 277,*<br>*மதுரை வேளாதத்தன் (குறு.315. தும்பிசேர்கீரன்.பா.வே.)* | *தும்பி சொகினனார் (புற.249, தும்பிசேர்கீரனார், பா. வே.)* |
| *29* | *பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் (புற. 83, 84,85)* | *நக்கண்ணையார் (அக.252, நற்.19,87)* |
| *30* | *கணக்காயனார் மகனார் நக்கீரனார் (அக.93,) மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன் (குறு.143, நெடு. புற. 56, 189)*<br>*மதுரை நக்கீரன் (அக.36, புற.395)* | *நக்கீரன் (அக.57,78,120,126,141, 205, 227,249, 253, 290,310, 340, 346, குறு.105, (131,ஓரேருழவனார், பா.வே.),161, 266, 280, 368, நற்.31, 86, 197, 258, 340, 358, 367, திரு.)* |
| *31* | *நப்பாலத்தனார் (நற். 240)* | *பாலத்தனார் (நற். 52)* |
| *32* | *மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் (அக.43, கலி)* | *நல்லந்துவனார் பரி.8 (ஆசிரியர் நல்லந்துவனார், ஆசிரிய நல்லந்துவனார், ஆரிய நல்லந்துவனார், பா.வே) ஆசிரியர் நல்லந்துவனார், பரி.11, 20,)* |
| *33* | *மதுரை நல்வெள்ளி (குறு.365)* | *நல்வெள்ளியார் (அக.32, நற்.7,47)* |
| *34* | *மிளைகிழான் நல்வேட்டனார் (குறு.341, நற்.210, 349)* | *நல்வேட்டனார் (நற்.53, 292)* |
| *35* | *புறத்திணை நன்னகனார் (புற.176,376, (379, நன்னாதன்,பா.வே.),384)* | *நன்னகனார் (புற.381)* |

| | | |
|---|---|---|
| 36 | கச்சிப்*பேட்டு நன்னாகையார் (குறு.30 (*பெட்டு,பா.வே.),172,180,192,197,287) | நன்னாகையார் (குறு.118, 325) |
| 37 | கொடியூர்கிழார் மகனார் நெய்தற்றத்தனார் (அக.243) | நெய்தற்றத்தனார் (நற்.49,130) |
| 38 | ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார் (அக.224) | பெருந்தலைச் சாத்தனார் (அக.13.நற்.262, புற.151,164, 165, 205, 209,(294,பெருத்தலைச் சாத்தனார்,பா.வே.) |
| 39 | கடுகு பெருந்தேவனார் (குறு.255) | பெருந்தேவனார் (அக.51,நற்.83) |
| 40 | மீளிப் பெரும்பதுமனார் (நற்.109) | பெரும்பதுமனார் (குறு.7, நற்.புற.199) |
| 41 | பேயனார் (அக.234,ஐங்.குறு.233,359,400) | பேயார் (குறு.339) |
| 42 | மதுரைப் பேராலவாயர் (அக.87, 296, நற்.361,புற.247,268) | பேராலவாயர் (நற்.51) |
| 43 | வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் (அக.38,214,268,305, நற்.229,323, 378) (குறு.81, வடம வண்ணக்கன், வடம வண்ணக்கர், பா.வே), 159, புற.198, பெருஞ்சாத்தன்,பா.வே.)<br>வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் (புற.125, வடவண்ணத்தன் பேரிசாத்தன்,பா.வே.) | பேரிசாத்தனார் (அக.242, நற்.25,37, 67, 104, 199, (குறு.278,வேரிசாத்தன், பா.வே., 314, பெருஞ்சாத்தன், பா.வே) |
| 44 | மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் அக.33, 144, 174, 344,353, குறு.188, (215,ஞாழலார்,பா.வே.), நற்.297, 321, புற.388)<br>மதுரை....மள்ளனார் (அக.244) | மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார் (அக.314) |
| 45 | மதுரைக் கணக்காயனார் அக.27, 338, 342, புற.330) | கணக்காயனார் (நற்.23) |
| 46 | மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார் (அக. 363) | *மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் (நற்.285) (*திருத்தண்கால்பொற்கொல்லன் வெண்ணாகனாரென்பவர் இவராயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. ஆயினும் மதுரையென்றமையின் வேறாகக்குறிக்கப் பட்டனர். நரா,ப.68) |
| 47 | மதுரை மருதனிளநாகனார் (அக. 34, 90, 104, 121, 131, 184, 193, 206, 220, 245, 255, 269, 283, 297, 312, 343, 358, 365, 368, 380, 387,குறு.77, 160, 279, 367, நற்.194, 216, 283, 290, 302, 326, 341,362, 392), புற.55, 349) | மருதனிளநாகனார் (அக.59,77, நற்.21, 39, 103, (கலி. மதுரை மருதனிளநாகனார்) (புற.52, மருதினிநாகனார்,பா.வே.) புற.138, 139) |

| | | |
|---|---|---|
| 48 | மாங்குடி மருதனார் (மதுரைக்காஞ்சி) | மாங்குடி கிழார் (குறு.302, நற்.120,<br>காஞ்சிப் புலவனார் (நற்.123, (புற.24, மாங்குடி மருதனார், பா.வே.), புற.26, 313, 335, மாறுகுடிகிழார்,பா.வே, 372, 396) அக.89) |
| 49 | உறையூர் முதுகூற்றனார் (அக.137, 329, புற.331)<br>உறையூர் முதுகொற்றன் (குறு.221,353,371,390) | முதுகூற்றனார் (நற்.28, 58) |
| 50 | பொதும்பில் கிழான் வெண்கண்ணனார் (அக.192) | வெண்கண்ணனார் (அக.130) |
| 51 | வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார் (குறு.219) | வெண்பூதியார் (குறு.97,174, ) |
| 52 | மதுரைப் பள்ளி மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் (நற்.352) | மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார் (நற். 329) |
| 53 | பாண்டியன் மாறன்வழுதி (நற். 301 | மாறன்வழுதி (நற். 97) |

**Referances:**


Balagi, k. (2010). *Natrrinai pathippu Varalaru* (1915- 2010). Chennai: Kavya pathippagam.

Devi, N. (2010). *Sanga Ilakkiyathil Makkatpeyar Adaigal*. Chennai: New Century Book House.

Govendan, T. (2003). *Sanga Ilakiya seithi Kalanjiyam*. Chennai: Veman Pathippagam.

Govindan, ka. (1954). *Kilar Peyar Perror*, Thirunelveli: thenninthiya saivachithantha Noorpathippu Kalagam.

Govindan, ka. (1961). *uvamaiyal Peyar Perror*. Thirunelveli: thenninthiya saivachithantha Noorpathippu Kalagam.

Govindan, ka. (1965). *Athiyan Vinnathanar muthaliya 66 pulavargal*. Thirunelveli: thenninthiy saivachithantha Noorpathippu Kalagam.

Govindan, ka. (Reprint 1956). *Sangath tamil pulavar varisai, part-4* , Thirunelveli: thenninthiya saivachithantha Noorpathippu Kalagam.

Kasi visuvanathan chettiyar, (published,1938),V.Peri, Pala, mu. *Sangam maruviya Ettuththogai noolgalul Aravathagiya Kalaithogai*, Thirunelveli: Theninthiya Saiva Sithantha Noorpathippu kalagam.

Kavya Shanmuga Sundaram ,(Thoguppasiriyar,2010). *Sanga ilakkiyam Aivugalum Attavanaigalum,Perasiriyar N.Sanjeevi Katturaigal*, Chennai: Kavya.

Pinnathore A. Narayanasami Iyar, (Urai, 1915). *Ettuthogaiyulonragiya Natrrinai*, Chennai: SaivaVithiyanu Balana enthira saalai.

Rajagopalaiyangar, V. (1923). *Ettuthogaiyul Nedunthogai Agum Agananuru Mulamum uraiyum*, Mayilapore: Kampar Vilasam.

Rajam, S. (1957). *Natrrinai*, Chennai: Marre And Company.

Saminatha Iyar., U., Ve. (1918). *Ettuthogaiyul Ainthavathagiya Paripadal moolamum AsiriyarParimelalagariyarriya uraiyum*, Chennai: kamarshiyal Acchukudam.

Saminatha Iyar., U., Ve. (1918). *Pathuppattu mulamum maduraiyasiriyar parathuvasi nachinarkkiniyaruraiyum*, Chennai: kamarshiyal Acchukudam.

Saminatha Iyar., U., Ve. (Urai,1937). *Kuruntogai*, Chennai: Kesari Acchukudam.

Subbiramaniyan., sa., ve. (2010). *Sanga Ilakkiyam Ettuthogai, moolamum Thelivuraiyum*, Chennai: Manivasakar pathippagam.

Subbiramaniyan., sa., ve. (2013). *Sanga Ilakkiyam Arimukam*, Chennai: Manivasakar pathippagam.

Thuraisamyppillai., Ovai su., (1966 & 1968). *Natrrinai Mulamum vilakkavuraiyum*, Chennai: Aruna Pablications.

Vaiyapurippilai, S. (1940). *Sanga ilakkiyam Ettuthogaiyum Pathuppattum*, Chennai: Saiva Chithantha Magasamaajam.

Vengadaraman, vithuvan H. (1989). *Natrrinai mulamum uraiyum*, Chennai: magamago Paathiya Docter U.Ve. Saminathaiyar Nool nilaiyam.

# மலேசியாவில் தமிழ் சிறுகதை வரலாறும் அதன் காலவரிசை பகுப்பும்

# History of Malaysian Tamil Short Stories and its Chronology

ம.விஜயலட்சுமி / M.Vijayalatchumy[1]
ம.நவீன் / M.Navin[1]

Date of submission: 2020-10-22
Date of acceptance: 2020-11-20
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name: M.Navin
Email: valllinamm@gmail.com

***Abstract***

The scholar N.Balabaskaran holds conspicuous mentions in any studies associated with the History of Malaysian short stories. Learned in his work, studied the publications from the year 1930 upto the year 1979 (total of 49 years) and segregated it in six phases. Tailing his work, there are more researches surfacing many insights which were not acknowledged by N.Balabaskaran. That said, this study aims to compile and imperforate all six phases indicated by scholar N.Balabaskaran. Alongside, information on the history of Malaysian Tamil short stories has not been studied or compiled ever since 1979. Thus, this study also attempts to observe the literary progression that occurred from the year 1980 upto 2016 with the guidance of N.Balabaskaran's work. This article seeks to categorize them into three periods of movements namely Society Period (1980-1997), Individual Period (1998-2005), and Alternative Media Period (2006-2016).

**Key Words:** Malaysian Tamil Short Stories, Modern Tamil Literature, Literary Movements and Initiatives, Literary History.

### முன்னுரை

மலேசியத் தமிழ் இலக்கியம் தனிநபர், நாளிதழ், இயக்கங்களின் இடைவிடாத முயற்சிகளின் வழியாகவே இந்நாட்டில் வேரூன்றியுள்ளது. இவற்றை உள்ளீடாகக் கொண்டு ந. பாலபாஸ்கரன் மேற்கொண்ட 'The Malaysian Tamil short stories, 1930-1979 : a critical study' எனும் ஆய்வுதான் இன்றளவும் இத்துறைசார் ஆய்வுகளுக்கு முன்னோடியாக அமைகிறது. தொடக்க காலம் (19301941), ஐப்பானியர் காலம் (19421945), கதை வகுப்பு முடியும் காலம் (19461952), முற்சுதந்திர காலம் (19531957) பிற்சுதந்திர காலம் (19581969), மறுமலர்ச்சிக் காலம் (19701978) என்பதாக மலேசியாவில் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை அவர் பகுத்துக் காட்டுகிறார் (பாஸ்கரன், 1995, p.2). ஆனால், அவருக்கு முன்பும் பின்னரும் மலேசியத் தமிழ் சிறுகதை இலக்கியம் என்பதாக வரலாற்று ரீதியிலான ஆய்வுகளை மேற்கொண்டவர்களான கார்த்திகேசு (2004), சுப்பிரமணி (2005) போன்றோரும் இலக்கியவாதிகளான குப்புசாமி (1968); வேலுசாமி (1974); வடிவேலு (1978); இராமையா (1996) உள்ளிட்ட பலரும் பாலபாஸ்கரன் ஆய்வுகளில் விடுபட்டுள்ள பல முக்கிய வரலாற்றுத் செய்திகளைப் பதிவு செய்துள்ளனர். ஆயினும், இன்றளவிலும் மலேசியாவில் தமிழ்ச் சிறுகதை வரலாறு எனும்போது பாலபாஸ்கரன் ஆய்வுடன் மேற்குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு சிலரது வரலாற்று செய்திகளை உள்ளடக்கி,

[1] The author is a postgraduate in the Indian Studies Department, University of Malaya, Kuala Lumpur, Malaysia. viijay@um.edu.my

The author is a postgraduate in the Indian Studies Department, University of Malaya, Kuala Lumpur, Malaysia. valllinamm@gmail.com

*மிகப் பலரது ஆய்வுகளை தவறவிடுவது ஆய்வுலகில் நிகழ்ந்து வருகிறது.*

*அவ்வகையில் இவ்வாய்வு இரு முக்கிய நோக்கங்களை கொண்டுள்ளது. முதலாவதாக, பாலபாஸ்கரன் பகுத்துக் கூறியுள்ள ஆறு காலவரிசைக்குள் கார்த்திகேசு (2004); சுப்பிரமணி (2005); குப்புசாமி (1968); வேலுசாமி (1974); வடிவேலு (1978); இராமையா (1996) உள்ளிட்டவர்களின் குறிப்புகளை இவ்வாய்வில் தொகுப்பது. இதன்மூலம் மலேசியா தமிழ்ச் சிறுகதை என்பதன் ஒட்டுமொத்த பார்வையினை வரலாற்றுச் சான்றுகளுடன் இனிவரும் ஆய்வாளர்கள் அவதானிக்க முடியும். இரண்டாவதாக, பாலபாஸ்கரன் தனது ஆய்வில் வரையறுத்திருக்கும் ஆறு காலகட்டங்களை உள்வாங்கிக்கொண்டு 1980 முதல் 2016வரை உருவாகியுள்ள இலக்கிய முன்னெடுப்புகளையும் அதன் போக்கையும் அவதானித்து இயக்கங்களின் காலம் (19801997), தனிநபர் காலம் (19982005), மாற்று ஊடகக் காலம் (20062016) எனும் மூன்று வகைமைக்குள் இவ்வாய்வு பொறுத்த முயன்றுள்ளது. 1979க்குப் பிறகான மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கிய நகர்ச்சியை வகைப்படுத்தி பகுத்துக் காட்டும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வு இதனை முன்வைக்க முயன்றுள்ளது.*

## ஆய்வு முன்னோடிகள்

*மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் எனும் வகைமைக்குக்கீழ் அதன் வரலாற்று பின்புலம், பாடுபொருள், கட்டமைப்பு, உட்கூறுகள், சமகால சிக்கல்கள், கதாபாத்திரம், பாத்திரப்படைப்பு, இசங்கள், மரபுகள், ஒழுக்கங்கள், மொழி ஆகிய பகுப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் மலேசியத் தமிழ்ச் சிறுகதை வரலாறு குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளில் (தண்டாயுதம், 1972/1976; கார்த்திகேசு, 1973/1974; பாலபாஸ்கரன், 1980 - ராமையா, 1996) சிறுகதை என்பதன் சொல், பொருள் விளக்கம், படைப்பிலக்கியம் எனும் வகையில் அதன் உள்ளார்ந்த அர்த்தம், சிறுகதை துறையின் வளர்ச்சியில் தனிநபர், இயக்கங்கள், அச்சு ஊடகங்களின் பங்களிப்பு ஆகியவை முதன்மையாக பேசப்பட்டுள்ளன. இதில் சற்றே மாறுபாடுகளைக் கொண்ட ஆய்வாக கார்த்திகேசுவின் ஆய்வு அமைந்துள்ளது. சிறுகதைகளை விமர்சனப்பூர்வமாக அணுகுவதும் படைப்பாளர்களின் சிந்தனை குறித்து அணுகிப் பார்ப்பதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளது.*

*மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் பாடுபொருள், கட்டமைப்பு, உட்கூறுகள் என்பதான ஆய்வுகளில் (கிருஷ்ணன் மணியம், 1989; லெச்சுமி மீனாட்சிசுந்தரம், 1991; வீரமோகன் வீரபுத்திரன், 2007; பாலு சுப்பிரமணியம், 2007; அண்ணாதுரை முருகையா, 2007; குணசீலன் சுப்பிரமணியம், 2009 - ஜேசுதாஸ், 2010) வரலாறு சார்ந்த உள்ளீடுகள் பொதுவான சில தகவல்களை உள்ளடக்கியும் எழுத்தாளர்களை முதன்மையாகக் கொண்டு அவர்களின் படைப்புகளை ஆய்வுக்கு உட்படுத்துவதாகவும் உள்ளன. இவற்றில் கிருஷ்ணன் மணியம் ஆய்வு மலாய் சிறுகதைகளுடனான ஒப்பாய்வு முற்றிலும் மாறுபட்டதாகும். இவ்வாய்வில் இரு மொழி சிறுகதைகளின் வரலாறு அதன் வித்தியாசங்களில் காணப்படும் புற காரணிகள் மற்றும் விளைவுகள் சார்ந்து விரிவான பார்வை முன்வைக்கப்பட்டுள்ளது.*

*மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் கதாபாத்திரம், பாத்திரப்படைப்பு தொடர்பான ஆய்வுகள் (ரவீந்திரன் மாரய்யா, 2012; அவளியர் முத்துசாமி, 2014 - புஷ்பநாதன் நாகராஜா, 2014) சிறுகதைகளில் வெளிப்படும் பெண்பால் கதாபாத்திரங்களின் மூலப்படிமம் அல்லது முன்மாதிரி தன்மைகள், பெண்ணியம் சார்ந்து ஆய்வுக்கு உட்படுத்தி விளக்கியுள்ளன. மரபுகள், ஒழுக்கங்கள் எனும் வகைமைக்குக்கீழ் (சரவணம் வீரமுத்து, 2010; அம்மணி ஐயாவு, 2012 - மணியரசன் முனியாண்டி, 2018) மேற்கொள்ளப்பட்டுள்ள மூன்று ஆய்வுகளும் இலக்கியம் சமூககலாச்சாரங்களைப் பதிவு செய்யும் ஆவணம் எனும் ஏற்புநிலையை*

முன்மொழிவதாக மலேசியாவில் இந்தியர் வருகை, சிக்கல்கள், பண்பாடு, விழுமியங்கள் சார்ந்து ஆய்வு முடிவுகளை முன்வைத்துள்ளன. மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் மொழி சார்ந்து ஒரு ஆய்வு மட்டுமே நடைபெற்றுள்ளது. மணியரசன் முனியாண்டி (2011) மேற்கொண்ட இவ்வாய்வு தமிழ்ச் சிறுகதைகளில் வேற்றுமொழி (மலாய்) கலப்பு நிகழ்ந்திருப்பதும் அதன்வழி சிறுகதைகளில் மொழி, பண்பாட்டு ஊடுருவல் நிகழ்ந்திருப்பதும் ஆய்வின் கண்டடைவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட முன்னோடி ஆய்வுகளின் அடிப்படையில் காணும்போது மலேசியத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றினை 1930 முதல் 1979 வரையிலான நாற்பத்து ஒன்பது ஆண்டுகளுக்கு உட்பட்டு ஆறு பிரிவுகளில் பாலபாஸ்கரன் பகுத்துள்ளதுபோல் காலவரிசை பகுப்பு அவருக்கு முன்பும் பின்னரும் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவு. கூடுதலாக, பாலபாஸ்கரன் ஆய்வில் விடுபட்டுள்ள வரலாற்று செய்திகளைத் தொகுத்து கூறும் முயற்சிகளும் நிகழவில்லை என்பதும் இவ்விடம் தெளிவாகிறது.

## தொடக்க காலம் (1930 – 1941)

மலேசியாவின் சிறுகதை இலக்கியம் ஏறத்தாழ என்பது ஆண்டுக்கால வரலாற்றைக் கொண்டது. 1930இல் பதிப்பிக்கப்பட்ட நவரச கதாமஞ்சரி எனும் நூல்தான் மலேசியச் சிறுகதை வரலாற்றில் தொடக்கமாகக் கொள்ளப்படுகிறது (பாஸ்கரன், 1995, p.2). யாழ்ப்பாணம் வல்வை வே.சின்னையா அவர்களால் வெளியிடப்பட்ட இத்தொகுப்பு ஐந்து சிறுகதைகள் உள்ளடக்கி நூறு பக்கங்களைக் கொண்டது. 1930லிருந்து 1941வரையிலான இக்காலக்கட்டத்தை ந. பாலபாஸ்கரன் தொடக்கக் காலம் எனக் குறிப்பிடுகிறார் (பாஸ்கரன், 1995, p.2). முதலாவது மலேசியத்தமிழ் இலக்கிய மாநாட்டில் 'மலேசியத் தமிழ் சிறுகதை வளர்ச்சி' எனும் தலைப்பில் படைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் தமிழ் நேசன் (1932), பாரதமித்திரன் (1934), தமிழ் முரசு (1935), தமிழ் கொடி (1939) போன்ற நாள், வார மற்றும் மாத இதழ்கள் அப்போது தொடர்ந்து வெளிவந்தாலும் பொருள் ஈட்ட வந்த தமிழ் நாட்டு மற்றும் இலங்கை நாட்டுத்தமிழர்கள் தாயகத்திற்குத் திரும்ப வேண்டும் என்ற நோக்கில் இருந்ததால் இலக்கியத்தில் அவர்கள் கவனம் முழுவதும் அவரவர் நாட்டையே சார்ந்திருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது (சுப்பிரமணி, 2006, p.20). மலேசிய சிறுகதைகளின் பாடுபொருள் குறித்துப்பேசும் கார்த்திகேசுவும் 1930 - 1950 வரை இந்திய தேசிய விடுதலையையும் தமிழ்நாடு மற்றும் இலங்கை சார்ந்த சமுதாயக்கதைகளுமே மலேசியாவில் எழுதப்பட்டுள்ளதாகக் கூறுவது குறிப்பிடத்தக்கது (கார்த்திகேசு, 2004, p.28).

## ஜப்பானியர் காலம் (1942 – 1945)

பாலபாஸ்கரன் (2006), இந்த நான்கு ஆண்டுகளை ஜப்பானியர் காலம் எனக் குறிப்பிடுகிறார். நாள், வார ஏடுகளின் வாயிலாக உள்ளூர் எழுத்தாளர்கள் எழுத்துப் பயிற்சி பெற இக்காலப்பகுதி வழிவகுத்திருக்கிறது. இதற்கு 'வெளிநாட்டுப் பத்திரிகைகள் வராதிருந்த அக்கால வரையறையில் இப்பத்திரிகைகள் அனைத்தும் சீரிய இலக்கிய தொண்டு செய்திருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது' எனும் கருத்தை குப்புசாமி (1968) முன்வைக்கிறார். மறுநிலையில், 1941 தொடங்கி செப்டம்பர் 1945 வரை ஐந்து ஆண்டுகளை மலேசிய இலக்கியத்திற்கான 'இருண்ட காலம்' என இராமையா வரையறை செய்கிறார் (1996, p.26).

இலக்கியச் செயல்பாடுகள் அனைத்தும் 1941இல் தொடங்கிய இரண்டாவது உலகப் போரினால் நிலைகுத்தியதுடன் இலக்கியம் மட்டும் அல்லாது கல்வி, தொழில், பொருளாதாரம் போன்றவை சீரற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கை போராட்டத்தில் இருந்ததென விளக்குகிறார். மா. இராமையாவின் கருத்தை வழியுறுத்தும் வகையில் 1942ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் போர் தொடங்கிய காலகட்டத்தில் இலக்கியம் உயிர்விடும் நிலையில் இருந்தது

எனும் கருத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது (பீர்முகம்மது, 1999, p.17). அக்காலத்தில் இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷாரை எதிர்க்க ஜப்பானியர் ஆசியுடன் வெளிவந்த சில இதழ்களில் கவிதை, சிறுகதை போன்றவை இருந்தாலும் 1946க்குப் பிறகே மலேசியாவில் சிறுகதை நுட்பங்களை அறியும் போக்கு உருவாகியிருந்தது என பாலபாஸ்கரன் குறிப்பிடுவது மா.இராமையா மற்றும் சை.பீர்முகம்மதுவின் கருத்துக்கு வலு சேர்ப்பதாகிறது (பாஸ்கரன், 1981, p.35).

### கதை வகுப்பு முடியும் காலம் (1946 –1952)

மலேசிய நவீனத் தமிழ் இலக்கியத்தின் முக்கிய எல்லைக்கோடாக 1946ஆம் ஆண்டு குறிப்பிடப்படுகிறது (இராமையா, 1996, p.25). இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் நடந்த போரில் ஏற்பட்ட அவலமான வாழ்க்கையால் அதுவரை பெரிய இலக்கிய முயற்சிகள் நடக்காத சூழலில், 1946ல் ஓரளவு நிலை சீரானவுடன் ஏறத்தாழ முப்பது கவிதை நூல்கள் வெளிவந்ததோடு சி.வீ.குப்புசாமியின் இரண்டு கட்டுரை நூல்களும் வெளிவந்துள்ளன (கார்த்திகேசு, 2004, p. 28).

1946 ஏ.எம்.எம். இப்ராகிம் எழுதிய 'காடைச் சிப்பந்திகளின் கண்ணீர்' எனும் ஐந்து சிறுகதைகள் அடங்கிய தொகுப்பும், 1947இல் அனுபூதிக்கையான் எழுதிய 'மறக்க முடியாது' என்ற ஜப்பானியர் கொடுமையைச் சொல்லும் மற்றுமொரு சிறுகதை தொகுதியும் வெளிவந்துள்ளது. 1947இல் சிறுகதைக்கு முக்கியத்துவம் கொடுத்து தன் ஆண்டு மலரை வெளியிட்ட 'தமிழ் முரசு' 13 சிறுகதைகளை அதில் பிரசுரித்துள்ளது (பீர்முகம்மது, 1999, p.22). இவற்றோடு, 1948இல் 'தமிழ்ச்சுடர்' திங்களிதழ் சிறுகதைப் போட்டியையும் நடத்தி சிறுகதை வளர்ச்சிக்கு உரமூட்டியுள்ளது (சுப்பிரமணி, 2005, p.21). இவ்விதழ் உள்நாட்டு எழுத்தாளர்களின் படைப்பை மட்டுமே வெளியிடுதல் என்ற கொள்கையுடன் செயல்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

1950களில் தமிழ் நேசன் நாளிதழ் மூலம் சுப.நாராயணனும் பைரோஜி நாராயணனும் 'கதை வகுப்பு' நடத்தியுள்ளனர். ஏறத்தாழ ஆறு மாதங்களே இவ்வகுப்புகள் நடத்தப்பட்டன. கதை வகுப்பு பற்றிய தொடக்க அறிவிப்பு 26 நவம்பர் 1950ல் தமிழ் நேசனில் வெளியானது. இந்த முயற்சியின் உச்சக்கட்டமாக 1951இல் கதை வகுப்பில் கலந்துகொண்டவர்களுக்கு 11 மார்ச் 1951இல் தேர்வும் வைக்கப்பட்டது. தேர்வு முடிவுகள் 22.4.1951லும் தமிழ் நேசனில் இடம் பெற்றன. அதில் தேர்ச்சி பெற்றவர்களில் 3 பேர் மேதை எழுத்தாளர்களாகவும் 23 பேர் சிறந்த எழுத்தாளர்கள் என்றும் 17 எழுத்தாளர்கள் தேர்ந்தவர்கள் எனவும், நல்ல எழுத்தாளர்களாக 14 பேரும், ஆர்வ எழுத்தாளர்கள் பட்டியலில் 18 எழுத்தாளர்களும் தரம் பிரித்து அறிவித்தார்கள் (பாஸ்கரன், 1981, p.35). இந்தக் காலக்கட்டத்தை பாலபாஸ்கரன் கதை வகுப்பு முடியும் காலம் (19461952) எனக் குறிப்பிடுகிறார்.

### முற்சுதந்திர காலம் (1953 – 1957)

தமிழ் நேசனின் 1952இல் பொறுப்பாசிரியராகப் பதவியேற்ற பிரபல எழுத்தாளர் கு.அழகிரிசாமியும் மலேசியாவில் சிறுகதை இலக்கியம் வலுபெற உழைத்தவர்களுள் ஒருவர். எழுத்தாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி காதல் இல்லாத சிறுகதைகள் எழுத ஊக்குவித்தார் (பாஸ்கரன், 2011). 1957இல் அவரை மையமாகக் கொண்டு கோலாலம்பூரில் இலக்கிய வட்டம் ஒன்று அமைந்தது. ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமையில் இந்த 'இலக்கிய வட்டம்' கலந்துரையாடலை நடத்தி சிறுகதை கலை வளர ஊக்குவித்தார். தலைநகர் தவிர கிள்ளான், சிரம்பான், கோலா சிலாங்கூர் போன்ற பல ஊர்களில் இருந்தும் எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர் (கார்த்திகேசு, 2010, ஜீ.53). மா.செ.மாயதேவன், பெரி.முத்தையா, சி.அன்பரசன், செ.குணசேகர், மா.இராமையா, மு.தனபாக்கியம் போன்ற எழுத்தாளர்கள் அப்போது தீவிரமாக இணைந்து செயல்பட்டனர். கு. அழகிரிசாமி சிறுகதை எழுத்தாளர்களை ஊக்கப்படுத்த மலாயாவில் சிறுகதைகளுக்கென பரிசு கொடுக்கும்

திட்டத்தைத் 'மலாயா தமிழ்ப்பண்ணை' அமைப்பின் மூலம் முதலில் தொடங்கினார் என வேலுசாமி (1973) 'பரிசுத்திட்டங்களும் இலக்கிய வட்டங்களும்' எனும் கட்டுரையில் 'இலக்கிய வட்டம்' சிற்றிதழில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் 1952ஆம் ஆண்டு மலேசியா வந்து சென்ற ஆனந்த விகடன் ஆசிரியர் மறைந்தபோது அவர் நினைவாக கு.அழகிரிசாமி சிறுகதைப் போட்டியை முன்நின்று நடத்தியுள்ளார். 150ரிங்கிட் அப்போது பரிசுப்பணமாக ஆனந்த விகடன் ஆசிரியரின் நண்பர் மூலம் கொடுக்கப்பட்டது (வடிவேலு, 1978, p.5).

1953ல் 'தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர்' என்ற வார இணைப்பு ஒன்றினைத் தொடங்கியது. இந்த இணைப்பு பள்ளி மாணவர்களும் சிறுவர்களும் இலக்கிய அறிமுகம் பெற வழியேற்படுத்திக் கொடுத்தது. மாணவர் மணிமன்றத்தில் ஈடுபட்ட பலர் பின்னர் தமிழ் இளைஞர் மணிமன்றம் அமைத்து இலக்கியம் வளர உழைத்தனர். பல பின்னாள் எழுத்தாளர்களுக்கு இதுவே பயிற்சிக்களமாகவும் இருந்துள்ளது. ரெ.கார்த்திகேசு, சை.பீர்முகம்மது, க.கிருஷ்ணசாமி, சா.ஆ.அன்பானந்தன், மு.அப்துல் லத்தீப், ம.முருகையன், கே.எம். யூசுப், எம்.குமாரன், மு.அன்புச்செல்வன், வி.தீனரட்சகி ஆகியோர் மாணவர் மணிமன்ற மலர் மூலம் உருவானவர்கள் ஆவர் (கார்த்திகேசு, 2010, p.50).

1952இல் எழுத்தாளர்களை ஊக்குவிக்க உருவான சிங்கப்பூர் 'தமிழ் முரசு' எழுத்தாளர் பேரவை மற்றும் 1953இல் தமிழ் முரசு தொடங்கிய 'ரசனை வகுப்பு' ஆகியவை அக்கால சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றின (கார்த்திகேசு, 2004, p.30). நாளிதழ்களைத் தவிர பல வார, மாத இதழ்கள் இக்காலக்கட்டத்தில் மலேசியாவில் காத்திரமான இலக்கியச்சூழலை உருவாக்கி வந்துள்ளன. திருமுகம், மலைமகள், நவரசம், வெற்றி, மனோகரன், கலைமலர், மாணவர் பூங்கா ஆகிய இதழ்களும் இலக்கிய ஆர்வளர்களால் நடத்தப்பட்டதை அறிய முடிகிறது (வடிவேலு, 1978, p.4).

## பிற்சுதந்திர காலம் (1958 – 1969)

5.7.1958இல் சி.வடிவேலு அவர்களின் முயற்சியில் மலாயா தமிழ் எழுத்தாளர் சங்க அமைப்புக்கூட்டம் கோலாலம்பூரில் உள்ள பங்சார் தமிழ்ப்பள்ளியில் நடந்தது. 1959இல் இதற்குப் பதிவு கிடைத்தும் சங்கம் செயலிழந்த காரணத்தால் அதன் பதிவு ரத்தாகியது. சி.வேலுசாமியின் முயற்சியில் 1962இல் நடந்த அமைப்புக்கூட்டத்தால் 26.3.1963இல் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மீண்டும் பதிவானது (வேலுசாமி, 1974, p.14).

இதேபோல கோ.சாரங்கபாணியும் தமிழர்களை ஒருமுகப்படுத்தும் முகமாக தமிழ்மொழிப் பண்பாட்டு எழுச்சியை ஊட்டும் நோக்கில் தமிழர் திருநாளை 1950களின் மத்தியிலும் 1960களின் மத்தியிலும் தொடங்கி சிறுகதை எழுதும் போட்டி உட்பட பல இலக்கியப்போட்டிகள் மூலமாக எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது (கார்த்திகேசு, 2010, p.55). அவ்வகையில் கோ.சாரங்கபாணி போன்றவர்களின் ஊக்குவிப்பால் 1960 முதலே மலேசியச் சூழலை மையமாகக் கொண்ட படைப்புகள் வெளிவரத் தொடங்கின. அவர் முன்னெடுத்த தமிழர் திருநாள் இயக்கத்தின் போட்டிச் சிறுகதைகளை 'தமிழ் முரசு' நாளிதழ் பிரசுரித்தது. அவர் ஆசிரியராக இருந்த சிங்கப்பூர் 'தமிழ் முரசு' நாளிதழ் இலக்கியப் போட்டிகள் நடத்தி உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவித்தன. 'தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர்' மூலம் உருவான எழுத்தாளர்கள் தமிழ் இளைஞர் மணிமன்றம் நடத்திய மாநாட்டை ஒட்டி சிறுகதை போட்டிகள் நடத்தி பரிசும் வழங்கினர் (சுப்பிரமணியம், 1978, p.3). 1968இல் 'மணிக்கதைகள்' எனும் பெயரின் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டனர். மலேசிய சிறுகதை இலக்கியம் அடைந்துள்ள வளர்ச்சியை அந்தத் தொகுப்பு எடுத்துக்காட்டியது (கார்த்திகேசு, 2010, p.54).

1961ஆம் ஆண்டில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும்

*பணியாற்றிய தனிநாயகம் அடிகள் முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை 1966, ஏப்ரல் 1623 தேதிகளில் மலேசிய அரசின் துணையோடு கோலாலம்பூரில் நடத்தினார். இலக்கியத்தின் புதிய பரிணாமங்களை உணர்ந்துகொள்வதற்கு இம்மாநாடு உதவி புரிந்ததாக எழுத்தாளர் சை.பீர்முகம்மது குறிப்பிடுகிறார் (பீர்முகம்மது, 1999,* p.*25). இதுபோன்று இயக்கங்களின் தொடர் செயல்பாடுகளால் எழுத்தாளர்கள் ஊக்கமடைந்து எழுத்துப் பிரதிகளை நூல் வடிவமாக்கினர் (சுப்பிரமணி, 2005, ஜீ.22). சுப்பிரமணியம் (1978), படைத்த 'மெர்தேக்காவிற்குப் பின் மலேசியத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி' எனும் ஆய்வுக்கட்டுரையில் இக்காலக்கட்டத்தில் (19581969) சிறுகதை வளர்ச்சிக்கான செயற்பாடுகளை குறிப்பிடுகையில் சிறுகதைக்கான இலக்கியத் தொடர்பு கொண்ட அமைப்புகள் உற்சாகமாகச் செயல்பட்டன என்கிறார்.*

## மறுமலர்ச்சிக் காலம் (1970 – 1979)

*இக்காலக்கட்டத்தை மலேசியத் தமிழ்ச் சிறுகதையின் மறுமலர்ச்சிக் காலமாகக் குறிப்பிடும் பாலபாஸ்கரன் அதற்கான சான்றுகளையும் விரிவாகவே முன்வைத்துள்ளார் (பாலபாஸ்கரன், 1995,* p.*6). அதேபோல நாட்டில் நடந்த பொதுத்தேர்தலும் (1969) அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட 'மே கலவரமும்' இந்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டன என முனியன் (2007) குறிப்பிடுகிறார். சமகாலப் பிரச்சினைகளான குடியுரிமை சிக்கல், வேலை பெர்மிட், வேலையில்லாத் திண்டாட்டம், குடியிருப்பு, இவற்றின் மையச்சரடாக இருக்கும் வறுமை ஆகியவற்றின் பாதிப்பை உணர்ந்த எழுத்தாளர்கள் அவற்றைத் தொட்டு அதிகமாக எழுத ஆரம்பித்த காலமும் இதுதான்.*

*முனியன் (2007), 1970களின் இரா.தண்டாயுதம் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையில் புத்திலக்கிய விரிவுரையாளராக வந்தது மலேசியச் சிறுகதை சூழலில் முக்கியமான நிகழ்வாக குறிப்பிடுகிறார். சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்குப் பலவகையிலும் அவர் பங்காற்றியது இந்தக் காலகட்டத்தில் என்று குறிப்பிடப்படுகிறது. மலாயாப் பல்கலைக்கழக இந்தியல் ஆய்வியல் துறை 1978ஆம் ஆண்டு ஏப்ரல் 8, 9ஆம் தேதிகளில் மலாயாப் பல்கலைக்கழகத்தில் சிறுகதைக் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. இந்த இரண்டு நாள் கருத்தரங்கைச் சிறுகதைத் துறையின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சி என்றும் கூறலாம் என எழுத்தாளர் முனியன் குறிப்பிடுகிறார். மலேசியாவில் தேசிய அளவில் நடத்தப்பட்ட முதல் சிறுகதைக் கருத்தரங்காக அமைந்திருந்தது அதற்கு முக்கியமான காரணம்.*

*மலேசியச் சிறுகதைகளின் வளர்ச்சி, அமைப்பு, கரு, சமுதாயப் பின்னணி, மலேசியச் சமுதாயம், மலாய், தமிழ்ச் சிறுகதைகளின் ஒப்பீடு என்பன பற்றிய ஏழு கட்டுரைகள் இக்கருத்தரங்கில் படைக்கப்பட்டன. மெர்டேக்காவிற்குமுன் மலேசியத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி, மெர்டேக்காவிற்குப்பின் மலேசியத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி, மலேசியத் தமிழ்ச் சிறுகதை அமைப்பு, மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் சமுதாயப் பின்னணி, மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் கருப்பொருள்கள் என்னும் தலைப்புகளில் தமிழில் ஐந்து கட்டுரைகளும் மலாய்மொழியில் இரண்டு கட்டுரைகளும் அக்கருத்தரங்கில் படைக்கப்பட்டன. மலாய்மொழியில் படைக்கப்பட்ட கட்டுரைகளில் மலேசியாவில் மலாய், தமிழ்ச் சிறுகதைகளின் வளர்ச்சி ஓர் ஒப்பீடு என்னும் தலைப்பில் படைக்கப்பட்ட கட்டுரையை ரெ.கார்த்திகேசுவும், மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் மலேசியச் சமுதாயம் என்னும் கட்டுரையை ந.சுப்பிரமணியமும் படைத்துள்ளனர். தமிழில் படைக்கப்பட்ட கட்டுரைகளை முறையே சி.வடிவேலு, பால பாஸ்கரன், இரா.தண்டாயுதம், வி.பூபாலன், இராம வீரசிங்கம் ஆகியோர் படைத்தனர். முதன் முதலாக மலேசியச் சிறுகதைகளைப் பற்றிய ஒரு விரிவான ஆராய்ச்சியாக இக்கருத்தரங்கு அமைந்திருந்தது.*

*பல்கலைக்கழகத்தோடு மட்டும் தன்னைச்*

சுருக்கிக்கொள்ளாமல் இரா.தண்டாயுதம் எழுத்தாளர்களுடனும் இணைந்து ஓர் இயக்கமாகவே செயல்பட்டுள்ளார். இரா.தண்டாயுதம் ஆலோசனையில் ரெ.கார்த்திகேசு முன்னின்று உருவாக்கிய 'இலக்கிய வட்டம்' குழுவும் அதன் மூலம் உருவான 'இலக்கிய வட்டம்' எனும் காலாண்டு சிற்றிதழும் அதற்குத் தக்கச் சான்றாகும். எழுத்தாளர்களிடம் கேட்டுப்பெறப்படும் படைப்புகளை வானொலியில் தட்டச்சாளராகப் பணியாற்றியவரிடம் கொடுத்து, தட்டச்சு செய்யப்பட்டதை நகல் எடுத்து சந்திப்புக் கூட்டங்களில் வழங்கி விவாதித்துள்ளனர். அவ்வகையில் வெளிவந்த ஐந்து இதழ்களிலும் ஒவ்வொரு சிறுகதைகளை இடம்பெறச்செய்து அதை ஒட்டி விவாதமும் செய்துள்ளனர் (இலக்கிய வட்டம், 1973). இலக்கிய வட்டம் இதழ் எந்த விளம்பரத்தையும் எதிர்ப்பாராமல் எளிய முறையில் நவீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கு உருவாக்கப்பட்ட இலக்கிய இதழாக செயல்பட்டுள்ளது. மேலும், இவ்விதழ் அக்காலத்தில் இருந்த இலக்கியப் போக்கிலிருந்து மாறுபட்டு புதிய முறையை அறிமுகப்படுத்தும் குழு முறையிலான நகர்ச்சியைக் கொண்டிருந்தது. இதனை அவ்விதழில் பிரசுரிக்கப்பட்ட கதைகள்வழி அடையாளம் காண முடிகின்றது. கிடைக்கப்பெற்ற இதழ்களின் அடிப்படையில் பைரோஜி நாராயணன், மெ.அறிவானந்தன், இரா.தண்டாயுதம், வீ.செல்வராஜ், க.கிருஷ்ணசாமி, சி. வடிவேலு, சி.வேலுசாமி, அரு.சு.ஜீவானந்தன், சு.கமலநாதன், சா.அ.அன்பானந்தன், மலபார் குமார், ரெ.கார்த்திகேசு, மைதி.சுல்தான் எனப் பலரும் இவ்விதழில் பங்களித்துள்ளனர் என்பதைக் கண்டறிய முடிகிறது.

அதன் பின்னர் 1970களின் இறுதியில் நவீன இலக்கியம் சார்ந்த முயற்சிகள் மலேசியாவில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. முக்கியமாகக் கெடாவில் நவீன இலக்கியச் சிந்தனை என்னும் அமைப்பு இளஞ்செல்வன், சீ.முத்துசாமி, நிலாவண்ணன் போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்டது (யுவராஜன், 2012, p.27). மேலும் இக்காலகட்டத்தில்தான் சீ. முத்துசாமி (இரைகள்), அரு. சு. ஜீவானந்தம் (அட இருளின் பிள்ளைகளே!), சாமி. மூர்த்தி (நேர்க்கோடுகள்), கோ. முனியாண்டி (யக்ஞ) போன்ற நவீனப் படைப்புகள் எனச் சொல்லத்தக்க ஆழமான முயற்சிகள் பெரும்பாலும் சிறுகதைகளில் சாத்தியமாயின என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 70களின் முக்கியமான படைப்பாளிகளான சீ.முத்துசாமி (2018, p.45), சை.பீர்முகம்மது (2018, p.68), அரு.சு.ஜீவானந்தன் (2018, ஜீ.100) போன்றவர்கள் அக்காலக்கட்டத்தில் வாசிக்கக் கிடைத்த ஆனந்தவிகடன் மற்றும் குமுதம் இதழ்களில் இடம்பெற்ற ஜெயகாந்தனின் சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் வழியே தாங்கள் நவீன இலக்கியத்தின் வீச்சை அறிந்ததாகச் சொல்வது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது.

இதே காலக்கட்டத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த முருகு சுப்ரமணியன் (19621974) சிறுகதை வளர்ச்சிக்காகச் சில ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது. சிறுகதைக்கான மாதாந்திர கருத்தரங்குகளைக் கூட்டி ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு கதைக்கு 50 ரிங்கிட் பரிசு வழங்கப்பட்டது. மேலும், முருகு சுப்ரமணியன் தமிழ் நேசனில் ஆசிரியராக இருந்த காலத்தில் சிறுகதைகளுக்குப் பணமும் வழங்கப்பட்டுள்ளது (வேலுசாமி, 1973). அதே சமயம் 1972இல் தமிழ் நேசன் மூலம் பவுன் பரிசு திட்டத்தைத் தொடங்கி தரமான சிறுகதைகள் உருவாக ஊக்குவித்துள்ளதும் கவனிக்கத் தக்கதாகும். தமிழ் நேசன் ஆசிரியராகப் பொறுப்புவகித்த முருகு.சுப்பிரமணியன் அப்பத்திரிகை மூலமாக 1972இல் தமிழ் நேசன் பவுன் பரிசுத் திட்டத்தைத் தொடக்கி மலேசியச் சிறுகதை வளர்ச்சிக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். இப்பவுன் பரிசு போட்டியானது எழுத்தாளர்களை அதிகம் கவர்ந்ததோடு பல நல்ல சிறுகதை எழுத்தாளர்களை இனங்கான வழி செய்திருக்கிறது (சுப்பிரமணி, 2005, p.22).

சி. வடிவேலுவை தலைவராகக்

கொண்டு மலேசிய எழுத்தாளர் சங்கம் 1972ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிறுகதை திறனாய்வைத் தொடக்கி வைத்ததாகக் குறிப்பிடுகிறார். பத்திரிகைகளில் வரும் சிறுகதைகளை மாதம் முழுவதும் சேகரித்து வாசித்து, திறனாய்வு செய்து பரிசுக்குறிய கதையைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் எழுத்தாளர்கள் ஊக்கம் அடைந்ததாக அவர் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வாறு தேர்வு பெற்ற சிறுகதைகள் 1974ஆம் ஆண்டு பரிசு எனும் தலைப்பில் நூல் வடிவமும் பெற்றுள்ளது (இராமையா, 1996, p.31). 'சீனக்கிழவன்' (1970) எம்.குமாரன்; இருண்ட உலகம்(1970) சி. வடிவேலு; தவத்தின் வலிமை (1971), பட்டினிக் குருவி (1972), இறைவன் அவர்களை மன்னிப்பானாக (1973) திருகிம்; புனிதமான உலகங்கள் (1973) கு.கிருஷ்ணன், புதிய தொடக்கங்கள் (1974) ரெ.கார்த்திகேசு, நேர்கோடுகள் (1974) சாமிமூர்த்தி, தமிழ் மலர் சிறுகதைகள் (1974) இரா.பெருமாள், வழி பிறந்தது (1975), நவமலர்கள் (1978) காரைக்கிழார் போன்ற சிறுகதை தொகுப்புகள் வெளிவந்ததையும் ரெ.கார்த்திகேசு, சி.வடிவேலு, எம்.ஏ.இளஞ்செல்வன், இராஜகுமாரன், மு.அன்புச்செல்வன், சை.பீர்முகம்மது போன்ற எழுத்தாளர்கள் தீவிரமாகச் செயல்படத்தொடங்கியதையும் சுட்டிக்காட்டும் சுப்பிரமணி புதிய சமுதாயம், வானம்பாடி, உதயம் போன்ற இதழியல் முயற்சிகளும் சிறுகதைகள் வளர்ச்சிக்கு உரமூட்டின என்கிறார் (சுப்பிரமணி, 2006, p.22). இதன் அடிப்படையிலேயே இக்காலக்கட்டம் மறுமலர்ச்சி காலகட்டமாகவே கருதப்படுகிறது. அதன் உச்சமாக மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை 1978ஆம் ஆண்டு ஏப்ரலில் நடத்திய மலேசியத் தமிழ்ச் சிறுகதை கருத்தரங்கைக் குறிப்பிடலாம்.

### இயக்கங்களின் காலம் (1980 – 1997)

எழுபதுகளில் காணப்பட்ட வேகம் எண்பதுகளின் துவக்கத்திலிருந்து சற்று குறைந்தே காணப்பட்டதாக கூறப்படுகிறது (சுப்பிரமணி, 2006, p.22). தொடர்ந்து இளைஞர்கள் இலக்கியத்தில் ஈடுபடவும் புதியவகை இலக்கிய முயற்சிகள் மலரவும் பல்வேறு இயக்கங்கள் முனைப்புடன் பட்டறைகள் போட்டிகள் போன்றவற்றை நடத்தின.

**மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ் பேரவை:** 1980களில் மலேசிய இலக்கியம் குறிப்பாக சிறுகதை இலக்கியம் எனும்போது அனைவராலும் தவறாமல் குறிப்பிடப்படுவது மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ் பேரவையின் 'பேரவைக் கதைகள்' சிறுகதைப் போட்டியாகும். இரா.தண்டாயுதம் ஆலோசனையின் பேரில் சிறுகதை இலக்கியத்திற்கு ஊன்றுகோலாய் நின்று மலேசிய மண்ணையும் மனிதர்களையும் வடிக்க மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையினர் முன்னெடுத்திருந்த இப்பெருந்திட்டத்தின் முதல் பேரவைக் கதைகளின் சிறுகதை நூல் தொகுப்பு 1982ஆம் ஆண்டு பத்து சிறுகதைகளை உள்ளடக்கி முழுவதும் மலாயாப் பல்கலைக்கழக மாணவர்களே பங்கெடுத்தது குறிப்பிடத்தக்க விடயமாகும் (விஜயலட்சுமி, 2016, p.56). பின்னர், 1986இல் இப்போட்டி பொதுப்பிரிவாக நடத்தப்பட்டு பரிசுபெற்ற படைப்புகள் நூலாக்கப்பட்டன. மலேசியாவில் சிறுகதைத் துறையில் தீவிரமாக இயங்கும் பெரும்பாலான எழுத்தாளர்கள் இப்போட்டிகளில் பரிசு பெற்றுள்ளனர் என்று கூறுமளவுக்கு மலேசியத் தமிழ் சிறுகதை நகர்ச்சியில் இப்போட்டி இன்றளவும் முக்கியத்துவம் வகிக்கிறது. 1998க்குப் பிறகு இப்போட்டியில் மாணவர் பிரிவு இணைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**மலேசியத் தேசியப் பல்கலைக்கழக இந்தியப் பிரதிநிதித்துவ சபை:** மலேசியத் தேசியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இந்தியப் பிரதிநிதித்துவ சபையும் உயர்கல்விக்கூடங்களில் பயிலும் மாணவர்களுக்காக 1997 முதல் சிறுகதை மற்றும் கவிதைக்கான போட்டிகளையும் நடத்தித் தொகுப்புகள் வெளியிட்டு வரும் மற்றோர் இயக்கமாகும் (இராஜம் இராஜேந்திரன், 2007, p.104).

**தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம்:** ஓர் இலக்கிய அமைப்பாக இல்லாதச் சூழலிலும் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச்

சங்கம் இலக்கியத்துக்கு ஆற்றிவந்திருக்கும் பங்கும் அளப்பரியது. 1994ஆம் ஆண்டு தொடங்கி தற்போதுவரை சிறுகதைப் போட்டிகளை நடத்திப் பரிசளித்து எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுடன் பரிசு பெற்ற படைப்புகளைத் தொகுத்து நூலாகவும் வெளியிட்டு வருகிறது (முனியன், 2007, p.195).

**மலேசியப் பாரதிதாசன் இயக்கம்:** மலேசியப் பாரதிதாசன் இயக்கமும் 1993 முதல், மலேசியச் சிறுகதைத்துறைக்குத் தனது பங்களிப்பை வழங்கும் நோக்கில் ஆண்டுதோறும் தமிழ் எழுத்தாளர் தின விழாவுக்காகச் சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளித்துச் சிறப்புச் செய்துள்ளது.

**மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்:** சிறுகதைத்துறையை மேம்படுத்த மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் எடுத்து வந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுள் மாதாந்திரச் சிறுகதைத் திறனாய்வுக் கருத்தரங்கு மிக முக்கியமானது. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிறுகதை வளர்ச்சிக்கான ஒரு முக்கியத் திட்டமாகவும் இதைக் குறிப்பிடலாம். ஆதி குமணன் மலேசிய நண்பன் நாளிதழின் ஆசிரியராகவும் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தபோது முதன் முதலாக இக்கருத்தரங்கு 1994ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மலேசியாவில் அக்காலகட்டத்தில் வெளிவந்த எல்லாத் தமிழ் ஏடுகளிலும் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்ட சிறுகதைகளையெல்லாம் திரட்டி அவற்றைத் திறனாய்வுக்கு உட்படுத்தி சிறந்த சிறுகதை ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பவுன் பரிசு வழங்கிச் சிறப்புச் செய்யும் திட்டமாக இது செயல்பட்டது. ஏறத்தாழ பத்தாண்டுகள் நடைபெற்ற இச்சிறுகதைக் கருத்தரங்குகள் நல்ல சிறுகதைகள் உருவாக எழுத்தாளர்களுக்கு ஊக்கத்தை அளித்து வந்துள்ளது (முனியன், 2007, p.189). 297 1990இல் சிரம்பானில் கொண்டாடப்பட்ட பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசுபெற்ற படைப்புகளைத் தொகுத்து கலைகின்ற கரு மேகங்கள் எனும் தொகுப்பாக வெளியிட்டது குறிப்பிடத் தக்கது.

**டேவான் பகாசா டான் புஸ்தகா:** மலாயாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் கிருஷ்ணன் மணியம் அவர்கள் 1989ஆம் ஆண்டில் டேவான் பகாசா டான் புஸ்தகா எனும் அமைப்பின் (மொழி வளர்ப்பு நிறுவனம்) திட்டத்தின்கீழ்ச் சில மலாய்க் கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். அன்வார் ரிட்சுவானின் எழுதிய 'சாசாரான்' (Sasaran), 'சகாபாட்' (Sahabat) ஆகிய இரு கதைகளையும், ரசாக் மாமாட்டின் எழுதிய 'டி லுவார் கூரோங்கான்' (Di Luar Kurungan) என்னும் கதையையும், சுரினா ஹசானின் 'நேனேக்' (Nenek) என்னும் கதையையும், அஸிஸி அப்துல்லா எழுதிய 'திருச்செல்வம்' (Thiruchelvam) என்னும் கதையையும் மொழி பெயர்த்திருக்கிறார். இந்த ஐந்து கதைகளும் தமிழ் நேசன், மயில் மற்றும் தினமணியில் பிரசுரம் கண்டன. இதன் மூலம் இரு மொழிக்குமான இலக்கிய நகர்ச்சியின் புரிதலுக்குப் பெரும் தூண்டுகோளாய் இருந்தது என வ.முனியன் குறிப்பிடுகிறார் (முனியன், 2007, p.186). அதேபோல தமிழ்ச்சூழலில் எழுதப்படும் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் போன்றவற்றைப் பற்றிய மலாய்மொழிக் கட்டுரைகள் இரா.தண்டாயுதம், பழனியப்பன் மற்றும் ச.சிங்காரவேலு ஆகியோர் முயற்சியில் 1984ஆம் ஆண்டில் 'டேவான் சாஸ்த்ரா' இதழில் தொடர்ந்து வெளியீடு கண்டது.

**அகம்:** டாக்டர் சண்முகசிவா முயற்சியில் உருவான 'அகம்' என்னும் புத்திலக்கியம் சார்ந்த அமைப்பு மலேசிய சிறுகதை இலக்கியம் வளர காரணமாக இருந்ததாக ரெ.கார்த்திகேசு குறிப்பிடுகிறார். முதலில் பொது இடங்களில் நடந்த இக்கூட்டம் பின்னர் மயில் இதழ் அலுவலகத்தில் தொடந்தது. (கார்த்திகேசு, 2004, p.41).

**டாக்டர் தண்டாயுதம் நினைவிலக்கியப் பேரவை:** இரா.தண்டாயுதம் தமிழகம் திரும்பி மரணம் அடைந்த நிலையில் மலேசியாவில் 'டாக்டர் தண்டாயுதம் நினைவிலக்கியப் பேரவை' தொடங்கப்பட்டு, அப்பேரவையின் மூலம் எழுத்தாளர் வீ.செல்வராஜ்

ஆண்டுதோறும் 'மலேசியத் தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பில் சிறுகதைகள், கவிதைகள் போன்றவற்றைத் தொகுப்புகளாக 1988 முதல் 1994 வரை வெளியிட்டது முக்கியமான பணியாகவும் இருந்துள்ளது (கார்த்திகேசு, 2004, p.34).

இவ்வாறாக, இயக்கங்களும் அமைப்புகளும் இக்காலக்கட்டத்தில் சிறுகதை இலக்கியத்தைப் போட்டிகள், கலந்துரையாடல்கள், மொழிப்பெயர்ப்புகள் போன்ற முன்னெடுப்புகள் வாயிலாக தொடர்ந்து இந்நாட்டில் சிறுகதை இலக்கியம் வளர வழிவகை செய்துள்ளதை அறிய முடிகிறது.

### தனிநபர் காலம் (1998 – 2005)

இயக்கங்கள் வழமையான பணிகளைச் செய்துகொண்டிருந்த அதே சமயம் தனி நபர்களும் மலேசியத் தமிழ் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்கான பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டனர். 1998 முதல் 2005 வரை தனிநபர்கள் இலக்கியத்தை முன்னெடுத்துச் சென்ற போக்கு அதிகமாகவே காண முடிகின்றது.

**சை.பீர்முகம்மது:** 'வேரும் வாழ்வும்' என்ற தலைப்பில் 1950 - 2001 வரை எழுதப்பட்ட முக்கியமான மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளை மூன்று தொகுதிகளாக (தொகுதி 1 1999, தொகுதி 2 2001, தொகுதி 3 2001) வெளியிட்ட சை.பீர்முகம்மதுவை ரெ.கார்த்திகேசு மலேசியத் தமிழ் எழுத்துலகின் கிரியா ஊக்கியென வர்ணிப்பதும் குறிப்பிடத்தக்கது (கார்த்திகேசு, 2004, p.34). இப்பெரும் முயற்சி வெகுமக்கள் மத்தியில் பரவ அவர் அக்காலத்தில் மாபெரும் இலக்கிய ஆளுமையான ஜெயகாந்தனை மலேசியாவுக்கு அழைத்து வந்து வெளியீட்டு விழாக்களை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

**மாத்தளை சோமு:** இலங்கை எழுத்தாளரான மாத்தளை சோமு, மலேசியச் சிறுகதைகள் சிலவற்றைத் தொகுத்து 1995ல் 'மலேசியத் தமிழ் உலகச் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் தமிழ்நாட்டில் பதிப்பித்தார். இந்தத் தொகுப்பு பின்னர் மலேசிய இடைநிலைப் பள்ளிகளில் பாடப் புத்தகமாகவும் வைக்கப் பட்டது (கார்த்திகேசு, 2004, p.34).

**கீழாம்பூர்:** அதேபோல தமிழகத்தின் கலைமகள் இதழ் ஆசிரியர் கீழாம்பூர் 2003இல் 32 மலேசியச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகளை 'மலேசியச் சிறுகதைகள்' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார் (கார்த்திகேசு, 2004, p.34).

**மா.சண்முகசிவா:** 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு மலேசியத் தமிழ் இலக்கியச் சூழலில் புதிய போக்குகளையும் பாதைகளையும் வகுத்துக்கொண்டு மா.சண்முகசிவா இளைஞர்களைக் கொண்டு மீண்டும் 'அகம்' இலக்கியக்குழுவை முடுக்கினார். சில மூத்தப் படைப்பாளிகள் இதில் பங்கெடுத்தாலும் சு.யுவராஜன், சிவா பெரியண்ணன், பா.அ.சிவம், ம.நவீன் போன்ற இளம் எழுத்தாளர்கள் அதில் கவனம் பெற்றனர் (சண்முகசிவா, 2013, p.616).

**ஆதி.குமணன்:** 1998ல் மலேசிய நண்பன் நாளிதழ் 'கடிகாரக் கதைகள்' என்ற தலைப்பில் தொடர்ந்து தரமான சிறுகதை வெளியிடத் தேர்ந்தெடுத்த 13 எழுத்தாளர்களைச் சிறுகதை எழுத வைத்து அவர்களுக்கு உயர் ரக கடிகாரத்தையும் பரிசாகக் கொடுத்தது. இம்முயற்சியை முன்னெடுத்த அப்பத்திரிகையின் ஆசிரியர் ஆதி.குமணன் 1999ல் 'சமுதாயக் கதைகள்' எனும் தலைப்பில் தன் சொந்தச் செலவில் நூலைப் பதிப்பித்து எழுத்தாளர் சங்க ஏற்பாட்டில் வெளியிட்டார். அந்தச் சிறுகதை வெளியீட்டுக்கு 3000 பேர் திரண்டது குறிப்பிடத்தக்கது. அதேபோல பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவில் நடத்தப்பட்ட சிறுகதை போட்டிக்கு 'ஏர் இந்தியா' நிறுவனம் மூலம் விமான டிக்கெட்டுகளைப் பெற்றுக்கொடுத்து ஆதி.குமணன் எழுத்தாளர்களை ஊக்கமூட்டினார். அக்காலக்கட்டத்தில் அவர் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தாலும் அவர் மேற்கொண்ட தனிப்பட்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை (கார்த்திகேசு, 2004, பக். 34). இதுதவிர இயக்க ரீதியிலான செயல்பாடுகளில் ஒன்றாக 2003ஆம் ஆண்டு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், இளம் தலைமுறை எழுத்தாளர்களுக்குத் திடமாக வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கில்

*2003ல் எழுத்தாளர் திலீப்குமார் அவர்களைக் கொண்டு சிறுகதை எழுதும் பட்டறையை இக்காலப்பகுதியில் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது (கார்த்திகேசு, 2004,* p.*34).*

*தனிநபர்களாகவும் இயக்கங்களாகவும் 1980 2005வரை பல்வேறு ஆக்ககரமான இலக்கிய முயற்சிகள் நடந்தாலும் அவை புதிய உத்வேகத்தை மலேசியச் சிறுகதை உலகில் ஏற்படுத்தவில்லை. இக்கூற்றை வலியுறுத்தும் சுப்பிரமணி (2005), தனிப்பட்டவர்களின் முயற்சியாலும் ஒரு சில இயக்கங்களின் முயற்சியாலும் சிறுகதை தொகுப்புகள் வெளிவந்தன என்கிறார் (சுப்பிரமணி, 2005,* p.*20). போட்டிகள் எழுத்தாளர்களை எழுத ஊக்கமூட்டினாலும் புனைவிலக்கியத்தை ஒட்டிய புதிய முயற்சிகள் அக்காலத்தில் மிகக்குறைந்த அளவே உருவானது இதன்வழி தெளிவு.*

### மாற்று ஊடகக் காலம் (2006 – 2012)

*1940களில் தொடங்கி மலேசியாவில் வெகுமக்கள் ஊடகங்களே சிறுகதை இலக்கியத்தை வளர்த்து வந்தன. இவ்வூடகங்கள் பெரும் மக்கள் திரளைச் சென்று அடைவதால் அவை கடுமையான தணிக்கை முறையைப் பின்பற்றியே மலேசியாவிலும் நடத்தப்பட்டன. கருத்துகளை முன்வைப்பதே சிறுகதைகளின் பிரதான நோக்கமாக இருந்தது. சமூக ஒழுக்கங்களைக் கேள்வி எழுப்பும் பொதுவாசிப்புக்கு ஒவ்வாத உரைநடையைக் கொண்டிருக்கும் சிறுகதைகள் பெரும் ஊடகங்களில் பிரசுரமாவதோ ஒலிபரப்பாவதோ முற்றிலும் மறுக்கப்பட்டிருந்தது. செய்திகளையும் கேளிக்கைகளையும் உள்ளடக்கி வைத்திருந்த நாளிதழ்களும் வார மாத இதழ்களுமே சிறுகதை இலக்கியத்திற்காகத் தங்கள் பக்கங்களை ஒதுக்கின. 'இலக்கிய வட்டம்' போன்ற மாற்று ஊடக முயற்சிகள் தோல்வி அடைந்த நிலையில் பெரிய வணிகப்பரப்பைக் கொண்ட வெகுமக்கள் இதழ்களே சிறுகதை இலக்கியத்தை பொதுவாசிப்புக்கு முன்னெடுத்தன. இந்த இடைவெளியை நிறைவு செய்யும் காலப்பகுதியாக 2006ஆம் ஆண்டினைக் கொள்ளலாம்.*

### காதல்

*காதல் இதழ் முற்றிலும் இளைஞர்களின் எண்ணத்தில் உதயமாகி சில முக்கிய பணிகளை மலேசிய இலக்கியச் சூழலில் செய்துள்ளதைக் அவதானிக்க முடிகிறது. இளம் படைப்பாளிகளின் புதிய புனைவிலக்கிய முயற்சிகளை அங்கீகரித்து அதனைத் தணிக்கையின்றி செறிவு செய்து பிரசுரித்தல்; சமகாலத்தில் தமிழகத்தில் நிகழும் இலக்கிய முயற்சிகளோடு மலேசிய இளம் எழுத்தாளர்களையும் இணைத்துக்கொள்ள அவர்களுடன் உரையாடலை ஏற்படுத்துவதோடு அவர்கள் எழுத்தைக் மீள் பிரசுரம் செய்வது; சமகால எழுத்தின்மேல் விமர்சனங்களை முன்வைத்தல்; நவீனத்துவம் என்பதை இலக்கியத்தின் எழுத்து வகையாக மட்டும் இல்லாமல் அதனை ஒரு கோட்பாடாக நிறுவுதல் போன்றவை இதில் குறிப்பிடத்தக்கவை.*

*'நவீன இலக்கியத்தை நோக்கி' எனும் அடைமொழியுடன் வெளிவந்த பத்து இதழ்களும் சிறுகதை இலக்கியத்துடன் கூடிய இலக்கிய விமர்சனங்களையும் அதிகம் பிரசுரித்தன. இதன் முதல் இதழ் சமகாலச் சிறுகதை, கவிதைச் சூழலை ஒட்டிய நான்கு விமர்சனக் கட்டுரைகளைத் தாங்கி மலர்ந்தது குறிப்பிடத்தக்கது (காதல், பிப்ரவரி 2006). சீ. முத்துசாமி, சை.பீர்முகம்மது, சபாபதி போன்றவர்களின் நேர்காணல்களின் சாரம் மலேசிய இலக்கியத்தின்மீது விமர்சனம் வைக்கக்கூடியதாய் இருந்தது. மேலும் அக்காலத்தில் தமிழகத்தில் முக்கிய மாற்று ஊடகங்களின் ஒன்றான உயிர்மை இதழ் ஆசிரியரும் நவீன கவிஞருமான மனுஷ்ய புத்திரனின் நவீன சிந்தனைகள் அடங்கிய உரையாடல், ஜெயமோகன் போன்றவர்களின் பதிவுகள் காதல் இதழில் இடம்பெற்று மலேசிய இலக்கிய வாசகர்களுக்குப் புதிய அறிமுகங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சியை மேற்கொண்டன.*

### வல்லினம் அச்சு இதழ்

*2007ஆம் ஆண்டு தொடங்கி இளைஞர்கள் இணைந்து நடத்திய வல்லினம் இதழ்களின் மொத்தப்பதிப்பு எட்டு. இதில் 28*

சிறுகதைகள் பிரசுரமாகியிருப்பதும் அவை வடிவ ரீதியிலும் உள்ளடக்க ரீதியிலும் மாற்று முயற்சிகளை உள்ளடக்கியிருந்தன. ம.நவீன், பா.அ.சிவம், மஹாத்மன், யுவராஜன், தோழி, யோகி, சந்துரு என இளம் எழுத்தாளர் இவ்விதழின் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றிருந்தனர். மலேசியாவில் அருகிப்போயிருந்த விமர்சனப்போக்கை இவ்விதழ் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளது. ரெ.கார்த்திகேசு, மா.சண்முகசிவா, சு.யுவராஜன், பா.அ.சிவம், ம.நவீன், மா.இராமையா என பலரும் மலேசியாவில் நிகழ்த்தப்பட்ட கலை, இலக்கிய, பண்பாட்டு முன்னெடுப்புகள் குறித்த விமர்சனத்தை இவ்விதழ்கள்வழி முன்வைத்தனர்.

காதல் இதழ் போலவே வல்லினமும் படைப்பாளர்கள் உரையாட விரிவான தளத்தை நேர்காணல் மூலம் அமைத்துக்கொடுத்தது. எழுத்தாளர்கள் மட்டுமின்றி புகைப்படக் கலைஞர்கள், மேடை நாடகக்கலைஞர்கள் என பலரின் நேர்காணல்களும் விரிவாக இடம்பெற்றதால் அவை எழுத்தாளர்கள் மத்தியில் பேசும் பொருளாகி உற்சாகமான கலை இலக்கியச் சூழலை உருவாக்கியது. அதே காலக்கட்டத்தில் மலேசியாவில் வருகை தரும் பேராசிரியராக இருந்த எம்.ஏ.நுஃமான் அவர்கள் வல்லினம் குழுவினரிடம் காட்டிய இணக்கமான போக்கு வல்லினம் மேலும் காத்திரமாகச் செயல்பட வழிவகை செய்திருந்தது (வல்லினம், ஜூன் 2009). மேலும், வல்லினம் அச்சு இதழில் எட்டாவது இதழ் விளிம்புநிலை மக்கள் மற்றும் இலக்கியம் குறித்த புரிதலுடன் முன்னெடுக்கப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது (வல்லினம், ஜூன் 2009). 'ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்' எனப் பிரகடனப்படுத்திக்கொண்டு வெளிவந்த இவ்விதழில் திருநங்கைகளின் நேர்காணல், சௌக்கிட் என்ற விளிம்பு நிலை மக்களின் வாழ்விடம் குறித்த பதிவு, விளிம்பு நிலை இலக்கியங்களை அதிகம் எழுதும் ஷோபா சக்தியின் நேர்காணல், சிங்கையில் விளிம்பு நிலை மக்களின் குரலாக மேடை நாடகங்களை அரங்கேற்றும் சிங்கை இளங்கோவனின் 'ஊடாடி' நாடகம் குறித்த பதிவு என புதிய பரிணாமம் எடுத்திருந்தது.

### அநங்கம் அச்சு இதழ்

ஜூன் 2008ல் உதயமான அநங்கம் இதழும் மாற்று ஊடகமாகவே செயல்பட்டது. கே.பாலமுருகன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு உருவான இவ்விதழ் மலேசியத் தீவிர எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் வாசகர்களையும் இணைப்பது என்ற அடைமொழியுடன் பிரசுரமானது. தமிழகத்தின் எழுத்தாளரான எஸ்.ராமகிருஷ்ணனின் விமர்சன உரையுடன் முதல் இதழ் வெளிவந்துள்ளது. முதல் இதழிலேயே மஹாத்மன், யுவராஜன் மற்றும் கே.பாலமுருகன் ஆகிய இளம் படைப்பாளர்களின் சிறுகதைகள் பதிப்பிக்கப்பட்டதோடு தொடர்ந்து இரண்டாவது இதழிலும் மூன்று சிறுகதைகளைப் பிரசுரித்து மா.இராமையா மற்றும் எம்.ஏ.இளஞ்செல்வன் குறித்த பதிவொன்றையும் வெளியிட்டுள்ளது. சிறுகதை எழுத்தாளரான கே.பாலமுருகன் மலேசியா மட்டும் அல்லாது சிங்கப்பூர் எழுத்தாளரான ஜெயந்தி சங்கர், பாண்டிதுரை ஆகியோரின் சிறுகதைகளையும் அநங்கத்தில் தொடர்ந்து பிரசுரித்துள்ளார். அநங்கம் மொத்தம் ஏழு இதழ் மட்டுமே வெளிவந்ததாக ந.பச்சைபாலன் குறிப்பிடுகிறார் (பச்சைபாலன், மார்ச் 2015).

### முகவரி

1.6.2010இல் வல்லினம் குழுவினரின் மற்றுமொரு மாத இருமுறை அச்சுப்பத்திரிகை என முகவரி இதழ் வெளியீடு கண்டது. தன்னை இடைநிலை ஏடு என பிரகனப்படுத்திக்கொண்ட அப்பத்திரிகை 'வெகுமக்களின் மாற்று முகம்' என்ற அடைமொழியில் எட்டு இதழ்கள் மட்டுமே பிரசுரிக்கப்பட்டது. நவீன இலக்கியத்தை எளிய வடிவில் வெகுமக்களிடம் கொண்டு சேர்க்க இப்பத்திரிகை முயற்சி தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### செம்பருத்தி

2000ஆம் ஆண்டுக்குப் பிறகு முக்கியமான இலக்கிய நிகழ்வாகச் செம்பருத்தி இதழ் சார்பாக அதன் ஆசிரியரான கணபதி

கணேசனால் முன்னெடுக்கப்பட்ட கவிராத்திரியைச் சுட்டலாம். இது பெரும்பாலும் கவிதையை மையமாகக் கொண்டே நடத்தப்பட்ட உரையாடல் ஆகும் (காலச்சுவடு, ஏப்ரல் 2012). 2011ல் வல்லினம் ஆசிரியர் குழுவில் இருந்த சு.யுவராஜன் செம்பருத்தி இதழின் ஆசிரியர் ஆனபின் சிறுகதை இலக்கியம் சார்ந்த பதிவுகள் அதில் சற்றுக்கூடுதலாக பிரசுரமாகத் தொடங்கின.

### வல்லினம் இணைய இதழ்

வல்லினம் அச்சு இதழாக வருவது நின்றபின்னர் செப்டம்பர் 2009ல் வல்லினம் இணைய இதழாக வெளிவரத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது. இணையம் மிக எளிதாக உலகம் முழுவதும் படைப்பிலக்கியத்தை எடுத்துச் சென்றதால் ஏற்கனவே வல்லினத்தில் இணைந்திருந்த இளம் எழுத்தாளர்களுடன் முனீஸ்வரன், சிவா பெரியண்ணன், வீ.அ.மணிமொழி, தினேஸ்வரி, அகிலன், இளஞ்செழியன், ராஜம் ரஞ்சனி, சு.காளிதாஸ் போன்றோரும் படைப்புகளை வழங்கினர். உள்நாட்டு எழுத்தாலர்களின் சிறுகதைகளுடன் அ.முத்துலிங்கம், ஷோபாசக்தி, எஸ்.ராமகிருஷ்ணன், சாரு நிவேதிதா, ஆதவன் தீட்சண்யா, எம்.ஏ.நுஃமான், லதா, சிங்கை இளங்கோவன் போன்ற மலேசியாவுக்கு வெளியில் இருந்த முக்கியமான தமிழ் இலக்கியவாதிகளும் சீ.முத்துசாமி, கோ.முனியாண்டி, மா.சண்முகசிவா போன்ற மலேசிய இலக்கியவாதிகளின் பங்களிப்பையும் இவ்விதழ்கள் உள்ளடக்கியிருந்தன.

### பறை

அநங்கம் இதழ் நின்ற பின் கே.பாலமுருகன் மீண்டும் பறை என்ற பெயரில் இதழ் ஒன்றை நடத்தினார். சிறுகதைகளை உள்ளடக்கியிருந்த இவ்விதழ் ஒரு பதிப்போடு நின்றுபோனது (பச்சைபாலன், மார்ச் 2015).

### வலைப்பூக்கள்

கணினி வசதி, இணையம், கணினி தொழில்நுட்பத்தில் தமிழ் இணைந்திட்ட காலப்பகுதியில் ம.நவீன், கே.பாலமுருகன், சு.யுவராஜன், தயாஜி, பூங்குழலி வீரன், முனிஸ்வரன் குமார், அகிலன், அ.பாண்டியன் என இளம் எழுத்தாளர்களோடு மா.சண்முகசிவா, ந.பச்சைபாலன், கோ.புண்ணியவான், ரெ.கார்த்திகேசு போன்ற மூத்தப்படைப்பாளிகளும் தங்களுக்கான வலைப்பூக்களை உருவாக்கி சுதந்திரமாக படைப்பிலக்கியங்களில் ஈடுபடத் தொடங்கினர். நாளிதழ்களில் பிரசுரமான தங்கள் படைப்புகளைப் பதிவு செய்தனர். சமகால இலக்கியம் குறித்து காத்திரமாகப் பதிவுகளும் அவ்வப்போது இதில் இடம்பெற்றன.

2006இல் உருவான மாற்று ஊடகக் காலம் படைப்பாளிகளைச் சுதந்திரமாகச் செயல்பட வழிவகை செய்ததோடு அக்காலக்கட்டத்தில் படைப்பாளிகள் பின் நவீனத்துவம் போன்ற உத்திகளைப் படைப்பில் பரிசோதிக்கக் களமும் அமைந்தது. தங்களுக்கான இதழைத் தாங்களே நடத்திக்கொள்ளவும், இணையத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அதை விரிவான வாசகர் பரப்புக்கு எடுத்துச்செல்லவும் தணிக்கையற்ற வெளியில் புனைவிலக்கியங்களை உருவாக்கவும் மாற்று ஊடகங்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன.

### முடிவுரை

காலவரிசை என்பது கடந்த காலத்தைத் தனித்து அளவிடப்பட்ட காலங்களுக்குட் பட்டு வகைப்படுத்துவதற்கான செயல்முறையாகும். ஒப்பீட்டளவில் நிலையான குணாதிசயங்களைக் கொண்ட செயல்கள் ஒரு காலப்பகுதியில் தொடர்ச்சியான நடைபெறும்போது அக்காலப்பகுதியைத் தொகுத்து பெயரிட்டு அழைப்பது வரலாற்று ஆய்வுகளில் வழக்கமாக நடைபெறும். இவ்வாறு காலவரையறையுள் தொகுக்கப்படாத நிகழ்வுகள் காலம் தோறும் சிதறி வரலாற்றைத் துல்லியத்தன்மையற்றதாக்கி விடும். இதனாலேயே பாலபாஸ்கரன் மலேசியத் தமிழ் சிறுகதைகளை ஆய்வுக்குட்படுத்தியபோது கால வரையறைகளைப் பகுத்து குறிப்பிட்டுள்ளார். இந்தக் காலவரையறை எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் என எவராலும் இதுவரை

மறுவரையறை செய்யப்படாத சூழலில் பெருமளவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும், 1980ஆம் ஆண்டுகளிலிருந்து இதன் தொடர்ச்சி நடைபெறவில்லை. கூடுதலாக, இவரது ஆய்வில் பல வரலாற்றுத் தகவல்கள் விடுபட்டுள்ளதையும் பார்க்க முடிகிறது. இவ்விரு அம்சங்களையும் இவ்வாய்வு முழுமையுற செய்ய முனைந்துள்ளது.

**Referances:**


Bala Baskaran. (2006). *The Malaysian Tamil short stories, 1930-1980 : a critical study*. Sin gapore: Bala Baskaran.

Caṇmuka Civā, Mā. (2018). Maṉita viṭutalaiyaip pōl kaṭavuḷ viṭutalaiyum mukkiyamāṉa oṉṟu. *Mīṇṭu nilaitta niḻalkaḷ* (pp.150-162). Pattumalai: Valliṉam Patippakam.

Cuppiramaṇi, Cō. (2006, April). Malēciyat tamiḻc ciṟukatai vaḷarcci: 1990-Kaḷiṉ toṭakkam varaiyil. *Kātal*, 20-23.

Dhandayudham, R. (1972/1973). The Development of Tamil Short Stories in Malaysia. *Tamil Oli*, (pp. 45-53). Kuala Lumpur: University of Malaya Tamil Language Society.

Dhandayutham, R. (1978). Struktur Cerpen Tamil Malaysia. *Proceedings of the Seminar Cerpen Tamil Malaysia*. Kuala Lumpur, Malaysia, 101-107.

Irājam Irājēntiraṉ. (2007). *Malēciyap putukkavitaikaḷ: tōṟṟamum vaḷarcciyum*. Ceṉṉai: Mitra Arṭs& Kiriyēṣaṉs.

Irāmaiyā, Mā. (1976). *Malēciyat tamiḻ ilakkiya varalāṟṟu kaḷañciyam*. Maturai: Kavikkuyil Accakam.

Irāmaiyā, Mā. (1977). *Ilakkiyap poḻil*. Ceṉṉai: Puraṭcip paṇṇai.

Irāmaiyā, Mā. (1996). *Malēciyat tamiḻ ilakkiya varalāṟṟuk kaḷañciyam*. Cēlam: Puraṭcip Paṇṇai.

Jīvāṉantaṉ, Aru. Cu. (2018). Vāḻkkai eṉṉai tiṉṟuviṭṭatu. *Mīṇṭu nilaitta niḻalkaḷ* (pp.96-106). Pattumalai: Valliṉam Patippakam.

Kārttikēcu, Re. (2004). Ciṟukataikaḷ. *Malēciyat tamiḻ ilakkiyam ōr aṟimukam* (pp.27-45). Ceṉṉai: Celvam patippakam.

Kārttikēcu, Re. (2007). Malēciyat tamiḻ eḻuttulakam. *Malēciyat tamiḻ ilakkiyam* (pp.15-24). Kōlālampūr: Mitra ārṭs& kiriyēṣaṉs.

Kārttikēcu, Re. (2010). Malēciyat tamiḻ eḻuttulakam: Nūṟṟu muppatu āṇṭukaḷ kaṭanta varalāṟu. Ulakat tamiḻ cem'moḻi mānāṭu: Malēciya aṟimuka malar. Cilāṅkūr: Malēciyat Tamiḻ Eḻuttāḷar Caṅkam.

Kuppucāmi, Ci. Vī. (1968, Mēi 28). *Aimpatu āṇṭākat tamiḻ malēciyāvil malarkiṟatu (viḻā urai)*. Malēciyā: Tamiḻ Nēcaṉ.

Muṉiyaṉ, Va. (2007). Malēciyat tamiḻ ciṟukataikaḷ. *Malēciyat tamiḻ ilakkiyam* (pp.177-134). Kōlālampūr: Mitra Arṭs & Kiriyēṣaṉs.

Muracu Neṭumāṟaṉ. (2007). Malēciyāvil tamiḻ ilakkiya vaḷarcciyil iyakkaṅkaḷiṉ paṅkaḷippu. *Malēciyat tamiḻ ilakkiyam* (pp.250-269). Kōlālampūr: Mitra Arṭs & Kiriyēṣaṉs.

Muttucāmi, Cī. (2018). Eḷiya vācippukaḷait tiruptippaṭutta nakarttappaṭum eḻuttu nīrttuppōvatait tavirkkaviyalātu. *Mīṇṭu nilaitta niḻalkaḷ* (pp.41-60). Pattumalai: Vallinam Patippakam.

Paccaipālaṉ, Na. (2015, Mārch). *Ciṟṟitaḻ muyaṟcikaḷ: tīrāk kaṉavukaḷ*. Retrieved from http://patchaibalan.blogspot.com/2015/03/blog-post.html

Pāla Pāskaraṉ, Na. (1995). *Malēciyat tamiḻ ciṟukatai.* (1 patippu). Putuccēri: Araci Patippakam.

Pālamurukaṉ, Kē. (2011, Februari). *Malēciya ilakkiya itaḻ anaṅkam iṉi paṟai eṉum putiya aṭaiyāḷattuṭaṉ*. Retrieved from http://bala-balamurugan.blogspot.com/2011/02/blog-post_17.html

Pañcāṅkam, Ka. (2012, Mārch). Malēciya nāṭṭu 'kātal' ilakkiyap pattirikkai: Oru vimarcakaṉiṉ pārvaiyil. *Ciṟṟēṭu*, 28-32.

Pāskaraṉ, Na. (1981). *Malēciyat tamiḻ ilakkiyam oru kaṇṇōṭṭam*. Ceṉṉai: Ceṉṉaip Palkalaik Kaḻakam.

Pāskaraṉ. (2011, Jaṉuari 23). Ku. *Aḻakiricāmiyum malēciyat tamiḻ eḻuttāḷarkaḷum*. Retrieved from http://balabaskaran24.blogspot.com/

Pīrmukam'matu, Cai. (1999). *Vērum vāḻvum*. Pattumalai: Mitrā Patippakam.

Pīrmukam'matu, Cai. (2018). Eḻutteṉpatu poḻutupōkkalla. *Mīṇṭu nilaitta niḻalkaḷ* (pp.61-81). Pattumalai: Vallinam Patippakam.

Subramaniam, N. (1980). *A Critical Study of Malaysian Tamil Short Stories* (1930-1979) (Unpublished master's thesis). University of Malaya, Kuala Lumpur.

Taṇṭāyutam, Irā. (1973). *Taṟkāla tamiḻ ilakkiyam*. Ceṉṉai: Tamiḻ Puttakālayam.

Vadivelu, S. (1978). *Perkembangan cerpen Tamil Malaysia sebelum merdeka.* Seminar Cerpen Tamil Malaysia (8-9 Apr 1978: Kuala Lumpur), 4-11.

Vēlucāmi, Ci. (1973, October). Paricuttaṅkaḷum ilakkiya vaṭṭaṅkaḷum. *Ilakkiya Vaṭṭam*, (taṉiccuṟṟu itaḻ), 5-9.

Vēlucāmi, Ci. (1974, January). Tamiḻ eḻuttāḷar caṅkam tōṉṟiya varalāṟu. *Ilakkiya Vaṭṭam*, (taṉiccuṟṟu itaḻ), 14-18.

Vijayalaṭcumi. (2016). *Āḻamum akalamum CP Dato A. Teyvīkaṉ*. Ceṉṉai: Kalaiñaṉ Patippakam.

Yuvarājaṉ, Cu. (2012, April). Malēciyat tamiḻ ilakkiyam: Putiya pōkkukaḷ, putiya pātaikaḷ. *Kālaccuvaṭu*, 26-33.

# தொல்தமிழகத்து அரசியலில் நன்னன்
# Nannan's part in the politics of ancient Tamilnadu

ச.கண்மணி கணேசன் / S.Kanmani Ganesan[1]

Date of submission: 2020-07-19
Date of acceptance: 2020-08-20
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
S.Kanmani Ganesan
Email: kanmanitamilskc@gmail.com

***Abstract***

The aim of this paper is to describe the part played by Nannan in the politics that prevailed in ancient Tamilnadu. The early history books like *Thennaattu Porkkalangal* by Kaa.Appaaththuraiyar describe the various wars between the Tamil kings and the *Kurunila Mannar* (the petty chieftains). But the relation between the social status and the wars is yet to be deciphered. His doubting the golden chain of Nannan i.e. ezhumudi kezheeiya aaram as an imaginary thing also needs to be clarified. The conclusion of Dr. Andre F.Sjoberg states that the Dravidian civilization was pluralistic in nature on the basis of linguistics, archeology, anthropology, and genealogy directed us to look at the Sangam Literature in a different angle. Po.Ve.Chomasundharanaar's commentary stating Nannan owning four types of military also needs to be studied because it was a factor symbolising *vendhar*. Nannan belongs to the Vel community; i.e. one among the fourth varna. The statement; 'Nannan's protected tree was a mango tree' by Dr.George L.Hart; in his paper, '*Early Evidence for Caste in South India*'; shows the need for a thorough study about Nannan. The eight anthologies and the ten idylls serve as the primary source and the researchers' views and the commentators' commentaries serve as the secondary source. The enmity between Nannan and the *vendhar* is prominent and that is the reason for his killing a *kosar* girl; who ate a mango fallen from his tree in his garden. The traditional descriptive methodology is followed.

**Key Words:** Nannan, Vel, Venthar, kaval maram, ezhumudi kezheeiya aaram.

## முன்னுரை

நன்னன் என்னும் வேளிர்குலத் தோன்றலை மையப்படுத்தி நிகழும் போர்கள், குழப்பங்கள், அவற்றின் காரணங்கள், முடிபுகள் ஆகியவற்றைக் கூர்ந்து ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். தமிழக அரசியலில் வேந்தருடன் அவனுக்கிருந்த உறவு நிலை மட்டுமே இக்கட்டுரையில் சிறப்பிடம் பெறுகிறது.

சங்ககாலப் போருக்குக் காரணமான சமூகநிலை பற்றி நாம் ஆராய வேண்டிய தேவை உள்ளது. நன்னனது மாமரம் ஒரு காவல் மரம் என்ற ஆய்வாளர் கருத்து நன்னன் பற்றிய முழுமையான ஆய்வின் தேவையை உணர்த்துகிறது. 'எழுமுடி கெழீஇய ஆரம்' பற்றிய உண்மையும்; நன்னன் நாற்படை வைத்து இருந்தானா என்ற கேள்வியும் இக்கட்டுரையில் விளக்கம் பெறுகின்றன.

எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் நன்னனின் நாடு, நகரம், தோற்றப்பொலிவு, செல்வ வளம், செய்த போர்கள், பகைவர், வழித் தோன்றல், ஆளுமை எனப் பல செய்திகள் உள்ளன. இவை முதல்நிலைத் தரவுகளாக அமைய; உரையாசிரியர் விளக்கமும் ஆய்வாளர் குறிப்புகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாகின்றன. இது

[1] The author is a retired Principal& Head of the Department of Tamil in Srikaliswari College, Sivakasi. Tamilnad. kanmanitamilskc@gmail.com

விளக்க முறையில் அமையும் வரலாற்று ஆய்வாகும்.

## ஆய்வு முன்னோடிகள்

கா.அப்பாத்துரையாரின் 'தென்னாட்டுப் போர்க்களங்கள்' (2014) என்ற நூல் எல்லாப் போர்களையும் விவரித்தாலும்; வேந்தருக்கும் வேளிருக்கும் இடையில் போர் நிகழ்ந்தமையை தனித்துவப் படுத்தினாலும்; அதற்கான காரணம் மகட்கொடை நேர்தல், நெல் வேளாண்மைக்கு ஏற்பட்ட அழிவு, பொதுமக்களுக்கு ஏற்பட்ட இன்னல் போன்ற சமூகநிலை பற்றிக் கூறவில்லை.

"Who Are The Dravidians" என முனைவர் ஆன்ட்ரே தி.ஸ்ஜோபெர்க் எழுதிய கட்டுரை (Symposium on Davidian Civilization, 1971, Andre F.Sjoberg, editor, p.2-31); மொழியியல், தொல்லியல் பண்பாட்டியல், மரபணுவியல் முதலியவற்றின் அடிப்படையில்; 'திராவிடர் ஒன்றுக்கு மேற்பட்ட மக்களினத்தின் கூட்டுக்கலவை' என்று முடிபுரைப்பது தொகை நூல்களை வேறு கோணத்தில் பார்க்கத் தூண்டுகிறது.

முனைவர் ஜார்ஜ் லி.ஹார்ட் எழுதிய 'Early Evidence for Caste in South India' (1987 <https://tamilnation.org/caste/hart.pdf>) கட்டுரை நன்னன் பற்றிய நேரடியான ஆய்வில் ஈடுபடவில்லை. ஆனால் 'நன்னனின் மாமரம் காவல்மரம்' என்று சொல்லியுள்ளமை சர்ச்சைக்கு உரியதாகிறது.

உரையாசிரியர் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் தன் உரையில் நன்னன் பற்றி நேரடியாகக் கூறும்போது; அவனிடம் வேந்தர்க்கு உரிய நாற்படை இருந்தது என்கிறார்.

## நன்னன் காலத்துத் தமிழகத்து நடப்பு:

வேளிர் நெல் வேளாண்மையில் ஈடுபட்டனர். ஒரெயில் மன்னராய் மக்களை ஆண்டனர். வேந்தர் தம் தலைமையை நிலைநாட்ட நினைத்தபோது; யானைப் படையை வேளிரின் வயலில் நிறுத்தி நாசமாக்கினர்; மகட்கொடை நேர்ந்தனர்; மறுத்த வேளிரின் நாடு முழுவதையும் நெருப்புக்கு இரையாக்கினர். வேளிரிடமும், வேந்தரிடமும் திணைமாந்தர் வீரர்களாய்ப் பணியாற்றினர்.

சேரன் இமயவரம்பன் வயல்வெளிகளை அழித்தான். (ஒளவை சு.துரைசாமிப்பிள்ளை, 2007, பதிற்: பா.13, ப.1622) ஆற்றின் சங்கமத் துறை அருகில் தென்னந்தோப்பு செழித்திருக்க; அருகே மகளிர் துணங்கையாடும் அகன்ற வெளியில்; கீழே விழுந்த ஆம்பல் மலர்களைப் பசுக்கள் மேய; வரப்புகளில் மிகுதியாக வளர்ந்திருந்த நெய்தல் பூக்கள்; கரும்பு விளைச்சலை எருமைகள் மேயாதபடி காத்து நின்றன. காளைகள் தம்மிடையே போரிட்டதால் பதமான வயலில்; உழவேண்டிய தேவையின்றியே உழவர் விதைத்தனர். இத்தகு வளமிகுந்த நாடு தீக்கிரை ஆக்கப்பட்டதால்; நெருஞ்சி முட்கள் மிகுந்து; கரிய உடைமரமும், முறுக்கிய தோற்றத்துடன் நச்சுத்தன்மை பொருந்திய நெற்றுக்களுடைய மரங்களும் உடையதாய்க்; கண்டோர் அஞ்சும்படி; வாழ்வதற்கு அரிய நிலையை அடைந்தது.

சோழன் கரிகாலன் விளைச்சல் நிலத்தை அழிப்பதைப் பட்டினப் பாலை கூறும் (பத்துப்பாட்டு, 2008, ப.8190, அடி.240270). வயல்களையும், கரும்புத் தோட்டத்தையும் அடுத்து முதலைகள் இருந்த ஆழமான நீர்நிலைகளில் குவளையும் நெய்தலும் மிகுதியாகப் பூத்துக் குலுங்கிய நிலை மாறிக்; கரிகாலன் வெற்றி பெற்று அழித்தபின் வயலும் நீர்நிலையும் வேறுபாடு கூற இயலாதபடி; அறுகும் கோரையும் அடர்த்தியாக வளர்ந்திருக்க; அங்கு மான்கூட்டம் விளையாடியது.

பாண்டியன் நெடுஞ்செழியன் வேளிரையும், அவரது வயலையும் அழித்தமை மதுரைக்காஞ்சியில் பெருமையாகப் பேசப்படுகிறது (அடி: 126, 154156, 169 176). நாடாகவிருந்த இடம் காடாகும்படி எரியூட்டினான். குறை இல்லாத நீர்வளம் மாறி; யானை மறையும் அளவு கோரை உயர்ந்து வளர மருதவளம் பாழானது. பழைய வயல்வெளி பன்றி மேயும் இடமானது. நெல் சேமித்து வைத்திருந்த குதிர் கரிந்து அதனுள் கூகை குடிபுகுந்தது.

கடுமான் கிள்ளி மகட்கொடை நேர்ந்தமை ஒரு சிதைந்த பாடலாக உள்ளது (ஔவை துரைசாமிப் பிள்ளை, 2007, புறநானூறு: பா.355, ப.310). வேந்தர்க்கு வேளிர் பெண் தர மறுத்தமையால் ஊருக்கு நிகழவிருக்கும் அழிவு பற்றிப் புறப் பாடல்கள் பேசுகின்றன (பா: 337, 338, 339, 341, 342, 345, 348, 351, 353).

## நன்னனின் இனமும் நாடும்

வேந்தருக்கு இணையான செல்வத்துடனும், செல்வாக்குடனும் ஆண்டான் வேள் நன்னன்

*"மான விறல்வேள்"* (மலை: அடி 164)

என்று பெருமையுடன் சுட்டப்படும் நன்னனின் நாடு கொண்கானம் என்ற நிலப்பகுதியில்;

*"பேரிசை நவிரம்"* (மலை: அடி 82)

எனப் பெயர் பெற்ற மலைப்பகுதி ஆகும். அதன் ஒரு பகுதி ஏழில்குன்றமாகும். இதனை;

*"கொண்கான நன்னன் நன்னாட்டு*

*ஏழிற் குன்றம்"*

(பின்னத்தூர் நாராயண சாமி ஐயர், 2007, நற்றிணை: பா.391, ப.481)

என்பதால் அறிகிறோம். மிகுந்த மழை பொழியும் அவனது நாட்டில் நெல் வேளாண்மை சிறந்திருந்தமை;

*"..............................................மயங்குதுளி*

*மாரி தலையுமவன் மல்லல் வெற்பே"* (மலை: 232233);

*"வெண்ணெல் அரிநர் தண்ணுமை"* (மலை: 471)

என்றெல்லாம் வருணிக்கப்படுகிறது. நீர்வளம் மிகுந்த காடுகளும் அவனுக்கு உரியவாக இருந்தன.

*"காணுநர் வயாஅங் கட்கின் சேயாறு"* (மலை: 476)

என்பதால்; அவனது நாட்டில் நீர்ச்சுழிகள் வேகத்துடன் ஒலி செய்து ஓடிய சேயாறு விளக்கம் பெறுகிறது.

## நன்னனின் செல்வமும் காவலும்

வேந்தரும் வியக்குமளவு செல்வம் மிகுந்தவன் நன்னன்.

*"பொன்படு கொண்கான நன்னன்"* (நற்றிணை: 391)

என்று பாலைபாடிய பெருங்கடுங்கோ எனும் சேரவேந்தனின் பாடல் சுட்டுவதால் அவனது மேன்மை நிலை புலனாகிறது. வேந்தனின் ஆடம்பரத்திற்கு அடையாளமாகிய யானை நன்னனிடமும் இருந்தது.

*"சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்"*

(வேங்கடசாமி நாட்டார், 2009, அகம் களிற்றி யானை நிரை: பா.15, ப.50)

எனும் அடைமொழி காண்க.

*"நன்னன் பாழியன்ன கடியுடை"* (அகம்:15)

எனும் உவமை மூலம் அவனது அரண்மனையின் பாதுகாப்பு பற்றித் தெரிகிறது. அவனது பாழி வேந்தரின் கோட்டை போல் முதலைகள் மிகுந்த ஆழ்ந்த கிடங்குடன் உயர்ந்த மதிலுடையது (மலை: 9093). அவனது அரண்மனை மலை மேல் இருந்ததால்; இயற்கையாக அமைந்த அகழி அவனது எயிலிற்குப் பெருமை சேர்த்தமை புலனாகிறது. இச்சிறப்பு காரணமாக; வேந்தர்க்குப் பயந்த வேளிர் தம் செல்வத்தை நன்னனின் பாழியில் ஒளித்து வைத்தனர் (மணிமிடை பவளம், 2007, அகம்: பா. 258, ப.325).

## நன்னனின் உணவும் பிறந்தநாள் கொண்டாட்டமும்:

*"முள்அரித்து இயற்றிய வெள்ளரி வெண்சோறு...*

*திண்டோள் நன்னர்க்கும் அயினி சான்ம்"* (மலை: அடி 465 468)

என அவனது உணவு விதந்து ஓதப்படுகிறது. முள்ளைக் கழித்து வெள்ளிய மீன்தசையோடு கலந்து ஆக்கின வெண்சோறு நன்னன் முதலிய மன்னரும் உண்ணத் தகுந்த மேன்மையான உணவு என்னும் கருத்தைப் பெறுவதால்;

வேந்தரை ஒப்ப அவன் ஆடம்பர வாழ்க்கை அமைந்து இருந்தமை புலப்படுகிறது.

மதுரைக் காஞ்சி நன்னனின் பிறந்தநாள் ஒரு பெருவிழாவாக; அவனிடம் பணி புரிந்த வீரர் வாழ்ந்த சேரியெங்கும் கொண்டாடப்பட்டதை ஆவணப்படுத்தி உள்ளது (அடி: 618619). பாண்டியன் புகழ் பாடும் போது கூட; ஆரவாரத்திற்கு உரிய உவமையாக நன்னனின் பிறந்தநாள் விழா கையாளப்படுவது நன்னனின் செல்வாக்கிற்கு ஏற்ற ஆதாரமாக அமைந்துள்ளது.

### நன்னனும் வேந்தரும்

வேந்தர் எழுவரை வென்று அவர்களது முடிப்பொன்னால் ஒரு ஆரம் செய்து தன் கழுத்தில் சூடியிருந்தான். இவ்வரலாறு;

*"...........................வந்துடை அருஞ்சமம்*

*கொன்று புறம்பெற்று.......................*

*எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்துப்*

*பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்"* (பதிற்: 40)

என்று பதியப் பெற்றுள்ளது. பகைவேந்தரைக் கொன்றும்; புறமுதுகிடச் செய்தும் அவரது தனிச்சிறப்பாகிய முடியைக் கவர்ந்து; அவ்வாறு கவர்ந்த ஏழு முடிகளில் இருந்த பொன்னால் கண்ணி செய்து அணிந்து கொண்ட அவனது செயல்; வீரத்தின் விளக்கம் மட்டும் அன்று; வேந்தர் மேல் அவனுக்கிருந்த பகைமையின் விளக்கமும் ஆகும். தன் பகைவர் தலைமேல் சூடி இருந்த அடையாளச் சின்னத்தைத் தனது மார்பின் அலங்காரப் பொருளாக்கிக் காட்டிப் பெருமை கொண்டான்.

*"விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்*

*வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்*

*கூந்தல் முரற்சியின்"* (நற்றிணை: 270)

என்பதால் வேந்தரிடத்து நன்னன் கொண்டிருந்த மிதமிஞ்சிய சினம் வெளிப்படுகிறது வேதநெறியைப் பின்பற்றிய வேந்தரின் பெண்டிர் தம் கணவரை இழப்பின் கூந்தலைக் களைவது நடைமுறையில் இருந்த வழக்கம் தான் எனினும்; நன்னன் அக்கூந்தலைக் கயிறாகத் திரித்துப் பயன்கொண்டமை அவனது வெறுப்பின் மிகுதியைக் காட்டுகிறது.

### நன்னனும் பழையனும்

மோகூரை ஆண்ட பழையனும் அவன் தலைமையை ஏற்றுக் கொண்ட கோசரும் அவனது எதிரிகளின் பட்டியலில் இருந்தனர். பழையன் புதிதாகத் தமிழகத்துள் நுழைய இருந்த மோரியரை கோசரின் துணையோடு தடுத்து விரட்டினான். பாண்டியன் அவர்களோடு நல்லுறவு கொண்டான்.

*"பெரும்பெயர் மாறன் தலைவனாகக்*

*கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்*

*இயல்நெறி மரபினின் வாய்மொழி கேட்ப"* (மதுரைக்காஞ்சி: 772774)

பாண்டியன் நெடுஞ்செழியன் ஆள்வானாக என்ற மாங்குடி மருதனாரின் வாழ்த்தையும்;

*"..............................புனைதேர்க் கோசர்ஞ்ஞ்..*

*தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்*

*பணியாமையிற் பகைதலை வந்த*

*மாகெழு தானை வம்ப மோரியர்"* (அகம்: 251)

எனும் பகுதியையும் ஒருங்கு நோக்கும்போது மோகூரைத் தலைநகராகக் கொண்ட பழையன் மாறன், கோசர், பாண்டியன் மூவருக்கும் இடையில் இருந்த நெருக்கம் புலப்படும். ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்னும் ஐந்து தலைவர்களோடு சேர்ந்து பழையனை நன்னன் அழித்தான்.

*"நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி*

*துன்னரும் கடுந்திறற் கங்கன் கட்டி*

*பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்கு*

*அன்றவர் குழீஇயஞ்ஞ்ஞ்பழையன் பட்டென"* (அகம்: 44)

எனும் பாடற்பகுதி நோக்குக. நன்னன் பழையனை அழித்ததால்

சோழனும் சினம்கொண்டான். பழிவாங்க எண்ணி அவன் தனக்கு அருகில் இருந்த கணையனை வென்றடிப்படுத்தினான்.

*"கண்டது நோனான் ஆகித் திண்டேர்க்*

*கணையன் அகப்படக் கழுமலம் தந்த*

*பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி"* (அகம்: 44)

என்று அப்பாடல் தொடர்வது காண்க.

## நன்னனின் மாமரம்

கோசர் குலப்பெண் ஒருத்தி ஆற்றில் அடித்து வந்த; நன்னனுக்குரிய மாமரத்தின் காயை உண்டமைக்காக; நன்னன் அவளுக்கு மரணதண்டனை விதித்தான். கோசர் அவளை விடுவிக்க எண்பத்தொரு யானைகளும், அவளது எடையை நிகர்க்கும் பொற்பாவையும் தண்டமாகத் தரத் தயாராக இருந்தனர். ஆயினும் நன்னன் அதை ஏற்காமல் அவளைக் கொன்றான். இந்நிகழ்ச்சி அவன் 'பெண்கொலை புரிந்தவன்' என்னும் அவப்பெயரைத் தேடித் தந்தது.

*"..........................................................அரிவை*

*புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு*

*ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள்நிறை*

*பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்*

*பெண்கொலை புரிந்த நன்னன்"* (குறுந்தொகை: பா. 292, ப.526)

என்று பரணர் வசை பாடுகிறார். நன்னனின் காவல்மரம் வாகை என்று நேரடியான நூற்செய்திகள் இருப்பதால் இம்மாமரம் அவனது தோப்பில் நின்றது எனல் பொருந்தும். ஆனாலும் அவன் இரக்கமே இன்றிக் கடுமையாக நடந்துகொண்ட காரணம் வேந்தர் குலத்துடன் கொண்ட முரண்பாடே ஆகும். பழையனைத் தலைவனாக ஏற்றுக்கொண்டு பாண்டியனுடன் அணுக்கமாக இருந்த கோசர் அவனது தலைநகர் மதுரையில் நியமம் ஒன்றைக் கட்டி அங்கு வேதநெறிப்படி வேள்வியும் நடத்தும் (அகம்: 90- 220) அளவிற்கு வேந்தருடன் நெருக்கமானவர் ஆதலால்; வேளாண்மை செய்த நன்னன் கோசருடனும் பகை கொண்டான். அப்பெண்ணுக்குக் கொலைத் தண்டனை விதித்து; அதை நிறைவேற்றிச் சினத்தை ஆற்றிக் கொண்டான் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே. பாண்டியனின் ஆதரவு இருந்தும் கோசர் அம்மரத்தை வஞ்சகமாகவே அழித்தனர்.

*"...............................................நன்னன்*

*நறுமா கொன்று நாட்டிற் போக்கிய*

*ஒன்றுமொழிக் கோசர் போல*

*வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே"* (குறுந்தொகை: 73)

என்பதால் நன்னனின் வலிமையும், அவன்பால் கோசர்க்கு இருந்த அச்சமும் புலப்படுகிறது. கோசரின் எதிர்வினை அம்மாமரம் காவல்மரம் இல்லை என்று காட்டுகின்றது. காவல் மரமெனின் நன்னனுக்கும் கோசருக்கும் இடையில் போர் மூண்டு நிலைமை மாறுபட்டிருக்கும்.

## நன்னனின் வீழ்ச்சி

வேந்தருடன் பகைமை கொண்ட நன்னனைக் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்; இளஞ்சேரலிரும்பொறை துணையுடன் பொருது அட்டான் (பதிற்: 40)

*"சுடர்வீ வாகை நன்னற் றேய்த்து"* (பதிற்: 88)

எனச் சேரர் வெற்றி பேசப்படுகிறது. இருவரும் சேரவேந்தர் தாம் எனினும்; வேள் ஆவிக்கோமான் பதுமனின் மகள்கள் வழித் தோன்றிய பேரன்கள் என்பது பதிற்றுப்பத்தின் பதிகங்கள் தரும் செய்தியாகும் (நான்காம் பத்து - ஒன்பதாம் பத்துப் பதிகங்கள்). அதோடு வெளியன் வேளுக்கு களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் கொள்ளுப்பேரன் ஆவான் (இரண்டாம் பத்து - நான்காம் பத்துப் பதிகங்கள்). நன்னனின் ஏழுமுடி கெழீஇய ஆரம் அப்போது சேரர் குல முதல்வனாக இருந்த இமயவரம்பனுக்கு உரியதாக இருந்து (பதிற்: 14) பின்னர்; உடன் பிறந்த தம்பி

கடல்பிறக்கோட்டிய குட்டுவனுக்கு உரியது ஆயிற்று எனல் பொருந்தும் (பதிற்: 44). சேரவேந்தர் இமயத்தில் விற்பொறித்த போதும் (பதிற்: 11- 43), கடற்கடம்பரை அடக்கிய போதும் (பதிற்:11, 17, 20, 41, 45, 46, 48), கொங்கு நாட்டை வென்ற போதும் (பதிற்: 22 - அகம்: 169, 233) சேர்ந்தே போர் செய்துள்ளனர். நன்னனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவன் மரபில் வந்தோர் விச்சி எனும் மலையில் செல்வாக்கு இழந்து ஆண்டமை பற்றிப் புறநானூறு 151 பேசுகிறது.

### மாற்றுக் கருத்துகளும் விளக்கமும்

கா.அப்பாத்துரையார் வேந்தரை மையப்படுத்தியே போர்களை நோக்குவதால் எழுமுடி ஆரம் அணிந்தமையைப் புனைந்துரை என்று முடிவு செய்யவும் துணிகிறார் (தென்னாட்டுப் போர்க் களங்கள், 2014, ப.96112). ஆனால் அந்த ஆரம் எப்படி யார்யாருக்கு உரியதானது என்பது 'நன்னனும் வேந்தரும்' என்னும் பகுதியிலும்; 'நன்னனின் வீழ்ச்சி' பகுதியிலும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

முனைவர் ஜார்ஜ் லி.ஹார்ட் 'நன்னனின் காவல்மரம் மாமரம்' என்று குறிப்பிடும் (Early Evidence for Caste in South India, 1987, p.17) கருத்து ஏற்றுக்கொள்ள இயலாதது. அவனது காவல்மரம் வாகை ஆகும்.

"...................................நன்னன்

சுடர்வீ வாகைக் கடிமுதல்" (பதிற்: 40)

என்று பாடப் பெற்றிருப்பதால் அறிகிறோம். மாமரம் காவல் மரம் எனின் நன்னனுக்கும் கோசருக்கும் இடையே போர் மூண்டிருக்கும்.

நன்னனிடம் நாற்படை இருந்ததென்ற கூற்றுக்கு பொ.வே.சோம சுந்தரனார் ஆதாரம் கூறவுமில்லை; ஏதும் கிடைக்கவுமில்லை (பத்துப்பாட்டு தொகுதி 11, 2008, மலைபடுகடாம் ப.9).

### முடிவுரை

கொண்கானத்து நவிர மலையை ஆண்ட நன்னன் நான்காவது வருணமாகிய வேளாளர் மரபினன் ஆவான். வேந்தர்க்கு நிகரான செல்வமும் உணவும் ஆடம்பரமும்; மலைக்காட்டிற்கு நடுவில் இயற்கையாக அமைந்த அகழியுடன் கூடிய காவலும் கொண்டு வாழ்ந்தான். சேயாற்றின் கரையில் நெல்வேளாண்மை செய்தான். வேளிரின் விளைச்சல் நிலங்களை வேந்தர் எரியூட்டிப் பாழ்படுத்தியதால் நன்னனுக்கு வேந்தர் மேல் வெறுப்பு வளர்ந்தது. வேந்தருடன் நெருக்கம் கொண்ட கோசரையும் அவன் பகையுடன் நோக்கினான். இதன் விளைவாகத் தன் மாமரத்தின் காயை உண்ட கோசர் குலப் பெண்ணைக் கொலை செய்யத் துணிந்தான். வேந்தர் எழுவரை வென்று அவர்களது முடிப்பொன்னால் ஒரு ஆரம் செய்து தன் கழுத்தில் சூடியிருந்தான். மோரியர் தமிழகத்தில் நுழையாமல் தடுத்த பழையனை; ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை எனும் ஐவருடன் சேர்ந்து அழித்தான். நன்னனது காவல்மரம் வாகை. சேர இளவல்கள் நன்னனைக் கொன்றனர். அவனது ஆரம் சேரர் குடித் தலைவனாகிய இமயவரம்பனுக்கு உரியதாக இருந்து பின்னர்; அவனது இளைய மகன் செங்குட்டுவனுக்கு உரியதாயிற்று.

நன்னனை மையப்படுத்தி; அவன் பிற வேளிரோடும் திணை மாந்தரோடும் கொண்ட அரசியல் தொடர்பை ஆராய்வது அடுத்த கட்ட நடவடிக்கையாக அமையும் போது தமிழகத்துச் சமூகநிலை இன்னும் தெளிவுறும்.

### சுருக்கக் குறியீட்டு விளக்கம்

1) அகம். அகநானூறு

2) பதிற். பதிற்றுப்பத்து;

3) மலை. மலைபடுகடாம்

**Referances:**

Appaaththuraiyaar, kaa. (2014). *Thennaattup Porkkalangal*. Chennai: Poompukaar Pathippakam.

Auvai Duraisaamippillaim, Su. (2007). *Pathirruppaththu*. Chennai: Kazhaka Veliyeedu.

Auvai Duraisaamippillaim, Su. (2007). *Puranaanooru Thokuthi ii*. Chennai: Kazhaka Veliyeedu.

Balasubramanyan, Ku., Ve. (2004). *Narrinai*. Madurai: New Century Book House.

George L. Hart. (1987). "*Early Evidence for Caste in South India*" https://tamilnation.org/caste/hart.pdf

*Paththuppaattu Thokuthi ii* (2008). Chennai: Kazhaka Veliyeedu.

Somasuntharanaar Po., Ve. (2007). *Kurunthokai*. Chennai: Kazhaka Veliyeedu.

Vengadasami Naattaar Na., Mu. & Karanthaik Kaviyarasu, Vengataasalam pillai, Raa. (2007). *Akanaanooru Maninidai Pavalam*. Chennai: Kazhaka Veliyeedu.

Vengadasami Naattaar Na., Mu. & Karanthaik Kaviyarasu, Vengataasalam pillai, Raa. (2009). *Akanaanooru Kalirriyaanai Nirai*. Chennai: Kazhaka Veliyeedu

# பெரிய புராணம் உணர்த்தும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டில் திருமந்திரம் காட்டும் சான்றுகள்

# The Importants of Guru, Linga, Sangama Worship in Periya Puranam Evidences Derived From Tirumantiram

திலகவதி இராஜகோபால் / Thilakavathy Rajagopal[1]
சரவணன் முத்துராமலிங்கம் / Saravanan Muthuramalingam[2]

Date of submission: 2020-10-23
Date of acceptance: 2020-11-18
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
Thilakavathy Rajagopal
Email: barathi_802000@yahoo.co.uk

***Abstract***

*Periyapuranam* (Great story of narrative) is a compilation of 63 *Saiva* saints' history by the divine Sekkizhar in the reign of Kulothunga Chola II of the 12th century. This research mainly discussed the evidence of guru, linga, sangama worship which were practised by 63 *Saiva* saints normally known as *Nayanmar* in South India during 6th-7th century based on the sacred book *Tirumantiram* (Holy Incantation). The objective of the research is to establish the three types of worship in *Periyapuranam* based on *Tirumantiram*. *Saiva* saints attained enlightenment in three different worship which are identified as *guru*, *linga* and *sangama* worship. *Guru* means master or enlightened soul who guides the disciples in spiritual path. Around 12 *nayanmars* were following this path in order to achieve liberation in life. *Linga* worship practised by 30 of them. *Linga* is a form of representation or symbol of Lord Siva in Saiva sects. *Sangamam* means the holy people of Lord Siva worship and the number of *nayanmar* who are involved are 19. *Guru*, *linga* and *sangama* worship was historically recorded by the divine poet Sekkizhar but the significance of worship was given by one of the earlier *nayanmar* known as Tirumular in his work *Tirumantiram*. *Tirumantiram* is a complete work on Saiva canon discovered by Tiruyanasambhandar (also a *nayanmar* at the age of three) in 5th-6th century on his visit to Komuthisvarar temple Thiruvavaduthurai. It is believed that Tirumular wrote his holy book *Tirumantiram* and kept it under the temple *pali peedam* (sacred place) before he went to *tapas*. The three types of worship which were conducted by the 63 *nayanmar* were supported by Tirumular in *Tirumantiram* even though the timeline between *Periyapuranam* and *Tirumantiram* had a huge gap. This study was clearly focused on the importance of *guru*, *linga*, and *sangama* worship as a heart core of *Periyapuranam* based on holy text *Tirumantiram* by saint Tirumular in a poetical way.

**Key Words:** Periyapuranam, Tirumantiram, Guru, Linga, Sangama.

## அறிமுகம்

சமயம், மதம், நம்பிக்கை, வழிபாடு எனப் பல வகைகளாக மனிதர்களின் கடவுள் கொள்கைகளை அடையாளம் காணலாம். எந்தக் கொள்கைகளாக இருந்தாலும் அவை வலியுருத்துவது அன்பு மட்டுமே. அன்பின் மூலமே இறைவனை உணர முடியும். அன்பிற்கு ஆதாரமாய் விளங்கும் பக்தி மார்க்கத்தைத் தங்களுக்கும் இறைவனுக்கும் இடையே ஊடகமாக அமைத்து வாழ்ந்த அடியார்களின் வழிபாட்டு முறை நாம் கருத வேண்டிய ஒன்றாகும். இறைவனை

[1] The author is a Ph.D candidate at The Department of Indian Studies, University of Malaya. barathi_802000@yahoo.co.uk

[2] The author is a chairman of Malaysia Hindu Sangam, Sungai Buluh branch & Saiva Siddhantha speaker. Saravanan200271@gmail.com

அடைந்த பாதையைக் காட்டிய அடியார்கள் திருவடிகளை நாம் பணிந்து வழிபட்டால் முக்தி என்பது தின்னமே.

குரு, லிங்க, சங்கம வழிபாடு என்பது அடியார் பெருமக்கள் நமக்கு காட்டிய எளிய வழிபாடாகும். பெரிய புராணத்தில் காணப்படும் அடியார்களின் வழிபாடுகள் இதனையே பகர்கின்றன.

**அட்டவணை 1.0**

**நாயன்மார்களின் வழிபாட்டு முறை**

| **வழிபாடு முறை** | **நாயன்மார்கள் எண்ணிக்கை** |
|---|---|
| குரு | *12* |
| லிங்கம் | *30* |
| சங்கமம் | *19* |
| சுந்தரரின் தாயும் தந்தையும் | *2* |
| மொத்தம் | *63* |

அட்டவணை 1.0தில் உள்ளப்படி குரு வழிபாட்டை மேற்கொண்டவர்கள் மொத்தம் 12 நாயன்மார்கள், லிங்க மூர்த்தங்களை வழிப்பட்டவர்கள் 30 நாயன்மார்கள், இறுதியாக சங்கம வழிப்பாட்டைப் போற்றியவர்கள் 19 நாயன்மார்கள். சுந்தரரின் தாயையும் தந்தையையும் சுந்தரரைப் பெற்றமையினால் நாயன்மார் என்ற மகத்துவப் நிலையை அடைகின்றனர். நாயன்மார்கள் என்ற சொல் தலைவன் என்று பொருள் கொள்ளப்படுகிறது (கந்தன், 2016). சைவ உலகிற்குத் தலைவர்களாக விளங்குவதால் அடியார்களைத் தலைவர்கள் என்றழைக்கிறோம்.

நம் சமயத்தில் தெய்வங்களின் அவதார சரிதத்தை 18 புராணங்களின் வரிசைகளில் காணலாம். ஆனால் எந்தவொரு புராணத்திற்கும் 'பெரிய' அல்லது 'மஹா' என்ற அடைமொழி கிடையாது. இருப்பினும் அவதாரமற்ற அடியார்களின் வரலாற்றுக் கூறும் இப்புராணத்தைப் மட்டும் 'பெரிய' என்று அடை மொழியிட்டு பெரிய புராணம் என்றழைப்பது இந்நூலின் சிறப்பாகும். இவ்வுலகில் எது பெரியது என கேட்ட முருகப்பெருமானின் கேள்விக்கு ஔவையார் வழங்கிய பதிலைக் கவனித்தால் பெரியது எது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

*'பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்*

*பெரிது பெரிது புவனம் பெரிது*

*புவனமோ நான்முகன் படைப்பு*

*நான்முகன் கரியமால் உதிரத்தில் உதித்தோன்*

*கரிய மாலோ அலைகடல் துயின்றோன்*

*அலைகடல் குறுமுனி கலசத்தில் அடக்கம்*

*கலசமோ புவியிற் சிறுமண்*

*புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்*

*அரவோ உமையவள் ஒருசிறு மோதிரம்*

*உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்*

*இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்*

*தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'*

ஔவையார்: தனிப்பாடல்

என பெரியதிற்கு ஔவையார் விளக்கம் கொடுத்துள்ளார். அடியார் மனதில் ஒடுங்கி உள்ளான் இறைவன் ஆதலால் தொண்டர்தம் பெருமையைக் கூறுவதே பெரிது என்பதனால் சிவனடியார்களின் புராணங்களைக் கூறும் இந்நூல் 'பெரிய புராணம்' என வழங்கிடலானது. வடமொழியில் இந்நூலானது 'உபமன்யு பக்த விலாசம்', 'சிவபக்தவிலாசம்' என்ற பெயரில் வழங்கப்படுகிறது (நடராசன்.பி.ரா, 2016). புராணம் எனும் சொல் வடமொழியில் புரா + அபி + நவம் என பிரித்துப் பார்க்கப்படும். இதன் பொருள் பழையது ஆனால் என்றும் புதியது (அரவிந்தன், 2016). பழைய கதைகள் ஆனால் வருங்காலத்திற்கு வழிகோலாக அமைகிறது. ஆகவே அடியார்களின் பெருமை என்பது 'பெரிய' எனவும் பழங்காலத்தில் நடந்ததனால் 'புராணம்' எனவும் பெயர் பெற்றது.

## நோக்கம்

இவ்வாய்வின் நோக்கம் வரலாற்று பெட்டகமாக விளங்கும் பெரிய புராணத்தில் காணப்படும் குரு, லிங்க, சங்கமம் எனும் மூன்று வகை வழிபாட்டு முறைகளைப் பன்னிரு திருமுறைகளில் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் விளங்கும் 10 ஆம் திருமுறையான திருமந்திரத்தின் பாடல்கள் மூலம் நிறுவுவதாகும். இந்நூலில் இடம்பெறும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி திருமூலர் தமது நூலான 10ம் திருமுறையான திருமந்திரத்தில் நிறைய அருளியுள்ளார். அதனை சான்றுகளுடன் விளக்கப்படுத்தி அடியார்கள் வழிபட்ட முறையிலுள்ள சூட்சமங்களை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வுநெறி

இந்த ஆய்வு பண்புசார் நெறிமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது நூலாய்வின் அணுகுமுறை வழி விளக்கப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. பெரிய புராணத்தில் காணப்படும் வழிபாட்டு முறையின் கருத்தியல் திருமந்திரத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை ஆராய்வதே முதன்மை நோக்கம். நூலாய்வில் ஆய்வுக்குத் தேவையான நூல்கள், கட்டுரைகள், அகப்பக்கங்கள் விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் முக்கிய தரவுகள் அனைத்தும் புலவர் பி.ரா. நடராசனின், சிவ.திருச்சிற்றம்பலத்தின் பெரிய புராணம் விளக்கவுரையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

## குரு வழிபாடு செய்த நாயன்மார்கள்

குரு எனும் சொல் தமிழிலிருந்து வழங்கிய சொல் அல்ல. குரு எனும் அடிப்படையில் சமஸ்கிருதத்திலிருந்து வந்தது. பெரும்பாலான சமஸ்கிருத மந்திரங்களில் குரு எனும் சொல்லைக் காணலாம். ‘கு’ என்றால் விளக்குபவர் ‘ரு’ என்றால் இருள் என பொருள்படும். ஆக குருவானவர் மனிதர்களிடம் சூழ்ந்துள்ள அறியாமை இருளை நீக்குபவர் ஆவர். அறிவித்தால் மட்டுமே பசு அறிந்து கொள்கிறது. பதியோ அனைத்தும் அறிந்த ஒன்று. ஆகவே நம் அறியாமையைப் போக்கி, அறிவிக்கும் தகுதியை உடைய குரு இந்நிலையில் இறைவன் ஆகிறான்(ஞானசம்பந்தம்,1972). ஏன் குரு நிலைக்கு அப்படி ஒரு சிறப்பு வழங்கப்பட்டுள்ளது என ஆராய்ந்து பார்த்தோமானால்; குருவானவர்கள், அடியார் பெருமக்கள் போன்றவர்கள் எந்நேரமும் தன்னை இறைசிந்தையிலே ஈடுப்படுத்தி கொள்வதால் நினைத்த மாத்திரத்தில் இறைவனோடு ஒன்றிக்க கடவர். திருமந்திர முதல் தந்திரத்தில் உபதேச பகுதியில் திருமூலர், இப்பூவுலகில் வாழும் மனிதர்களை இறைவனானவன் தன் கருணைமிகுதியால் தடுத்தாட்கொள்ள குருவடிவில் மனித உடம்பெடுத்துப், பிறவிப்பிணி நீக்க உபாயமளிக்கிறார் என பின்வரும் திருமந்திர உபதேசம் மொழிகிறது.

*“விண்ணின்று இழிந்து வினைக்குஈடாய் மெய்கொண்டு*

*தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து*

*உண்நின்று உருக்கிஒர் ஒப்பிலா ஆனந்தக்*

*கண்நின்று காட்டிக் களிம்புஅறுத் தானே”* (திருமந்திரம்: 113)

பரம்பொருள் விண்ணுலகை விட்டிறங்கி, மண்ணுலகை வந்தடைந்து, வினைக்கு இடமான மனித உடம்பெடுத்துத் தண்மை பொருந்திய திருவடிகளை ஆன்மாக்களுக்குப் பாதுகாவலாக வைத்து உள்ளத்துள்ளே தன் திருவருள் புகச் செய்து கல்மனதைக் கரைத்து, அருள் ஒளியால் நெகிழச் செய்து, ஒப்புவமை கூற இயலாத பேரானந்தப் பெருவெள்ளம் பெருக்கெடுத்தோட, கண்கள் அருள் ஒளி கண்டு களிக்கச் செய்து, மன மயக்கங்கள் என்னும் பாசத் தளைகளை எல்லாம் அறுத்தெறிந்தான்(மாணிக்கவாசகன். ஞா, 2016). ஆதியோடு கலந்த இவர்கள் பூசிக்கத்தக்கவர்கள் என்று திருமூலரே திருமந்திரத்தில் அருளிச்செய்துள்ளார். குரு நிலை கண்டவர்கள் நம்மை போன்ற மானுடனே என பூசிக்காதவர்களைப் புல்லரிவாளர் என திருமூலர் நகைக்கின்றார்.

*சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்து*

*அத்தனை நல்கருள காணா அதிமூடர்*

*பொய்த்தகு கண்ணான் நமரென்பர் புண்ணியர்*

*அத்தன் இவனென் நடிபணி வாரே. (திருமந்திரம்: 9)*

என குரு வடிவத்தைப் போற்றி இறைவனுக்குச் சமமாக காட்டப்பட்டுள்ளது.

## குரு வழிபாடு செய்த நாயன்மார்கள்

அடியார்கள் வாழ்க்கையில் கடைபிடித்த பக்தி மார்க்கத்தில் குரு வழிபாடும் ஒன்று. குருவைச் சரணடைந்து இறைகதியை அடைந்தவர்கள் மொத்தம் 12 பேர். அவர்களின் விபரம் பின்வருமாறு.

**அட்டவனை 1.0 குருவழிபாடு செய்த நாயன்மார்கள்.**

| எண் | நாயன்மார் | ஊர் | முக்தி நட்சத்திரம் | தொண்டு | குரு |
|---|---|---|---|---|---|
| 1 | திருநாவுக்கரசர் | திருவாமூர் | சித்திரை சதயம் | உழவாரப்பணி | திலகவதியார் |
| 2 | திருமூலர் | சாத்தனூர் | ஐப்பசி அசுபதி | திருமந்திரம் இயற்றியவர் | நந்தியபெருமான் |
| 3 | நின்றசீர் நெடுமாறர் | மதுரை | ஐப்பசி பரணி | சைவம் வளர்த்தவர் | திருஞானசம்பந்தர் |
| 4 | மங்கையற்கரசியார் | மதுரை | சித்திரை ரோகினி | சைவம் தழைக்கச் செய்தவர் | திருஞானசம்பந்தர் |
| 5 | குலச்சிறையார் | களந்தை சோழநாடு | ஆவணி அனுஷம் | சிவனடியார்களை வணங்குதல் | சிவனடியார்கள் |
| 6 | திருநீலகண்ட யாழ்ப்பாணர் | திருஎருக்கத்தம் புலியூர் | வைகாசி மூலம் | யாழ் வாசித்தவர் | திருஞானசம்பந்தர் |
| 7 | பெருமிழலைக் குறும்பர் | பெருமிழலைக் குறும்பர் | ஆடி சித்திரை | யோகம் | சுந்தரர் |
| 8 | கணநாதர் | சீர்காழி | பங்குனி திருவாதிரை | நந்தவனம் அமைத்து மாலை தொடுத்தவர் | திருஞானசம்பந்தர் |
| 9 | அப்பூதியடிகள் | திங்களூர் | தை சதயம் | அறச்செயள்கள் | திருநாவுக்கரசர் |
| 10 | சோமாசிமாறர் | திருஅம்பர் | வைகாசி ஆயில்யம் | திருவைந்தெழுத்து ஓதுவது | சுந்தரர் |
| 11 | சுந்தரமூர்த்தி சுவாமிகள் | திருநாவலூர் | ஆடி சுவாதி | சிவபெருமானுக்குத் தோழன். 7ஆம் திருமுறை இயற்றினார். | சிவமே குருவாக அமைந்தவர் |
| 12 | திருஞான சம்பந்தர் | சீர்காழி | வைகாசி மூலம் | 1, 2, 3 ஆம் திருமுறை வழங்கியவர். சமணரை வாதில் வென்று சைவத்தை நிலைநிறுத்தினார் | சிவமே குருவாக அமைந்தவர் |

கொடிய சூலை நோய் அருளி இறைவன் திருநாவுக்கரசரை ஆட்கொண்டு, இறுதியில் தன் தமக்கையாரின் உதவியை நாடி குணமடைந்தார். சைவத் திருமுறைகளில் 4, 5, 6ஆம் திருமுறைகளை வழங்கியர் திருநாவுக்கரசர் என்று செல்லமாக

அழைக்கப்படும் அப்பர் சுவாமிகள் ஆவார். திலகவதியாரையே தன் குருவாக ஏற்று தன் தமக்கை ஆற்றிய சிவதொண்டான உழவாரப்பணியைச் சிவாலயங்களில் மேற்கொண்டார். குருவாக வந்து அப்பர் சுவாமிகளின் அஞ்ஞான இருளைப் போக்கி, அவரை சைவ உலகிற்கு மீட்டு தந்த திலகவதியார் தொண்டு அளப்பரியது ஆகும்.

சுந்தரநாதர் எனும் இயற்பெயர் கொண்டு விளங்கிய திருமூலர் நந்தியபெருமானைக் குருவாக வணங்கி சைவ ஆகமங்களைத் தமிழில் திருமந்திரம் என ஒன்பது தந்திரங்களாக தொகுத்து வழங்கினார். நந்திய பெருமானிடம் சீடனாக தான் இருந்ததையும் அவரிடமிருந்து ஆகமங்களைக் கற்றதாகவும் திருமூலர் தம் பாடலில் குறிப்பிடுகிறார். குரு பாரம்பரியத்திற்குத் தனி பாடல்கள் நிறையவே தமது நூலில் வழங்கி உள்ளார். இறைவனை அடைய சிறந்த வழி சன்மார்க்கம் ஒன்றே என அருதியிட்டு திருமூலர் கூறுகிறார். இதனையே திருமந்திரத்தில் திருமூலர்,

*“தெரிசிக்கப் பூசிக்க சிந்தனை செய்யப்*

*பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்*

*குருபக்தி செய்யும் குவலயந் தோர்க்குத்*

*தருமுத்திச் சார்பூட்டு.. சன்மார்க்கந்தானே”*

*(திருமந்திரம்: 1479)*

எல்லாம் வல்ல பரம் பொருளை குருவை முன்னிட்டுக் கொண்டே வழிபடுதல் முக்திக்கு வழி என திருமூலர் பகர்கின்றார். குருவைப் பார்த்து ஆசி பெறுவதும், அவரை பூஜிக்கவும், அவரின் அருள் வார்த்தைகளைச் சிந்தித்து திளைத்திருக்கவும், திருவடிகளை வணங்கி பக்தி செலுத்தவும் சன்மார்க்கம் சரியான வழி. இதனை குருநெறி, குரு பக்தி என பல திருமூலரின் பாடல்களில் பார்க்க முடிகிறது.

பெரிய புராணத்திலும் தவ முதல்வரான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், போன்றோர்களைக் குரு நிலையில் நிறுத்தி பல நாயன்மார்கள் பூசை செய்திருப்பதைக் காணலாம். குருவழிபாடு ஞானம் அடைய சிறந்த வழி என கருதப்படுவதற்குப் பல காரணம் உண்டு. அறிவித்தாலொலிய அறியா பசுவிற்குப் பதியாகி அறிவிக்கும் கர்மத்தைப் புரிபவன் இறைவன். ஞானியரோ அஞ்ஞானத்தைப் போக்குபவர். மனதில் உள்ள மாசுக்களை அகற்றுபவர். அவ்வாறு இறைவனுடைய அருளள் தொழிலைப் புரியும் குரு மெய்ஞானத்தைப் போதித்து இவ்விடத்தில் இறைவனாக கருதப்படுகிறார்.

பிள்ளை பாதி புராணம் பாதி என்று போற்றப்படும் திருஞானசம்பந்தரைக் குருவாக ஏற்று வாழ்ந்தவர்கள் பலர். அவர்களில் திருநீலகண்டர் யாழ்ப்பாணர், கணநாதர், நின்றசீர் நெடுமாறர், மங்கையக்கரசியார் அடங்குவர். குரு நிலையில் உள்ளவர்கள் தம்மை நம்பி வந்த சீடர்களைக் கைவிடமாட்டார்கள் என்பதற்கு திருஞானசம்பந்தர் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள் சிறந்த எடுத்துக்காட்டு. ஆளுடையப் பிள்ளையார் தமது திருமணத்தின்போது ‘கல்லூர்ப் பெருமணம்’ எனும் பதிகத்தை மண்டபத்தில் உள்ள அனைவரும் மெஞ்ஞான முக்தி அடைந்து பிறவிப்பிணியைப் போக்கி அருள்க என்று இறைவனை நோக்கி பாடினார். உண்மையான குரு தம் சீடர்கள் பிறவி இல்லா பெரு வாழ்வு அடைவதற்கே வழிகோழாக இருப்பார்களேயன்றி மாயவித்தைகளைக் காட்டி மயக்குபவர்களாக இருக்க மாட்டார்கள். இதுவே உண்மையான குருவின் அடையாளங்களாகும்.

அருளாளரின் சிறப்பைக் கேட்டறிந்து சரணாகதி அடைந்த அடியார் பெருமக்களும் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். அதில் அப்பூதி அடிகள் போற்றதக்கவர். அப்பரின் சைவத் தொண்டின் மகிமையை அறிந்து அவர்பால் ஈர்ப்பு உண்டாகி கவரப்பட்டார். சிவத்தொண்டினை அப்பர் சுவாமிகள் பெயரில் நடத்திய பெருமைக்குரிய அடியவராவார். தம் மனைக்கு வந்திருப்பது திருநாவுக்கரசர் என்று அரியாமலே அடியார்களுக்குச் சிவத்தொண்டு செய்தவராவார். உருவத்திற்கு முக்கியத்துவம் வழங்காமால் அருளாளர்களின் சிவத்தொண்டிற்கு மதிப்பளித்து திருநாவுக்கரசரை தமது குருவாக மானசீக முறையில் வணங்கிய அப்பூதி அடிகள் போன்ற சீடர்கள்

காணப்பெறுவது அரிது. அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரைக் நேரில் காண இறைவன் திருவுள்ளம் கூடும்போது, சுற்றத்தார் அனைவரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் அடியாருக்குத் திருவடி அபிடேகம் செய்து அதனைத் சிரசில் தெளித்து, அருந்தி மகிழ்ந்தார். இந்நிகழ்வை சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில்,

*"ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்*

*வாசம்நிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்*

*தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்*

*நேசம்உற விண்ணப்பஞ் செயஅவரும் அதுநேர்ந்தார்" (பெரிய புராணம்: 1808)*

சிவனடியார்களைத் இறைவனாகவே கருதி திருவடி பூசை செய்து, ஆசமனம், தூபம், தீபம், அர்ச்சனை ஆகியவற்றைச் சாற்றி, திருவமுது அளித்துச் சேவை செய்வது வழக்கமான பண்பாக காணமுடிகிறது. குருநிலையில் உள்ள திருநாவுக்கரசரை தான் பூசிக்கும் சிவசொரூபமாகக் கருதி வழிபாடு செய்கிறார் அப்பூதி அடிகள். அவ்வாறு வழிபடும் குருபூசையானது சிவனுக்குக் செய்கிற பூசை என கருதப்படுகிறது. மேலும் ஞானிகளுக்குச் செய்கின்ற தர்மங்கள் இறைவனைச் சென்றடையும் என திருமூலர் திருமந்திரத்தில் 1857 ம் பாடலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்,

*"படமாடக் கோயில் பகவற்கு ஒன்றுஈயில்*

*நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா*

*நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயில்*

*படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே" (திருமந்திரம்: 1857)*

ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவனுக்குச் செய்யும் தொண்டுகளைவிட, நடமாடும் கோயில்களாக விளங்கும் அருளாளர்களுக்குத் தந்துதவுவது இறைவனையே சென்று சேறும் என பாடல் விளக்குகிறது. அருளாளர்களுக்குச் செய்யும் தொண்டு எப்படி கடவுளைச் சார்கிறது? அதற்கும் பதில் வைத்திருக்கிறார் திருமூலர். தவசீலர்களான அருளாளர் பெருமக்கள் தன் நலம் கருதாமல் சதா எந்நேரமும் இறைவனை எண்ணி ஒன்றித்து இருக்கையில், அவர்களுக்குச் செய்யும் சேவைகள் இறைவனை சென்றடைகிறது. நினைத்த மாத்திரத்தில், தவசிகள் நொடி பொழுதில் இறைவன் இவர்களுடைய மனதில் பொருந்தும் வரமுடையவர்களான இருப்பதனால் நாம் அருளாளர்களைக் இறைவனாக வழிபடுகிறோம். இதனையே திருமூலர்,

*"மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்துரை*

*ஆத்தனக்கு ஈந்த அரும்பொருள் ஆனது*

*மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ் குரவர்க்கும்*

*தீர்த்தமதாம் அது தேர்ந்து கொள்வீரே " (திருமந்திரம்: 1859)*

குருவையே இறை மூர்த்தமாக வழிபட்டு இறைகதியை அடைந்த நாயன்மார்கள் நம் பக்தி மார்க்கத்தில் நிறையவே உள்ளனர். குரு சேவையின் மகிமை இதன் மூலம் நமக்கு நன்கு அறியப்படுகிறது. குருவருள் இன்றி திருவருள் இல்லை என உரைக்கும் ஆன்றோர்களின் வாக்கு பொய்மை ஆகுமா.

## லிங்க வழிபாடு செய்த நாயன்மார்கள்

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வழிபாட்டு படிநெறிமுறைகளில் உருவம், அருவுருவம், அருவம் என மூன்று மூர்த்தங்களை இறை குறியீடாக நம் சமயத்தில் வழிவழியாக கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. உருவ வழிபாடு என்பது இறைவனைச் சிலையாக வடித்துப் பூசை செய்வது ஆகும். அருவுருவ வழிபாடு இறை குறியீடுகளை வைத்து பூசை செய்வதாகும். அருவ வழிபாடு இறைவனை யோகநிலையில் வழிபடுவது. அருவுருவமான லிங்கம் சதாசிவமூர்த்தியாகவும் ஜோதி வடிவமாகவும் கருதப்படுகிறது. ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும்ஜோதியாய் உருவெடுத்து லிங்கத்துள் ஒடுங்கினார் என்கிறது திருவண்ணாமலை புராணம்(தேவநாதர், 2008). சிவபெருமானை லிங்க மூர்த்தமாக வழிபட்ட நாயன்மார்கள் 30 பேர் ஆவர்.

## அட்டவனை 1.1 சிவலிங்க வழிபாடு செய்த நாயன்மார்கள்

| எண் | நாயன்மார் | ஊர் | முக்தி நட்சத்திரம் | தொண்டு |
|---|---|---|---|---|
| 1 | அதிபத்தநாயனார் | நாகை | ஆவணி ஆயில்யம் | பிடித்த முதல் மீனை சிவார்ப்பனம் செய்தல் |
| 2 | அரிவட்டாய நாயனார் | கணமங்கலம் | தை திருவாதிரை | அமுது அளித்தவர் |
| 3 | ஆனாய நாயனார் | திருமங்கலம் | கார்த்திகை அஸ்தம் | புல்லாங்குழலில் திருவைந்தெழுத்தை ஓயாது இசைத்தவர் |
| 4 | இசைஞானியார் | திருநாவலூர் | சித்திரை சித்திரை | சு.மூர்த்தி சுவாமிகளைத் திருமகனாகப் பெற்றார் |
| 5 | உருத்திரபசுபதி நாயனார் | திருத்தலையூர் | புரட்டாசி அசுபதி | நீரில் நின்று நமசிவாயத்தையும் ருத்ரம் ஜபம் செய்தவர். |
| 6 | ஏயர்க்கோன் கலிக்காம நாயனார் | பெருமங்கலம் | ஆனி ரேவதி | சுந்தரர் ஈசனைத்தூது அனுப்பியதை நொந்து கொள்கை மாறாது நின்றவர். |
| 7 | ஐயடிகள் காடவர் கோன் நாயனார் | காஞ்சிபுரம் | ஐப்பசி மூலம் | சிவத்தலங்கள் தோறும் வழிபட்டு பாடியருளியவர். |
| 8 | கண்ணப்ப நாயனார் | உடுப்பூர் | தை மிருகசீரீடம் | தம் கண்ணை இடந்து அப்பியவர். |
| 9 | கணம்புல்ல நாயனார் | இருக்குவேளூர் | கார்த்திகை கார்த்திகை | விளக்கேற்றும் பணி |
| 10 | கலிய நாயனார் | திருஒற்றியூர் | ஆடி கேட்டை | குருதியில் விளக்கேற்ற துணிந்தவர் |
| 11 | கழற்சிங்க நாயனார் | தொண்டை நாடு | வைகாசி பரணி | சிவபூசைக்குரிய பூவை நுகர்ந்த தன் மனைவியின் கையை துண்டித்தவர் |
| 12 | கழறிற்றறிவார் நாயனார் | கொடுங்கோளூர் | ஆடி சுவாதி | நடராச பெருமானின் சிலம்போசைக் கேட்டவர் |
| 13 | காரி நாயனார் | திருக்கடவூர் | மாசி பூராடம் | சிவாலயம் புதுபித்து அடியார் சேவை புரிதல் |
| 14 | குங்குலியக் கலய நாயனார் | திருக்கடவூர் | ஆவணி மூலம் | குங்குலியத் தொண்டு செய்தவர் |
| 15 | கூற்றுவ நாயனார் | களந்தை | ஆடி திருவாதிரை | திருவடியே திருமுடியாகச் சூட்டப்பெற்றவர் |
| 16 | கோச்செங்கட் சோழ நாயனார் | சோழநாடு | மாசி சதயம் | மாடக்கோயில் அமைத்தார், தில்லைவாழ் அந்தனர்களுக்கு மாளிகைகள் அமைத்தார் |
| 17 | கோட்புலி நாயனார் | நாட்டியத்தான் குடி | ஆடி கேட்டை | திருக்கோயில் திருவமுதுக்காக வைத்த நெல்லை சுற்றத்தார் உட்கொண்டதற்காக வாளால் வெட்டியவர் |
| 18 | சடைய நாயனார் | திருநாவலூர் | மார்கழி திருவாதிரை | சுன்தரமூர்த்தி சுவாமிகளை மகனாக பெற்றவர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | சண்டேசுவர நாயனார் | திருச்சேய்ஞலூர் | தை உத்திரம் | பசுக்களை மேய்த்து மணல் லிங்கத்திற்கு அபிஷேடம் செய்தவர். |
| 20 | சாக்கிய நாயனார் | திருசங்கமங்கை | மார்கழி பூராடம் | பௌத்த மதத்தில் இருந்தே சிவபூசை கல்லால் எறிந்து செய்தவர். |
| 21 | சிறப்புலி நாயனார் | திருஆக்கூர் | கார்த்திகை பூராடம் | வேதம் ஓதி வேள்வி செய்து சிவனடியார்களுக்கு அமுது அளித்தார் |
| 22 | செருத்துணை நாயனார் | தஞ்சாவூர் | ஆவணி பூசம் | கோயில் தொண்டு புரிந்தவர். சிவபூசை பூவை நுகர்ந்ததற்காக கழற்சிங்கரின் மனைவியாரின் மூக்கை அரிந்தவர். |
| 23 | தண்டியடிகள் | திருவாரூர் | பங்குனி சதயம் | பிறவிக்குருடராய் இருந்து கண் விளங்கப் பெற்றவர் |
| 24 | திருஞானசம்பந்தர் | சீர்காழி | வைகாசி மூலம் | திருப்பதிகம் பாடி அருளி சைவ சமயத்தை நிலைநிறுத்தியவர். 1,2,3 திருமுறைகள் வழங்கியவர் |
| 25 | திருநாவுக்கரசர் | திருவாமூர் | சித்திரை சதயம் | உழவாரப்பணி செய்தவர். 4,5,6, ஆம் திருமுறைகள் அருளியவர். |
| 26 | நந்தனார் | ஆதனூர் | புரட்டாசி உரோகிணி | திருப்புன்கூரில் திருக்குளம் அமைத்தவர். சிதம்பரம் நாளை போவேன் என உரைத்தவர். |
| 27 | திருநீலநக்க நாயனார் | சாத்தமங்கை | வைகாசி மூலம் | சிவலிங்கத்தின்மேல் விழுந்த சிலந்தியைத் தன் துனைவியார் வாயால் ஊத அதனை அபசாரம் என கருதியவர். |
| 28 | நமிநந்திஅடிகள் | ஏமப்பேறூர் | வைகாசி பூசம் | குளத்து நீரில் விளக்கு எரியச் செய்தவர். |
| 29 | புகழ்த்துணை நாயனார் | செருவிலிபுத்தூர் | ஆவணி ஆயில்யம் | சிவபூசை செய்ய ஈசன் படிக்காசு அருளப்பெற்றவர். |
| 30 | பூசலார் | திருநின்றவூர் | ஐப்பசி அனுஷம் | மனத்தில் சிவாலயம் எழுப்பி பல்லவ மன்னன் கட்டிய கோவிலின் குடமுழுக்கு நாளை தள்ளிவைக்கச் செய்தவர். |
| 31 | மூர்த்தி நாயனார் | மதுரை | ஆடி கார்த்திகை | ஆலவாய்க் கடவுளுக்குச் சந்தனம் அரைத்து கொடுத்தவர். |
| 32 | வாயிலார் நாயனார் | மயிலாப்பூர் | மார்கழி ரேவதி | மனத்தையே கோயிலாக்கிப் பூசை செய்தவர். |

*மூலம்: புலவர் பி.ரா. நடராசன், 2016.*

சதாசிவ மூர்த்தியாக விளங்கும் சிவலிங்க அருவுருவத்தைச் சிவமாகவே கருதி 30 நாயன்மார்களும் சிரத்தையுடன் வழிபட்டதால் இறைவனை அடைந்தார்கள். அவர்களின் பக்தியை வெளிபடுத்த ஈசன் திருவுள்ளம் கொண்டு தடுத்தாட்கொண்டது சைவம் கண்ட உண்மை (நடராசன், 2016) .

## சிவலிங்கத் தத்துவம்

சதாசிவலிங்கம் என்று குறித்து அழைக்கப்படும் சிவலிங்கம் பல தத்துவம் நிறைந்தது. சிவலிங்கத்தின் அமைப்பில் அனைத்து தெய்வங்களின் கூட்டு இணைந்திருக்கிறது.

*கீழ்க்காணும் படம்1.0 (சதாசிவலிங்கம்) அதனை தெளிவாக விளக்குகிறது.*




*மூலம்: திருமந்திரம், பாடல் 1731.*

*சிவபேதமான நவபேதங்கள் இதில் அடங்கி உள்ளது. சதாசிவத்தை வழிபடுவோர்கள் அனைத்து மூர்த்தங்களையும் வழிப்பட்டதாக கொள்ளப்படுகிறது. பரந்து விரிந்து கிடக்கின்ற சிவம் சக்தியோடு இணைந்து திருவருட்சக்தியாக அருவ நிலையில் செயல்படுகிறது. சேக்கிழாரில் கூற்றுப்படி உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாக இருக்கும் இறைவன், கருணையின் அடிப்படையில் அருவுருவ நிலையில் சதாசிவலிங்க மூர்த்தியாகவும், உருவ நிலையில் முறையே மகேசுவரன் மறைத்தல், உருத்திரன் துடைத்தல், திருமாள் காத்தல், நான்முகன் படைத்தல் என தம் சக்தியோடு சேர்ந்து தொழிலாற்றுகின்றார்கள். இதனையே திருமூலர் 1731 பாடலில்,*

*“வேதா நெடுமால் உருத்திரன் மேல் ஈசன்*

*மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்*

*ஆதார சக்தியும் அந்தச் சிவனொடும்*

*சாதாரணமாம் சதாசிவம் தானே”.*

*வேதம் அருளிய நான்முகன், திருமாள், உருத்திரன், இவர்களுக்கு மேலான மகேசுவரன் இவர்கள் அனைவருக்கும் மேலான ஐந்து முகங்களுடைய சதாசிவன், ஒளி (விந்து), ஓசை (நாதம்), இதற்கெலாம் ஆதாரமாய் விளங்கும் பராசக்தி, முடிவாக உள்ள சிவப்பரம் பொருள் எல்லாமே சதாசிவம் என்றே சொல்லப்படுகிறது என்கிறார்.*

*மேலும் திருமூலர், சதாசிவலிங்க மூர்த்தத்திற்கு இரண்டு பாதம், பத்து கைகள், ஐந்து முகம், ஒவ்வொரு முகத்திற்கும் மூன்று கண்கள் ஆக 15 கண்கள் என பாடியுள்ளார்.*

*“கூடிய பாதம் இரண்டும் படிமிசை*

*பாடிய கை இரண்டெட்டும் பரந்தெழும்*

*தேடும் முகமைந்து செங்கண்ணின் மூவைந்து*

*நாடும் சதாசிவ நல்லொளி முத்தே” (திருமந்திரம்:1730)*

*இதை உணர்ந்த தவயோகிகள், சித்தர்கள், அருளாளர்கள் சதாசிவ மூர்த்தத்தை வழிபட்டு சிவகதி அடைந்தனர். சதாசிவலிங்க வடிவத்தை வழிபட்ட நாயன்மார்களில் சிலர் அகவழிபாடாக உள்ளத்தில் சிவனை இருத்தி மானசீக சிவபூசை செய்தார்கள். அவர்களில் பூசலார் என்பவர் மனதிலே சிவாலயம் கட்டி குடமுழுக்கு செய்ய விரும்பினார். இதனை அறிந்த சிவபெருமான் தன் அடியாரின் அன்பையும் பக்தியையும் உலகிற்கு உணர்த்த திருவருள் புரிந்தார். அதே காலக்கட்டத்தில் காஞ்சியில் காடவர்கோனாகிய பல்லவ அரசன் கற்கோயில் கட்டினான். குடமுழுக்கு முதல் நாள் சிவபெருமான் அரசரின் கனவில் தோன்றி ‘பூசலாரின் மனக்கோயிலில் நாளை புகவிருக்கிறோம் அதனால் ஆலயப் பிரதிஷ்டை நாளை மறுநாள் ஒத்தி வைக்கவும் என்று கேட்டுக்கொண்டார்’. துயிலெழுந்த அரசன் பூசலாரைக் காண அவாகொண்டு சேனைகளோடு திருநின்ற ஊருக்கு பயணமானான்.*

*ஊர் அந்தணர்கள் உதவியோடு பூசலாரைக் கண்டு சிவாலயத்தைப் பற்றி வினவியபோது அதிர்ச்சிக்குள்ளானான். மானசீகமாக கட்டிய கோயிலின் விளக்கத்தைப் பெற்ற அரசன், சிவப்பெருமானின் கருணையை எண்ணி நெக்குருகினான். பூசலாரோ எம்பிரானின் திருவிளையாடலை எண்ணி பரவசம் அடைந்தார். ஊர் மக்களோ பூசலாரின் பக்தியைக் கண்டு வணங்கி மெய் சிலிர்த்தனர் (துர்க்காதாஸ், 2017). மானசீக பூஜைக்குதான் எத்தனை மகிமைகள் உள்ளன என்பதை திருமூலர் தமது பாடலில், உள்ளம்*

பெருங்கோயில், ஐம்புலன்கள் ஆலயத்தின் காளா மணிவிளக்கு, தெளிந்த சிந்தனை உடையவரின் சீவன் கருவரையில் உள்ள சிவலிங்கம் என்கிறார்.

*“உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்*

*வள்ளல் பிரானாற்கு வாய் கோபுரவாசல்*

*தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்*

*கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே”*

*(திருமந்திரம்: 1823*

மேலும் திருமூலர் ‘மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம், மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்’ எனவும் மனிதர்களின் உடலைப்பற்றி தெளிவாக விளக்கியுள்ளார். இந்த உடலானது சிவலிங்க வடிவம்தான் என உணர்ந்த அருளாளர்கள் இறுதியில் தன்னையே அர்ச்சிக்கதக்கவர்களாக உயருகிறார்கள். கீழ்க்காணும் பாடல் இதனை தெளிவாக உணர்த்துகிறது.

*“தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை*

*தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்*

*தன்னை அறியும் அறிவை அறிந்தபின்*

*தன்னையே அர்சிக்கத் தானிருந் தானே”*

*(திருமந்திரம்: 2355)*

சதாசிவலிங்க வழிபாட்டின் மகத்துவத்தை அறிந்து உணர்ந்த அருளாளர்கள் நித்தம் சிவபூசனை செய்து தன்னைப் பக்குவப்படுத்தினர். புறத்தில் அர்ச்சித்த சிவத்தை அகத்தில் கண்டப்பின் அதுவாகவே பரிணமித்தனர்.

### சதாசிவலிங்க வகைகள்

சிவபூசைக்குறிய சிவலிங்கம் பல வகைகளில் அருளாளர்களும் அவதார புருஷர்களும் வழிபட்ட சரித்திரத்தையும் புராணங்களையும் படித்திருக்கிறோம். சதாசிவ மூர்த்தத்தை முதன் முதலில் அம்பாள் பூசிக்க சிவபெருமான் தேவிக்குச் சுயம்பு மூர்த்தியாய் தோன்றினார். சேக்கிழார் பெரிய புராணத்தில் இவ்வாறு பாடுகிறார்,

*நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி*

*நிரந்தரம் திருவாக்கினில் நிகழ்வது*

*அஞ்செழுத்துமே ஆக ஆளுடைய*

*அம்மை செம்மலர்க்கை குவிந்தருளித்*

*தஞ்சம் ஆகிய அருந்தவம் புரியத்*

*தரிப்பரே அவள் தனிப் பெருங்கணவர்*

*வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தில்*

*வந்து தோன்றினார் மலைமகள் காண*

*(பெரிய புராணம்: 1138)*

ஆகம முறைப்படி சிவபூசை செய்ய அம்மை திருவுள்ளம் கொண்டமையால் எம்பெருமான் அவரை தென்திசையிலுள்ள காஞ்சி மாநகரத்தில் எழுந்தருளியுள்ளதைக் கூறி அவ்விடம் சென்று பூசையைத் தொடங்குக என்று ஆசீர்வதித்தார். தாயாரும் காஞ்சியில் மாமரத்தடியின் கீழ் அமர்ந்து தவமேற்றிட பெருமானார் சிவலிங்க திருமேனியாக தோன்றினார். இதன் பிறகே சதாசிவலிங்க வழிபாடு தேவர்களாலும், முனிவர்களாலும், அசுரர்களாலும், சித்தர்களாலும், அருளாளர்களாலும், அடியார்களாலும், மனிதர்களாலும் ஏற்றப்பட்டது.

சதாசிவ வழிபாட்டை முறையாக செய்பவர்களுக்கு லிங்கத்தின் தன்மை பொருட்டு வழிபடுவோரின் வாழ்க்கையில் நன்மை பயக்கும் என திருமூலர் கூறுகிறார்.

*“மறையவர் அர்ச்சனை வண் படிகந்தான்*

*இறையவர் அர்ச்சனை ஏய பொன்னாகும்*

*குறைவிலா வசியர்க்குக் கோமளம் ஆகும்*

*துறைஉடைச் சூத்திரர் தொல்வாண இலிங்கமே” (திருமந்திரம்: 1721).*

ஞான மறைகளை ஓதி இறைவனை அறிய முற்படும் ஞானானுபவர்களுக்குப் படிக லிங்க அர்ச்சனை மிகுந்த பலனை அளிக்கும் எனவும், தலைமை பொருப்பில் உள்ளவர்கள் பொன்னால் ஆன லிங்கத்தை வழிபட தலைமைத்துவம் சீர்படும் எனவும், வணிகத்துறையில் ஈடுபடுபவர்கள் பச்சை

மரகதத்தினாலான லிங்கத்தை வழிபட பொருள் வளம் உண்டாகும் எனவும், விவசாயம், பிறருக்குத் தொழில் செய்து பிழைப்பு நடத்துபவர்கள் சுயம்பு லிங்கம் வழிபட நல்லது என அறிவுருத்துகிறார் திருமூலர்.

### சங்கம வழிபாடு செய்த நாயன்மார்கள்

சங்கமம் என்பது கூடுகை, கலத்தல், ஆறுகள் இணையும் இடம், அடியார் திருக்கூட்டம், இயங்குதல் என பொருள்படும்(சென்னை பல்கலைகழகத் தமிழ் ஆங்கில மின்னியல் அகராதி, 2011). இலிங்கம் இறைவனது இயங்கா வடிவம் எனவும், அடியார் திருக்கூட்டம் இறைவனது இயங்கும் வடிவமாகும். இயங்கும் அடியார்களைச் சங்கமம் என்றும் நடமாடும் கோவில் எனவும் அழைக்கப்படுகின்றனர். சிவனடியார்களைச் சிவமாகவே கருதி வழிபட்ட நாயன்மார்கள் 19 பேர் அடங்குவர் .

**அட்டவனை 1.2 சங்கம வழிபாடு செய்த நாயன்மார்கள்**

| எண் | நாயன்மார் | ஊர் | முக்தி நட்சத்திரம் | தொண்டு |
|---|---|---|---|---|
| 1 | அமர்நீதியார் | பழையாரை | ஆனி பூரம் | அமுது அளித்துத் திருக்கோவணம் வழங்குதல் |
| 2 | இடங்கழியார் | கொடும்பாளூர் | ஐப்பசி கார்த்திகை | நெற்களஞ்சியத்தை களவாடியது சிவனடியார் என அறிந்து மேலும் தானம் அளித்தார் |
| 3 | இயற்பகை | காவிரிப்பூம்பட்டினம் | மார்கழி உத்திரம் | சிவனடியார்களுக்கு உதவி புரிபவர். தன்னிடம் உள்ள எதை கேட்டாலும் அளிப்பவர். |
| 4 | இளையான்குடி மாறன் | இளையான்குடி | ஆவணி மகம் | சிவனடியார்களுக்கு அமுது அளித்தல் |
| 5 | எறிபத்தர் | கருவூர் | மாசி அஸ்தம் | சிவனடியார்களுக்கு உதவ கோடரியைத் தாங்கியவர் |
| 6 | ஏனாதி நாதர் | எயினனூர் | புரட்டாசி உத்திரம் | திருநீற்றுனிடத்துப் பேரன்பு பூண்டவர் |
| 7 | காரைக்கால் அம்மையார் | காரைகால் | பங்குனி சுவாதி | சிவனடியார்களை உபசரித்தவர், பல பதிகங்கள் அருளியவர் |
| 8 | மகா மாத்திரர் | திருச்செங்காட்டங்குடி | சித்திரை பரணி | அமுது அளித்தார்..பிள்ளைக்கறி இட்டவர் |
| 9 | திருக்குறிப்பு தொண்டர் | காஞ்சிபுரம் | சித்திரை சுவாதி | சிவனடியார்களின் துணியைத் துவைத்துச் சுத்தம் செய்து கொடுப்பவர் |
| 10 | திருநீலகண்டர் | சிதம்பரம் | தை விசாகம் | திருஓடு அளித்தவர் |
| 11 | நரசிங்க முனையர் | திருநாவலூர் | புரட்டாசி சதயம் | திருவாதிரைதோறும் அமுது அளித்து பொன்னும் வழங்கியவர் |
| 12 | நேச நாயனார் | காம்பீலி | பங்குனி உரோகிணி | மனத்தில் ஈசன் திருவடியைத் தாங்கி திருவைந்தெழுத்தை ஓதி மெய்யின் துணையால் கோவணமும் உடையும் நெய்து அடியார்களுக்கு வழங்கியவர் |
| 13 | புகழ்ச்சோழர் | உறையூர் | ஆடி கார்த்திகை | போரில் இறந்துபோன வீரரின் ஒருவரின் தலைமுடியில் சடைமுடி இருக்கக்கண்டு அதனைக் கையில் ஏந்தித் திருவைந்தெழுத்து ஓதித் தீக்குளித்தவர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | மானக்கஞ்சாறர் | கஞ்சாறூர் | மார்கழி சுவாதி | அடியார்களுக்கு வேண்டியதை வழங்கும் வகையில் தன் மகனின் கூந்தலை அரிந்து கொடுத்தவர் |
| 15 | முருக நாயனார் | திருப்புகலூர் | வைகாசி மூலம் | மலர்தொடுத்து இறைவனுக்குச் சூட்டியவர் |
| 16 | முனையடுவார் | திருநீடூர் | பங்குனி பூசம் | போரில் ஈட்டியப் பொருளைக் கொண்டு அடியார்களுக்கு அமுது அளித்தார் |
| 17 | மெய்ப்பொருள் நாயனார் | திருக்கோவலூர் | கார்த்திகை உத்திரம் | சிவனடியார்களின் திருவேடத்தையே சிவபெருமானாகக் கருதி வழிபட்டவர் |
| 18 | விறண்மிண்டர் | செங்குன்றூர் | சித்திரை திருவாதிரை | சிவனடியார்களை வணங்காது சென்ற சுந்தரரைப் புறம்பு என்றவர். சிவாலயம்தோறும் தரிசனம் செய்தவர் |
| 19 | கலிகம்பர் | பெண்ணாடகம் | தை ரேவதி | சிவனடியார்களுக்கு அமுது படைத்தவர். தாமதமாக சிவனடியார்களைக் கவனித்த தன் மனைவியின் கையை வெட்டியவர் |

*மூலம்: புலவர் பி.ரா. நடராசன், 2016.*

இன்றளவு போற்றப்படும் பெரிய புராணம் எழுவதற்குக் காரணமாக இருந்த திருத்தொண்டர் திருகூட்டத்தின் மகிமையைக் குறிப்பிடாமல் போவது சிறப்பின்மையாகும். சைவத்திருமுறைகள் பன்னிரடனுள் முதல் நூலான இறைவனால் அடியெடுத்துத் தந்தருள சுந்தரர் பாடி அருளியது திருத்தொண்டர் தொகை ஏழாந்திருமுறையிலும், அதன்பின் பொல்லாப்பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் அருளிய வழி நூலான திருத்தொண்டர் திருவந்தாதி பதினோராந் திருமுறையிலும், தொடர்ந்து தெய்வப் புலவர் சேக்கிழார் அருளிய சார்பு நூலான திருத்தொண்டர் புராணம் எனும் பெரியப்புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகவும் அமைந்துள்ளமை சிறப்பாகக் குறிப்பிடதக்கதாகும்.

பெரிய புராணம் அமைவதற்கு முதல்நூலாக இருந்த சுந்தரரின் திருத்தொண்டர்தொகை அடியார் திருக்கூட்டத்தைச் சிறப்பிக்கவே சிவபெருமான் சுந்தரருக்குத் ‘தில்லைவாழ் அந்தணர் தம் அடியாருக்கும் அடியேன்’ என்று முதலடி எடுத்து திருவாய்மொழிந்து அருளினார் (திருச்சிற்றம்பலம், 2012).

சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் தமிழர்கள் என்பதுபோல் ஆன்மீகத்திலும் அடியார்கள் ஒன்று கூடி பக்தி செலுத்துபவர்களை வணங்குவது சங்கம வழிபாடு எனப்படும். அருளாளர்களா மருளாளர்களா என்பதை ஆராயாமால் சிவசின்னத்தைக் கண்டவுடன் விழுந்து வணங்கும் பண்புகொண்டவர்களே சங்கம வழிப்பாட்டைக் கடைபிடித்தவர்கள்.

அடியார்களிலே அடியார் திருக்கூட்டத்தோடு திருவாரூர் தியாகேசர் ஆலயத்தில் அமர்ந்திருந்த விறன்மிண்டர், அடியார்களை வணங்காமல் ஆலயத்தினுள் புகுந்த சுந்தரரைப் புறம்பு என தள்ளி வைத்தார். இதை அறிந்த அடியார் ஒருவர் சிவபெருமானின் அன்புக்குரிய சுந்தரரின் பெருமைகளைக் கூற ‘அப்படியா, ஆக

சிவபெருமானும் புறம்பு' என சீறினார் (நடராசன்.பி.ரா., 2016). அடியார்களை வணங்காத அருளாளர்களும் பரம் பொருளையும் புறம்பு என ஒதுக்கி வைத்த விறன்மிண்டரின் கோபத்தை உணந்தார் சிவபெருமான். விறன்மிண்டரின் மனம் குளிர வைக்க சுந்தரரை அடியார் திருக்கூட்டத்தைப் போற்றி பாடுமாறு கூற, சிவ பரம் பொருளே முதல் அடி வழங்கி 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என திருத்தொண்டர் தொகை அருளிச்செய்ய ஆசி அருளினார்.

இத்தனை பெருமை வாய்ந்த அடியார் திருக்கூட்டத்திற்கு விளைவிக்கும் தீமைகளைத் திருமூலர் பெருமான் சிவனடியார்களை நிந்திப்போர் அடையும் கேடுகள் எனும் அத்தியாயத்தில் அருளிப் பாடுகிறார்,

*ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்*

*ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பர்*

*ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினார்*

*தாந்தாம் விழுவது தாழ்நகரமாகுமே*

*(திருமந்திரம்: 537)*

என பரசிவப் பொருளை ஆராதிக்கும் தொண்டர்கள், லௌகீக மார்க்கத்திற்கு வித்தியாசப்பட்டவர்கள். சிவத் தொண்டர்கள் பசி எடுக்கும் வேளையில் இரந்துண்டு, தம் பசியைத் தணித்துக் கொள்வார்கள். அப்படிப்பட்ட உத்தம சிவத் தொண்டர்களை அருவருக்க வைக்கும் முறையில் நீசமொழி சொன்னவர்கள் மிகவும் கேவலமான நகரத்தில் வீழ்ந்துழக் கூடிய வகையில் தாமே கேட்டினைக் தேடிக் கொண்டவர்களாவர் என்றுரைக்கப்படுகிறது (இறையன்பன், 2018). நமிநந்தியடிகள் எனும் நாயனார் முப்பொழுதும் சிவபெருமான் திருவடியையே எண்ணி ஓயாமல் இன்பம் அடைவார். ஒருநாள் பெருங்காதலோடு புற்றிடங்கொண்ட புனிதரை வணங்கி அருகில் உள்ள அறநெறி ஆலயத்தில் விளக்கேற்ற நெய் வேண்டி அங்கிருந்த ஒரு வீட்டின் முன் நிற்க அது சமணர்கள் குடிகொண்ட வீடாக இருந்தது. நீர் ஊற்றி விளக்கு ஏற்றுக என நமிநந்தியடிகளை நகையாடி நெய் தர மறுத்தனர். ஆலயம் திரும்பிய அடிகள் இறைவன் முன்பு மனமுருகினார். இறைவன் அசரீரியாக அருகில் குளத்தில் உள்ள நீரை ஊற்றி விளக்கு ஏற்றுக என கூற, அடியாரும் அவ்வாறே செய்து நீரில் விளக்கேற்ற தீபம் எறிவதை கண்ட சமணர்கள் தலை குனிந்தனர். அடியாரின் பக்தியின் விளைவு ஊர் மக்களுக்கு தெரிய சோழ மன்னனையும் எட்டியது. நமிநந்தி அடிகளின் சிவத்தொண்டு சோழமன்னனாலும் மக்களாலும் போற்ற சைவம் தலைத்தோங்கியது. அது சமயம் சமணர்களுக்கிடையே பூசல் தோன்றி திருவாரூரை விட்டு விலகினர். ஆகவே அடியார்களையும் அருளாளர்களையும் நிந்திப்பது பெரும் துன்பத்தை அளிக்கவல்லது என்பதனை இப்பாடலின் வழி தெளிவாக தெரிந்து கொள்ளலாம். ஆனால் இக்காலக்கட்டதில் நேற்றுப் பெய்ந்த மழையில் பூத்த காளான்கள் போல் தோன்றியுள்ள பல அசற்குருக்கள் சத்தியமான அடியார் பெருமைகளுக்கும் அருளாளர் சேவைகளுக்கும் பங்கம் விழைவிக்கும் வகையில் நடந்து கொள்வது மிகவும் வருத்தம் அளிப்பதாகவே அமைந்துள்ளது. உண்மையான சற்குருவின் விளக்கத்தை அளித்த சித்தபுருஷர் திருமூலராகவேதான் இருக்க வேண்டும்.

*"மந்திர தந்திர மாயோக ஞானமும்*

*பந்தமும் வீடும் தரிசித்துப் பார்ப்பவர்*

*சிந்தனை செய்யாத் தெளிவியாகாது ஊண்பொருட்டு*

*அந்தகர் ஆவோர் அசற் குருவாமே"*

*(திருமந்திரம்: 2045)*

குருவானர் சீடர்களுக்கு வழிகாட்டலாக நின்று ஆன்மீகப் பாதையில் மேலும் சித்தி பெற மந்திரங்கள், தீக்கைகள் வழங்குவார்கள். குருவானவர் தவ வாழ்க்கை மேற்கொண்டு உலக இன்பங்களை விடுத்து இறைவனை அடையும் மார்க்கத்தைப் போதிப்பராவர். நிலையில்லா உலக சொத்துகளில், பந்த பாசங்களில் நாட்டம் இல்லாதவராகவும் இருந்து, நிலையான யோக ஞானத்தை

*அடைந்தவர்களாக இருப்பர். இதுபோன்ற குருவினிடம் சென்று பாடம் கற்காமல் வயிற்றுப் பிழைப்பிற்காக மடம் நடத்துபவர்கள் அசற்குரு என திருமூலர் பகர்கிறார்.*

*செல்லும் பாதையை வழிகாட்ட குருடர்களின் உதவியை நாடினால் வழிதவறி தவறான பாதைக்கு இட்டுச்சென்று குழியில் விழ காரணமாவதுபோல், நல்ல ஞானமும் தெளிவும் அற்ற அசற்குருவின் பாதையில் சென்றால் அறியாமை எனும் குழியில் விழுவோம் என கீழ்க்காணும் பாடலில் காணலாம்,*

*"குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லும் குருடர்*

*முரணும் பழங்குழி வீர்வார்கள் முன்பின்*

*குருடனும் வீழ்வார்கள் முன்பின் அறவே*

*குருடனும் வீழ்வார் குருடரோடு ஆகியே"*

*(திருமந்திரம்: 2048)*

*'குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி, குருடும் குருடும் குழி விழுமாறே' என அப்பொழுதே திருமூலர் 1680வது பாடலில் அபக்குவன் எனும் அத்தியாயத்தில் விளக்குகிறார். குருடும் எனும் முதல் சொல் பக்குவம் அடையாதவர்களையும், இரண்டாம் முறை குருடு அறியாமையால் அஞ்ஞான ஆசிரியனைத் தேடுபவர்களையும் குறிப்பிடுகிறார்.*

## முடிவுரை

*சரியை கிரியை யோகம் ஞானம் தவிர பக்தி மார்க்கம் வழியாகவும் இறை பேரருளைப் பெற முடியும் என்பதை பெரிய புராண திருதொண்டர்களின் வாழ்க்கை வரலாற்றின் மூலம் அறியலாம். திருமூலர் நாயனார் உணர்ந்து எழுதிய திருமந்திர சான்றுகளுடன் அவற்றை தொடர்புபடுத்துகையில் திருமுறைகள் வெறும் தோத்திர நூல் மட்டுமல்லாமல் நம்மை வழிநடத்தும் சாத்திரங்களாக அமைகின்றன. குரு, லிங்க சங்கம வழிபாட்டின் மகத்துவத்தைத் திருமந்திர பாடல்களுடன் நுண்நோக்கி பார்க்கையில் அடியார்களின் வழிபாடு வெவ்வேறாக அமைந்தாலும் அடிப்படை நோக்கமானது சிவத்தை அடைவதாகவே உள்ளது. அந்த சிவத்தை அடைய மூலமாக இருக்க வேண்டியது கருணையும் அன்பும். 63 நாயன்மார்களும் இறைவன் மீது தீவிர அன்பு கொண்டவர்களாக இருந்தனர். அந்த அன்புதான் சிவத்தை உணர வழிவகுத்தது எனலாம். அன்பே சிவம் என ஆரும் அறிந்தப்பின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே எனும் திருமூலரின் பாடலுக்கேற்ற மையக் கருத்தைப் பெரிய புராணத்தில் பழமையான வரலாற்றுச் செய்யுள் வடிவில் தொகுத்து வழங்கிய சேக்கிழாரின் திருவடி போற்றுதற்குரியது ஆகும்.*

**Referances:**


Aravinthan. (2016). *India Arithal Muraigal*. Chennai: Kizhaku Publications.

Avvaiyar.(2020, Oktober 26). *https://www.ytamizh.com/avvai-thiruvalluvamalai.php*.

Dharmalingam, N. (2020,Oktober 26). http://saivanarpani.org/home/index.php/2020/02/29/126-sathaasivalingam/. Retrieved from http://saivanarpani.org/home/.

Durgadass, S.K.Swami. (2017). *Arubathu Movar Kathaigal*. Chennai: Prema Publications.

Gnanasambandhan, A.S. (1999). *Sekkizhar Thantha Selvam.* Chennai: Gangai Publications.

Iraianban. (2018). *Tirumantiram Mulamum Uraiyum*. Chennai: Kaleswari Publications.

Kanthan,K.(2016). (2020,Oktober 25).

http://www.tamilvu.org/tdb/titles_cont/sculpture/html/nayanmarkal.htm. Retrieved from http://www.tamilvu.org/

Manikkavasagan, Gna. (2016). *Tirumular Tirumantiram.* Chennai: Uma Publications.

Nadarajan, P., R. (2016). *Periya Puranam*. Chennai: Uma Publications.

Tamil Lexicon University of Chennai. (2020,Oktober 26).

http://www.tamilvu.org/library/dicIndex.htm Retrieved from http://www.tamilvu.org

Thiruchitrambalam,Siva. (2012). *Periya Puranam*. Chennai: Gangai Publications.

# டாக்டர் அம்போத்கர் அவர்களின் சமூகப்பணி பற்றி - ஒரு பார்வை
# Dr. Ambedkr Political and social work - An Analysis

முனைவர்.தி.பாலசுப்பிரமணியன் / Dr.T.Balasubramanian[1]
முனைவர்.ம.பிட்சை மாரி / Dr.M.Pitchaimari[2]
முனைவர்.மு..சுந்தர் / Dr.M.Sundar[3]
முனைவர். மா. மணிகண்டன் / Dr.M.Manikandan[4]

Date of submission: 2020-07-03
Date of acceptance: 2020-10-10
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
Dr.T.Balasubramanian
Email: balasubramanian834@gmail.com

***Abstract***

Dr.Ambedkar is a prominent Indian scholar, jurist,economist politician and social reformer He was well known for being the inspiration of the Dalit community (who were treated as untouchables and subjected to socio-economic discrimination) and the Buddhist movement. He also fought for the rights of women and labour. Learned continuously credits him for his role of being the chief architect in constructing the constitution of India. Dr.Ambedkar was also the founding father of the republic of India.That being said, this study aims to catalog the background of Dr.Ambedkar, his struggles, his contribution in various areas such as politics and social work. Indepth library study was used to derive the findings of this research.

**Key Words:** Education, Political Career, Social work, Dr Ambedkar's Role in the Formation of Reserve Bank of India (RBI), Conversion to Buddhism .

## முன்னுரை

விடுதலை இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாக விளங்கியவர்,'பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர்'. இவர் ஒரு சமூக சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த பொருளியல் அறிஞராகவும், அரசியல் தத்துவமேதையாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், பகுத்தறிவு சிந்தனையாளராகவும், சிறந்த எழுத்தாளர் மற்றும் பேச்சாளராகவும், வரலாற்று ஆசானாகவும் விளங்கியவர். தலித் இன மக்களுக்கு மட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விருளைப் போக்க, உதித்த சூரியன். மகாத்மா காந்திக்கு பிறகு, சுதந்திர இந்தியாவின் மாபெரும் தலைவர் என்று போற்றப்பட்டவர், டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் அவர்கள். தன் வாழ்நாள் முழுவதையும் சமூகத்திற்கென அர்ப்பணித்த மாபெரும் சிற்பியான டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை காண்போம்.

'பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்' என அழைக்கப்படும் 'பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர்' அவர்கள், 1891ஆம்

[1]The author is a lecturer in the Department of History, Alagappa University, Karaikudi, Tamil Nadu, India. balasubramanian834@gmail.com

[2]The author is an Associate Professor in the, Department of History, SBK College, Aruppukottai, Tamil Nadu, India. joshuahistoty5@gmail.com

[3]The author is a Principal of Alagappa University, College of Physical Education, Karaikudi, Tamil Nadu, India. drmsundarcm@gmail.com

[4]The author is a Research Associate, Department of Tamil, Alagappa University, Karaikudi, Tamil Nadu, India. alagappamani@gmail.com

ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள், இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள மாவ் (இப்போது மத்தியபிரதேசத்தில் உள்ளது) என்ற இடத்தில், ராம்ஜி மாலோஜி சக்பாலுக்கும், பீமாபாயிக்கும் பதினான்காவது குழந்தையாக, ஒரு மராத்திய குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அங்கீகரிக்கும் வாழ்வியல் நெறியே சமூக ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இவை மூன்றும் தனித்தனி அங்கமாகக் கருதப்படக்கூடாது. இவை மூன்றும் ஒன்றிணைந்து விளங்க வேண்டும். ஒன்றிலிருந்து மற்றொன்று இல்லையெனில் அது ஜனநாயகத் தன்மையின் நோக்கத்தையே அழித்துவிடும் என்றார்.

### அம்பேத்காரின் இளமைக்காலம்

டாக்டர் அம்பேத்காரின் குடும்பப் பின்னணி தற்போதைய மகாராட்டிர மாநிலம் ரத்னகிரி மாவட்டத்தில் அம்போவதே வட்டத்தைச் சேர்ந்த மராட்டிய குடும்பத்தைச் சார்ந்ததாகும். ராம்ஜி சக்பால் இராணுவப் பள்ளி ஒன்றில் தலைமையாசிரியராகப் பணிபுரிந்து வந்தார். இவர் ‘சுபேதர் மேஜர்’ என்ற தகுதி பெற்றவர். மகர் என்னும் தாழ்த்தப்பட்ட சமூதாயத்தில் பிறந்த பீமாராவ் ராம்ஜி இளம் வயதில் பல்வேறு துன்பங்களை அனுபவித்தார். டாக்டர் அம்பேத்கார் தனது இளம்வயதில் ஒருமுறை மாட்டுவண்டியில் சகோதரருடன் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது இவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை வண்டிக்காரன் அறிந்ததும் உடனே மாட்டை அவிழ்த்துவிட்டு அச்சிறுவர்களை குப்பையைக் கொட்டுவதைப் போல் கொடுமை நிகழ்ந்தது. இந்தத் துன்பத்தின் மத்தியிலும் கல்வியைத் தொடர்ந்தார்.

### கல்வி

1900ம் ஆண்டில் சாத்தாராவில் உள்ள ஒரு பள்ளியில் தனது தொடக்கக்கல்வியை முடித்த டாக்டர் அம்பேத்கார் பீமாராவ் சக்பால் அம்பேவாதேகர் என்பது இவரது சொந்த ஊரின் நினைவாக வழங்கப்படும் குடும்பப் பெயராகும். இவர்மீது அன்பும் அக்களையும் கொண்ட பிராமண ஆசிரியரான மகாதேவ அம்பேத்கார் இவரின் குடும்பப் பெயரான அம்பேகர் என்பதை மாற்றி தன் குடும்பப் பெயரான அம்பேத்கார் என்பதை இவரின் பெயரில் சேர்த்தார். 1904ல் மும்பைக்கு குடும்பத்துடன் குடிபெயர்ந்தார். அங்கு எல்பின்ஸ்டன் என்ற உயர்நிலைப் பள்ளியில் உயர்க்கல்வியை முடித்தார். டாக்டர் அம்பேத்காருக்கு 14 வயதில் ராமாபாய் என்ற பெண்ணுடன் திருமணம் நடந்தது. 1913ம் ஆண்டு பிஏ., முடித்தவுடன் பரோடா அரசில் பணியாற்றினார். பின்னர் பரோடா மன்னரால் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் உயர்க்கல்வியைப் பயில ஏற்பாடு செய்தார். 1913ம் ஆண்டு ஜுன் 4ம் நாள் டாக்டர் அம்பேத்கார் அமெரிக்கா சென்றார். உயர்க்கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதாரம், அரசியல், தத்துவம் மற்றும் சமூகவியல் ஆகிய பாடங்களைப் படித்தார். அங்கு அவர் 1915ல் ‘பண்டைய இந்தியாவின் வாணிகம்’ என்ற ஆய்விற்கு முதுகலைப் பட்டம் பெற்றார். இந்தியாவின் ஜாதிகள் என்ற தலைப்பில் கருத்தாழமிக்க ஒரு கட்டுரையை எழுதினார். பின்னர் இந்திய தேசியப்பங்கு விகிதம் ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வு என்ற தலைப்பில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார். இந்த ஆய்வுக்கு கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இக்கட்டுரை ஆங்கிலத்தில் ‘இந்தியாவின்

மாகான நிதி வளர்ச்சி’ என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது. இன்று இந்தியாவின் நிதிநிலை அறிக்கை வெளியிடும் பொழுது ஒவ்வொருவரும் புரட்டிப்பார்க்கும் உயிர் நூலாக இன்றும் உள்ளது. மேலும் டாக்டர் அம்பேத்கார் ‘பிரிட்டிஷ் இந்தியாவில் அரசு நிதியைப்

பரவலாக்குதல்’ என்ற ஆய்வுரைக்கு 1921ல் முதுஅறிவியல் பட்டம் பெற்றார். ‘ருபாயின் பிரச்சனை’ என்ற ஆய்வுரைக்கு 1923ல் டிஎஸ்சி பட்டமும் பெற்றார்.

## டாக்டர் அம்பேத்காரின் அரசியல் அமைப்பின் பங்கு

1. 1932ம் ஆண்டு பூனா ஒப்பந்தம் ஏற்பட்டது,

2. 1936ம் ஆண்டு சுதந்திரத் தொழிலாளர் கட்சியை உருவாக்கினார்.

3. 1947ம் ஆண்டு பண்டித ஜவஹாலால்நேரு அவர்களின் அமைச்சரவையில் முதல் சட்ட அமைச்சரானார். அரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவராக இருந்து உழைத்தார்.

4. 1948ம் ஆண்டு இந்து சட்டம் மசோதாவை வரைந்தளித்தார்.

இந்தியா விடுதலை பெற்றவுடன் இந்திய யூனியன் முஸ்லீம்லீக் சார்பில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட அம்பேத்காரை, காங்கிரசு அரசு சட்ட அமைச்சராக பதவியேற்றுக் கொள்ளும்படி அழைத்தது. அம்பேத்கார் அதை ஏற்று விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சரானார். ஆகசுட்டு 29ல் டாக்டர் அம்பேத்கார் இந்திய அரசியலமைப்பை உருவாக்கும் ஆணையத்திற்கு தலைவரானார்.

டாக்டர் அம்பேத்கார் முன்மொழியப்பட்ட இந்திய அரசியல் அமைப்பு மிகச் சிறந்த சமூக ஆவணம் என்று வரலாற்றுவியலாளரும் இந்திய அரசியல் அமைப்பை நன்கு அறிந்தவருமான கிரான்வில்லா ஆசுட்டின் கூறுகிறார்.

டாக்டர் அம்பேத்காரால் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பில் குடிமக்களின் உரிமைகளுக்கு பல வகையில் பாதுகாப்பு வழங்கியது. இந்திய அரசியல் அமைப்பு நவம்பர் 26, 1949ல் அன்று மக்களவையில் ஏற்கப்பட்டது. இன்றும் நம் இந்திய நாட்டில் சட்டத்தை இயற்றிய பெருமைக்குரியவர் டாக்டர் அம்பேத்கார் ஆவார்.

### சமூகப்பணிகள்

1924ம் ஆண்டு பம்பாய் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆனார். தொடர்ந்து அவருடைய அரசியல் சமூகக்கல்விப் பணிகள் தொடங்கின. செட்யூல்டு இனமக்களின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டோர் நல்வாழ்வு பேரவை என்னும் சங்கத்தைத் தோற்றுவித்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கான ‘முக்நாயக்’ (ஊமைகளின் தலைவன்) ‘பகிஷ்கரித் பாரத்’ (ஒதுக்கப்பட்ட பாரதம்) ஆகிய இதழ்களை நடத்தினார். சமாஜ்சமாத சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தையும் தொடங்கினார். இதன் மூலம் அவர் சமத்துவ சமுதாயத்தை அமைக்கும் கொள்கையை வகுத்தார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் முனைவர் அம்பேத்கர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதே நேரத்தில், சமுதாய அமைப்பிலும் பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்டவர்கள் கையில் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்று போராடினார். 1930ல் இலண்டனில் நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் புறப்படுகையில், ‘என் மக்களுக்கு என்ன நியாயமாகக் கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன். அதே சமயத்தில் சுயராஜ்யக் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரிப்பேன்’ என்று கூறிச் சென்றார். இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் குறித்த பிரச்சினை முக்கியமாக விவாதிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோருக்குத் தனி வாக்குரிமையும், விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டுமென முனைவர் அம்பேத்கர் வலியுறுத்தினார். இதன் விளைவாக ஒரு தொகுதியில் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும், அதே தொகுதியில் தாழ்த்தப்பட்ட சமூக வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் ‘இரட்டை வாக்குரிமை” தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது. மகாத்மா காந்திஜி இதனை எதிர்த்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதிகள்

ஒதுக்கப்படக் கூடாது என வலியுறுத்தி காந்திஜி உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். இதன் விளைவாக செப்டம்பர் 24 1932ல் காந்திஜிக்கும், முனைவர் அம்பேத்கருக்கும் இடையே 'பூனா ஒப்பந்தம்' ஏற்பட்டது. இதன்படி தாழ்த்தப்பட்டோருக்கு தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாக பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி ஒதுக்கீடுகள் ஒத்துக் கொள்ளப்பட்டன. வர்ணாசிரம தருமத்திலிருந்து தோன்றிய சாதிய அமைப்பையும், தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்து முனைவர் அம்பேத்கர் தீவிரமாகப் போராடினார். பரோடா மன்னருடன் இணைந்து தீண்டாமை ஒழியப் போராடியவர். பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தேர்ந்தவர். ஆசிரியராகவும், இதழாளராகவும், எழுத்தாளராகவும், சமூகநீதிப் புரட்சியாளராகவும் விளங்கியவர்.

இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தலைமைச் சிற்பி ஆகவும் செயல்பட்டார். இவரது தலைமையில் இந்திய அரசியல் சட்டம் இயற்றப்பட்டது, அதன் ஒரு பகுதியான 'இந்து சட்டத் தொகுப்பு மசோதா'விற்கு பாராளுமன்றத்தில் சட்டமாக்க ஆதரவு கிடைக்காததை எதிர்த்து தனது சட்ட அமைச்சர் பதவியைத் துறந்தார். (1952 பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னான காங்கிரஸ் அதிக இடங்கள் பெற்றமையினால் 1952ல் அந்த சட்டம் நிறைவேறியது).

## ரிசர்வ் வங்கி உருவாக்கத்தில் டாக்டர் அம்பேத்காரின் பங்கு

டாக்டர் அம்பேத்கார் 1921ம் ஆண்டு வரை தொழில்முறை பொருளாதார அறிஞராக பணியாற்றிய பொழுது பொருளாதாரம் குறித்து 3 துறைசார் புத்தகங்களை எழுதியிருந்தார்.

1. கிழக்கிந்திய கம்பெனியின் நிருவாகமும் நிதியும்.

2. பிரித்தானிய இந்தியாவின் மாகாணங்களின் நிதியின்.

3. ரூபாயின் சிக்கல்கள்: மூலமும் தீர்வும்.

கில்டன் யங் ஆணையத்திடம் டாக்டர் அம்பேத்கார் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் 1934ம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்டது.

## பௌத்த சமயத்திற்கு

அம்பேத்கர் பழங்கால இந்தியாவைப்பற்றியும் மானிடவியலைப்பற்றியும் செய்த ஆராய்ச்சியின் மூலம் மகர் மக்கள் பௌத்த சமயத்தை சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் பௌத்த பழக்கங்களை விட மறுத்ததால் கிராமத்தை விட்டு வெளியே தீண்டத்தகாதவர்கள் போல் வாழ வற்புறுத்தப்பட்டார்கள் என்றும் கருதினார். இதனாலயே அவர்கள் தீண்டத்தகாதவர்களாக ஆனார்கள் என்று கருதினார். இதைப்பற்றி யார் சூத்திரர்கள்? (றூழ றநசந வாந ளூரனசயள) என்ற புத்தகத்தை எழுதினார்.

பௌத்த சமயத்தை பற்றி நன்கு படித்த அம்பேத்கர் 1950 முதல் பௌத்த சமயத்தின் மீது தன் கவனத்தை முழுவதுமாக திருப்பினார். இலங்கையில் நடைபெற்ற பௌத்த துறவிகள் மற்றும் அறிஞர்களின் கருத்தரங்கில் கலந்து கொண்டார. புனேக்கு அருகில் புதிய பௌத்த விகாரை அர்பணித்த பின் தான் பௌத்தத்தை பற்றி புத்தகம் எழுதிக்கொண்டுள்ளதாகவும் விரைவில் அது நிறைவடையும் என்று கூறினார். அதிகாரபூர்வமாக பௌத்த சமயத்திற்கு திரும்புவது பற்றி திட்டமிட்டுக் கொண்டிருந்தார 1954ம் ஆண்டு இரு முறை பர்மாவிற்கு பயணம் மேற்கொண்டார். இரண்டாவது முறை மூன்றாவது உலக பௌத்த சமய மாநாடு ரங்கூனில் நடைபெற்றதில் கலந்து கொள்ள சென்றார. 1955ம் ஆண்டு பாரதீய பௌத்த மகாசபாவை தோற்றுவித்தார். 1956ம் ஆண்டு புத்தரும் அவரின் தம்மமும் (வுலீந டீரனனாய யனெ ர்ளை னூயஅஅய) என்ற புத்தகத்தை எழுதினார். இவரின் மறைவுக்கு பின் அப்புத்தகம் வெளியிடப்பட்டது.

இலங்கை பௌத்த துறவி ஹம்மல்வா

சதாடிஷ்சாவை கலந்த பின் ஜ28ஸ 1956 அக்டோபர் 14 அன்று நாக்பூரில் உள்ள தீக்சாபூமியில் அதிகாரபூர்வமாக விழா எடுத்து பௌத்த சமயத்திற்கு மாறினார். இவருடன் இவரது ஆதரவாளர்கள் 500,000 பேரும் பௌத்த சமயத்திற்கு மாறினார்கள. அதன் பின் இவர் காட்மாண்டுவில் நடைபெற்ற நான்காவது உலக பௌத்த கருத்தரங்கத்திற்கு சென்றார இவரின் புத்தர் அல்லது கார்ல் மார்க்சு என்ற புத்தகம் நிறைவுபெறாமலேயே உள்ளது.

### இந்திய விடுதலைக்குப்பின் டாக்டர் அம்பேத்கார்

இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல்சாசனத்தின் தலைமைச்சிற்பியாகவும் செயல்பட்டார். அவரது தலைமையில் இந்திய அரசியல் சட்டம் இயற்றப்பட்டது. பெண்களும் இப்படித்தான் 'ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்பதைப் பெரும்பாலான பெண்களே ஒப்புக் கொள்வதில்லை. இந்த வகையில் தாழ்த்தப்பட்டவர்களின் நிலையும் பெண்களின் நிலையும் ஒன்றுதான். இதை உணர்ந்து கொண்ட டாக்டர் அம்பேத்கார் சதி என்னும் உடன்கட்டை ஏறுதல், விதவைத் திருமண மறுப்பு, குழந்தைத் திருமணம் ஆகிய பெண்களுக்கு உள்ள உறவு குறித்தும் விரிவாக ஆராய்ந்து எழுதினார்.

நேரு அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்தபோது டாக்டர் அம்பேத்கார் கொண்டு வந்த இந்து சட்ட மசோதாவில் பெண்களுக்கு சொத்துரிமை உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. காங்கிரஸில் இருந்த சனாதனிகளின் எதிர்ப்பால் அந்த மசோதா நிறைவேறாமல் போனது. அம்பேத்காரும் பதவி விலகினார். பதவி விலகியபோது டாக்டர் அம்பேத்கார் ஆற்றிய உரை அனைவரும் படித்துப் பார்க்க வேண்டிய மிகச்சிறந்த உரைகளில் ஒன்று. இவை யாவற்றுக்கும் மேலாக இந்திய அரசியலமைப்புச் சாசனத்தை வரைவதற்கான குழுவின் தலைவராகவும் பொறுப்பேற்றவர். 2012 ஆம் ஆண்டில் வரலாற்றுத் தொலைக்காட்சியும், சி.என்.என். ஐ.பி.என். தொலைக்காட்சியும் நடத்திய வாக்கெடுப்பில் மிகச்சிறந்த இந்தியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவின் மிகச்சிறந்த உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது இவரது இறப்புக்குப் பின் 1990 இல் இவருக்கு வழங்கப்பட்டது.

### டாக்டர் அம்பேத்காரின் பொன்மொழிகள்

"ஒரு லட்சியத்தை மேற்கொள்ளுங்கள், அதை அடைவதற்காக விடா முயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள்."

"ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய சிங்கங்களை அல்ல; ஆடுகளாக இருக்க வேண்டாம், சிங்கங்களைப் போன்று வீறுகொண்டெழுங்கள்."

"நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று, முதல் தெய்வம் அறிவு, இரண்டாவது தெய்வம் சுயமரியாதை, மூன்றாவது தெய்வம் நன்னடத்தை".

"சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தில் உந்தப்படுபவரே உயர்ந்த மனிதர்."

"வெற்றியோ, தோல்வியோ, எதுவாயினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்பொழுது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்." கூடங்களில் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான சீருடை, கல்வி இடம் கண்டிப்பாகக் கொடுத்தாக வேண்டும். குழந்தைகளுக் கிடையே சாதி மனப்பான்மை சிறிதளவும் வராதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

சாதி ஒழிப்புக்கு நேரான வழி கலப்புமணமே ஆகும். இரத்தக் கலப்பினால் சுற்ற உணர்வு என்பது மாறி நட்பு உணர்வு உண்டாகும். நட்புக் கலந்த சகோதர உணர்ச்சி தோன்றாதவரையில் வேற்றுமை உணர்ச்சி இருந்து கொண்டேதான் இருக்கும்.

### டாக்டர் அம்பேத்காரின் இறுதிநாள்

டாக்டர் அம்பேத்கார் 1956ம் ஆண்டு டிசம்பர் 6ல் மறைந்தார். உடல்நிலை சரியில்லாமல் அவருடைய தூக்கதிலே உயிர் மறைந்தது. அவருடைய சிந்தனைகள் யாவும் ஏழை மக்களின் முன்னேற்றத்தை வலியுறுத்துவனவாகவே அமைந்திருந்தன. டாக்டர் அம்பேத்காரை நினைவு கூறுவது என்பது நம் மனசாட்சியை நாமே பரிசளிப்பது தான்.

### முடிவுரை

அரசியலில் நாம் ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒரு நெறி என்பதை அங்கீகரிப்போம். ஆனால், நமது சமூக, பொருளியல் தளத்தில் ஒரு மனிதனின் அடிப்படை நெறியை மறுப்பவர்களாகவே இருப்போம். இதுபோன்ற ஒரு முரண்பட்ட வாழ்க்கை முறையை நாம் எத்தனை நாட்களுக்கு வாழப் போகிறோம். சமூகப் பொருளாதாரத் தளத்தில் இன்னும் எத்தனை நாளைக்கு நாம் சமத்துவத்தை மறுக்கப் போகின்றோம், இதுபோன்ற மறுப்புகள் தொடர்ந்து நீடித்தால், அரசியல் ஜனநாயகம் வீழ்வதைத் தடுக்க முடியாது. இந்த முரண்பாடுகளை நாம் மிக விரைவில் களைந்தாக வேண்டும். இல்லையெனில், சமத்துவம் இன்மையால் அல்லல்படும் அடித்தட்டு மக்கள் கடும் உழைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த அரசியல் ஜனநாயகத்தையே தகர்ந்துவிடுவார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் ஒருபுறமிருக்க. அவர்கள் சுயமரியாதையை பாதிக்கும் எத்தனை எத்தனையோ செயல்களில் வருணாசிரம தர்ம வெறியர்கள் எங்குப் பார்த்தாலும் ஈடுப்பட்டு வருகின்றனர். இவைகளுக்கும் பொருளாதாரக் காரணங்கள் உண்டு என்பதில் சந்தேகமே இல்லை எனினும் பொருளாதார அமைப்பை மாற்றும்வரை கைகட்டி சும்மா இருக்கலாகாது. இவைகளையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, விடுதலை இந்தியாவின் அரசியல் சாசனத்தையே வரைந்த மாபெரும் சட்டமேதை பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர். பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம் என அனைத்து துறைகளிலும் திறமைப்பெற்று விளங்கிய அவர், இந்திய வரலாற்றின் பழமைவாதப் பக்கங்களைக் கிழித்தெறிந்த மாமனிதர். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய், ஈடுஇணையற்ற ஜோதியாய் விளங்கியசமூகப் போராளி. இப்படிப்பட்ட மனிதரின் வாழ்க்கை, அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்றால் அது மிகையாகாது.

### Referances:


12.0 12.1 "Round Table Conference 1930 – 1932".

Ajnat, Surendra. (1986). *Ambedkar on Islam*. Jalandhar: Buddhist. publ.

Ambedkar, B. R.. (1979). *Dr. Babasaheb Ambedkar, writings and speeches*. Bombay: Education Dept., Government of Maharashtra.

Bholay, Bhaskar Laxman. (2001). *Dr.Baba Saheb Ambedkar. Anuhav Ani Athavani*. Nagpur: Sahitya Akademi.

Chandrababu, B. S; Thilagavathi, L. (2009). *Woman, Her History and Her Struggle for Emancipation*. New Delhi: Motilal Banarsidass Publishers Pvt. Ltd.

Christophe Jaffrelot. (2004). *Ambedkar and Untouchablity, Analysis and Fighting Caste*. New York: Columbia University Press.

Detlef Kantowsky. (2003). *Buddhists in India today:descriptions, pictures, and documents*. Manohar Publishers & Distributors.

Fernando.W.J Basil. (2000). *Demoralisation and Hope: creating the Socal Foundation for sustaining . Democracy –A comparative study of N.F.S Grundtving (1783-1872) Demark B.R. Ambedkar (1881).Granville Austin (1999), The Indian Constitution: Cornerstone of a Nation*. Oxford University Press.

Frances Pritchett. (2010). "Waiting for a Visa, by Dr. B. R. Ambedkar". Columbia.edu.

Frances Pritchett. (2010). "youth". Columbia.edu.

Gail Omvedt. (2017). *Ambedkar Towards and Englishtened India*. Random House Publishers India Pvt. Limited

Gautam, C. (2000). *Life of Babasaheb Ambedkar (Second).* London: Ambedkar Memorial Trust.

Granville Austin. (1999). *The Indian Constitution*: *Cornerstone of a Nation*. Oxford University Press.

Jaffrelot, Christophe (2005). *Ambedkar and Untouchability: Fighting the Indian Caste System*. New York: Columbia University Press.

Kasare, M.L. (1996). *Economic Philosophy of Dr.B.R.Ambedkar*. New Delhi: B.I. publications.

Kuber, W.N.Dr. (1973). *Ambedkar: A Critical study*. New delhi: People's Publishing house.

Pritchett, Frances. (2006) "In the 1890s"

Sanghharakshita. (2006). *Ambedkar and Budhism*. Delhi: Motilal Banarsidass Publishe.

# பெரிய புராணத்தில் பக்தி

# Devotional Norms (*Bakthi*) Depicted In Periyapuranam Text

அகல்யா தர்மலிங்கம் / Aghalya Darmalingam[1]
தர்மலிங்கம் நடராசன் / Dr.Darmalingam Nadarajan[2]

Date of submission: 2020-11-08
Date of acceptance: 2020-11-25
Date of Publication: 2020-12-10
Corresponding author's Name:
Aghalya Darmalingam
Email: agalyadarma@gmail.com

***Abstract***

The text *Periyapuranam* is saturated with contents in relevance to Tamil saivite religion, language, way of life, rituals, culture, norms, history and etc. Saivism school of thoughts promote the text *Periyapuranam* as the history of testimonies of those who practiced saivism and attained soul liberation aka. *Anainthor Thanmai*. Every history of the saints showcases the devotional norms, *bakthi* as the path to attain soul liberation. Thus, the aim of this study is to define the devotional norm *bakthi* according to Shekilar and to observe how *bakthi* was exercised by 63 saints in text *Periyapuranam*. Shekilar states, *Bakthi* is when one shows another, unconditional love without any expectation in return. Besides, exponent classifies three main types of *bakthi* demonstrated by saints such as one participating in temple service, actively conducting liturgy and being devoted to His devotees. These three major types of *bakthi* are also known by terms such as *Guru*, *Lingga*, *Sanggamam* among the celestial text of Saivism school of thoughts. This study uses hermunitics approach and library studies to extract the findings

**Key Words:** Periyapuranam, devotion, Bhakthi, Sheikhilar, Guru, Lingga, Sanggamam.

## முன்னுரை

ஈசனுக்கு அன்பிலார் அடியவர்க்கன்பிலார், எவ்வுயிர்க்கும் அன்பிலார் தமக்கும் அன்பிலார்” என்று சிவஞான சித்தியார் குறிப்பிடுகின்றது (சிவஞான சித்தியார். அதிகரணம் 2, பா.323). அன்பையே நடு நாடியாகக் கொண்டு சைவ சமயக் கொள்கையின்படி வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சிவபெருமானின் திருவடிப்பேறுக்கு ஆளாகிய மெய்யடியார்களின் வாழ்க்கையைப் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அன்னைத் தமிழில் கவினுற விவரித்துக் கூறுவது தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணம். “உலகெலாம்” என்று தில்லைக்கூத்தன் அடி எடுத்துக் கொடுக்க, இரண்டு காண்டங்களாகப் பதின்மூன்று சருக்கங்களாக 4286 பாடல்களால் ஆகியது இச்சைவ பெட்டகம். இச்சைவப் பெட்டகத்தில் பக்தி எனும் தலைப்பில் செய்திகளைக் காண்பதற்கு முன் பக்தி என்றால் என்ன என்பதை முதலில் காண்போம். பக்தி என்பது அன்பு ,ஒழுக்கம், தொண்டு, நம்பிக்கை, பற்று, வழிபாடு, கடவுள் அன்பு என்னும் பொருள்களைத் தருகின்றது (Tamil Lexicon, 1982). இதனை அடிப்படையாகக் கொண்டு பெரியபுராணத்தில் இத்தகைய கூறுகள் எவ்வாறு இருக்கின்றன என்பதனைத் தொடர்ந்து சிந்திப்போம்.

## ஆய்வு முன்னோடிகள் (Literature Review)

பெரியபுராணத்தை பலரும் பல்வேறு

[1]The author is a master's research scholar in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. agalyadarma@gmail.com

[2]The author is a Teacher in Sekolah Menengah Kebangsaan Seksyen 1, Bandar Kinrara, Malaysia. darmamsnk@yahoo.com

கோணத்தில் ஆய்வு செய்திருக்கின்றார்கள். பெரியபுராணதில் நால்வகை நெறி (Gurulakshmi, 2001, p.119), சுந்தரர் காதல் நெறி (Thanasekaran, 2001, p.347), பெரியபுராணத்தில் அடியார் தொண்டு (Muthulaskmi, 2001, p.566) போன்ற பல தலைப்புகள் பக்தியை ஒட்டிய பல்வேறு கூறுகளை விலக்குகின்றன. குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு நோக்குகள் யாவுமே அடியார்களின் பக்தி திறத்தையே பதிவு செய்வதாய் காணப்படுகின்றது. பக்தி என்பது இவ்வனைத்து பகுதிகளுக்கும் முதுகெலும்பாகத் திகழ்வதனால் பக்தி மற்றும் அவைகளின் வகைகளைக் கண்டரிதல் அத்தியாவசியமாகின்றது. ஆகவே, இந்த ஆய்வுகளை முன்னோடியாக வைத்துக்கொண்டு பெரியபுராணத்தில் குறிப்பிட பட்டுள்ள பக்தி தொடர்பான செய்திகளை இந்த ஆய்வு தொகுக்கின்றது.

## ஆய்வின் சிக்கல்

தமிழர்களிடத்தேயும் சைவ சமய உலகிலும் பெரியபுராணம் எனும் நூல் தமிழர்களின் சமயத்தையும், பண்பாட்டையும், வாழ்வியல் கூறுகளையும் எடுத்து இயம்பும் கருவூலமாகத் திகழ்கின்றது. தவிர 12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இந்நூல் அன்றும் அதற்கு முன்னும் வாழ்ந்து வீட்டின்பத்தைப் பெற்ற அணைந்தோரின் வரலாற்றை உள்ளடக்கியதாகவும் உள்ளது. இதனாலேயே, இந்நூலை அடிப்படையாகக் கொண்டு பலரும் மொழி இயல், இசை, மக்கள் மரபு, இறை கொள்கை எனப் பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் மேற்கொண்ட வண்ணமே உள்ளனர். பெரியபுராணத்தில் சைவ சமய நெறியின் வழி வாழ்ந்து, சென்று அடைதற்கரிய வீட்டின்பத்தை எய்திய அறுபத்து மூவருமே பக்திநெறியைப் பின்பற்றி உள்ளனர். பக்தி என்றால் என்ன? அதனைச் செயல்படுத்தும் முறை யாது? பெரியபுராணத்தில் இடம்பெற்ற நாயன்மார்கள் எப்படித் தங்களது பக்தியினைக் காண்பித்திருகின்றார்கள் என்கின்ற செய்திகளைத் தொகுத்துக் கூறும் கட்டமைக்கபட்ட ஆய்வு காண்பதற்கு அரிதாகவே உள்ளது.

## ஆய்வின் நோக்கம்

A. பெரியபுராணத்தில் குறிப்பிட்ட பக்தி என்பது யாது என்பதனைக் கண்டறிதல்.

B. நாயன்மார்கள் எவ்வாறு பக்தி திறத்தில் நின்றிருக்கின்றனர் என்பதை ஆராய்ந்து பதிவிடல்.

## பெரிய புராணத்தில் பக்தி

கைமாறு கருதாமல் அன்பு செய்வதனையே உண்மையான அன்பு அல்லது உண்மையான பக்தி என்பதனை நாயன்மார்கள் கொண்டிருந்தார்கள் என்பதனை,

*"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்,*

*ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்*

*கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி*

*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"*

*(திருக்கூட்டச் சிறப்பு பா.8)*

என்று தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார். பெரியபுராணம் காட்டும் அடியார்கள் இறைவனை வழிபடுவதால் ஏற்படுகின்ற அன்பின் காரணமாக மேலும் மேலும் அவனை வழிபடுவதையே தங்களுடைய மூச்சாகக் கொண்டிருந்தார்கள் என்பதனைக் குறிப்பிடுவார். அந்த அடிப்படையில் பெரியபுராணத்தில் குறிப்பிடப் பெறுகின்ற அடியார்கள் மூன்று நிலைகளில் எம்பெருமானுக்கு அன்பு செய்கின்ற வழியைக் கடை பிடித்திருக்கிறார்கள் என்பதனை அறியலாம்.

முதலாவதாகப் பெருமான் உறைகின்ற திருக்கோயில்களில் பணி செய்வதையும் அடுத்து கருவறையில் வீற்று இருக்கின்ற பெருமான் திரு வடிவங்களுக்கு அன்பு செய்வதையும் தங்கள் மூச்சாக கொண்டிருந்திருக்கின்றனர். இரண்டாவதாகப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்று, அரிய அருள் நிகழ்ச்சிகளை நிகழ்த்தி உயிர்களின் அறியாமையைப் போக்குகின்ற உண்மை ஆசான்களை வணங்குவது இறைவனை வணங்குவதற்கு நிகராகும் என்று எண்ணி அவர்களிடத்தில் அன்பு அல்லது பக்தி செய்திருக்கின்றார்கள். மூன்றாவதாக

இறைவன் உறைகின்ற அடியார்களை நடமாடும் சிவமாகக் கருதி அவர்கள் இடத்திலே அன்பு காட்டும் அடியார் தொண்டினைப் பெருமானை வழிபடுவதற்கு நிகராக நிகழ்த்தியிருக்கிறார்கள். குரு, இலிங்க, சங்கம வழிபாடு எனும் இம்மூன்று நிலைகளே பெரியபுராணத்தின் பக்தி வெளிப்பாட்டினை உணர்த்துவதாக உள்ளது.

பெரியபுராணத்தில் குறிப்பிடப்பெறும் இம்மூன்று வகையான அன்பு வெளிப்படு நிலைகளில் முதலில் அடியார்கள் எப்படித் திருக்கோயில் திருப்பணியின் வழியாகவும் திருக்கோயிலில் இருக்கின்ற பெருமானுக்குச் செய்கின்ற திருப்பணியின் வழியாகவும் தங்களுடைய அன்பின் வெளிப்பாட்டினைக் காட்டினார்கள் என்பதனைக் காண்போம்.

உண்மையான அன்பிற்கே பெருமான் வெளிப்படுவான் என்கின்ற செய்தியினை,

*" என்பே விறகா இறைச்சி அறுத்திட்டு*

*பொன்போல் எரியில் பொரிய வறுப்பினும்*

*அன்போடு உருகி அகம் குழைந்தார்க்கன்றி*

*என்பொன் மணியினை எய்தஒண்ணாதே"*

*(திருமந்திரம்: 259)*

என்று திருமூலர் குறிப்பிடுவார். உண்மையான இறை அன்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த கண்ணப்ப நாயனாருடைய பக்தியைக் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின், என்அப்பன் எம்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி", என்று மணிவாசகப் பெருமான் கண்ணப்பரின் பக்தித் திறத்தைக் குறிப்பிடுவார் (திருக்கோத்தும்பி: பா.4). அன்பின் பிழம்பாய்த் தோன்றிய கண்ணப்பரின் ஈடு இணையற்ற பக்தியினை,

*"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்புஎன்றும்*

*அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவுஎன்றும்*

*அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்*

*அவனுடைய நிலை இவ்வாறு அறிநீ"*

*என்று அருள் செய்வார்"*

*(கண்ணப்ப நா. புரா. பா. 156)*

என்று தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

பெருமானுக்குத் திருவமுது படைக்கின்ற திருப்பணியைத் தவறாமல் செய்து வந்த அரிவாள் தாய நாயனார் பல நாட்கள் உணவு உண்ணாமல் தன் தலைமீது தாங்கிச் சென்ற திருவமுதிற்கான பொருட்களான மாவடு, செங்கீரை, செந்நெல் அரிசி போன்றவை நில வெடிப்பில் விழுந்து சிதறியதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாமல் தன்னுடைய கழுத்தினை அரிவாளால் அரியத் துணிந்த அரிவாள் தாய நாயனாரின் அன்பினைக் கண்டு நில வெடிப்பிலிருந்து மாவடு உண்ணும் ஒலியும் பெருமானின் திருக்கையும் வெளிப்பட்ட அருட் செயலினைத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார் (அரிவாட்டாயர் புரா.பா.18).

பெருமானுக்குச் சந்தனக்காப்பு இடுவதற்குச் சந்தனக்கட்டைக் கிட்டாமல் போனதால் தன்னுடைய முழங்கையைச் சந்தனக் கட்டைக்கு ஈடாகச் சந்தனக் கல்லிலே தோல், தசை, நரம்பு, குருதி வெளிப்பட வைத்துத் தேய்த்துத் தன் அன்பினை வெளிப்படுத்திய மூர்த்தி நாயனாரைத் தெய்வச் சேக்கிழார் நமக்குக் காட்டுகின்றார். சிவபெருமானிடத்திலே கொண்டிருந்த பேரன்பின் காரணமாகச் சிவபெருமானைப் பழித்துப் பேசியவர்களுடைய நாக்கினைக் குறடினால் பிடித்து இழுத்து வாளினால் துணித்த சத்தி நாயனாரின் அன்பினை,

*"தீங்கு சொற்ற திருவிலர் நாவினை,*

*வாங்க வாங்கு தண்டாயத்தினால்வலித்*

*தாங்கயிற் கத்தியால் அரிந்து அன்புடன்,*

*ஓங்கு சீர் திருத்தொண்டின் உயர்ந்தனர்"*

*(சத்தி நாயனார் புர. பா. 4)*

என்று தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார். உண்மையான அன்பினால் மட்டுமே இறைவனை அடைய இயலும் எனும் கருத்தினை,

*"உள்ளம் உள்கலந்து ஏத்தவல்லார்க்குஅலால்*

*கள்ளம் உள்ளவருக்கு அருள்வான் அலன்*

*வெள்ளமும் அரவும் விரவும் சடை*

*வள்ளலாகிய வான்மியூர் ஈசனே"*

(திருமுறை *5:82:4)*

என்று திருநாவுக்கரசு அடிகள் குறிப்பிடுவார். இத்தகைய உண்மையான உள்ளன்பினால் இறைவனை உள்ளம் உள்கித் திருத்தலங்கள் தோறும் சென்று நாயன்மார்கள் நெக்குருகிப் பாடியமையைத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார். தில்லைத் திருக்கோயிலில் பொதுவில் கூத்து இயற்றும் பெருமானைக் கண்டு வழிபட்டு இன்ப வெள்ளத்துள் திளைத்த சுந்தரர் பெருமான் அன்பின் மேலீட்டால்,

*"தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று*

*மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்ஆம்" என்று*

*கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைம்மலர் உச்சிமேல் குவித்துப்*

*பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்"*

(தடுத்தாட்கொண்ட புரா. பா.107)

என்று நெக்குருகிப் பாடியதைத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார். உயிர் கொல்லாமை எனும் உயரிய கொள்கையினைத் தங்கள் மூச்சாகக் கொண்டிருந்த சமணர்கள் திருநாவுக்கரசு அடிகளைக் கல்லோடு பிணைத்துக் கடலில் வீசிக் கொல்ல முனைந்த போது சிவபெருமானை அன்போடு எண்ணித் தூய தமிழ் மந்திரமான திருவைந்து எழுத்துத் திருப்பதிகத்தைத் திருநாவுக்கரசு பெருமான் அருளியதை,

*"சொற்றுணை வேதியன்" என்னுந் தூய்மொழி*

*நற்றமிழ் மாலையா "நமச்சி வாய" என்று*

*அற்றமுன் காக்கும்அஞ் செழுத்தை அன்போடு*

*பற்றிய உணர்வினால் பதிகம் பாடினார்"*

(திருநாவுக்கரசர் புரா. பா.126)

என்று குறிப்பிட்டுத் திருநாவுக்கரசு பெருமானின் பக்தியைத் தன் திருத்தலையின் மேல் வைத்துப் போற்றுவார் தெய்வச் சேக்கிழார். தன் பிஞ்சுக் கைகள் சிவக்கத் தாளமிட்டு, அன்பு ஊற்றெடுக்க, மைந்நிறைந்த மிடற்றானை, "மடையில் வாளை பாய" எனும் கலைப்பதிகத்தினைச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் சிவபெருமானால் அருளப் பெற்ற தமிழாகரன் திருஞானசம்பந்தப் பெருமான் அருளி, திருவைந்தெழுத்துப் எழுதப்பெற்ற செம்பொன் தாளம் பெற்றதனை,

*"கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணை கூர்ந்த*

*செய்யசடை வானவர்தம் அஞ்செழுத்தும் எழுதியநற் செம்பொற்றாளம்*

*ஐயரவர் திருவருளால் எடுத்தபா டலுக்கிசைந்த அளவால் ஒத்த*

*வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த தன்றே"*

(திருஞானசம்பந்தர் புரா. பா.103)

என்று திருஞானசம்பந்தப் பெருமானின் பாதமலர்களைத் தன் தலைமேற்கொண்டு அவரின் திருத்தொண்டினைப் பரவுவார் தெய்வச் சேக்கிழார்.

"அம்மையே" என்று சிவபெருமானால் அழைக்கப்பட்ட பேறு கிட்டிய காரைக்கால் அம்மையின் அன்பினைக் குறிப்பிடும் தெய்வச் சேக்கிழார், பெருமான் அப்பெருமாட்டியிடம், "உமக்கு என்பால் வேண்டுவது என்ன?" என்று கேட்க, இறவாத இன்ப அன்பு வேண்டும் என்று கேட்டு அருளியதை,

*"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்*

*"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*

*மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி*

*அறவா! நீஆடும் போதுன் அடியின் கீழிருக்க" என்றார்"*

*(காரைக்காலம்மையார் புரா.பா.60)*

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட தெய்வச் சேக்கிழார் காட்டுகின்றார். பெருமானை உளமுருகப் பாடி அன்பு காட்டியவர்களைத் தொடர்ந்து இசையால் பெருமானுக்கு அன்பு செலுத்திய ஆனாய நாயனாரின் இறையன்பினைத் தெய்வச் சேக்கிழார் காட்டுகின்றார். பொய்யன்பிற்கு எட்டாத பொதுவில் நடம்புரியும் ஐயனின் திருச்செவிக்கு நாயனாரின் குழல் இசை எட்டியது என்பதனை,

*"மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக் குழலோசை*

*வையந்தன் னையும்நிறைத்து வானம்தன் வயமாக்கி*

*பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும்*

*ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால்*

*(ஆனாய நாயனார் புரா. பா.37)*

தெய்வச் சேக்கிழார் நினைவூட்டுகிறார்.

பெருமானிடத்து கொண்ட எல்லையற்ற அன்பினால் ஐம்பூதங்களும் அவற்றின் நிலையில் இருந்து தடுமாறினாலும் மாதொரு பாகனாரின் திருவடிகளை மறவாமல் ஓதும் அன்பின் உறைப்பில் நின்ற குற்றம் அற்ற குணப்பெருங் குன்றுகளாக விளங்கிய நாயன்மார்கள் அன்பினை முன்நிறுத்துவதற்குத் தெய்வச் சேக்கிழார்,பெருமானின் திருக்கோயில் மணம் நிறைந்ததாகப் பெருமானை வழிபடுவோர்க்கு மன அமைதியை அளிப்பதாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய மனைவியின் மங்கல நாணை விற்றுக் குங்கிலியம் வாங்கி புகைத்துப் பெருமானுக்கு அன்பு காட்டிய குங்குலியக்கலய நாயனாரின் அன்பைக் காட்டுகின்றார்.

கண்பார்வையற்ற சூழலிலும் பெருமானுடைய திருக்கோயில் திருக்குளம் தூய்மையாக நீர் நிறைந்து இருக்க வேண்டும் என்பதற்காகத் திருக்கோயில் குளத்தினைத் தூர் எடுத்த தண்டியடிகளின் அன்பினையும் பெருமானின் திருக்கோயிலில் அன்போடு விளக்கேற்றுவதற்கு எண்ணெய் கிட்டாத போது தன்னுடைய கழுத்தினை அரிந்து குருதியால் விளக்கினை ஏற்ற முயன்ற கலிய நாயனாரின் அன்பையும் சிவலிங்கத் திருமேனியின் மீது விழுந்த சிலந்தியை அன்போடு ஊதி விலக்கிய அன்பு மனைவியைத் தள்ளி வைத்த நீல நக்க நாயனாரின் அன்பையும் திருக்கோயிலின் பூ தொடுக்கின்ற மடத்தின் அருகில் கிடந்த ஒரு பூவினை எடுத்து முகர்ந்த குற்றத்திற்காகத் தன் மனைவி பட்டத்து அரசி என்றும் எண்ணாது அவரின் கையைத் துண்டித்த கழற்சிங்க நாயனாரின் அன்பினையும் தெய்வச் சேக்கிழார் பெரியபுராணம் எனும் சைவப் பேழையின் நெடுகிலும் காட்டிச் செல்கின்றார்.

*பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்*

*ஒருமையால் உலகை வெல்வார்! ஊனமேல் ஒன்றும் இல்லார்;*

*அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினில் இன்பம் ஆர்வார்*

*இருமையும் கடந்து நின்றார்; இவரை நீ அடைவாய்" என்று*

*(தடுத்தாட்கொண்ட புரா.பா.196)*

என்று நாயன்மார்களின் ஒப்புமை சொல்ல இயலாத சிறப்பினையும் அன்பினையும் எடுத்துக்கூறும் தெய்வச் சேக்கிழார், நாயன்மார்களில் இறைவனிடத்து அன்பு காட்டியவர்களைத் தொடர்ந்து பெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற ஆசான்கள் இடத்துத் தங்களுடைய அன்பைக் காட்டிய பக்தி முறைமையை எடுத்துக் கூறுகின்றார்.

திருவாரூரில் தியாகேசப் பெருமான், "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடி எடுத்துக் கொடுக்கச் சுந்தரர் பெருமான் எல்லா அடியவர்களுக்கும் தான் அடிமை என்கின்ற திறத்தைத் திருத்தொண்டத்தொகையில் அருளிச் செய்தார் (தடுத்தாட்கொண்ட

புரா. பா.201). சுந்தரர் பெருமான் அருளிய திருத்தொண்டர் தொகையையும் அதனை விரிவாக்கம் செய்து நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியும் அடிப்படையாகக் கொண்டு பெரியபுராணத்தை அருளிய தெய்வச் சேக்கிழார், ஒவ்வொரு நாயன்மாரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போதும் அவர்களுடைய திருவடித் தாமரைகளைத் தன் தலைமேற்கொண்டு அவர்களுடைய வரலாற்றைச் சொல்லப் போகின்றேன் என்று அவரது அன்பினை வெளிப்படுத்துவார்.

அவ்வகையில் திருமலைச் சருக்கம் முதலாக வெள்ளானைச் சருக்கம் ஈறாக 13 சருக்கங்களின் முடிவிலும் சுந்தரர் பெருமானை வாழ்த்தி வணங்குவதைப் பெரியபுராணம் நெடுகிலும் காணலாம். பரவையாரின் ஊடலைத்தீர்க்க பெருமானைத் தூது அனுப்பிய சுந்தரமூர்த்தி பெருமான், பிறவிக்கு உட்படும் கூனையும் அறியாமைக் குருடு என்கின்ற தன்மையையும் விலகுமாறு அருள் செய்வதற்குத் தகுதி உடையவர் என்று வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தின் இறுதியில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (கூற்றுவ நாயனார் புரா. பா.9).

பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கத்தின் இறுதியில் பெருமான் அளித்த பொன்னைத் திருமணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர் கமலாலயக் குளத்தில் எடுத்த ஆரூரர், வினையான பெருங்குழியின் வாயில் இருந்து என்னை வெளியே எடுத்தார் என்று அவரைப் பணிகின்றார் (ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புரா.பா.9). கடல் சூழ்ந்த சருக்கத்தின் இறுதியில், சுந்தரமூர்த்தி அடிகளின் திருவடிகளை என் தலைமேல் மலர்வதற்குப் பெருந்தவம் முன்னே செய்தேன் என்று குறிப்பிடுவார் (கோட்புலி நாயனார் புரா.பா.13).

திருஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்றினைக் கூறும் போது,

*"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்*

*பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத*

*சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்*

*பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"*

(திருஞானசாம்பந்தர் புரா.பா.1)

என்று குறிப்பிடுவதன் வழி ஞானசம்பந்தப் பெருமான் மீது தெய்வச் சேக்கிழார் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியினை அறியலாம். இதேபோன்று திருநாவுக்கரசு அடிகள் மீது அவர் கொண்ட அன்பினை வெளிப்படுத்துகின்ற போது,

*"திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ*

*வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்*

*பெருநாமச் சீர்பரவ லுருகின்றேன்; பேருலகில்*

*ஒருநாவுக் குரை செய்ய ஒண்ணாமை உணராதேன்"*

(திருநாவுக்கரசர் புரா.பா.1)

என்று திருநாவுக்கரசு பெருமானின் வாய்மையையும் திருத்தொண்டினையும் சொல்ல ஒரு நா போதாது என்று பணிகின்றார். பாண்டிய நாட்டில் நின்றசீர் நெடுமாறனின் பட்டத்து அரசியாக விளங்கிய மங்கையர்க்கரசியாரை, "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்று போற்றும் சேக்கிழார், மங்கையர்க்கரசியாரும் அவருக்குத் துணை நின்ற குலச்சிறை நாயனாரும் திருஞானசம்பந்தப் பெருமானைக் குருவாகக் கொண்டு வழிபட்ட மேன்மையையும் அவரைச் சிவபெருமானின் திருவருளாகவும் கண்டு பேறு பெற்றதனையும்,

*"சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனிஎதிர் காலத்தின்*

*சிறப்பும், இன்று எழுந்தருள பெற்றப்பே றிதனால் எற்றைக்கும்*

*திருவரு ளுடையேம், நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்*

*நற்றமிழ் வேந்தனும் உய்ந்து, வென்றிகொள் திருநீற் றொளியினில்*

*விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பார்"*

(திருஞானசம்பந்தர் புரா.பா.659)

என்று குறிப்பிடுகின்றார். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருஞானசம்பந்தப் பெருமானை இறைவனுடைய திருவருள் வானிலிருந்து இறங்கி நிலத்தில் வளரும் அறிவுக் கொழுந்தாகாக் கண்டதனை,

*"ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை*

*வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்*

*தேனக்க மலர்க்கொன்றைச் செஞ் சடையார் சீர்தொடுக்குங்*

*கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்"*

(திருஞானசம்பந்தர் புரா.பா.728)

உள்ளம் அள்ளூரித் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். தங்கள் ஆசானிடம் அன்பு காட்டிய இயல்பினை மேலும் திருநாவுக்கரசு அடிகள் வரலாற்றில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார். அடியார்களோடு அடியாராகத் திருஞானசம்பந்தப் பெருமான் அமர்ந்து வந்த திருப்பல்லக்கினைச் சுமந்ததும் (திருஞானசம்பந்தர் புரா.பா.935), திருநீலநக்கநாயனார் ஞானசம்பந்தப் பெருமானைத் தனது ஆசானாகக் கொண்டதும் (திருநீலநக்கர் புரா.பா.27), திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரது மனைவியான மதங்க சூளாமணி அம்மையாரும் திருஞானசம்பந்தப் பெருமான் பாடல்களுக்கு இசையமைத்து அவரது திருத்தொண்டிற்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டதும் (திருநீலகண்ட யாழ்பாண நாயனார் புரா.பா.10) ஆசான் பக்தியின் வெளிப்பாடாகக் குறிப்பிடலாம்.

திருநாவுக்கரசு பெருமானின் திருப்பெயரைத் தனது அனைத்து உடைமைகளுக்கும் இட்டு, அவர் தம் இல்லத்தில் எழுந்தருளிய போது அவரது திருவடிகளைத் துலக்கிய நீரை இல்லம் முழுவதும் தெளித்தும் உட்கொண்டும் (அப்பூதியடிகள் புரா.பா.20) அவர் தம் இல்லத்தில் உணவு உட்கொள்ள தடை வந்துவிடக் கூடாது என்பதற்காகப் பாம்புத் தீண்டி இறந்த தம் பிள்ளையின் உடலை மறைத்து வைத்துத் திருநாவுக்கரசு பெருமானுக்கு உணவு அளித்த அன்பின் திறத்தினையும் தெய்வச் சேக்கிழார் நமக்கு காட்டுகிறார் (அப்பூதியடிகள் புரா.பா.37).

அட்டமா சித்திகள் எனும் எண் பேறுகள் கிடைக்கப்பெற்ற, சிவச்செறிவு நெறியில் சிறந்து விளங்கிய பெருமிழலைக் குறும்பர், தான் ஆசானாக் கொண்ட சுந்தரர் கயிலை மீள்கிறார் என்பதனை முன்கூட்டியே அறிந்து அவரைப் பிரிந்து வாழ முடியாது என்று உச்சித் துளையைத் திறந்து கபால முத்தியைக் கைக்கொண்டார் எனும் அன்பின் வெளிப்பாட்டைத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (பெருமிழலைக் குறும்பர் புரா.பா.9).

சிவபெருமானுக்கும் தங்களுடைய ஆசானுக்கும் அன்பு காட்டிய அடியார்களுடைய நிலையை அடுத்து மூன்றாவதாகப் பெரியபுராணத்தில் பக்தியின் வெளிப்பாடாகக் காட்டப்படும் மற்றொரு முதன்மையான கூறு நாயன்மார்கள் இறைவன் வாழும் உயிர்களிடத்திலே காட்டிய அன்பாகும். "படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில், நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்குஆகா, நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே" (திருமந்திரம்:1857) என்று திருமூலர் குறிப்பிடுவதைப் போன்று பெரியபுராணத்தில் நாயன்மார்கள் தங்கள் இல்லத்திற்கு வருகின்ற அடியார்களுக்கு வேண்டியதைக் கொடுத்து அன்பு வழியில் நின்றார்கள்.

அடியார்களுக்குக் கோவணமும் திருவோடும் அளித்துத் தம் அன்பை வெளிப்படுத்தினார் அமர்நீதி நாயனார் (அமர்நீதி நாயனார் புரா.பா.3). தன்னிடத்தில் இருக்கின்ற பொருள் எதுவானாலும் அதை இல்லை என்று சொல்லாது தன் மனைவியையும் அடியாருக்குக் கொடுத்து அன்பு செய்தார் இயற்பகை நாயனார் (இயற்பகை நாயனார் புரா.பா.7).

மாந்தர்க்கு மட்டும் அல்லாது மற்ற உயிரினங்கள் மீதும் அன்பு காட்டுவதும் இறைக்கொள்கையாக, இறைத்தொண்டாக, இறையன்பாக நாயன்மார்கள் வாழ்ந்து காட்டியதைத் தெய்வச் சேக்கிழார் காட்டுகின்றார். பசுக்களை மேய்ப்பவன் பசுக்களைத் துன்புறுத்தியதைக் கண்டு அவற்றை மேய்த்தும் அவற்றினிடத்து அன்பு காட்டியவருமான சண்டீச நாயனாருக்குப் பெருமான் பேறு அளித்ததைக் காட்டுகின்றார் தெய்வச் சேக்கிழார் (சண்டீசநாயனார் புரா. பா.25). மேய்ப்பவனை இழந்து கண்ணீர் விட்ட பசுக்களின் துயரைத் தாளாது, மூலன் உடம்பில் புகுந்து, அப்பசுக்களின் மீது அன்பு காட்டிய மூவாயிரம் தமிழ் மந்திரங்கள் அருளிய திருமூலநாயனாரின் இயல்பினையும் தெய்வச் சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்தியம்புகிறார் (திருமூல நாயனார் புரா. பா.12).

பசித்தவருக்கு உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவரைப் போன்றவர் என்பதனை, “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்று மணிமேகலை உணர்த்துகின்றது (11, பாத்திரம் பெற்ற கதை, 96). இறை அடியாருக்கு அன்பு செய்து அவர்களுக்கு உணவளிப்பது உண்மையான பிறவியின் பயன் என்பதனைச்,

*“மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்*

*அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்”*

*(திருஞானசம்பந்தர் புரா.பா. 1086)*

திருஞானசம்பந்தர், சாம்பலாய்க் குடத்தில் இருந்த பூம்பாவையை நோக்கிக் கூறிய அருள்மொழியாய்த் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார். பசித்தோர்க்கு உணவளிப்பதையே மிகச் சிறந்த பக்தியாகத் தொண்டாகப் பல நாயன்மார்கள் செய்ததனைத் தெய்வச் சேக்கிழார் உணர்த்துகின்றார். வறுமையுற்ற நிலையிலும் அடியார்க்கு உணவளிக்க வேண்டும் என்பதற்காகத் தன்னுடைய இல்லத்தின் கூரையினை அறுத்து அடியாருக்கு அமுது படைத்தார் இளையான்குடிமாற நாயனார் (இளையான்குடிமாற நாயனார் புரா.பா.19). தன்னுடைய மகனை அரிந்து அடியாருக்கு உணவு சமைத்தார் சிறுத்தொண்ட நாயனார் (சிறுத்தொண்ட நாயனார் புரா.பா.63), சூதாடி அடியார்களுக்கு உணவு கொடுத்தார் மூர்க்க நாயனார் (மூர்க்க நாயனார் புரா. பா.10). திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று அடியார்களின் பசியைப் போக்கிய நாவுக்கரசு பெருமானின் அடியார் அன்பினைத் தெய்வச் சேக்கிழார் சுட்டுகின்றார் (திருநாவுக்கரசர் புரா.பா.259).

அடியார்களுக்கு நோய் ஏற்பட்ட போது அதற்காகப் பெருமானிடத்தில் பாடி அந்நோயை குணப்படுத்திய திருஞானசம்பந்தப் பெருமானின் அன்பையும் தெய்வச் சேக்கிழார் காட்டுகின்றார். (திருஞானசம்பந்தர் புரா.பா.333). திருமருகலில் பாம்பு தீண்டிய வணிகனை உயிர் பெறச் செய்த திருஞானசம்பந்தரின் அன்பினையும் (திருஞானசம்பந்தர் புரா.பா.482) பாம்பு தீண்டிய அப்பூதியடிகளின் மகனை உயிர் பெறச் செய்த திருநாவுக்கரசரின் அன்பினையும் தெய்வச் சேக்கிழார் காட்டுகின்றார்.

## முடிவுரை

சிவபெருமான் மீதும் தாங்கள் கொண்ட மெய்யாசான்களின் மீதும் பிற உயிர்களின் மீதும் கொண்ட கைமாறு கருதாத உண்மை அன்பே அடியார்களை நாயன்மார் நிலைக்கு அவர்களை உயர்த்திப் பெருமானின் பேர் அன்பிற்கு அவர்களை ஆளாக்கியது என்பதனைப் பெரியபுராணம் நமக்கு உணர்த்துகின்றது. அன்பைப் புறந்தள்ளி வெறுமனே செய்யும் வழிபாடுகள், வழிபாட்டுக் கிரியைகள், தீர்த்தம், தியானம், சிவார்ச்சனைகள் என்பவை வெறும் ஆரவாரமே என்பதை உணர்வோம்! பெரியபுராணத்தின் அடியொட்டி வாழ்வோம்.

**Referances:**

Arutkalai. K (2001). *Periyapuranathil Virunthombalum Bakthiyum: Periya Purana Aaivu Maalai* (Vol. 1). Varanas:, Kumarasamy Thirumadam.

Balasubramanian.T. (2001) . *Adiyarkalin Panbu Nalankal: Periyapurana Aivu Maalai* Vol.1: Mylapore, Kaasi Thirupananthal Mutt.

Malarvizhi Manggayarkarasi, R. (2001). *Bakthi Nilaikalum Periya Purana Adiyargalum: Periya Purana Aaivu Maalai* (Vol. 1). Varanasi: Kumarasamy Thirumadam.

Muthu Lakshmi (2001) . *Periyapuranam Suttum Thondu Neri. Vol.2: Periyapurana Aivu Maalai* Vol.2: Mylapore, Kaasi Thirupananthal Mutt.

Sartkunavathi.Mu (2001) . *Adiyaar Valkai Unarthum Araneri : Periyapurana Aivu Maalai* Vol.1: Mylapore, Kaasi Thirupananthal Mutt.

*Tamil Lexicon Dictionary*. (1982). (Vol. IV).Chennai: University of Madras.

Thanasekara.R. (2001) . *Sundarar Kathal Neri: Periyapurana Aivu Maalai* Vol.1: Mylapore, Kaasi Thirupananthal Mutt.

Thirukootta Sirappu (2002). *Sheikhilar Swamigal Aruliya Thiruthondar Puranam (Original work)*. Chennai, Kaasi Thirupananthal Mutt.